

# மருத்துவமனைப் பணியில்

# அ.ம.தி.களின் மாணிக்கவிழா

## 1979-2019






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி

## "நோயுற்றிருந்தேன் என்னைக் காணவந்தீர்கள்" (மத். 25:36)



ஒவ்வொரு மனிதனும், தன் வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில் நோய்வாய்ப்படுகிறான். அந்நேரத்தில் அவன் மருத்துவமனையை நாடுகிறான். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் யாழ். போதனா மருத்துவமனை மிக முக்கியமான ஒரு மருத்துவமனையாக விளங்குகிறது. யாழ் மாவட்டத்தினைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல் வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் மேலதிக சிறப்புச் சிகிச்சைகளைப் பெற இங்கு வருகிறார்கள். அதிலும் குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் யாழ் போதனா மருத்துவமனையே ஒரே ஒரு மருத்துவ தாதிய மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் மருத்துவமனையாக, அதாவது போதனா மருத்துவமனையாகத் திகழ்கிறது. இந்த யாழ் மருத்துமனையில் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றும் மையமாகப் புனித வேளாங்கண்ணி சிற்றாலயம் விளங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

1972ம் ஆண்டு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய உதவிப் பங்குத்தந்தையாக இருந்த எ.டபிள்யு. தேவதாசன் அடிகள் ஆயரின் உதவியுடன் மருத்துவமனை ஆன்மீகப் பணியினைப் பொறுப்பெடுத்தார். 1972- 1979 வைகாசி வரை முதலில் யாழ் புனித மரியன்னை பேராலய உதவிப் பங்குத்தந்தையர்களும், பின்னர் புனித அடைக்கல அன்னை ஆலய உதவிப் பங்குத்தந்தையும் யாழ் போதனா மருத்துவமனைத் தரிசிப்புச் செய்து ஆன்மீகக் கடமைகளைப் பகுதி நேரமாக நிறைவேற்றி வந்தார்கள். இப் பணியினை யாழ் புனித மரியன்னை பேராலய உதவிப் பங்குத்தந்தையாக இருந்து 1974 - 1975 ஆண்டுகளில் நானும் செய்திருக்கின்றேன். 1979க்குப் பின்னர் யாழ் மருத்துவமனையில் அதிகரித்த ஆன்மீகத் தேவையை உணர்ந்த அப்போதைய ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் யாழ். அமலமரித் தியாகிகளின் மாகாண முதல்வரின் ஊடாக இப்பணியைச் சிறப்புப் பணியாகச் செய்வதற்கு அருட்தந்தை பிரான்சிஸ் டானியேல் அ.ம.தி. அடிகளாரின் விருப்பத்தைக் கேட்டு அனுமதியையும் ஒத்துழைப்பையும் வழங்கினார்.

இப்பணியை முழுநேரப் பணியாக அமலமரித் தியாகிகள் பொறுப்பேற்றுக் கடந்த நாற்பது ஆண்டுகளாக யாழ். போதனா மருத்துவமனையில் பணி செய்து வருவதையிட்டு நானும் மகிழ்ச்சியடைகிறேன். இப்பணி மிக மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான ஒரு பணியாகும். ஏனெனில் **"நோயுற்றிருந்தேன் என்னைக் காணவந்தீர்கள்" (மத் 25:36)** என்ற இயேசுவின் வார்த்தையின்படி, நோயாளரின் வடிவில் வரும் இயேசுவை இப்பணியின் மூலமாக நாம் சந்திக்கவும் அவர்களுக்கான எமது தொண்டுகளைச் செய்யவும் பேறுபெறுகிறோம். மேலும் இன்றைய சூழலில் உடல் ரீதியான நோய்களுக்கு அப்பால் உளரீதியான தாக்கங்களோடும் பாதிப்புக்களோடும் மக்கள் மருத்துவமனைகளை நாடி வருகிறார்கள். ஆகவே அவர்களைச் சந்திப்பது, அவர்களுக்கான ஆற்றுப்படுத்தலைச் செய்வது, நோயாளர்களுக்காக மன்றாடுவது, அவர்களுக்கான திருவருட்சாதனங்களை நிறைவேற்றுவது போன்றவை அவர்கள் இறையனுபவத்தைப் பெறுவதோடு இறைவனைச் சந்திக்கத் துணைசெய்யும். இதனை ஓர் அருட்பணியாளர் ஆன்மீக ஆர்வத்தோடு செய்கிறபோது இயேசு செய்த முக்கியமான பணிகளுள் ஒன்றான குணமாக்குதலைச் செய்பவர் ஆகிறார்.

எனவே கடந்த நாற்பது ஆண்டுகளாக இப்பணிப் பொறுப்பை ஏற்று, ஆற்றிவரும் அமலமரித் தியாகிகள் சபையினருக்கும் இப்பணியைக் கடந்த காலங்களில் யாழ். போதனா மருத்துவமனையில் ஆற்றிய அமலமரித் தியாகிகளுக்கும் இச்சந்தர்ப்பத்தில் என் நன்றிகளையும் நல்லாசீரையும் தெரிவித்து நிற்கிறேன். அத்துடன் இக்காலத் தேவைகளைக் கருத்திற்கொண்டு இப்பணியினை மேலும் விரிவுபடுத்தி, அர்ப்பணிப்போடு அமலமரித் தியாகிகள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என விரும்புகிறேன். இப்பணியில் ஈடுபட்டுழைத்த, ஈடுபடும் அனைவருக்கும் இறையாசீர் வேண்டுகிறேன்.

**கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,**
**பேரருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்,**
**யாழ். ஆயர்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு முதல்வரின் ஆசிச்செய்தி

## ஒரு மனிதன் முழு மாண்போடு வாழ அவசியமான பணி



யாழ் போதனா மருத்துவமனையில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தை மையமாகக் கொண்டு அங்கு ஆற்றப்படுகின்ற ஆன்மீக சமூக உளநலப் பணிகளையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். கடந்த பல ஆண்டுகளாக இப்பணியைப் பொறுப்பேற்று திறம்பட ஆற்றி வருகின்ற அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களுக்கும் அவர்களுக்குத் துணைபுரிகின்ற குருக்கள், அருட்சகோதரர்கள், அருட் சகோதரிகள், மரியாயின் சேனையினர் மற்றும் பொது நிலைப் பணியாளர்கள் அனைவருக்கும் எமது நன்றி களையும் தெரிவிக்கின்றோம்.

பல்வேறு தாங்கொணா வியாதிகளோடும் மன அழுத்தங்களோடும், வாழ்வின் சுமைகளோடும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்ற சகல நோயாளிகளையும் மதபேதமின்றிக் கரிசனையோடு அணுகி, அவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களைத் திடப்படுத்துவதோடு மட்டும் நின்று விடாமல் அவர்களுக்காகச் செபித்து, அருட்சாதனங்களை வழங்கி, அவர்கள் இறைவனின் அன்பை, பராமரிப்பை அனுபவிக்கச் செய்வதும், அவர்கள் குணமடைந்து ஆறுதல் பெற அவர்களுக்குத் துணையிருப்பதும் இவர்கள் செய்யும் அற்புதமான பணியாகும். நோயாளிகளை மட்டுமல்லாது மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர், தாதியர், ஊழியர்களின் ஆன்மீக நலனைக் கவனிக்கும் பணியையும் இவர்கள் ஆற்றி வருகின்றார்கள்.

ஒரு மனிதனை முழு மாண்போடு வாழவைக்க மிகவும் அவசியமான இப்பணி தொடர வாழ்த்துகிறேன். இப்பணியின் வரலாற்று அவசியம் பற்றி வெளியிடப்படுகின்ற இச்சஞ்சிகை ஒரு சிறந்த வரலாற்று ஆவணமாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை. இம்முயற்சியை முன்னெடுத்து செயற்படுத்திய தற்போதைய ஆன்மீகக் குரு அருட்பணி. அருள் சுதர்சன் அ.ம.தி அடிகளாருக்கு எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.!

**அருட்பணி. ப. யோ. ஜெபரட்ணம்,**
**குரு முதல்வர்,**
**யாழ் மறைமாவட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்பது வருட நிறைவிலே மகிழ்வு



*"நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்."* (மாற்கு 2:17) என்னும் இயேசுவின் வார்த்தை இன்று நிறைவேறி நிற்கும் அன்புச் செய்தியாகின்றது. இன்று அமலமரித் தியாகிகளின் வாழ்வும் பணியும் பாரெங்கும் பரந்து பயனளிக்கும் என்பதில் யாழ் போதனா மருத்துவமனையும் அங்கே அமலமரித் தியாகிகளினால் ஆற்றப்படும் பணிகளும் அதன் ஓர் அங்கமாக இருக்கின்றது. இலங்கைத் திருநாட்டிலே இருக்கின்ற அதிகமான மருத்துவமனைகளில் அமலமரித் தியாகிகள் தமது சபை நிறுவுனர் புனித இயூஜின் டீ மசெனெட்டின் காலத்திலிருந்தே ஆற்றப்பட்டு வருகின்ற மருத்துவமனை ஆன்மீகப் பணியைத் தொடர்ந்து ஆற்றுவது குறிப்பிடத்தக்கது.

*'ஏழைகளுக்கு நற்செய்தி நவில'* என்னும் விருதுவாக்கு நலிந்தோர், வலுவிழந் தோர் என்னும் ஏழைகளின் பல முகங்களைக் கொண்ட எம் மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்தாலும், நோயாளிகளாக வாழும் பல உள்ளங்களுக்கு நலம் தரும் மருந்தாக அமலமரித் தியாகிகளின் மருத்துவமனை ஆன்ம பணி ஓர் உன்னத பணியாகத் தொடர்வது மகிழ்வளிக்கின்றது.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக யாழ் போதனா மருத்துவமனையில் அமலமரித் தியாகிகளின் இந்த மகத்தான பணியையிட்டு நான் மிகவும் பெருமையும், மகிழ்வும் அடைகின்றேன். அமலமரித் தியாகிகளின் அயராத கடின உழைப்பும் பணி ஆர்வமும் எம் மக்களின் ஆன்ம நலனை முன்னிட்டு ஆற்றப்படுகின்றன என்பதில் நான் திருப்தியும் அடைகின்றேன். குறிப்பாக இப்பணியை ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்த மறைந்த எமது முன்னைநாள் அமதி யாழ்-மாவட்ட முதல்வர் அருட்பணி கில்லேறியன் வேதநாயகம், அமதி அடிகளாரையும், முன்னைநாள் யாழ்-மறைமாவட்ட ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையையும், முதல் மருத்துவமனை ஆன்ம குரு அருட்பணி பிரான்சிஸ் டானியேல், அமதி அடிகளாரையும் அவரைத் தொடர்ந்து கடந்த நாற்பது ஆண்டுகளாக மருத்துவமனை ஆன்ம குருக்களாகப் பணியாற்றிய அனைத்து அமலமரித் தியாகிகளையும் தற்போதைய ஆன்ம குருவாகப் பணியாற்றும் அருட்பணி அருள் சுதர்சன், அமதி அடிகளாரையும் நான் நன்றியோடு நினைத்து உளமார வாழ்த்துகிறேன்.

நாற்பது வருட நிறைவிலே அமலமரித் தியாகிகள் தாம் யாழ் போதனா மருத்துவமனையில் ஆன்ம குருக்களாகப் பணியாற்றியதையிட்டு மகிழ்வு காணும்போது, இப்பணி இன்னும் பல ஆண்டுகள் தொடரவும், சிறப்புறவும், அமலமரித் தியாகிகள் தொடர்ந்தும் மதம் கடந்து, மொழி கடந்து, உயர்வு தாழ்வு இன்றி பணியாற்றி பாரெங்கும் நறுமணம் பரப்ப வேண்டி நிற்கின்றேன்.

அருட்பணி கலாநிதி செ. எட்வின் வசந்தராசா, அமதி,
அமலமரித் தியாகிகள் சபை,
மாகாண முதல்வர்,
யாழ்-மாகாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் : ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது”

*(மத். 5:3)*



மருத்துவமனை என்பது ஒரு மனிதனுடைய சமுதாய வாழ்வோடு பின்னிப் பிணைந்ததும் இரண்டறக்கலந்ததுமாகும். மனிதவுயிரின் ஆரம்பப் பிறப்பிடமும் அதேவேளையில் இறுதி முடிவிடமும் இந்த இடமேயாகும். இந்த வகையில் யாழ் போதனா மருத்துவமனை வட மாகாணத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்த ஆண்டு யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் இம் மருத்துவமனையினை முழுநேர பணிப்பொறுப்பேற்று நாற்பதாவது ஆண்டினை நிறைவு செய்யும் மாணிக்க விழாவினைக் கொண்டாடு வதையிட்டு மனமகிழ்வடைகின்றேன். தற்போதைய கத்தோலிக்க ஆன்மகுரு என்ற ரீதியில் இதுவரை காலமும் எங்கள் பாதுகாவலியும் இறைவனின் அன்னையுமான புனித வேளாங்கண்ணித் தாயாரின் பரிந்துரையின் பிரகாரம் இறைவன் செய்த அனைத்து நன்மைத் தனத்திற்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

எமது பணியினை நல்ல முறையில் செய்வதற்கு எமக்கு ஒத்தாசையினையும் தனது ஆசீரையும் வழங்கி நிற்கின்ற எமது மறை மாவட்ட ஆயர் பெருந்தகைக்கு எனது விசேட நன்றியினைக் கூறிநிற்கின்றேன். இப்பணி சிறக்க ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஈடுபட்டு உழைத்த அனைத்து அருட்பணியாளர்களுக்கும், அருட் சகோதரிகளுக்கும் அருட்சகோதரர்களுக்கும், மருத்துவமனைப் பணிப்பாளர்களுக்கும் வைத்தியர்களுக்கும், தாதியர்களுக்கும், சுகாதார உதவிப் பணியாளர்களுக்கும் தாதியக் கல்லூரி அதிபர், தாதிய போதனாசிரியர்கள், தாதிய மாணவர்கள் மற்றும் ஏனைய பணியாளர் சமூகத்தினருக்கும், கத்தோலிக்க ஆன்மீக குழுமத்தினருக்கும், ஆன்ம நலன் பேணும் தன்னார்வப் பணியாளர்களுக்கும், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் உபகாரிகளுக்கும், அனைத்து நலன்விரும்பிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளுடன் கூடிய வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

இம் மருத்துவமனையின் கத்தோலிக்க ஆன்மீக மையத்தின் பணியினை நோக்குகின்ற வேளையில், பலதரப்பட்ட துன்பங்களினாலும் துயரங்களினாலும் நோய்களினாலும் மனப்போராட்டங்களினாலும் சிக்கல்களினாலும் மூழ்கடிக்கப்பட்டு எதிர்கால வாழ்வில் என்ன நடக்குமோ என்ற அங்கலாய்ப்பில் நம்பிக்கையிழந்து, வாழ்விழந்து, வலுவிழந்து வருகின்ற மக்களுக்கு நம்பிக்கை ஒளிக்கீற்றுக்களை வாழ்வில் ஏற்படுத்தி சமுதாயத்திலே மீண்டும் தம் வாழ்வினை அர்த்தத்தோடும் மனமகிழ்வோடும் பிறரன்போடும் இறை அனுபவத்தோடும் வாழ ஆற்றுப்படுத்துகின்ற ஒரு மனிதநேயமிக்க பணியாகும்.

இப் பணியானது மதத்தினையும் தாண்டி நல்லுறவுடனும் ஆன்ம வாஞ்சையுடனும், மனிதநேயத்துடனும் செய்கின்ற பணியாகும். இந்த ஆண்டு யாழ் மறை மாவட்ட கருப்பொருளாக பொது நிலையினரின் அழைத்தல் வாழ்வைப் பற்றிச் சிந்திக்கின்றோம். எனவே இப்பணிக்கு எல்லோரும் ஒன்றாக இணைந்து எம்மிடம் உள்ள வளங்களைப் பயன்படுத்தி இறை விசுவாசத்திலும் ஆன்ம உளநலன் பேணும் பணிகளினூடாக எம்மால் இயன்ற ஒத்துழைப்புக்களை வழங்கி தேவையில் இருப்பவர்களுக்கு உதவிட முன்வருவோம். இறை இரக்கத்தின் முக்கிய செயலாக இருப்பது நோயுற்றவர்களை மருத்துவமனையில் தரிசிக்கின்ற பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பணிமையத்தின் ஆன்மீக, சமூக உளநல செயற்பாடுகளின் ஊடாக பல உள்ளங்கள் மிகப்பெரிய அளவிலான நன்மைத்தனங்களைப் பெற்றிருக்கின்றார்கள். இதற்கு அவர்களே சான்றாகவும் உள்ளனர். எனவே, மக்களோடு மக்களாக நாம் ஆற்றுகின்ற இந்தப் பணிக்கு சமூக நலனில் அக்கறை வேண்டி நிற்கின்ற அனைத்து உள்ளங்களும், தூய இதயத்தோடும் அர்ப்பண சேவை மனப்பான்மையுடனும் இணைவது காலத்தின் தேவையாக உள்ளது. இந்த நன்நாளிலே இப் புனிதமான பணிக்கு உறுதுணையாக இருக்கும் அனைத்து உள்ளங்களையும் வாழ்த்துவதோடு கடவுளின் நிறைவான அன்பும் ஆசீரும் உடன் இருந்து எம்மை வழிநடத்தவும், எமது தேவைகளில் புனித வேளாங்கண்ணி அன்னையின் தொடர் பாதுகாப்பும் பரிந்துரையும் நிறைவாகக் கிடைக்கவும் வேண்டுகின்றேன்.

இப்பணியின் நிமித்தம் வருகின்ற பல எதிர்ப்புக்களையும் சவால்களையும் தாண்டி இறை நம்பிக்கையோடும் ஒற்றுமையுணர்வோடும் பயணிப்போம். இவ்வருட பொதுநிலையினரின் அழைத்தல் ஆண்டிலே ஆழமான விசுவாசத்திலே பயணித்து இப் பாரினிலே இறைவனைப் பிரதிபலிக்கும் நல்ல ஒளி விம்பங்களாக நாம் ஒவ்வொருவரும் திகழ வாழ்த்தி வரவேற்று நிற்கின்றேன். இம்மலர் சிறக்க எனக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த யாழ் மாகாண அமலமரித் தியாகிகளின் முதல்வர் அருட்பணி எட்வின் வசந்தராசா அடிகளாருக்கு என் இதய நன்றிகள்.

இம்மலரினை அச்சிட்டு வெளியிட எனக்கு உறுதுணையாக அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளருக்கும், பணியாளர்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவியவர்களுக்கும், அச்செழுத்துப் பிழைகளை திருத்தம் செய்தவர்களுக்கும் எனது ஆசீருடன் கூடிய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றேன்.

அத்துடன் எமது பணி சிறக்க உங்கள் அனைவரின் தொடர் செப உதவிகளையும் கேட்டு நிற்கின்றேன். கடவுள் உங்கள் ஒவ்வொருவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*அருட்பணி. சி. அருள் சுதர்சன் அ.ம.தி*
*மருத்துவமனை ஆன்மகுரு*
*புனித வேளாங்கண்ணி ஆலயம்*
*யாழ் போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாண போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் என்ற ரீதியில் இம் மருத்துவமனையில் ஆன்மீகப் பணியாற்றி வருகின்ற அருட்பணியாளர்கள், அருட் சகோதரிகளின் பணியினை நினைந்து எனது உள்ளம் பூரிப்படைகின்றது.

இம் மருத்துவமனையில் உடலாலும் உள்ளத்தினாலும் வேதனையுற்று மனமுடைந்து நிர்க்கதி அடைந்து வருகின்ற அனைத்து நோயாளருக்கும் ஆறுதலாகவும் இறைவனின் ஆசீரை வழங்கும் நல் தூதுவர்களாகவும் இவர்கள் செய்கின்ற பணிகள் பாராட்டத்தக்கது. மருத்துவத்தையும் தாண்டி மனித உயிர்களைக் காப்பாற்றுகின்ற தெய்வீகம் நிறைந்த சக்தி கடவுள் ஒருவருக்கே உண்டு. நாம் நோய்களினாலும் துன்பங்களினாலும் துயரங்களினாலும் மனப்போராட்டங்களினாலும், வாழ்வின் சவால்களாலும் பாதிக்கப்படுகின்றபொழுது எமது இறுதி சரணாகதியாக இருப்பது கடவுளாகும். இதனை எம் வாழ்வில் பல தடவைகள் வாழ்வியல் அனுபவங்களாக ஏற்றுக்கொண்டிருக்கின்றோம்.

மனித உள்ளங்களை ஆன்மீக ரீதியில் நெறிப்படுத்தி இறை விசுவாசத்தையும் நம்பிக்கையையும் கட்டி எழுப்பும் பாரிய பணியினை மருத்துவமனை கத்தோலிக்க ஆன்மீகப் பணியாளர்கள் முன்னெடுக்கின்றனர். மருத்துவமனை ஆன்மீகப் பணியானது மகத்தானதுடன் மிகவும் சவால்கள் நிறைந்த பணியும், பல தசாப்தங்களாக காலத்தின் தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற விதத்தில் முன்னெடுக்கப்படுகின்ற பணியுமாகும்.

இந்த ஆண்டு அமலமரித் தியாகிகள் முழுநேரப் பணிப்பொறுப்பேற்று நாற்பது வருடங்களைப் பூர்த்தி செய்யும் மாணிக்க விழாவினைக் கொண்டாடுகின்றனர். இந்நாள் வரை இவர்கள் செய்து வருகின்ற அனைத்துப் பணிகளுக்காகவும் மருத்துவமனை சமூகத்தின் சார்பாக நன்றி கூறுகின்றேன். தொடர்ந்து இவர்களது ஆன்மீகப் பணி சிறக்க வாழ்த்தி நிற்கின்றேன்.

*நன்றி*

*வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி*
*பணிப்பாளர்*
*யாழ். போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிப் பணிப்பாளரின் ஆசியுரை



யாழ் போதனா மருத்துவமனையில் கோயில் கொண்டு எழுந்தருளி இருந்து நோயாளர்களுக்கு அருள்பாலிக்கும் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் பணிகளை அமலமரித் தியாகிகள் சபையினர் பொறுப்பேற்ற 40வது வருட நிறைவு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் நான் பெருமையும் மனமகிழ்வும் அடைகிறேன்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளர்கள் இனமத பேதமின்றி இவ்வாலயத்தை நாடிவருவதும் கண்ணீரோடும் நம்பிக்கையோடும் மன்றாடி அன்னையின் அருட்பொழிவால் நோய் நீங்கி குணமடைவதும் பெரும் அற்புதமாக நடைபெற்று வருகின்றது. பல கிறிஸ்தவர் அல்லாத சகோதரர்கள் இதற்கு சான்றாக உள்ளனர். அத்துடன் இச்சிற்றாலயத்தின் ஆன்ம குருவானவர் மத வேறுபாடுகள் இன்றி நோயாளர்களுக்காகச் செபிப்பதையும் அவர்களின் நலன்களில் அக்கறை உள்ளவராக இருப்பதையும் பல்வேறு தேவைகளில் அவர்களுக்கு உதவிகள் புரிவதையும் நான் கண்டிருக்கின்றேன். எல்லா மதத்தவர்களும் இரக்கப் பணிகளையும் ஆன்மீகப் பணிகளையும் வரவேற்கின்றனர். தொடர்ந்து வரும் காலங்களில் இச் சிற்றாலயம் சார்ந்த ஆன்மீகப் பணிகள் சிறப்புறவும் நோயாளர்கள் அன்னையின் அருளால் நலன்பெறவும் வாழ்த்துகின்றேன்.

**"மக்கள் பணியே இறைவன் பணியாகும்."**

*மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா*
*பிரதிப் பணிப்பாளர்*
*யாழ். போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*

" Be patient with everyone, but above all with yourself. I mean, do not be disturbed because of your imperfections, and always rise up bravely before a fall."

**- St. Francis De Sales**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிப் பணிப்பாளரின் ஆசியுரை



யாழ் போதனா மருத்துவமனையில் ஆரோக்கியத்தை வாரி வழங்கி வருகின்ற வேளாங்கண்ணி அன்னையின் ஆலயத்தில் அமலமரித் தியாகிகள் கடந்த நாற்பது வருடங்களாக நோயாளிகளின் மனக் குறைகளைத் தீர்த்து வருவதை நான் நேரடியாகவே கண்டுள்ளேன். பல்வேறு இன்னல்களுடன் வரும் நோயாளிகளின் உறவினர்கள் அன்னையினுடைய பரிந்துரையைக் கேட்டு மெழுகுவர்த்திகளை ஏற்றி கண்ணீருடன் பிரார்த்திப்பர். அன்னையின் ஊடாக பெற்றுக்கொண்ட நன்மைத்தனத்தின் பிரதிக்கடனாக இம் மருத்துவமனையை எப்போதெல்லாம் தரிசிக்கின்றார்களோ அப்போதெல்லாம் அந்த நன்றியை நினைந்து உருகிச் செபிப்பார்கள். இதன் வழியாக பல ஆன்மாக்களுக்கு இறை ஒளியின் ஊடாக கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இதற்கு உறுதுணையாக இருக்கும் இவ்வாலயத்தில் உள்ள அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களுக்கு எனது நன்றிகள். இவ்வாலயத்தின் இறைபணி தொடர்ந்தும் எமது மருத்துவமனைக்குக் கிடைக்க வேண்டும் என இறைவனிடம் இத்தருணம் மன்றாடுகின்றேன். இவ்வாலயத்தின் இறை பணியும் ஆன்மநலன் பேணும் பணியும் தொடர்ந்து பல்வேறு முனைப்புக்களுடன் முன்னெடுக்கப்படவும், மக்களினுடைய ஆன்ம தேவைகளை நிறைவேற்றி, அவர்களை நல்ல முறையில் வழிநடத்தவும் இறை ஆசீர் வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

" ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்"

**மருத்துவர் சி. யமுனாநந்தா**
**பிரதிப் பணிப்பாளர்**
**யாழ். போதனா மருத்துவமனை**
**யாழ்ப்பாணம்**

"Let us run to MARY,
And as her little children,
Cast ourselves into her arms
With a perfect confidence."

***-St. Francis De Sales***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைநாள் யாழ் போதனா மருத்துவமனை பணிப்பாளரின் ஆசியுரை



முன்னாள் மருத்துவமனை பணிப்பாளர் என்ற வகையில் இம் மருத்துவமனையில் இருக்கும் ஆரோக்கிய அன்னையின் ஆலயப் பணிகளை சிறப்புடன் தன்னலமற்ற சேவையாகப் புரியும் அமலமரித் தியாகிகளின் மாணிக்க விழாவிற்கு ஆசி கூறுவதில் பெரு மகிழ்வடைகின்றேன். எனது மருத்துவ சேவைக்காலத்தில் நான் பணிபுரிந்த மருத்துவமனைகளில் உள்ள ஆலயங்களில் அழகான எழில்மிகு தோற்றத்துடன் வியாபித்திருக்கும் ஆரோக்கிய அன்னையின் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலய வளர்ச்சிக்கு அமலமரித் தியாகிகளின் பங்களிப்பு அளப்பரியது.

யாழ் மாவட்ட மக்களில் பெரும்பாலானோரின் பிறப்பிடமும் இறப்பிடமுமாகத் திகழும் யாழ் போதனா மருத்துவமனையில் 1979ம் ஆண்டு அமலமரித் தியாகிகளின் முழுநேர ஆன்மீக சேவை ஆரம்பிக்கப்பட்டபோதும் கத்தோலிக்க அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் தமது தன்னலமற்ற அன்பான சேவையினை எவ்வளவோ காலத்திற்கு முன்பிருந்தே வழங்கி வந்தார்கள். 1951ம் ஆண்டு இம் மருத்துவமனையில் நான் பிறக்கும் போதும் கத்தோலிக்க திருச்சிலுவை அருட்சகோதரிகள் தமது சேவைகளை வழங்கி வந்தார்கள் என எனது தாயார் கூறுவார்.

1980களில் மருத்துவராக இம் மருத்துவமனையில் பணிபுரியும்போது ஆன்மீகப் பணிகளைச் செய்யும் கத்தோலிக்க அருட்பணியாளர்களைக் கண்கூடாகக் காணமுடிந்தது. இக்கட்டான நேரங்களிலும் போர்க்காலச் சூழலிலும், போக்குவரத்து வசதி இல்லாத போதும் அருட்சாதனங்களை உரியநேரத்தில் வழங்குதல் போன்ற ஆன்மீகக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதில் இக் கத்தோலிக்க அருட்பணியாளர்களின் சேவை அளப்பரியது. திருவிழாக் காலங்களில் ஆலய மேல்மாடிக் கூடத்தில் நடைபெறும் ஒன்றுகூடலில் பணிப்பாளராக என் பங்களிப்பையும் செய்ததை நான் இங்கு நினைவு கூருகின்றேன்.

விஞ்ஞானம் தொழில்நுட்பம் வளர்ச்சியுற்றபோதும் இன்னும் புரியாத புதிராக பல நோய்கள் தோன்றி மனித சமுதாயத்தை ஆட்டிப் படைக்கின்ற வேளையில் இறை நம்பிக்கையே பலருக்கு மன அமைதியைத் தருகிறது. உலக சுகாதார ஸ்தாபனம் மனிதனின் முழுமையான ஆரோக்கிய வாழ்விற்கு உடல் உள சமூக நலத்தோடு ஆன்மீக ஆரோக்கியமும் அத்தியாவசியம் என்பதை வலியுறுத்துகின்றது.

மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் எல்லாவற்றையும் ஆரோக்கிய அன்னையின் பாதத்தில் சமர்ப்பித்து நலம்பெற நாடும் மக்களுக்கு அமலமரித் தியாகிகள் தமது சேவைகளை வழங்குவதில் பின்நிற்பதில்லை. இச்சந்தர்ப்பத்தில் அமலமரித் தியாகிகளின் ஆன்மீக சேவை இம் மருத்துவமனையில் மென்மேலும் சிறப்பாகத் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.


மருத்துவர் அ. எ. ஞானஜோதி

முன்னாள் யாழ் போதனா மருத்துவமனை பணிப்பாளர்

முன்னாள் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை கணக்காளரின் இதயத்திலிருந்து....



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அமைந்திருக்கும் புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயப் பணிகள் அமலமரித் தியாகிகளினால் பொறுப்பேற்கப்பட்டு நாற்பது ஆண்டுகள் நிறைவடைந்து பெருமை பெறுகின்ற இவ்வேளையில் மனம் நிறைந்த மகிழ்வோடு வாழ்த்துவதோடு எனது ஆசிகளையும் வழங்குகின்றேன்.

மருத்துவ செயற்பாடுகளுக்கும், சிகிச்சை முறைகளுக்கும் அப்பால் தெய்வ நம்பிக்கை ஒன்றே நோயாளர்களைக் குணமாக்கும் என்பதை எப்போதும் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். நோயாளர்களின் விசேட தெய்வமாக விளங்கும் புனித ஆரோக்கிய அன்னையின் மீது கிறிஸ்தவர்களும், பிறமதத்தினரும் நம்பிக்கையோடு வேண்டுதல் செய்து உடல் நலம் பெறுகின்றனர். இம் மருத்துவமனையின் ஆன்ம குருவும் அவரோடு அன்புப் பணிபுரியும் குழுவினரும் அடிக்கடி விடுதிகளைத் தரிசித்து நோயாளர்களோடு உறவாடி அவர்களை உற்சாகப்படுத்துவதோடு அவர்களின் தேவைகளை ஈடுசெய்வதையும் நாம் கண்டிருக்கின்றோம்.

இவ்வாலயத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் நலன்புரிச் சேவைகள் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறும் எல்லா நோயாளர்களுக்கும் கிடைக்கவும், இறைவனின் துணையோடு எதிர்காலப் பணிகள் சிறக்கவும் வாழ்த்துத் தெரிவிக்கிறேன்.

***"நோயாளர்களில் இறைப்பிரசன்னத்தை கண்டு அன்போடு பணிபுரிவோமாக"***

*திரு. கி. சுரேஸ்குமார்*
*கணக்காளர்*
*யாழ். போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*

"After the Love
Which we owe
Jesus Christ, We
Must give the chief
Place in our heart
To the love of his
Mother MARY."

***- St.Alphonsus Maria de Liguori***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைச் செயலாளரின் ஆசிச்செய்தி



யாழ். போதனா மருத்துவமனையில் அமைந்திருக்கும் புனித ஆரோக்கியத் தாயின் இப்புனித ஆலயம் அமலமரித் தியாகிகளின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டு 40 வருடம் நிறைவுறும் இவ்வேளையில் இச்சபையினை வாழ்த்தும் அதேநேரம் இச் சிறிய ஆசியுரையை வழங்குவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மதங்களைக் கடந்து ஆற்றப்பட வேண்டியது மனித நேயப் பணிகளாகும். இவ்வாலய ஆன்மகுருக்கள் ஊடாக இப்புனிதமான பணி மருத்துவமனைக்குள் ஆற்றப்படுவதை நான் கண்டிருக்கின்றேன். ஆன்ம குருவும் அவரோடு இணைந்த பணியாளர்களும் நோயாளர்களின் நலன்களை இரக்கத்தோடும் அன்போடும் கவனிக்கும்போது அங்கே தெய்வ தரிசனத்தை உணரக்கூடியதாக உள்ளது.

நோயின் தாக்கத்தால் மனமுடைந்து வேதனையில் இருக்கும் நோயாளர்கள் இறைப் பிரசன்னத்தின் ஊடாக நம்பிக்கை வாழ்வுக்குள் வருவதும் இவர்களின் செபங்களும், ஆறுதல் வார்த்தைகளும் இவர்களை மட்டுமல்ல, பணியாளர்களையும் ஆற்றுப்படுத்தி வழிநடத்துவதும் எனது அனுபவமாகும்.

எனவே இவர்களின் இப்பணிகள் இன்னும் சிறப்பாக முன்னெடுக்கப்படவும் அதனூடாக அனைவரும் நலன்களைப் பெறவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

*A.S. பிரசாத்*
*மருத்துவமனைச் செயலாளர்*
*யாழ். போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*

"You yourself, as much as anybody in the entire universe deserve your love and affection"

**- The Buddha**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை பிரதம தாதிய உத்தியோகத்தரின் ஆசியுரை



யாழ்ப்பாணம் மருத்துவமனை வளாகத்தில் அமைந்திருக்கும் புனித வேளாங்கண்ணி மாதாவின் ஆலயம் அமைக்கப்பட்டு அமலமரித் தியாகிகள் முழுநேரப் பணிப்பொறுப்பேற்று 40வது ஆண்டைக் காணும் இவ் வேளையில் அதன் நிறைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்குக் கிடைத்த வாய்ப்பிற்காக நன்றி கூறுவதோடு, பெருமையும் அடைகின்றேன்.

பொதுவாக மனிதர்கள் நோயாளர்களாக இருக்கும்போது இறைவனை நம்பிக்கையோடு வேண்டுவது வழமையாகும். எனது அனுபவத்தில் இவ்வாலயத்தை நான் நாடும்போதும் கடந்து செல்லும்போதும் பலர் கண்ணீரோடு மன்றாடுவதைப் பார்த்திருக்கின்றேன். அதிகமான இந்துக்கள் கண்ணீரோடும் வேதனையோடும் செபித்து அன்னையின் அருளால் அற்புதமாக நலமடைந்த சம்பவங்கள் பல உண்டு.

அத்துடன் இவ்வாலயத்தில் ஆன்ம குருக்களாகப் பணிபுரியும் சுவாமிமார் விடுதிகளைத் தரிசித்து கத்தோலிக்க மக்களின் ஆன்மீக நலன்களை மட்டும் கவனிப்பதில்லை. நோயாளர்கள் எந்த மதமாக இருந்தாலும் அவர்கள் விரும்பிக் கேட்கும்போது அவர்களுக்காகவும் மன்றாடி ஆசி வழங்குவதையும் நான் பார்த்திருக்கிறேன். இது மதங்களைக் கடந்து நிற்கும் ஒரு மனித நேயப்பணியாகும்.

இந்த மகிழ்ச்சியான பணிகள் இச்சிற்றாலயத்தின் ஊடாக சிறப்பாக முன்னெடுக்கப்படவும் அதன் ஆன்ம இயக்குநர் இறையருளால் வழிநடத்தப்படவும் நோயாளர்கள் அன்னையின் அருளால் உடல் நலம் பெறவும் ஆசித்து நிற்கின்றேன்.

***"நோயாளரின் தேவையை நிறைவு செய்வதும் ஒரு மனிதநேயப் பணியாகும்"***


*திரு. து. மௌலீஸ்வரன்*<br>
*பிரதம தாதிய உத்தியோகத்தர்*<br>
*யாழ். போதனா மருத்துவமனை*<br>
*யாழ்ப்பாணம்*


"Listen to the Mass, the way the Virgin MARY, stood at Calvary."

**- St.Padre Pio**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பணி மங்களராஜா அடிகளாரின்

# ஆசியுரை



யாழ். போதனா மருத்துவமனை கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தை அமலமரித் தியாகிகள் சபையினர் பொறுப்பேற்று 40 வருடங்கள் நிறைவடைந்தமையையிட்டும் அவர்கள் பொறுப் பெடுத்ததில் இருந்து இதுவரையில் இப்பணியகத்தின் பணி வளர்ச்சியடைந்து, விரிவடைந்து வருவதையிட்டும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

1960 - 1970களில் யாழ் மருத்துவமனையில் உள்ள நோயாளிகளது, குறிப்பாகக் கத்தோலிக்க நோயாளிகளது ஆன் மீகத் தேவையை யாழ் பேராலய உதவிப் பங்குத் தந்தையர்களே தேவையேற்படும்போது அல்லது அழைக்கப்படும்போது கவனித்து வந்தனர். பின்னர் 70 களின் பிற்பகுதிகளில் யாழ் அடைக்கல அன்னை பங்கில் (OLR) ஒரு உதவிப் பங்குத்தந்தை நியமிக்கப்பட்டு அவர் இப்பணியை ஆற்றிவந்தார். 1979ம் ஆண்டுப் பகுதியில் இப்பணி அமலமரித் தியாகிகள் சபையின் பொறுப்பில் அப்போதைய யாழ் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களினால் விடப்பட்டது. அதுமுதல் அமலமரித் தியாகிகள் சபைக் குருக்கள் மருத்துவமனை ஆன்மீகப் பணியை முழுநேரப் பணியாக ஆற்றிவந்தனர். இதனால் பணி விரிவடைந்து சிறிதாக இருந்த ஆலயம் பலப்படுத்தப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டு. கத்தோலிக்க நோயாளிகள் மட்டுமல்ல பிறசமய நோயாளிகளும் இவ்வான்மீகப் பணியினால் பயன்பெற்றனர்.

காலப்போக்கில் மருத்துவமனையில் பணிபுரியும் தாதியர், தாதிய உத்தி யோகத்தர், வைத்தியர் ஆகியோரின் நலன், வினைத்திறன், ஆன்மீகம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக பணியகத்தின் பணிகள் விரிவுபடுத்தப்பட்டன. ஆன்மீகப்பணியில் இன்றும் கூடுதலாக துறவற சபையினர், குருமட மாணவர், பக்திச்சபையினர் மற்றும் தொண்டுள்ளம் படைத்தோர் பக்கபலமாய் இருக்கின்றனர்.

வேகமாக வளர்ச்சியடைந்து, மாற்றம் கண்டுவரும் உலகில் மருத்துவமனை களில் நோய்களினால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்படும் பலர் பலவிதமான ஆன்மீக, உளவியல் பிரச்சினைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இவர்கள் விரைவில் நலமடைவதற்கு ஆன்மீகப் பணியகம் ஊடாகப் பணிபுரியும் குருக்களும் அவர்களுக்கு உதவுவோரும் பலவழிகளிலும் பயிற்சிபெற்று, தம்மை அர்ப்பணித்து, நேரத்தை இவர்களுக் காகச் செலவழித்துப் பணியாற்றுகின்றமை போற்றப்படவேண்டிய விடயமாகும்.


இவ்வாறாக இவ் ஆன்மீகப்பணி வளர்ச்சியடைந்தமைக்கு அயராது உழைத்த ஆன்மீகக் குருக்களை வாழ்த்துகின்றேன். இனிவரும் வருடங்களில் இவர்கள் இறையருளுடனும் இன்னும் வினைத்திறனுடனும் தமது பணியை முன்னெடுத்துச் செல்ல எனது வாழ்த்துக்களும் வேண்டுதல்களும் உரித்தாகுக.

*அருட்பணி. ச.வி.ப. மங்களராஜா*
*இறையியல் விரிவுரையாளர்*
*புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருமடம்*
*கொழும்புத்துறை*
*யாழ்ப்பாணம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையில் பணியாற்றிய ஆன்ம பணியாளர்கள்



அருட்பணி.
பிரான்சிஸ் டானியேல் அ.ம.தி
1979 - 1987



அருட்பணி.
மரிய செபஸ்ரியன் அ.ம.தி
1987 - 1989



அருட்பணி.
லீனஸ் சொய்சா அ.ம.தி
1990



அருட்பணி.
ஜீவேந்திரா போல் அ.ம.தி
1991 - 1992



அருட்பணி.
எட்மன் றெஜினோல்ட் அ.ம.தி
1992 - 1995



அருட்பணி.
செலஸ்ரின் மஸ்கிரிஞ்ஞ அ.ம.தி
1995



அருட்பணி.
ஜேக்கப் யோகராஜா அ.ம.தி
1995, 1996 - 1998



அருட்பணி.
ஸ்ரனி சுவாம்பிள்ளை அ.ம.தி
1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையில் பணியாற்றிய ஆன்ம பணியாளர்கள்



அருட்பணி.
அன்புராசா அ.ம.தி
1998 - 2002



அருட்பணி.
டேவிட் ரட்ணராஜா அ.ம.தி
2003



அருட்பணி.
வின்சன்ற் அ.ம.தி
2003 - 2004



அருட்பணி.
அந்தோனிமுத்து குரூஸ் அ.ம.தி
2004 - 2006



அருட்பணி.
ஜெயபாலன் அ.ம.தி
2006 - 2007



அருட்பணி.
செபமாலை பெரேரா அ.ம.தி
2008 - 2010



அருட்பணி.
யோண் பற்றிக் அ.ம.தி
2010 - 2013



அருட்பணி.
செபஸ்ரியன் றெஜினோல்ட் அ.ம.தி
2013 - 2014


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையில் பணியாற்றிய ஆன்ம பணியாளர்கள்



அருட்பணி.
பிலிப் றஞ்சனகுமார் அ.ம.தி
2014 - 2016



அருட்பணி.
ஜெரால்ட் அ.ம.தி
Dec 2016 - June 2018



அருட்பணி.
யூட் கரோவ் அ.ம.தி
2018



அருட்பணி.
அருள் சுதர்சன் அ.ம.தி
2018 - இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பணி பிரான்சிஸ் டானியேல் அடிகளாரின் ஆசிச்செய்தி



*அது ஒரு காலம்.... சிறப்பான பணிக்காலம்...*

மருத்துவமனைப் பணி என்பது ஆன்மாக்களை நேசிக்கின்ற பணியாகும். இங்கு சிகிச்சைக்காக வருகின்ற ஒவ்வொரு உள்ளங்களும் ஏதோ ஒரு எதிர்பார்ப்போடுதான் வருகின்றார்கள். தாங்கள் பூரண சுகம் பெற்று சமுதாயத்தில் மகிழ்ச்சியான வாழ்வு வாழவேண்டும் என்ற மனநிலையோடு வருகின்றார்கள். இதனை என்னுடைய விபத்துக் காரணமாக 1978ம் ஆண்டு மருத்துவமனையிலே விடுதி இலக்கம் 24ல் அனுமதிக்கப்பட்டதனாலேயே உணர்ந்து கொண்டேன். ஒரு இளம் குருவானவராக இப் பணியினுடைய தாற்பரியத்தையும், முக்கியத்துவத்தினையும் நன்கறிவேன். இது ஓர் உன்னதமான பணியாகும். அத்துடன் அன்னை வேளாங்கண்ணியின் பொருட்டு எனக்குத் தனிப்பட்ட அன்பும் பாசமும் உண்டு. அவளை இம் மருத்துவமனைப் பாதுகாவலியாக பெற்றுக்கொண்டமை நாங்கள் செய்த மாபெரும் தவமாகும்.

அமலமரித் தியாகிகள் முழுநேரப் பணிப்பொறுப்பேற்று நாற்பது ஆண்டுகள் கடந்தது என்றால் அது சாதாரண ஒரு விடயமல்ல. பணிகளிலே பல மேடு பள்ளங்களைத் தாண்டி, சவால்களுக்கு முகம் கொடுத்து, பெரும் விருட்சமாக வளர்ந்திருக்கின்றது. அதை எண்ணிப் பூரிப்படைகின்றேன். இதற்கு இன்று வரை எம் மனங்களிலே நீங்காத இடம் பிடிப்பவர் அப்போதைய மாகாண அதிபராக இருந்து மறைந்த **அருட்பணி. கில்லேறியன் வேதநாயகம், அ.ம.தி** ஆவார். இன்னும் சிறப்பாக இதற்கு பல வழிகளிலே பற்பல முறைகளிலே உதவி செய்த எல்லா நல் உள்ளங்களுக்கும் நன்றி கூறுவதுடன் தொடர்ந்து எமது ஆன்ம பணி இறையாசீருடன் வளர உளமார வாழ்த்துகின்றேன்.

*அருட்பணி பிரான்சிஸ் டானியேல், அ.ம.தி*
*ஆன்மீகக் குரு*
*புனித வளனார் சிறிய குருமடம்*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்*

" Never be afraid of
Loving the blessed
Virgin too much. You
Can never love her
More than Jesus Did."

*-St. Maximilian Kolbe*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகப் பணி வாழ்வில் 40 ஆண்டுகள் நிறைவிற்கு ஆசி கூறி வாழ்த்துகிறேன்



அமலமரித் தியாகிகள் சபையின் ஆரம்பகால உருவாக்கத்தின் முதன்மைப் பணிகளில் ஒன்றான "மருத்துவமனை ஆன்மீக" பணியை ஆற்றும் வாய்ப்பு அமலமரித் தியாகி ஆகிய எனது குருத்துவ வாழ்வின் ஆரம்பகாலங்களில் (1987 – 1989) கிடைத்தமையை நினைத்து இன்றும் மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். எனது பல பணிகளில் நோயாளர்களுக்கான ஆன்மீகப் பணி மிகவும் பிடித்த பணியாக இருந்தது. நான் யாழ் போதனா மருத்துவமனை ஆன்மீக இயக்குநராக இருந்த காலத்தில் தான் (இந்திய அமைதிப்படையினரின்) மருத்துவமனையில் வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள், ஊழியர்கள், ஏன் நோயாளர்களும் கூடத் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மடிந்தனர். அந்த சூழ்நிலையில் மருத்துவ மனைக்குள் நுழைவதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்ட காலம். இவ்விதமான சவால்கள் மத்தியிலும் ஆன்மீக இயக்குநராகப் பணி செய்த நிறைவு இன்றும் பெரும் அனுபவமாக இருக்கின்றது.

இப்புனிதமான, ஆறுதல் அளிக்கும் பணி எமது அமலமரித் தியாகிகளினால் தொடரப்பட்டுக் கொண்டிருப்பது, நாம் செய்து வருகின்ற பணியின் பிரதிபலிப்பே. இவ் ஆன்மீகப் பணியினால் எவ்வித வேறுபாடும் இன்றி மருத்துவமனைக்கு வரும் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறும் அனைத்து நோயாளர்களும் ஆன்ம, உடல், உளநலம் பெற்றுச் செல்வதே நாம் ஆற்றும் பணியின் நிறைவு. இப்பணி மேலும் பல்லாண்டு தொடர வாழ்த்துகின்றேன். இவ் ஆன்மீகப் பணி 40வது ஆண்டு நிறைவைக் காணும் இவ்வேளை இன்றைய இயக்குநருக்கு எம் வாழ்த்துக்களும், ஆசீர்களும் உரித்தாகட்டும்.

*அருட்பணி. ச. மரிய செபஸ்ரியன் அ.ம.தி*
*பங்குத்தந்தை*
*மணியந்தோட்டம்*
*யாழ்ப்பாணம்*

"However great a sinner may have been, if he shows himself devout to MARY He will never perish."

***-St.Hilary of Poitiers***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைகள் தொடரட்டும்...



விதைத்தவன் உறங்கினாலும்
விதைகள் உறங்குவதில்லை.
நினைத்தவன் மறந்தாலும்
நினைவுகள் மறப்பதில்லை.
விதைகள் கீழ்நோக்கி எறியப்பட்டால்தான்
விருட்சங்கள் மேல் நோக்கி வளரும்.
விழும்போது விதையென விழு,
எழும்போது விருட்சமாய் எழு.
40 ஆண்டு இறைபணி நினைவுகள்
விசாலமாய், வீரியமாய், வீறாப்போடு,
விருட்சங்களாய், படர்ந்து வளர்வதை
நினைத்து மகிழ்கிறேன்.

எங்கோ ஓர் அடையாளமற்ற முகவரியில் எம்குரல் அழும், ஆனால் எம் குரல் எழும் என்ற வரலாற்று ஆசைகளோடு பயணிக்கும் யாழ். போதனா மருத்துவமனையின் ஆன்மீகப் பணியில் தன்னலமற்ற தொண்டு புரியும் இவர்கள் மனுக்குலத்திற்கு ஓர் முன்னுதாரணம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க, ஆரோக்கியமான வாழ்க்கைக்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு, தங்கள் உயிரைச் துச்சமென மதித்து, தன்னலமற்ற சேவையாற்றி வரும் மருத்துவர்கள், பணியாளர்கள், உதவியாளர்கள், உபகாரிகள் அனைவரையும் பாராட்டுகிறேன். **"மருத்துவர் நோயற்றவனுக்கன்று, நோயுற்றவனுக்கே"** என்று சூளுரைத்த இறையேசுவின் அருள் வேண்டுகின்றேன். ஆன்மீகப் பணி சிறக்க, நோயுற்றோர் வாழ்வுபெற வாழ்த்துகின்றேன்.

***கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான் என்***
***எண்ணில் கலந்தே இருக்கின்றான் - பண்ணில்***
***கலந்தான் என் பாட்டில் கலந்தான் உயிரில்***
***கலந்தான் கருணை கலந்து.***

என்ற இராமலிங்க அடிகளாரின் வாக்கிற்கிணங்க பல உயிர்களின் எண்ணங்களில், உள்ளங்களில் கருணையோடு கலந்து ஒரு சகாப்தத்தைத் தொடங்கியிருக்கும் உங்கள் இமாலயப் பணியை நன்றியோடு பார்க்கின்றேன். மருத்துவத்தோடு ஆன்மீகத்தையும் இடைச்செருகல் செய்வதுதான் இவர்களின் வெற்றியின் இரகசியம். பணி சிறக்க வாழ்த்துகின்றேன். தடம் பதித்து நலிந்த உடலுக்கு உயிர்கொடுக்க வேண்டுகிறேன். உலகின் படைப்புகளெல்லாம் உழைப்பின் சிதறல்களே. உழைப்பை நீக்கிவிட்டால் உலகில் மிஞ்சுவது கல்லும் மண்ணும் மட்டுமே.

***வாழ்க உங்கள் கடின உழைப்பு!***
***வளர்க உங்கள் மருத்துவப் பணி!***
***தொடர்க உங்கள் குணமளிக்கும் சேவை!***

***அருட்பணி. லீனஸ் சொய்சா அ.ம.தி***
***தமிழ் ஆன்மீகத் தந்தை***
***லூர்து அன்னை திருத்தலம்***
***பிரான்ஸ்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்பது ஆண்டுகளின் எண்ணற்ற கதைகள்



அமலமரித் தியாகிகளது சபை நிறுவுனராகிய புனித இயூஜீன் டி மசனெட் அவர்கள் குருவாகவும் பின்பு ஆயராகவும் ஆற்றிய பணிகளில் ஒன்று சிறைச்சாலை மற்றும் மருத்துவமனை ஆகியவற்றைத் தளமாகக் கொண்டமைந்த ஆன்மீகப் பணியாகும். அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றும் அமலமரித் தியாகிகள் உலகின் பல நாடுகளில் சிறைச்சாலைகளையும், மருத்துவமனை களையும் தமது ஆன்மீகப் பணித் தளங்களில் முக்கிய தளங்களாகக் கொண்டு கடந்த 200 வருடங்களாக சேவை புரிந்து வருகின்றனர்.

காலத்தின் தேவைகளைக் கருத்திற்கொண்டு பணித்தளங்களில் காலபதிக்கும் அமலமரித் தியாகிகள் 1979 ம் ஆண்டு யாழ். மருத்துவமனை மற்றும் சிறைச்சாலை ஆன்மீகப் பணியில் முழு நேரமாக ஈடுபட்டனர். பல ஆண்டுகள் இப்பணியை அர்ப்பண உணர்வுடன் புரிந்தனர். அருட்தந்தை பிரான்சிஸ் டானியல் அவர்களது இடமாற்றத்தின் போது இப் பணியை முடிவிற்குக் கொண்டுவரும் எண்ணம் அமலமரித் தியாகிகளின் அதிபரின் மனதில் எழுந்தது. அவ்வேளையில் இப்பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும் இப்பணி மகத்தானதும், அமலமரித் தியாகிகளுக்கு மிகவே பொருத்தமானதுமான பணியென்று முன்வைத்து அமலமரித் தியாகிகளின் அதிபரின் அனுமதியோடு நான் இப் பணியினைப் பொறுப்பேற்றேன். இப்பணியினை ஏறக்குறைய ஒரு வருடகாலம் புரிந்து இதனை நிரந்தரப்படுத்தி தொடர்ந்து ஆற்றுவதற்கு தொடர்பக குழுமத்திலிருந்து வழி சமைத்துக்கொடுத்தேன்.

தொடர்பகக் குழுமத் தலைவராகவும் பின்பு அமலமரித் தியாகிகள் யாழ் மாகாணத் தலைவராகவும் இருந்த காலத்தில் மருத்துவமனை ஆன்மீகப் பணிக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் ஆன்ம குருக்களிற்கு ஊக்கமளிப்பதிலும் மகிழ்ச்சியடைந்தேன். மருத்துவமனையில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னையின் சிற்றாலயத்தை புனருத்தாரணம் செய்து மேல் மாடியில் ஒன்று கூடுதலுக்கான மண்டபம் ஒன்றையும் அருட்தந்தை அன்புராசா ஆன்மகுருவாகப் பணிபுரிந்த காலத்தின் போது அமைத்துக் கொடுத்தமை மனநிறைவைத் தருகின்றது.

யுத்தகாலங்களில் எதிர்கொண்ட ஏராளமான சவால்கள் மத்தியிலும் ஆன்மீகப் பணியில் மனச்சோர்வைக் கருதாமல், ஒரு சாதாரண நிலையில் மேற்கொள்ளப்படும் பணியாக அல்லாமல் நாற்பது வருடகாலமாகத் தொடர்ந்தாற்றிய ஒவ்வொரு அமல மரித் தியாகியான ஆன்மகுருவும் ஆர்வத்தோடும் ஆற்றல் மிக்கவராகவும், அர்ப்பண உணர்வோடும் புரிந்துவரும் சேவை இவ்வேளையில் போற்றுதற்குரியது.

உடல் நோய்கள் உளத்தையும், உள நோய்கள் உடலையும் பாதிப்பதனால் தனி ஒருவரது நோய் அவரது குடும்ப சூழலை மட்டுமல்ல சமூகத்தினரையும் பாதிக்கின்றது. அதனால் மருத்துவமனை ஆன்ம குருவினது பணி வெறுமனே ஒரு சமய அல்லது வழிபாட்டுப் பணி மட்டுமல்லாது உள, சமூக ஆற்றுப்படுத்தும் இயல்பையும் கொண்டதாகும். இது ஒரு மனிதநேயப் பணியுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் போதனா மருத்துவமனை பல நல்லெண்ணம் கொண்ட நாடுகள், நிறுவனங்கள், நன்கொடையாளர்கள் போன்றோரின் பங்களிப்பினாலும் ஆற்றல் மிக்க தாதியர்கள், வைத்தியர்கள் மற்றும் பணியாளர்கள் போன்றோரின் தியாகம் மிக்க உழைப்பினாலும் வளர்ச்சியும் முன்னேற்றமுமடைந்து வருவதை எமது தமிழ் சமூகத்திற்குக் கிடைக்கும் பெரும் ஆசீர்வாதமாகக் கருதுகின்றேன்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக அமலமரித் தியாகிகள் யாழ், போதனா மருத்துவமனையில் ஆன்மீகப் பணிபுரிந்துள்ளார்களென்று மகிழ்ந்து நிற்கின்றோம். இம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்தோர் கூறி நிற்கும் ஆயிரமாயிரம் கதைகளை நன்றியுணர்வோடு நினைவு கூர்ந்து, சிற்றாலயத்தில் கோவில் கொண்டெழுந்தருளியிருந்து எண்ணற்ற சகாயங்கள் பலபுரியும் ஆரோக்கிய அன்னைக்குப் புகழ்பாடுவோம்.

*அருட்பணி. அ. ஜீவேந்திரா போல் அ.ம.தி*
*அமல உற்பவம்*
*கொழும்புத்துறை*
*யாழ்ப்பாணம்*

"The world being unworthy to receive the Son of God directly from the hands of the Father, he gave his Son to MARY for the world to receive him from her."

***-St. Augustine***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும்...



முப்பது வருடங்களுக்கு மேலாகத் தமிழர் தாயகத்தில் நடைபெற்ற போரில் யாழ் போதனா மருத்துவமனை ஆற்றிய பங்கு வார்த்தைகளால் இலகுவில் வடித்துவிட முடியாத தொன்றாகும். இக்காலப் பகுதியில் யாழ் போதனா மருத்துவமனை யில் பணியாற்றிய வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

இப்படிப்பட்ட ஒரு பின்புலத்தில் யாழ் போதனா மருத்துவமனையைப் பரிபாலித்த ஆன்மீகக் குருக்கள், மருத்துவமனை நிர்வாகத்தினரோடும் ஏனைய பொதுமக்களோடும் இணைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு ஆற்றிவரும் பணி விசேடமாக நினைவுகூரப்பட வேண்டியதொன்றாகும். நோயாளர்கள் உடலிலும் உள்ளத்திலும் சந்திக்கின்ற துன்பத்தில் அவர்களோடு கூட இருந்து ஆறுதல் அளிப்பது சமயங்களைக் கடந்த ஒரு மனிதாபிமானப் பணியாகும்.

அந்த வகையில் யாழ் போதனா மருத்துவமனையில் ஆன்மீகக் குருக்களாகப் பணியாற்றிய அனைத்துக் குருக்களும் தமது தனிப்பட்ட ஆற்றல்களோடு காலத்தின் தேவைகளுக்கேற்ற முறையில் ஆற்றிய பணி மிகவும் நன்றியுணர்வுடன் நினைவு கூரப்படவேண்டியதொன்றாகும். இன்னும் குறிப்பாக யாழ் போதனா மருத்துவமனையில் ஆன்மீகக் குருக்களாகத் தமது பணியின் நாற்பது ஆண்டுகளை நிறைவு செய்யும் யாழ் அமலமரித் தியாகிகளுக்கு எனது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவிப்பதில் நிறைவடைகிறேன். 1992ம் ஆண்டிலிருந்து 1995ம் ஆண்டு வரை யாழ் போதனா மருத்துவமனையில் எனது குருத்துவ வாழ்வின் முதற்பணியாக நான் ஆன்மீகக் குருவாகப் பணிபுரிந்தபோது போரின் காரணமாக மக்கள் அன்றாடம் சந்தித்த சொல்லொணாத் துன்பங்களை நேரடியாக எதிர்கொண்ட எனது அனுபவமே உளவளத்துணையை எனது வாழ்நாள் பணியாகத் தேர்ந்துகொள்ள எனக்கு உதவிசெய்தது.

எனவே தமது பணியின் நாற்பது ஆண்டுகளை நன்றியோடு நினைவுகூரும் யாழ் அமலமரித் தியாகிகளுடனும் அவர்களுக்குத் துணைநிற்கும் மருத்துவமனை நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்களுடனும் நான் என்னையும் இணைத்துக் கொள்கி றேன். அனைவருக்கும் அருள்பாலிக்கும் ஆரோக்கிய அன்னையின் நலமளிக்கும் அருள் தொடர்ந்தும் அனைவருக்கும் கிடைக்க வேண்டுகிறேன்.

*அருட்பணி ச.எட்மண்ட் றெஜினோல்ட் அ.ம.தி*
*திரு இருதய ஆலயம்*
*கில்பேண்*
*இலண்டன்*
*ஐக்கிய இராச்சியம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையில் ஆன்மீகப்பணி செய்த அருட்சகோதரிகள்



அருட்சகோதரி. கிறிஸ்ரபெல்



அருட்சகோதரி.
ஜோசப்பின் மேரி



அருட்சகோதரி.
கலாசியோனா



அருட்சகோதரி.
தயாநாயகி



அருட்சகோதரி.
அழகேஸ்வரி



அருட்சகோதரி.
எலிசபெத்



அருட்சகோதரி.
அன் ரனிற்றா



அருட்சகோதரி.
அஞ்சலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையில் ஆன்மீகப்பணி செய்த அருட்சகோதரிகள்



அருட்சகோதரி.
சோதிநாயகி



அருட்சகோதரி.
மரிய டெய்சி



அருட்சகோதரி.
ராஜேஸ்வரி



அருட்சகோதரி.
மலர்விழி



அருட்சகோதரி.
கிறேஸ் மேரி



அருட்சகோதரி.
மரினா



அருட்சகோதரி.
பொஸ்கோ



அருட்சகோதரி.
மாக்கிறேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையில் ஆன்மீகப்பணி செய்த அருட்சகோதரிகள்



அருட்சகோதரி.
தனுஜா



அருட்சகோதரி.
நிவேதா



அருட்சகோதரி.
சயந்தி A.C



அருட்சகோதரி.
தயாளசீலி



அருட்சகோதரி.
ரீனா



அருட்சகோதரி.
ஆன் றூபினி



அருட்சகோதரி.
அகிலா மெற்றலின்



அருட்சகோதரி.
அலிஸ் மத்தியூஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா மருத்துவமனை ஆன்மீகப் பணியில் அமதிகளின் 40 ஆண்டுப் பதிவுகள்...



*"ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும்*
*சிறைப்பட்டோர் விடுதலை அடைவர்*
*பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும்*
*ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும்*
*ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை*
*முழக்கமிட்டு அறிவிக்கவும்*
*அவர் என்னை அனுப்பியுள்ளார்"*

*- (லூக். 4:16)*

அகிலம் முழுவதும் அறியப்பட்டு இறைமகன் இயேசு வழியில் நின்று சாதி, மத, இன, மொழி கடந்து ஏழை எளிய மக்களுக்குப் பணிபுரிய புனித இயூஜினின் பிள்ளைகளாக அடியெடுத்து வந்த அமலமரித் தியாகிகளாகிய எங்களுக்கு ***" இந்த சமூகத்தில் மங்கி எரியும் திரிகளை அணைப்பதில் பயனில்லை. நீங்கள் எரிவதை, வெப்பம் கொடுப்பதை, வெளிச்சம் கொடுப்பதை, விரும்புகிறேன். இல்லையேல் சபையை விட்டு வெளியேறுங்கள்"*** என்ற புனித இயூஜினின் வார்த்தைகளை உய்த்துணர்ந்த நாங்கள் காலத்திற்கு ஏற்றவகையில் பண்முகப் பணிகளினூடாக சேவையாற்றிக்கொண்டு இருக்கிறோம்.

அந்த வகையில் யாழ். அமலமரித் தியாகிகள் 1979ம் ஆண்டு யாழ் போதனா மருத்துவமனையில் தமது பணியை முழுநேரப் பணியாக ஆரம்பித்து, இன்று வரை 40 ஆண்டுகளாகப் பணிபுரிந்து இந்த ஆண்டு "மாணிக்க விழாவினைக்" கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு, ஆன்மீகக் குருவாகப் பணியாற்றிய நானும் இதையிட்டு வெளிவரும் சிறிய மலருக்குச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது குருத்துவ வாழ்வுப் பயணத்தில் எனது முதற்கனியும் முதற்பணியும் இதுவே. 1994ம் ஆண்டு குருத்துவம் பெற்றதும் சபையின் முதற்பணியாக யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பொறுப்பு கொடுக்கப்பட்டது. புதிய பணி, புதிய இடம், புதிய மக்கள், புதிய சூழல் மத்தியில் எனது புதிய பணியை ஆரம்பித்தேன். ஏற்கனவே தொடரப்பட்ட பணியை மெதுவாக ஆரம்பித்தேன். மருத்துவமனைப் பணியில் பணியாற்றிக் கொண்டிருந்த பக்திச் சபைகளை மேலும் வலுப்பெறச் செய்தேன். இவர்களுக்கான மாதாந்த தியானங்கள், கூட்டங்கள், கருத்தமர்வுகள் என்று சொல்லி விரிவுபடுத்தினேன்.

மருத்துவமனைப் பணியாளர்களுக்கான ஒரு சங்கம் (அமைப்பு) உருவாக்கி அவர்களது ஆன்மீக நலன்களைச் செயற்படுத்தினேன். இக்காலத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வழிபாடுகளையும், பாடல்களையும், கிறிஸ்து பிறப்புக் காலத்தில் கரோல் கீதங்கள், நடனங்கள், தெரு நாடகங்கள், சமூக விழிப்புணர்வு சம்பந்தமான செயற்பாடுகளையும் தொடக்கி வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ம் ஆண்டு ஐப்பசி 30ம் திகதி யாழ்ப்பாணத்தில் மாபெரும் இடப்பெயர்வுடன் அனைத்துப் பணிகளும் முடக்கப்பட்டன. பின்னர் 1997- 1999 மீள்குடியமர்வுக்குப் பின்னர் மீளவும் மருத்துவமனை பணி புனரமைப்பு செய்யப்பட்ட துடன், புதிய பன்முகப் பயிற்சியினூடாக விரிவாக்கப்பட்டது. இக் காலத்தில் திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சார்ந்த அருட்சகோதரிகளான அழகேஸ், சோதிநாயகி, அன்ரனீற்றா, மெரீனா ஆகியோரும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சார்ந்த அருட்சகோதரி சயந்தியும் சேவையாற்றினார்கள்.

போர்க்கால சூழலில் காயப்பட்டு வந்தவர்களுக்கும், உடலாலும் உள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மன உளைச்சலால் உழல்வோருக்கும், ஆற்றுப்படுத்தல் வழியாகவும், கடவுளின் ஆசீராலும் அவர்களை ஒரு புதிய வாழ்வுக்கு இட்டுச் செல்லக்கூடிய செயற்பாடுகளாகவும் அமைந்தன.

இப்பணியின் ஊடாகப் பல அனுபவங்களைப் பெற்றதோடு, ஆன்மீகக் குருவாக இருந்து செயற்பட இம் முதற்பணி என்னை வளர்த்தது என்று சொன்னால் அது மிகையாகாது. நோயாளர்களை நல்ல முறையில் ஆற்றுப்படுத்துவதற்கு, அவர்களை நல்ல வழியில் கொண்டு செல்வதற்கு, சில முடிவுகளை அவர்கள் நல்ல மனதுடன் ஏற்றுக்கொள்வதற்கு ஏற்ற நல்ல சூழமைவை எனக்கு அருளியது கடவுளின் பலமும் சக்தியுமாக இருந்தது என்பதை உணருகிறேன். அமலமரித் தியாகிகளின் மருத்துவமனைப் பணி மேலும் மேலும் வளர, பணி சிறக்க இறையாசீர் கிடைக்க வேண்டிநிற்கிறேன்.

*அருட்பணி பி. ஜேக்கப் யோகராஜ் அ.ம.தி*
*மருத்துவமனை ஆன்மகுரு*
*மட்டக்களப்பு போதனா மருத்துவமனை*
*மட்டக்களப்பு*

"Him whom the heavens cannot contain, the womb of one woman bore."

***St.Augustine,***
***Doctor of the Church***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவல நிலையிலும் இறைபராமரிப்பு



1995 - 1996 காலப்பகுதியில் மிகவும் இடர்கள் சூழ்ந்தநிலையில் எனது பணிகள் யாழ். மருத்துவமனையில் தொடர்ந்தன. யாழ். மக்கள் யுத்தத்தின் நெருக்கடியால் சொந்த மண்ணைவிட்டு இடம்பெயர்ந்து செல்லவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலையில், உயிர்காக்கும் அன்னையாக விளங்கியது யாழ். மருத்துவமனை. பலமக்கள் போரினால் அவயவங்களை இழந்து தடுமாறிய வேளையில் அவர்கள் அனைவருக்கும் தஞ்சம் கொடுத்து மருத்துவமனையில் மக்களுக்கு ஆரோக்கியம் அளிக்கும் அன்னையாக, ஆறுதல் கொடுக்கும் தாயாக விளங்கினாள் மருத்துவமனையின் சிற்றாலயத்தில் வீற்றிருக்கும் ஆரோக்கிய அன்னை. அன்னையின் பரிந்துரையால் மக்கள் பெற்ற நன்மைகளை எனது பணிவாழ்வில் அனுபவித்தேன். தடுமாற்றங்களும், தவிப்புக்களும் நிறைந்த சூழ்நிலையில் இறை பராமரிப்பை மக்கள் அனுபவிக்க எமது சிற்றாலயம் ஓர் புகலிடமாக விளங்கியது.

போரின் கொடூரம் மேலும் உக்கிரம் அடைந்த நிலையில் மக்களின் ஆதாரமாக விளங்கிய மருத்துவமனைப் பணிகள் பருத்தித்துறை மந்திகைக்கு மாற்றப்பட்டது. நானும் எனது பணியை அங்கே மாற்றி பாதிக்கப்பட்டவர்களோடு பணியாற்றினேன். யுத்தம் முடிவடைந்த நிலையில் மீண்டும் மருத்துவமனைப் பணிகள் யாழில் ஆரம்பிக்கப்பட்டன.

மருத்துவமனைக் கட்டடத்தொகுதி பல சேதங்களுக்கு உள்ளாகியிருந்தது. ஆனால் எமது அன்னையின் திருச்சுரூபம் எதுவித பாதிப்புமின்றிக் காட்சிதந்தது. யாழ் வரலாற்றில் மிகவும் துன்பகரமான காலத்தில் நோயாளர்களைப் பராமரித்த யாழ் மருத்துவமனை, வரலாற்றில் இடம்பிடித்திருப்பது போல எமது சிற்றாலயமும் அன்னையின் பரிந்துரையும், இறைபராமரிப்பும் எப்பொழுதும் யாழ் மக்களால் இன மதபேதமின்றி நினைவுகூரப்படும் என்பதில் ஐயமில்லை.

கடந்த நாற்பது ஆண்டுகளாக மருத்துவமனையில் ஆன்மீகப் பணியாற்றிவரும் யாழ் அமலமரித் தியாகிகள் சபையின் பணிகள் தொடரவும், எமது சிற்றாலயம் தொடர்ந்தும் இறை பிரசன்னத்தின் இல்லமாக விளங்கவும் வாழ்த்துகின்றேன். எனது பணிவாழ்வை மீட்டிப் பார்ப்பதிலும், சிற்றாலயத்தின் பணிவளர்ச்சியைக் காண்பதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

*அருட்பணி ஸ்ரனி சுவாம்பிள்ளை, அ.ம.தி*
*இயக்குநர்*
*நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்க விழாவிற்கான ஆசிச்செய்தி



யாழ் மருத்துவமனையில் அமலமரித் தியாகிகள் ஆன்மீகப் பணியைத் தொடங்கி 40 ஆண்டுகள் பூர்த்தி செய்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். ஆன்மீகப் பணியில் அமலமரித் தியாகிகள் கால் நூற்றாண்டைக் கடந்து 40 ஆண்டுகளை எட்டியுள்ளனர்.

இது அவர்களின் தளராத பணியின் சுவடுகள். இங்கு பல அனுபவங்கள், இறை பராமரிப்பு, புனித இயூஜின் டி மசனெட் அவர்களின் எல்லை கடந்த பணியின் விரிவாக்கம் என்பன வெளிப்படுத்தப்படுவதை நாம் காண்கின்றோம். அமலமரித் தியாகிகள் விசேட பணிகளில் தனித்துவம் கொண்டவர்கள்.

யாழ். நகர் மத்தியில் அவர்கள் செய்த இப்பணி இயேசுக் கிறிஸ்துவின் இறையரசுப் பணியின் முக்கியத்துவத்தை முழு அளவில் கொண்டு செல்லும் பணியாக அமைகிறது என்றால் அது மிகை இல்லை. ஒதுக்கப்பட்ட, நோய்வாய்ப்பட்ட, சிதைக்கப்பட்ட மக்களின் வாழ்வில் இந்த ஆன்மீகப்பணி உகந்த குணமாக்குதல் பணியை மதம், இனம், மொழி கடந்து மக்களுக்குக் கொடுக்கும் என்பதில் எமக்கு எவ்வித ஐயமுமில்லை.

இந்த 40 வருட நினைவுகளைப் பதிவுகளாக்கி நினைவு மலர் வெளியிடும் அருட்பணி அருள் சுதர்சன் அ.ம.தி அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது. அவரின் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்தி ஆசித்து நிற்கின்றேன்.

*அன்பின் இறைபணியில்*

*அருட்பணி. டேவிட் ரட்னாறாஜ், அ.ம.தி*

*பங்குத்தந்தை*

*லுணுகல*

*பதுளை மறைமாவட்டம்*

"You want to know

Who the real catholics are?

EASY. Observe their relationship with the


MOTHER OF GOD"

***- St.Maximilian Kolbe***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பணி பேகஸ் வின்சன் அடிகளாரின் ஆசிச்செய்தி



எமது ஈழமண்ணில் தலை நிமிர்ந்து வானளாவ உயர்ந்து இலங்கைத் திருநாட்டில் எப்பகுதியிலிருந்தும் வரும் நோயாளர் களையும் தன்னகத்தே உள்வாங்கியதுடன் ஆயிரக்கணக்கான தாதியர்களையும் உருவாக்குகின்ற அற்புதமான மருத்துவமனை யாக விளங்குவது எம் போதனா மருத்துவமனையாகும். 1979ம் ஆண்டு அமலமரித் தியாகிகளின் மூத்த குருக்களில் ஒருவரான அருட்தந்தை பிரான்சிஸ் டானியேல் அ.ம.தி அவர்களுடன் இம் மருத்துவமனையின் ஆன்மீகப் பணியானது யாழ் அமலமரித் தியாகிகளின் கரங்களிலே ஒப்படைக்கப்பட்டது.

2019ம் ஆண்டாகிய இவ்வருடம் நாற்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து மகிழ்கின்ற வேளையிலே எத்தனையோ அமலமரித் தியாகிகள் அயராத அர்ப்பணிப்புடன் கூடிய ஆன்மீக வாஞ்சையின் அன்பிலே புனித இயூஜினின் சுவடு நின்று இவ் ஆன்மீகப் பணியினை ஆற்றியுள்ளனர். இவ் வகையிலே 2003ம் ஆண்டு முற்காலாண்டுப் பகுதியில் அருட்பணி அன்புராசாவுடன் ஒரு தியாக்கோனாகவும் 2003 சித்திரை தொடக்கம் 2004 சித்திரை வரை புதிய குருவாக என்னுடைய கன்னிப் பயணத்தை ஒரு ஆன்மீகக் குருவாகவும் பணியாற்றியதைப் பதிவு செய்து கொள்கிறேன்.

இவை எல்லாவற்றிற்கும் மகுடமாக விளங்குவது இம் மருத்துவமனையில் அமைந்துள்ள அன்னையினுடைய சிற்றாலயமே. இன, மத, மொழி, வயது, பால் வேறுபாடு இன்றி **"ஆச்சி கைவிடாத, ஆச்சி பார்த்துக் கொள்ளம்மா"** என்ற ஈனக் குரல்களின் ஓலத்திற்கு ஆறுதல் கொடுக்கின்ற, அபயம் கொடுக்கின்ற இடமே இந்த அன்னை வேளாங்கண்ணி ஆலயம். இவ்வருடம் நாற்பது வயதைப் பூர்த்தி செய்கின்ற வேளையிலேயே இன்னும் பல நூறு வருடங்கள் அமதிகளின் இப் புனிதமான பணி தொடரவும் வருகின்ற அனைவரது வேண்டுதல்களும் தேவைகளும் அன்னையின் பரிந்துரையால் நிறைவேற்றப்படவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

*அருட்பணி. ஆ. பேகஸ் வின்சன் அ.ம.தி*
*தோட்டவெளி*
*மன்னார்*

" from MARY

We learn to trust even

When all hope seems gone."

***- St. John Paul II***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பணி அந்தோனிமுத்து அடிகளாரின் உள்ளத்திலிருந்து...



யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் ஆகிய நாங்கள் யாழ் போதனா மருத்துவமனையிலே கடந்த 40 ஆண்டுகளாக ஆன்மீகக் குருக்களாகப் பணிசெய்து வருகின்ற அற்புதமான வரலாற்றை நினைந்து உள்ளத்திலே நன்றி உணர்வோடும், யாழ் போதனா மருத்துவமனையில் பணியாற்றிய பல ஆன்மீகக் குருக்களுள் நானும் ஒருவர் என்ற உரிமையோடும் இவ்விதழுக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

**"எளியோர்க்கு நற்செய்தி நவில"** என்ற விருதுவாக்கோடு பாரெங்கும் பரந்து பணிசெய்யும் அமலமரித் தியாகிகளின் மருத்துவமனை ஆன்மீகப்பணி என்பது எம் ஸ்தாபகர் புனித இயூஜின் டி மசனெட்டின் காலத்தில் இருந்தே பெரும் வரவேற்பைப் பெற்று, தவிர்க்க முடியாத ஓர் பணிக்களமாக இருந்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே யாழ் போதனா மருத்துவமனையிலே அமலமரித் தியாகிகளின் ஆன்மீகப்பணி இன்று பரந்து விரிந்து 40 ஆண்டுகளைக் கடந்து வீறுநடை போட்டுக்கொண்டு இருக்கின்றது. கடந்த 40 ஆண்டுகளாக யாழ் போதனா மருத்துவமனையிலே ஆன்மீகப் பணி செய்த எல்லா அமலமரித் தியாகிகளுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் என்னுடைய பணிக்காலத்திலே என்னோடு உடன் பயணித்துப் பணி செய்த அருட்சகோதரி பொஸ்கோ தி.கு அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள். அத்துடன் என்னுடைய பணிக்காலத்திலே நடந்த கொடூரமான துன்பியல் நிகழ்வு (2004) சுனாமிப் பேரலை அனர்த்தம். இவ்வனர்த்தத்தின் போது களத்திலிருந்து மருத்துவமனை, அதனையும் கடந்து உயிர்நீத்தவர்கள், காயம் அடைந்தவர்களின் வீடுவரை என்னுடன் சேர்ந்து தோழமையுடன் பல மாதங்களாகப் பணி செய்து வந்த அமதிகள் குருக்களுக்கும் இந்நேரத்தில் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அமலமரித் தியாகிகள் ஆகிய நாம் இன்று **'பன்முக ஏழைகள்'** மத்தியில் பணிசெய்து கொண்டிருக்கிறோம். இப்பன்முக ஏழைகளிலே மருத்துவமனை ஆன்மீகப் பணி காலத்தின் கட்டாயப் பணியாகும். குறிப்பாக யாழ் போதனா மருத்துவமனையிலே எம் ஆன்மீகப் பணி இன்னும் பல ஆண்டுகளைக் கடக்க வேண்டும். எம் ஆன்மீகக் குருக்கள் தகுந்த பயிற்சி பெற்று தங்கள் அர்ப்பணமுள்ள பணியினால் யாழ் போதனா மருத்துவமனையிலே இன்னும் பல ஆண்டுகள் நிறைவான பணி செய்ய வேண்டி என் ஆசிச்செய்தியை நிறைவு செய்கின்றேன்.

அருட்பணி. செ.அந்தோனிமுத்து குரூஸ் அ.ம.தி
இரத்தினபுரி மறைமாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை ஓய்வு நிலை உத்தியோகத்தர்கள்



மருத்துவர். அ. எ. ஞானஜோதி
(யாழ். போதனா மருத்துவமனையின்
முதல் கத்தோலிக்க பணிப்பாளர்)
பணியில் சேர்வு - 01.06.1981
பணியில் ஓய்வு - 30.09.2011



திருமதி. தேவமலர் அருளானந்தம்
( தாதியர் கல்லூரியின் முதல்
கத்தோலிக்க அதிபர்)
பணியில் சேர்வு - 15.11.1975
பணியில் ஓய்வு - 10.08.2010



திருமதி. ஜூர்த்தம்மா
தவமணி அருளப்பு
பணியில் சேர்வு - 01.09.1959
பணியில் ஓய்வு - 31.07.1990



செல்வி. குருசுமுத்து ஜூர்த்
பெர்னடேற்
பணியில் சேர்வு - 01.03.1966
பணியில் ஓய்வு - 31.10.1996



செல்வி. சிங்கராஜர்
பணியில் சேர்வு - 01.03.1966
பணியில் ஓய்வு - 31.10.1996



திருமதி. றீற்றா தர்மலிங்கம்
பணியில் சேர்வு - 01.01.1961
பணியில் ஓய்வு - 21.01.1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை ஓய்வுநிலை உத்தியோகத்தர்கள்



செல்வி. யூலியா பொன்னுக்கோன்
பணியில் சேர்வு - 1963
பணியில் ஓய்வு - 1998



திருமதி. பிலோமினா சந்திரன்
பணியில் சேர்வு - 16.09.1965
பணியில் ஓய்வு - 26.08.2001



திருமதி. மரியமலர் பஸ்ரியாம்பிள்ளை
பணியில் சேர்வு - 16.04.1963
பணியில் ஓய்வு - 04.05.2003



திருமதி. புஸ்பராணி அன்ரன் பாலேந்திரா
பணியில் சேர்வு - 01.12.1971
பணியில் ஓய்வு - 27.07.2006



திரு. ஜோசப் ஜேக்கப்
பணியில் சேர்வு - 01.05.1971
பணியில் ஓய்வு - 09.08.2007



திருமதி. சுகிர்தராணி புவேந்திரன்
பணியில் சேர்வு - 1970
பணியில் ஓய்வு - 2010



திருமதி. பத்மராணி ஸ்ரனிஸ்லஸ்
பணியில் சேர்வு - 15.11.1971
பணியில் ஓய்வு - 14.05.2010



திருமதி. நீற்றம்மா தேவதிரவியம்
பணியில் சேர்வு - 10.04.1980
பணியில் ஓய்வு - 04.10.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் ஆழத்திலிருந்து வாழ்த்துக்கள்



யாழ் போதனா மருத்துவமனை புனித ஆரோக்கிய அன்னையின் 40 ஆண்டு நிறைவில் நானும் என் நினைவுப் பதிவினை முன்வைப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றும் முடக்கப்பட்டிருந்த, யுத்தமேகங்கள் சூழ்ந்த 2006ம் ஆண்டு காலகட்டத்தில் மருத்துவமனை செல்லும் பாதை மூடப்பட்ட நிலையிலும் அன்னையின் ஆசீர் என் ஆன்மீகத்தை ஆழப்படுத்தியது.

தந்தையை இழந்து, எட்டு வயதில் இடியப்பம் விற்கும் சிறுமி ஒருத்தி கரங்களைக் குவித்து, கண்களை மூடி, முழந்தாளில் ஒவ்வொருநாளும் நடப்பாள். அவளை வினவியபோது தன் தாய் சுகம் பெற்று நாகதம்பிரான் கோவிலுக்கு செல்லவேண்டும் என்ற விண்ணப்பத்தின் நம்பிக்கை. வைத்தியர்களே கேள்விக்குறி என்ற நிலையை உணர்த்தியபோது, ஆண்டவரின் உடலைக் கரைத்துக் கொடுத்தால் சுகம் கிடைக்கும் என்று நீண்ட நாட்களாக கோமா நிலையில் இருந்த ஒரு தாதியின் கணவர் எழுந்து நடந்ததை இன்றும் நினைக்கின்றேன். கர்ப்பப்பை வெடித்த நிலையில் யாராவது ஒருவரைத் தான் காப்பாற்ற முடியுமென்ற மருத்துவரின் வார்த்தைகளை நான் கேட்டேன். கணவர் அன்னையிடம் கண்ணீரோடு வேண்டினார். அவர்கள் நன்றி செலுத்த அன்னையிடம் வந்தபோது அவள் சகாயம் புரியும் மனுக்குலத்தின் தாய் என்பதை மீண்டும் நினைவுபடுத்தியது.

இவ்வாறு பல அற்புதங்கள், அதிசயங்கள் செய்து கண்ணீரைத் துடைக்கும் புனித ஆரோக்கிய அன்னை எழுந்தருளி இருக்கும் யாழ். போதனா மருத்துவமனையின் பணி மிகவும் பாக்கியமானதும் என் ஆன்மீக வாழ்விற்கு வரப்பிரசாதமானதுமாகும். எனவே, இப்பணியின் ஊடாக நான் பெற்ற விசுவாச அனுபவ உணர்வுடன் கூடிய இறை நல்லாசீரும் இனிய நல்வாழ்த்துக்களும் உங்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.

*அருட்பணி. பா. ஜெயபாலன் அ.ம.தி*
*குவாடலூப்பே அன்னை திருத்தலம்*
*திருகோணமலை*

"Satan and hell Tremble

When I repeat 'HAIL MARY'. "

***- St. Thomas a Kempis***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பணி செபமாலை பெரேரா அவர்களின் ஆசிச்செய்தி

*"எந்த அன்னையும் தனது பிள்ளை வேதனை அடைவதை விரும்பமாட்டாள்"*



புனித ஆரோக்கிய அன்னை எம் எல்லோருக்கும் தாயாக இருக்கின்றாள். இன, மத வேறுபாடின்றித் தன்னிடம் வரும் அனைவருக்கும் வரங்களை அள்ளிக் கொடுப்பவள். அந்த அன்னை யாழ் போதனா மருத்துவமனையில் அமைக்கப்பட்ட சிற்றாலயத்தில் எழுந்தருளி இருந்து தன்னைத் தேடிவரும் நோயாளர்கள், பக்தர்களுக்கு அவர்களின் உடல், உள, வேதனையை அகற்றி அவர்களுக்கு ஆறுதல் அளித்து வருவதை நாம் அறிகின்றோம். **"தாயின் மடியில் தலை சாய்த்திருந்தால் துயரம் தெரிவதில்லை"** என்பதற்கு ஏற்ப நோயினாலும், வேதனையாலும் துன்புறும் மக்களைத் தனது இரக்கம் நிறைந்த கரங்களினால் அணைத்து ஆறுதல் கொடுக்கின்றாள். நோயுற்றவர் தமது அன்னையின் அரவணைப்பில் இருப்பது மிக மேலானதொன்றாகும். எந்த அன்னையும் தனது பிள்ளை வேதனை அடைவதை விரும்பமாட்டாள்.

காலத்தின் தேவைகளை அறிந்து அங்கு இந்த ஆலயத்தை அமைத்து, அதில் தொடர்ந்து செயலாற்றி வந்த குருக்களையும் சிறப்பாக யாழ் அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த அமலமரித் தியாகிகளையும், அருட்சகோதரிகளையும் அதில் ஆர்வம் கொண்ட நலன் விரும்பிகளையும் மகிழ்ச்சியோடு நினைவு கூருகின்றேன்.

இவர்களின் பெரும் முயற்சியினாலும், தாராள உள்ளங்களினாலும், கடின உழைப்பினாலும், அர்ப்பண சேவையினாலும் இன்று இந்த அன்னையின் ஆலயம் வெற்றிக்களிப்பில் நான்கு தசாப்தங்களைக் கடந்து தனது மாணிக்க விழாவைக் காண்கிறது. நானும் இந்த மருத்துவமனையில் ஒரு ஆன்மீகப் பணியாளனாய் பணி செய்யக் கிடைத்த வாய்ப்பை எண்ணும்போது பேருவகை அடைகின்றேன். இந்த ஆலயம் இன்னும் பல தசாப்தங்களைக் கடந்து அன்னையின் அரவணைப்பும், ஆறுதலும் என்றும் அவளைத் தேடிவரும் பக்தர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று வேண்டுவதோடு, இந்த மகிழ்ச்சியான பின்புலத்தில் இருக்கும் அனைத்து நல்லுள்ளங்களையும் மனதார வாழ்த்தி எம் நிறைவான ஆசிகளை வழங்கி நிற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


*அருட்பணி. எம்.செபமாலை பெரேரா அ.ம.தி*
*மறையுரைஞர் குழுமம்*
*"அமதி அகம்"*
*வவுனியா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்”

(மத். 11:28)



மருத்துவமனை ஆன்மீகப்பணி ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளாகப் பணியாற்ற அருள்கூர்ந்த இறைவனுக்கு நன்றிகூறி பணியாற்றிய அத்தனை குருக்களையும் நன்றியோடு நினைக்கின்றேன். இந்த 40 ஆண்டு பூர்த்தியில் தற்போது பணியாற்றும் அருட்பணி. அருள் சுதர்சன், அமதி அவர்களுக்கும் ஏனைய தன்னார்வப் பணியாளர்களுக்கும் என் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறி நிற்கின்றேன்.

2010ஆம் ஆண்டு எனது குருத்துவ திருநிலைப்படுத்தலின் பின் யாழ். போதனா மருத்துவமனை ஆன்மகுருவாகப் பணிப்பொறுப்பை ஏற்றபோது அச்சமும் பயமும் என் வாழ்வில் ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆனால், இவை நாளடைவில் அகன்று சென்றன. பணியை ஏற்றபோது ஆன்மீக வாஞ்சையுடனும் பல திட்டங்களுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் கடவுள்மேல் நம்பிக்கை கொண்டு ஆரம்பித்தேன்.

ஆரம்பத்திலே பல இடையூறுகள், கஸ்ரங்கள், சவால்கள் எழுந்த போதிலும் அவற்றிலிருந்து நான் பின்வாங்கவில்லை. நாளடைவில் மருத்துவமனைப் பணிப்பாளர், வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் ஆகியோருடன் நல்லதொரு உறவை மேற்கொண்டு ஆன்மீகப் பணியை செவ்வனே ஆற்றிவந்தேன். உடல், உள நோய்களினால் சிகிச்சை பெறும் பல தரப்பட்ட நோயாளிகள் மத்தியில் நான் ஆற்றிய பணி இறைவன் எனக்குக் கொடுத்த கொடையே. எனது பணியில் பிற சமயத்தவர்களையும் தரிசித்து ஆறுதல் கூறி பல உதவிகள் புரிந்தது இறைவன் எனக்கு வழங்கிய இன்னுமொரு வரப்பிரசாதமே.


கிறிஸ்து பிறப்பு மகிழ்ச்சியை மருத்துவமனையில் உள்ள அனைத்து நோயாளர்களுடனும் பகிர்ந்து கொள்வதற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலை மாணவர்களின் அன்பளிப்புப் பொருட்களைப் பெற்று நோயாளர்களுக்கு வழங்கினேன். இந்த முயற்சி இன்றுவரை நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த வேளையில் எனது பணிக்காலத்தில் மருத்துவமனை நோயாளிகளின் நலனுக்காக உதவி புரிந்த நல் உள்ளங்களை நினைவுகூர்ந்து நன்றி செலுத்துகின்றேன்.

*அருட்பணி. யோ.யோண் பற்றிக் அ.ம.தி*
*மருத்துவமனை ஆன்மகுரு*
*வவுனியா மாவட்ட மருத்துவமனை*
*வவுனியா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயத்தின் நன்றிகள்
# என் வல்லமையுள்ள தேவனுக்கே...



நோயாளர் நலன்பேணும் ஆன்மீகப் பணி இன்றும் என்றும் எப்போதும் தேவையானதொன்றே. **"நான் உனக்கு நலம் அளிப்பேன், உன்னுடைய காயங்களை ஆற்றுவேன்"** (எரே.30:17)

இந்த வார்த்தை வாழப்படுவதற்கு பலரை கருவிகளாக இறைவன் அனுப்புவது காலத்தின் ஓட்டத்தில் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதொரு விடயம். யாழ். போதனா மருத்துவமனையில் எழுந்தருளியிருந்து அபயமென்று ஓடிவரும் எல்லாப் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் தந்து குறை நீக்கி, மனத்துயர் போக்கி அவர்கள் உடனிருக்கும் வேளாங்கண்ணித் தாயின் அற்புதக் கரத்தின் அரவணைப்பை நானும் அனுபவித்தேன். நோயாளர்களின் ஆன்மீக நலனுக்காய் உழைத்திட எனக்கு கிடைத்த இரண்டரை வருடங்களில் (2014-2017) இந்தத் தாயின் பரிந்துரையால் சுகம்பெற்ற பல பிள்ளைகளும் இதற்கு சான்றுபகர்வார்கள்.


மருத்துவமனை ஆன்மீகப் பணி என்கின்றபோது மிகவும் இலகுவாகச் செய்து விடக்கூடிய ஒரு பணியல்ல, ஆனால் இறைவல்லமையை முழுமையாக நம்பிச் செய்கின்ற போது அது மிகவும் திருப்தியும் மகிழ்ச்சியும் தருகின்ற உன்னதமான இறைபணியாகும். ஆகவே அமலமரித் தியாகிகள் துறவறக் குருக்களின் அர்ப்பணம் நிறைந்த பணிகளில் இதுவும் முக்கியமானதொன்றாக அமைவதை எல்லோரும் அறிவர். முன்பு சுதேச குருக்களின் நோயாளர் சந்திப்போடு மட்டும் இருந்த இந்த மருத்துவமனை ஆன்மீக நலம் பேணும் பணியானது அருட்பணி பிரான்சிஸ் டானியேல் அ.ம.தி அடிகளாரின் பணியேற்போடு ஒரு புதிய பணிக்களமாக இற்றைவரை தொடர்ந்து ஆற்றப்படுவது வரலாற்று உண்மை.

பணிப்பொறுப்பேற்பில் எமது அமலமரித் தியாகிகள் துறவற குருக்கள் 40 ஆண்டுகளை நிறைத்து நிற்பது எமக்கு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் தருகின்றது. நானும் இந்தக் காலத்தில் இணைந்து செயற்பட இறைவனால் தேர்ந்து அனுப்பப் பட்டவன் என்பதன் அடிப்படையில் என் மனமகிழ்ச்சியையும் நிறைவையும் தெரிவிக்க விரும்புகிறேன். நடந்து வந்த பாதைகளை, அதனுடைய தன்மைகளைப் பார்க்கின்றபோது எல்லாப் புகழும் மகிமையும் அந்த எல்லாம் வல்ல இறைவனுக்கே உரியது என்ற பேருண்மையைச் சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன். புனித வேளாங்கண்ணித் தாயின் பரிந்துரையும் அவர் உடனிருப்பும் உங்கள் அனைவரோடும் என்றும் இருந்திட மனதார வாழ்த்துகின்றேன். அயராது தங்களது பணியை ஆற்றிவரும் பணியாளர்கள் மற்றும் எத்தனையோ இறைவன் அனுப்பிய அவரது பிள்ளைகளின் கூட்டு முயற்சி இன்றும் என்றும் எப்போதும் நடந்தே வருகின்றது. அவர்களை நினைந்து நன்றி கூறுவதோடு அவர்களது நாளாந்த வாழ்வு இறைவனின் அருள் வரங்களால் நிறைக்கப்படவும் வேண்டுகின்றேன். நாற்பது ஆண்டுகள் நிறைந்து நிற்கும் இந்த இறைபணி மேலும் தொடர வாழ்த்துகின்றேன். அதில் ஈடுபட இறைவன் அழைக்கின்ற எல்லோரும் மனநிறைவோடு எப்போதும் பணிசெய்ய இறையாசீரையும் வேண்டுகின்றேன்.

*அருட்பணி. ச. பிலிப் றஞ்சனகுமார் அ.ம.தி*
*இயக்குநர்*
*"ஞானதீபம்"- இளையோர் திறன்விருத்தி மையம்*
*அரியாலை*
*யாழ்ப்பாணம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்திர சிகிக்சைக் கூடப் பணியாளர்கள்
1959 - 1969



அருட்சகோதரி. பெர்னடேற்
( திருச்சிலுவைக் கன்னியர் சபை மருத்துவத் தாதி )
சத்திர சிகிக்சைக் கூடம் - 1959
மருத்துவ தாதி திருமதி அருளப்புடன்



அருட்சகோதரி. பெர்னடேற்
( திருச்சிலுவைக் கன்னியர் சபை மருத்துவத் தாதி )
சத்திர சிகிக்சைக் கூடம் - 1943



யாழ். அரச பொது மருத்துவமனை 1963 இல் திருச்சிலுவைக் கன்னியர் சபை மருத்துவ தாதியரின் பிரியாவிடையின் போது
குறிப்பு : 1938 - 1963 வரை யாழ். அரச மருத்துவமனையில் பணியாற்றியுள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையின் கூடாரம்
## யாழ் மருத்துவமனைச் சிற்றாலயம்



"நான் நோயுற்றிருந்தேன் என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்" (மத். 25:36)

கடந்த நாற்பது ஆண்டுகளாக இந்த யாழ் போதனா மருத்துவமனையில் நோயாளரையும், இங்குள்ள இறை நம்பிக்கை யாளர்களையும் விசுவாசத்தில் உறுதிப்படுத்தி அயராத பணியாற்றிய அருட்பணியாளர்களையும், இம் மருத்துவமனை வளாகத்துள் சிறந்த இறை பிரசன்னமாக இச் சிற்றாலயத்தை சிறப்புற அமைக்க அரும்பாடுபட்டு உழைத்த எம் அருட்பணியாளர்களையும், அவர்களின் வாழ்வு மேலே சொல்லப்பட்ட இறைவார்த்தைக்கு ஏற்ப வாழ்வாக்கப்பட்டதையும் நன்றியோடு நினைத்துப் பாராட்டுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நற்செய்திப் படிப்பினைகளுக்கிணங்க நோயாளர் மத்தியில் பணியென்னும் போது உடனே எமது உள்ளத்தில் உதயமாவது காயப்பட்ட மனிதருக்கு நல்ல சமாரித்தனாக எமது ஆண்டவராகிய இயேசு ஆற்றிய பணியே. நற்செய்தியில் வரும் சமாரித்தன் தன் கழுதையை விட்டிறங்கி, குனிந்து குற்றுயிராயிருந்த அந்த அந்நியனின் காயங்களைச் சுத்தம் செய்து, திராட்சைரசம் பூசி அவன் குணம் பெறும்வரை தனது பொறுப்பில் வைத்துப் பராமரித்தான். உண்மையில் எத்தனை சிறிய இரக்கச்செயல்கள் இச் சிறந்த செயலுக்குள் உள்ளடக்கப்படுகின்றன? இந்தச் செயலைத் தான் பல மணிநேரங்கள் செவிமடுப்பதிலும், செபிப்பதிலும், இயேசுவைக் கொடுப்பதிலும், பரிந்துபேசுதலிலும் செய்கின்றனர் எமது அருட்பணியாளர்களும், அருட்சகோதரிகளும் என்பதை மனமகிழ்வுடன் கூறுகின்றேன்.

2007 பங்குனி 22ம் நாள் எமது திருத்தந்தை 16வது பெனடிக்ற் தமது செய்தியில் மருத்துவமனைகளில் உள்ள சிற்றாலயமானது இதயத்தின் அதிர்வாக, மையமாக இருக்கிறது. ஏனென்றால், இங்கேதான் இயேசு மனிதர் வாழ்வு பெறும்படி தம்மைத் தாமே முழுமையாகப் பரலோக பிதாவுக்குக் கையளித்துக் கொண்டிருக்கிறார். மிகவும் மரியாதை, பயபக்தியுடன் நோயாளர்க்கு நற்கருணை வழங்குதலானது, அவர்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறி அவர்களது ஆன்மாவின் உள் ஒளியுடன் நோயின் நிலையில், வேதனையில் நம்பிக்கையுடனும், எதிர்நோக்குடனும் வாழ அவர்களை உற்சாகப்படுத்துவதாய் இருக்கிறது.

ஒவ்வொரு மனிதரும் இறைவனில் நம்பிக்கைகொண்டு அவரது கரங்களில் அவன் / அவளது வாழ்வை விட்டுவிட வேண்டும். ஒரு மருத்துவமனை வளாகத்துள் ஒரு சிறிய சிற்றாலயம் அமைந்திருப்பது மிகவும் முக்கியமானது. தங்கள் எல்லா உணர்வுகளுடனும் தங்களைச் சரணாகதியாக்குபவர்களுக்கு வாழ்வளிக்கும் தளமாக, நம்பிக்கையின் கூடாரமாக இச் சிற்றாலயம் அமைகிறது.

**"இறைவனில் மாத்திரமே எனது ஆன்மா இளைப்பாறும். எனது பாதுகாப்பு அவரிடமிருந்தே வருகிறது. அவரே என் கற்பாறை, என் புகலிடம், என் பலம். எனவே நான் அசைவுறேன்." (சங். 62)**

அநேக நோயாளர் உணர்ச்சி வசப்பட்டு, கோபித்து, அழுதுகொண்டு இறைவனைக் கைவிடலாம். ஏனெனில் அவர்களது நோயை ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கஷ்டமாயிருக்கிறது. நோயாளி மாத்திரமல்ல அவரது குடும்பத்தினர், உறவினரும்கூட தங்கள் இயலாமையிலும், நம்பிக்கை இழந்த நிலையிலும் இந் நிலையை ஏற்றுக்கொள்வது மிகவும் கடினமாயிருக்கிறது. தளர்ந்த இவர்களுக்கு ஆறுதலும் பலமுமளித்து, உற்சாகப்படுத்தி நம்பிக்கையின் கூடாரமாக இருப்பது இந்த சிற்றாலயமேயாகும்.

கடந்த 40 வருடங்களாக இந்த மருத்துவமனையிலுள்ள நோயாளர், மருத்துவ கடமையிலிருப்போர், பணியாளருக்கு ஆற்றிய தன்னலமற்ற அளப்பரிய சேவைக்காக அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு எதிர்காலத்திலும் இவர்கள் பணி இங்கு தொடர எனது வாழ்த்துக்கள். தொடக்கத்தி லிருந்தே எமது திருக்குடும்ப சகோதரிகள் இங்கு பணிபுரியும் குருக்களோடு இணைந்து பணிபுரிந்து வருகின்றனர். யாழ் திருக்குடும்பக் கன்னியர் இல்லம், மாகாண இல்லத்திலிருந்து சகோதரிகள் குருக்களோடு இணைந்து பணியாற்றியமையும், எமது ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் அயராத திருத்தூதர்களாக இன்றுவரையும் தங்கள் பணியைத் தொடர்ந்து கொண்டிருப்பதும் மகிழ்ச்சியே. உங்கள் எல்லோருக்கும் இறை ஆசி உரித்தாகுக.

*"மிகச் சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் இவற்றைச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் "*

*- (மத். 26:40.)*

மருத்துவமனையில் பணிபுரியும் சகோதர குருக்கள், அருட்சகோதரிகள் மேற்கூறப்பட்ட இறைவார்த்தையை மகிழ்வுடன் வாழ ஆண்டவராகிய இயேசுவிடமிருந்து பலத்தையும், வழிநடத்துதலையும், நிறைவையும் ஆசித்து நிற்கின்றேன்.

***இயேசு மரி சூசை என்றென்றும் உங்களோடு இருப்பார்களாக.***

*அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்*
*திருக்குடும்ப யாழ் மாகாணத் தலைவி*
*திருக்குடும்ப மாகாண இல்லம்*
*யாழ்ப்பாணம்*

"While Mother MARY

Holds

Your Hand,

You Cannot Fall"

**-St.Bernard of Clairvaux**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் ஆழத்திலிருந்து வாழ்த்துகிறேன்...



சுகநல சேவை என்பது இன்று எல்லோருக்கும் மிகவும் தேவையானதும் முக்கியமானதுமான சேவையாக உள்ளது. திருச்சிலுவைக் கன்னியர்களாகிய நாங்கள், எமது சபை ஆரம்பிக்கப்பட்டு 175வது ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதுடன் அர்ப்பணிப்புள்ள சுகநலப் பணியில் இலங்கையில் காலடி எடுத்துவைத்து, 90வது அகவையினைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அதிலும் விசேட விதமாக எமது ஆரம்ப மிஷனறி அருட்சகோதரிகள் யாழ். போதனா மருத்துவமனையிலே 1938-1963 வரை பணிபுரிந்துள்ளார்கள். அவர்களுடைய அர்ப்பணம் நிறைந்த சுகநலப் பணி வார்த்தைகளினால் சொல்லமுடியாதது. மக்கள் அவர்களுடைய பணியினை மிகவும் விரும்பினார்கள். ஏனெனில் அவர்கள் மக்களோடு மக்களாக தங்களுடைய பணியினை அன்பு செய்து அதை தாங்கள் கொடுத்த அர்ப்பன வாக்குறுதிகளுக்கு பிரமாணிக்கமாக வாழ்ந்தார்கள். சுகநல சேவை என்பது அன்பு, அக்கறை, பொறுமை, அர்ப்பணிப்பு நிரம்பிய பணியாக அமையவேண்டும் என்பதற்கு அவர்களே முன்னோடிகளாக வாழ்ந்து காட்டியவர்கள். அவர்கள் விட்டுச் சென்ற பணியானது பல பரிமாணங்களை எடுத்து, காலத்தின் மாற்றங்களுக்கு இசைந்து கொடுத்து, பல வளர்ச்சிகளை இம் மருத்துவமனை கண்டுள்ளதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

**"இரும்புத் திடனும் இளகிய மனமும் பொதுநலத் தொண்டனின் இனிய பண்புகள்"** என்ற வாக்கு உண்மையானது. இறைபணியாளர்களுக்குச் சாலச் சிறந்த பண்புகளாகும்.

இலங்கையில் சுகநல சேவையில் 90வது ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் வேளையில், அமலமரித் தியாகிகள் இம் மருத்துவமனையினை முழுநேரப் பணியேற்று 40வது வருடங்களாக ஆற்றிவரும் ஆன்ம சேவையினைப் பாராட்டவேண்டிய கடமை எனக்கு உள்ளது. அதாவது யாழ்ப்பாண மருத்துவமனையில் உள்ள சிற்றாலயத்தில் 40வது வருடங்களாக குருக்களாக இருந்து, நோயாளிகளுக்கு இறை ஆசீரையும் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளையும் அள்ளி வழங்கித் தங்களை முற்று முழுதாக அர்ப்பணித்து சேவையாற்றி வருகின்றார்கள். இவ்வருடத்தோடு 40 வருடங்களைப் பூர்த்திசெய்து இறைமக்களுக்கு சேவையாற்றும் அமலமரித் தியாகிகளின் பணியானது தொடர்ந்தும் மக்களுக்குக் கிடைப்பதற்கு, இறை ஆசீர் நிறைவாக அவர்களுக்கு அருளப்பட இறைவனை வேண்டுவதுடன் திருச்சிலுவைக் கன்னியர்கள் சார்பிலும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். தொடர்ந்தும் இறைவனது பராமரிப்பும் பாதுகாப்பும் இச்சபையின் அனைத்து அருட்பணியாளர்களுக்கும் அருளப்பட்டு, தம் அர்ப்பண வாழ்வில் முழுப் பயனையும் அடைந்து, இறை அழைப்பில் பூரண திருப்தி பெற்று வாழ உள்ளத்தின் ஆழத்திலிருந்து வாழ்த்துகின்றேன்.

*இறை இயேசுவுக்குள்*
*அருட்சகோதரி றொபினா பவுலின்*
*மாகாணத் தலைவி, திருச்சிலுவைக்கன்னியர் சபை*
*இலங்கை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலேசிய அருட்சகோதரிகளின்
# சென்னை மாநிலத் தலைவியிடமிருந்து...



*" தங்களது பணியால் உடல் உள ஆன்மாவை போஷிக்கும் துணையாளர்கள்......"*

யாழ் போதனா மருத்துவமனையில் பணியை ஆரம்பித்து 40 வருட நிறைவைக் கொண்டாடும் அமலமரித் தியாகிகள் அருட்தந்தையர்களுக்கு எனது வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்.

இறைவன் கொடுத்த குருத்துவம் எனும் கொடையின் ஊடாக மருத்துவமனையில் அருட்பணியை மகிழ்வோடும், வாஞ்சையோடும் ஏற்றுக்கொண்டு யாழ். போதனா மருத்துவமனையில் நோயாளர்களை ஆழமாக அன்பு செய்து பணியாற்றும் உங்கள் அன்புப் பணியை நினைத்து நான் பெருமிதம் கொள்கிறேன்.

உங்களது இவ் அன்புப் பணியில் இந்தியாவில் இருந்து வருகை தந்த எம் சலேசிய அருட்சகோதரிகளை 2015ம் ஆண்டு ஐப்பசி பத்தாம் திகதி இணைத்துக் கொண்டமைக்கு நன்றி கூறுவதுடன் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தன்னார்வ ஆன்மீகப் பணியினூடாக எத்தனையோ நோயாளர்களின் உடல், உள ஆன்மீகத்தில் ஆர்வம் அக்கறை கொண்டு, அவர்களது துன்ப, துயர, கவலைகளில் துணை நின்று, அவர்களை வழிப்படுத்துவதிலும், அவர்களை விசுவாசத்தில் வளர்ப்பதிலும் திருவருட்சாதனங்களை வழங்குவதிலும் முக்கியமாக பாவசங்கீர்த்தனம், நற்கருணை போன்ற அருட்சாதனங்களை வழங்கி இறை அன்பில் கட்டியெழுப்புவதற்கு ஒரு கருவியாக செயற்படுகிறீர்கள். உங்களது தன்னார்வ ஆன்மீகப் பணியில் நாங்கள் தொடர்ந்து இணைந்திருப்போம். பணியாற்றுவோம்.

இறைவன் தொடர்ந்து உங்களை ஆசீர்வதிக்கவும் புத்துணர்வுடனும் புதிய சிந்தையுடன் நோயாளர்களை வழிநடத்தி, நல் மேய்ப்பனாக என்றும் பணியாற்ற என் செபத்துடன் கூடிய நல் வாழ்த்துக்கள்!

*அருட்சகோதரி நிர்மலா லாசர்*
*சலேசியன் சபை*
*மாநிலத் தலைவி*
*சென்னை*
*இந்தியா*

"Abandon Yourself

Into the hands of MARY.

She will take care of you."

**- St.Padre Pio**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்கால ஆன்மீகத் தியானம்


தவக்கால புனித வெள்ளி வழிபாட்டுத் திருப்பலியில்


சிலுவையின் ஒளியில் மீட்பு


தவக்கால சிலுவைப்பாதைத் தியானத்தின்போது


மருத்துவமனைப் பணியாளர்களின் தவக்காலத்
தியான கருத்தமர்வு


ஆன்ம நலன் பேணும் தன்னார்வப் பணியாளர்களின்
தவக்காலத் தியானக் கருத்தமர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமலமரித் தியாகிகளின் 40 ஆண்டுகள்

## பணி நிறைவில் வாழ்த்துச் செய்தி



இறைமகன் கிறிஸ்துவின் தாயான அன்னை மரியா சிலுவையின் அடியிலே இயேசுவால் எமக்கும் தாயாகக் கொடுக்கப் பட்டவள். அந்தத் தாய் வெவ்வேறு இடங்களிலே வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு மக்களுக்கு இறையாசீரையும் அருள் வளங்களையும் பெற்றுத் தரும் அன்பு நிறை அன்னையாக விளங்குகிறாள்.

யாழ் போதனா மருத்துவமனைச் சிற்றாலயத்திலே அவள் ஆரோக்கிய அன்னையாகக் கோயில் கொண்டெழுந்தருளி இருப்பது சாலப் பொருத்தமானது. மருத்துவமனையிலே நோயாலும், துன்பத்தாலும் வாடி கண்ணீரோடு தன்னை நாடி வரும் அனைவரையும் அரவணைத்து அவர்களின் சொல்லொணாத் துயரங்களையும், நோய்களையும் நீக்கி அமைதியையும் நிம்மதியையும் வழங்கும் ஆரோக்கிய அன்னையாக மரியன்னை விளங்குகின்றாள்.

நாம் விண்ணப்பிக்க முன்னரே எமது தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றத் தயாராக இருப்பவளல்லவா நம் அன்னை! அவளை நாடி வரும்போது அவள் எமக்காக இறைவனிடம் பரிந்து பேசி நாளாந்தம் எமக்காகப் பல புதுமைகளை ஆற்றுகின்றாள். இதை நாமும் எம் அனுபவத்தில் கண்டுள்ளோம். எமது திருச்சபையின் விசுவாச சத்தியத்துக்கு ஏற்ப எமது அன்னைக்கு என்றுமே அதி உன்னத வணக்கத் தைச் செலுத்துவோம். அவளின் பரிந்துரையை நாளும் அனுபவிப்போம்.

எமது சிற்றாலயத்திலும் மருத்துவமனையிலும் ஆன்மீகப் பணியில் அமலமரித் தியாகிகள் சபைக் குருக்கள் இணைந்து இவ்வாண்டுடன் 40 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. இவ்வாறான நீண்ட ஒரு காலப்பகுதியில் அவர்கள் இணைந்து தமது அர்ப்பணமான பணியால் இறைவனுக்குப் புகழ் சேர்ப்பது மட்டுமல்லாமல் எமது மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் ஆன்மீக வாஞ்சையையும், தேவைகளையும் நிறைவேற்றியும் வருகின்றார்கள். எனவே நாமும் அனைவருடனும் இணைந்து அவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவிப்பதோடு அவர்களைத் தினமும் எமது செபத்தில் இருத்தி அவர்களின் பணி செவ்வனே தொடர அவர்களுக்காக இறைவனிடம் வேண்டுவோம்.

மேலும் எமது மருத்துவமனையில் ஆற்றப்படும் ஆன்மீகப் பணி தொடர்பான ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் அதை ஆவணப்படுத்துவதற்காக முழுமுச்சுடனும் அர்ப்பணிப்புடனும் உழைத்த எமது மருத்துவமனைச் சிற்றாலய ஆன்மீகக் குரு அருட்பணி சி.அருள் சுதர்சன் (அ.ம.தி) அடிகளாருக்கும் அவருக்குத் தோளோடு தோள் கொடுத்து உதவிய அருட்பணியாளர்களுக்கும், விசேடமாகத் தேவையான தகவல்களை வழங்கிய அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், ஓய்வுநிலைப் பணியாளர்கள் மற்றும் இங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கும் தகவல்களைப் பெற உதவிய ஒவ்வொருவருக்கும் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் உழைப்பாலேயே இன்று இம்மலர் எங்கள் கைகளில் தவழ்கின்றது. எமது சிற்றாலயத்திலே கடந்த காலத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய, நிகழ்காலத்தில் தொடர்ந்தும் பணியாற்றுகின்ற பல்வேறு தர நிலைகளிலுமுள்ள பணியாளர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த 40 ஆண்டுகாலப் பயணத்தில் இம் மருத்துவமனையிலே ஓர் பணியாளனாக 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றுகின்றமை எனக்குக் கிடைத்த ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன். இக் காலத்திலே எமது அன்னையின் பரிந்துரை மூலமாக நான் பெற்றுக்கொண்ட அருள்வளங்கள் ஏராளம். அதற்காக எம் ஆரோக்கிய அன்னைக்கு நன்றி கூறுகின்றேன்.

மேலும் இந்நன்னாளிலே எமது ஆரோக்கிய அன்னையின் அருளும் பரிந்துரையும் எம் அனைவருக்கும் கிடைக்க வேண்டி அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

*நன்றி*

*திரு. அ. அருள் ஞானரட்ணம்*
*செயலாளர்*
*சிற்றாலய கத்தோலிக்க ஆன்மீகக் குழுமம்*
*யாழ். போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*

"MARY provides shelter and strength for the sinner."

***-St.Anthony of Padua***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதிய கல்லூரி அதிபரின்
# உள்ளத்திலிருந்து....



யாழ். போதனா மருத்துவமனையில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை சிற்றாலயத்தை அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த குருக்கள் பொறுப்பேற்று 40வது ஆண்டுகள் நிறைவுறும் வேளையில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அன்னை மரியா ஆரோக்கிய அன்னையாக எமது மருத்துவ மனைச் சிற்றாலயத்தில் எழுந்தருளி தன்னை நாடி வரும் அனைவரையும் அரவணைத்து அருள்பாலிக்கின்றார். அவர் தமது புதுமைகள் மூலமாகப் பல நோயாளிகளுக்கு சுகமளிக்கின்றார். எண்ணிலடங்காத புதுமைகளை அமைதியாக மேற்கொண்டு எம்மை இறைவனின் திருப்பாதம் கொண்டு சேர்க்கின்றார்.

அன்னையின் சிற்றாலயத்துக்கு அண்மையிலுள்ள எமது தாதியக் கல்லூரியில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் எம் அன்னையின் அடைக்கலத்தை நாடி வருகின்றனர். எமது கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் அன்னையின் திருத்தலத்தில் பல்வேறு பொறுப்புக்களை மனமுவந்து நிறைவேற்றி வருகிறார்கள்.

அன்னையின் திருநாளைக் கொண்டாடும் இவ்வேளையிலே மாணிக்க விழா வினைக் கொண்டாடும் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த குருக்களையும் எம் மருத்துவமனைப் பணியாளர்களையும் வாழ்த்தி நிற்பதுடன் விசேடமாக இச்சிற்றாலயத்தில் பணிபுரியும் அருட்பணி சி. அருள் சுதர்சன் அடிகளாரையும் இச்சிற்றாலயத்தில் பணியாற்றும் எம் மருத்துவமனைப் பணியாளர்களையும் ஏனைய பக்தர்களையும் புனித ஆரோக்கிய அன்னையின் பரிந்துரை மூலமாக இறைவன் என்றும் ஆசிர்வதிக்கவும் ஆசித்து நிற்கின்றேன்.

*திருமதி. சாந்தி இராஜகுலசேகரன*
*பதில் அதிபர்*
*தாதியர் கல்லூரி*
*யாழ். போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*

*"We never give more honour to Jesus than when we honour his mother, and we honour her simply and solely to honour him all the more perfectly."*

**- St.Louis Marie de Monfort**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதிய கல்லூரி முன்னாள் அதிபரின் உள்ளத்திலிருந்து...



யாழ். போதனா மருத்துவமனையில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் புனித ஆரோக்கிய அன்னையின் ஆலயத்தினை அமலமரித் தியாகிகள் சபையினர் பொறுப்பேற்று 40 ஆவது ஆண்டு நிறைவு மலருக்கு ஆசிச் செய்தி வழங்க எனக்குக் கிடைத்த வாய்ப்புக்காக பெரும் மனமகிழ்வோடு நன்றி கூறி நிற்கின்றேன்.

யாழ். தாதியக் கல்லூரியின் முன்னாள் அதிபர் என்ற வகையில் எமது கல்லூரிக்கு மிக நெருக்கமாக அமைந்திருக்கும் ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் பெருமையினையும், அன்னையின் ஆசீர்வாதங் களையும் அதிகம் அதிகமாக சுவைத்தவர்கள் வரிசையில் நானும் ஒருத்தி என்று கூறினால் அது மிகையாகாது.

தாதிய மாணவியாகவும் தாதிய உத்தியோகத்தராகவும் மேலும் ஒருபடி முன்னேறி தாதியக் கல்லூரி அதிபராகவும் நான் எனது சேவையைத் தொடர்ந்தபோது எனது தனிப்பட்ட வாழ்விலும் சரி, குடும்ப வாழ்வு மற்றும் எனது தாதியப் பணிவாழ்விலும் சரி ஒவ்வொரு நாளும் அன்னையின் பரிந்து பேசுதலால் நான் பெற்றுக் கொண்ட அருள்கள் ஏராளம். அத்துடன் இவ்வாலயத்தில் சேவையாற்றிய அனைத்து அமலமரித் தியாகிகளின் அன்பு கலந்த வாழ்வும், சேவையும் இவ்வாலயத்திற்கு இன்னும் மெருகூட்டி நிற்கின்றன.

எனவே இத்தகைய ஒரு நன்னாளில் அன்னையின் அருளால் இந்த மருத்துவமனையை நாடிவரும் நோயாளர் நலமடையவும், உற்றார், உறவினர் ஆறுதல் பெறவும் அமலமரியின் பிள்ளைகளாய் ஆறுதல் அளிக்கும் குருக்களின் பணி மேலும் மேலும் தொடரவும் ஆசித்து நிற்கிறேன்.

*திருமதி. தேவமலர் அருளானந்தம்*
*முன்னாள் அதிபர் (2005 - 2010)*
*தாதியக் கல்லூரி*
*யாழ். போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*

"I distrust a charity that costs nothing and does not hurt."

**- Pope Francis**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்கால ஹினிதும யாத்திரை











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதிய உத்தியோகத்தர் திருமதி ரமேஸ்குமாரின் ஆசிச்செய்தி



யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு நோயாளர்களையும், அங்கே பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களையும் அரவணைக்கும் அன்னையாக புனித ஆரோக்கிய அன்னை வீற்றிருக்கும் எமது சிற்றாலயத்தை, எமது அமலமரித் தியாகிகள் பொறுப்பேற்று 40 ஆண்டுகள் நிறைவிற்காக இறைவனுக்கு நன்றி கூறுவதோடு அவர்களின் துன்பமும், சவால்களும் நிறைந்த பணிவாழ்வை வாழ்த்தியும் நிற்கின்றேன்.

மருத்துவமனைப் பணி என்பது சாதாரண பணிவாழ்வு போன்றது அல்ல. நோயின் உபாதையால் பாதிக்கப்பட்டு மாறுபட்ட மனநிலையுடன் வரும் வேறுபட்ட மத, இன மக்களுடன் பணியாற்றுவது சவால் நிறைந்ததாகும். இவ்வாறு பணியாற்றுபவர்கள் உண்மையில் அழைக்கப்பட்ட குருத்துவ அழைப்பிலிருந்தும் விசேடமாக இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதே உண்மை.

இன்றும் இவர்களது பணி இங்கே கடமைபுரியும் கத்தோலிக்கம் சார்ந்த, சாராத அனைத்து ஊழியர்களினதும் ஆரோக்கியத்திற்கு அடிப்படையாக விளங்கும் ஆன்மீகத்தை வளர்த்தலில் தான் அத்தியாவசியமாகின்றது. இவ்வாறான அற்புதப் பணியை ஆற்றிய, ஆற்றிக்கொண்டிருக்கின்ற அனைத்துக் குருக்களையும் அன்புடன் நினைவு கூருவதுடன், இவர்களின் பணிகள் என்றும் சிறப்புற அமைய அன்னை வேளாங்கன்னியின் அருளும் ஆசீரும் நிறைவாகப் பொழிந்தருள வேண்டி நிற்கின்றேன்.


*திருமதி. ரமேஸ்குமார்*
*தாதிய உத்தியோகத்தர்*
*யாழ். போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*


"The world offers you comfort, but you were not made for comfort. You were made for greatness."

**- Pope Benedict XVI**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னார்வப் பணியாளரின் தலைவரின் உள்ளத்திலிருந்து....



நவீன உலகிலே இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உறவு, மறைகளினால் உருவாக்கப்படுகிறது. இந்த உறவு ஒரு தொடர் கதை. மனிதன் விரும்பித் தேடுவது இறை அன்பாகும். இறைவன் என்ற இலக்கை நோக்கி நம்பிக்கையோடு செல்ல நாம் அழைக்கப்படுகின்றோம். இந்த இறை அழைப்பை ஏற்று அவர் பணி செய்யத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அமலமரித் தியாகிகள் ஆன்மீகத் தேடல்களின் பணிகளில் ஒன்றான நோயாளர் ஆன்ம நலன் பேணும் தெய்வீகப் பணியை மருத்துவமனைகளில் ஆற்றி வருகின்றனர்.

இந்த உயிரோட்டமான பணியை யாழ் போதனா மருத்துவமனையில் ஆரம்பித்து, இவ்வாண்டில் 40 ஆண்டுகளின் நிறைவை மகிழ்வோடு கொண்டாடுகின்றார்கள். இவர்களுடன் இணைந்து பணியாற்றும் நோயாளர் ஆன்மீக நலம் பேணும் தன்னார்வப் பணியாளர்களின் தலைவராகிய நான் மனமகிழ்ந்து மனம் நிறைந்து இவர்களை வாழ்த்துகின்றேன். இறைவன் இவர்கள் கரம் பற்றி வழிநடத்திட வேண்டும். அன்புக்கு ஏங்கும் உள்ளங்களில் இயேசு என்ற அமைதியையும் மகிழ்ச்சியையும் விதைக்கின்ற இறை கரங்களாக இவர்கள் தொடர்ந்து பணியாற்றட்டும். இனிய இதயங்களில் இருந்து உதயமாவதே பணியாகும்.

*எஸ்.பீற்றர்*
*தலைவர்*
*ஆன்ம நலன்பேணும் தன்னார்வப் பணியாளர்*

"Pain and suffering have come into your life, but remember pain, sorrow, suffering are but the kiss of Jesus — a sign that you have come so close to Him that He can kiss you."

**- St. Mother Teresa of Calcutta**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the Holy Family Provincial...



I am happy to pen few words of appreciation of the magnificent presence of the Chapel in the hospital compound, and the laborious chaplains who have toiled for the past forty years in strengthening the faith of the sick and the faithful at the Jaffna Teaching Hospital.

Pastoral care of health is typical ministry in the evangelical context which immediately reminds the mission of Jesus, our Good Samaritan to the wounded humanity. The Samaritan in the Gospel gets down from the donkey, bends over him, cleanses up the fallen, half dead stranger's wounds, applying wine and completely takes him into his custody. How many little acts of kindness really involved in this marvelous act? ... **"I was sick and you visited me" (Mt 22: 2536).** Our Pope Benedict the XVI in his message on 22nd March 2007 said: **"In hospitals and clinics, the chapel is the vibrant heart where Jesus ceaselessly offers Himself to the heavenly Father for the life of humanity. The Eucharist distributed to the sick in a dignified and prayerful way is the vital sap that comforts them and instills in their souls the inner light with which to live the condition of sickness and suffering, with faith and hope."**

Every human being trusts in God and entrust his or her life into his hands. A small chapel in the hospital compound is an important and life-giving place to surrender themselves with all their feelings. **"In God alone there is rest for my soul, from him comes my safety, he alone is my rock, my safety, my strong hold so that I stand unshaken..." (Ps. 62)** Most of the sick people may reject God feel angry and cry because they find it difficult to accept their sickness. Not only the sick ones but also their family and relations too finding very hard to accept the situation as they feel much helplessness and hopelessness wanting encourage to console and strengthen the invalid.

I appreciate and encourage the chaplains- of the Oblates of Mary Immaculate (OMI) for their tremendous service to the sick and also to the hospital staff and workers for past forty years of their selfless. Along with



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

priests our Holy Family Sisters have been collaborating with them, from the beginning. I remember our sisters from Jaffna convent and the Provincialate, and their tireless service, in assisting the chaplains in this ministry. I wish every blessing on all of you - the tireless Apostles of our Lord Jesus Christ who keep on rendering your services until today.

**"As you did it to one of the least of these my brethren, you did it to me" (Mt. 25:40).** May our Brother Priests and Sisters find strength, guidance and a sense of a fulfillment from the Lord and feel happy that they live the above Word of God in this hospital ministry.

May Jesus Mary and Joseph be with you always.

***Sr. Theophane Croos, HFB***
***Provincial***
***Jaffna Holy Family***
***Jaffna***
***Sri Lanka***

"I love You, O my God, and my only desire is to love You until the last breath of my life. I love You, O my infinitely lovable God, and I would rather die loving you, than live without loving you. I love You, Lord and the only grace I ask is to love you eternally...My God, if my tongue cannot say in every moment that I love You, I want my heart to repeat it to You as often as I draw breath."

\- **St. John Vianney**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய செயற்பாடுகள்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த தாதி தவமணி அருளப்புவின் அனுபவப் பகிர்வு...



*"அன்னை அவள் ஆலயத்தின் அருள் நிறைந்து காணுதம்மா"*

வருந்துவோருக்கும் நோயுற்றோருக்கும் ஆறுதலின் அன்னையாக இம் மருத்துவமனையில் வீற்றிருக்கும் ஆரோக்கியத் தாயின் ஆலய யூபிலிப் பெருவிழாவைக் கொண்டாட ஆயத்தம் செய்யும் இந்நாளை இறைவன் ஆசீர்வதிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். இதற்கான காரியங்களை செயற்படுத்தும் எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அருட்பணி அருள் சுதர்சன் அ.ம.தி அடிகளாருக்கு இறைவன் வேண்டிய அருளைப் பொழியுமாறு வேண்டி நிற்கிறேன்.

எனது தாதிய பணிக்காலத்தில் திருச்சிலுவை சபையைச் சேர்ந்த மேலைநாட்டுச் சகோதரிகளால் இம் மருத்துவமனை பெற்ற அருள் அனைத்தையும் நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். ஆரம்ப காலத்தில் தாதியர் பயிற்சிக்கூடம் இருக்கவில்லை. இளம் பெண்களுக்கு தாதிய பயிற்சியை அன்னையர்களே அளிப்பது நடைமுறையிலிருந்தது.

கிறீன் மெமோரியல் மருத்துவமனையில் இருக்கும் தாதிய பயிற்சிச்சாலையில் இந்தியாவைச் சேர்ந்த லீலா சுவாமிதாஸ் அன்னை கொழும்பிலிருந்து வருகை தந்து, நான் உட்பட பன்னிருவரைத் தெரிவுசெய்து, பங்குனி 13ம் திகதி 1955ம் ஆண்டு மூன்று ஆண்டுகள் தாதியப் பயிற்சி அளிக்கப்பட்டது. பத்துப் பேர் சித்தியடைந்தனர். ஆறு சகோதரிகள் யாழ் போதனா மருத்துவமனைக்கும், நான்கு சகோதரிகள் மட்டக்களப்பு மருத்துவமனைக்கும் நியமனம் பெற்றோம்.

01-09-1959ம் ஆண்டு எனது பொன்னான நாள். மென்சிங்கன் சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்த திருச்சிலுவை சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகளைச் சந்தித்தேன். ஒவ்வொரு பிரிவிலும் ஆறு பேருக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

உதாரணமாக-: ENT, GYN, MEDICAL, SURGERY பிரிவுகளில் பணி புரியும்படி அனுமதிக்கப்பட்டது.

**திருச்சிலுவைச் சபைக் கன்னியர்கள் ( Holy Cross Missionary Sisters)**

பிரதம தாதி பேன்ஹடா O.P.T, I.C.U

Sr. கபிரியேல் EYE சிகிச்சைப் பிரிவு

Sr. கொன்சலேற்றா மருத்துவப் பிரிவு

Sr. றோசா

Sr. அகினஸ்

Sr. அல்போன்சா

Sr. கெலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து அன்னையர்களுடன் பணிபுரிந்த காலம் இறை அருள் மிகுந்தது.

22.09.1959ல் எனக்கு Operation Theatre பயிற்சிக்காக அழைப்பு விடுக்கப்பட்டது. Sr. பேனடேற் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளில் எல்லாத்துறைகளிலும் பணியாற்றவும் பல வைத்திய நிபுணர்களுடன் பணிபுரியவும் என் அன்னை அழைத்ததை நான் இன்றும் நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

இப் பணி தன்நலமற்றது, பிறர் அன்புப்பணி, தியாக சேவை, அர்ப்பணமானது என்பதை உணர்ந்து கொண்டேன். ஆண் பெண் இருபாலருக்கும் பயிற்சி அளித்து மருத்துவமனையின் கடமைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

தற்போது நடந்து கொண்டிருக்கும் தாதியர் பயிற்சிச்சாலை 1960ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்னையர்களின் உதவி கிடைத்தது. பல தாதியர்கள் இன்று வரைக்கும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். இது இறைவன் நம் யாழ். நகருக்கு அளித்த பெரும் கொடை என்பதை மறக்கமுடியாது.

அன்னையின் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டு திரு.டேவிட் என்பவரால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. மறைந்த மேன்மை தங்கிய ஆயர் எமிலியானுஸ்பிள்ளை இவ்வாலய நிகழ்வில் பங்குபற்றினார். திருச்சிலுவைச் சபைக் கன்னியர்மடம் மருத்துவமனையுடன் யாழ். கடற்கரை வீதியில் அமைந்துள்ளமை மக்களுக்கு இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதம். தாதியர் சேவையை இறைவன் கொடுத்த கொடையாக ஏற்றுப் பணிபுரிவது நன்று. 1963ம் ஆண்டு மிகவும் துயரமான காலம். நாட்டு நிலைமை காரணமாக மேலை நாட்டு அன்னையர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டி வந்தது. அன்னையர்களை விட்டுப் பிரிய வேண்டியதால் துயரப்பட்டோம்.

நானும் பல ஊழியர்கள் சகோதர சகோதரிகள் கொழும்பு சென்று **விக்ரோறியா** என்ற கடல் பயணிகள் கப்பலில் வழியனுப்பி, கப்பலுக்குள் அன்னையர்கள் எங்கள் எல்லோரையும் கட்டித்தழுவி கண்ணீர் மல்கப் பிரிந்த நிகழ்ச்சி இன்றும் என் நெஞ்சை விட்டு அகலவில்லை. எப்போதும் இவர்களை நினைந்து செபிப்பேன். எல்லாம் இறைவன் செயல்.

**நன்றி**

**எனது சேவைக்காலம்**

1955-1958 பயிற்சிக்காலம்
1.09.1959 General Hospital Jaffna ஓய்வு பெற்ற தாதிய (O.T) உத்தியோகத்தர்
01.04.1969-1990 District Hospital Tellipallai (O.T)
18.02.1997-2005 District Hospital Kayts Retirement 70 ஆவது வயது வரை

*திருமதி லூர்த்தம்மா தவமணி அருளப்பு*
*ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்*
*யாழ். போதனா மருத்துவமனை*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதிய மாணவர்களின் தவக்காலப் பங்களிப்பு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைப் பராமரிப்புப் பணி

**முன்னுரை**

கத்தோலிக்க குருக்களும், துறவற சபையினரும் ஆரம்ப காலத்தில் மதப்பணியிலும், கல்விப் பணியிலும் அரும்பெரும் பணிகள் புரிந்தார்கள்; இன்றும் புரிந்து வருகிறார்கள். பின்னர் தேவை கருதி, சில பெண்கள் துறவற சபைகளில் மருத்துவப் பணியிலும் சிறப்பாகச் சேவை செய்தார்கள். செய்து வருகிறார்கள். வத்திக்கான் சங்கத்தின் பின்னர் சமூகசேவை, மனித உரிமைகள் போன்ற துறைகளிலும் தங்கள் புதிய தளங்களை அமைத்துப் பெரும்பணி புரிகின்றார்கள். ஆனால் மருத்துவமனைகளில் நோயாளிகள் என்று வரும்பொழுது இவர்களது பணி பெரிதாக வளரவில்லை.

**வரலாறு**

வரலாற்றைப் பார்க்கும் பொழுது ஆங்கில நாட்டில் கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளுக்கு முன்னர் முதன்முதலாக மருத்துவமனைகளில் மெதடிஸ் சபைக் குரு கிறிஸ்தோபர் சுவிப்ற் என்பவர் தன்னுடைய 21ம் நூற்றாண்டில் மருத்துவ மனைப் பணி என்ற நூலில் எழுதியுள்ளார்.

இன்று மேல் நாடுகளில் சிறப்பாக வட அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இப்பணியை முழுநேரப் பணியாகச் செய்து வருகிறார்கள். இவர்களுக்கு ஒரு சிறப்பான பயிற்சியும் கொடுக்கப்படுகின்றது. CPE (Clinical Pastoral Education) என்று சொல்லப்படும் பயிற்சியில் நான்கு அலகுகள் (Units) பயிற்சி பெற்றாலேயொழிய ஒருவர் மருத்துவமனைப் பணிக்கு நியமிக்கப்படமாட்டார். அவ்வளவு முக்கியத்துவம் இப்பணிக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பணியை ஆரம்பித்த புகழ் கிறிஸ்தவ சபைகளுக்குத்தான் உண்டு. கத்தோலிக்க மதம் இப்பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து இப் பயிற்சியை ஆரம்பித்தது, இப் பயிற்சியில் ஈடுபட்டு சான்றிதழ் பெறுவதாயின், இப்பணிக்கு இரு முக்கிய நிறுவனங்கள் உண்டு. கத்தோலிக்க திருச்சபையில் NACC – National Associations of Catholic Chaplains. கத்தோலிக்கம் அல்லாத ஏனைய கிறிஸ்தவ சமயங்களில் இன்னோர் நிறுவனம் உண்டு. ACPE – Associations of Clinical Pastoral Education. இப்பொழுது இந்த இரு நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

**ஏன் இந்தப் பயிற்சி?**

இது முக்கியமான ஒரு வினா. ஏனெனில், இதற்குப் பதில் இப்பணியினை விரிவாகச் சொல்லும் நாங்கள் "ஆன்மீகக் குரு" என்று சொல்லி வந்தோம். காரணம், இக்குருக்கள் நோயாளிகளுக்கு சிறப்பாக கத்தோலிக்க நோயாளிகளுக்கு நற்கருணை (Holy Communion) கொடுப்பதுடனும் தேவை ஏற்படும் பொழுது நோயில் பூசுதல் (Sacrament of the Sick) கொடுப்பதுடனும் தங்கள் பணியை முடித்துக் கொண்டார்கள். இதற்கு நான் மேற்கூறிய பயிற்சி தேவையில்லை.

ஆன்மீகக் குரு என்று சொல்லும் பொழுது நாம் ஆன்மாவையும் உடலையும் பிரித்து இரட்டை வாதத்தில் வளர்ந்துவிட்டோம். விஞ்ஞான ரீதியாக, உளவள ரீதியாகப் பார்க்கும்பொழுது இது தவறு என்று தெளிவாயிற்று. இன்று நாம் முழு மனிதத்தையும் பார்க்கின்றோம். அதனால், இவருடைய ஆன்மீகப்பணி (Pastoral Care) என்று அழைக்கப்படும். அதாவது முழு மனிதத்தையும் இவர் பராமரிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயுற்றோர் பலர் தனிமையில் இருக்கிறார்கள். இந்தத் தனிமையே ஒரு நோயாகிறது. நோயில் வேதனைப்படுகிறார்கள். எனக்கு என்னாகுமோ என்ற ஏக்கத்தில் தவிக்கிறார்கள். சில நோய்களினால் தவிப்போர், நான் நலம் பெறுவேனா? அன்றேல் சாவேனா? என்று தவிப்பது நோயை மேலும் வலுப்படுத்தும்.

இவர்கள் அனைவரையும், அதாவது சாதி, மத, செல்வாக்கு என்று பாராமல் பராமரிக்கும் (Care) பணி ஒரு அவசியமான, மகத்தான பணி. ஒவ்வொரு நோயாளியையும் தனித்தனியாகச் சந்தித்து அவருடைய கதையைக் கேட்டு, அவருடைய நோவில், அவருடைய ஏக்கத்தில், அவருடைய தனிமையில் அவரோடு ஒத்துணர்வு கொண்டு அவருடன் இருப்பது ஒரு பெரும் பணி. இதனால்தான் அதற்கான பயிற்சி அவசியமாகிறது. இதை உணராதவர்கள் பலர். மருத்துவர், தாதிகள் மட்டுமல்ல திருச்சபையின் தலைவர்களே இப்பணியை முறையாக முழுமையாக இன்றுவரை இந்த நாட்டில் உணரவில்லை. இது மிகவும் கவலைக்குரியது. மருத்துவமனையில் ஒரு குருவானவர் இப்பணியை மேற்கொள்ளும்பொழுது அவரை சந்தேகக் கண்கொண்டு, இவர் மதமாற்றம் செய்வதற்குத்தான் இங்கு வருகிறார் என்று எண்ணுவோர் இந்த நாட்டில் மிகப்பலர். இவருடைய பணி மனங்களை மனமாற்றும் பணி, ஒரு வகையில் பார்க்கும் பொழுது, நோயாளிகள் ஆறுதல் பெற்று நலம் பெறவும் வாய்ப்புண்டு.

மருத்துவமனைக்கு நோயாளிகளின் உறவினர் பலர் நோவிலும், இவர் சுகப்படுவாரா? எவ்வளவு காலம் இருப்பார்? என்ற ஏக்கத்திலும் இருக்கலாம். மருத்துவமனைப் பராமரிப்புப் பணியில் இவர்களையும் உள்வாங்க வேண்டும். இந்தப் பராமரிப்புப் பணியின் ஆழத்தை உணர்ந்து கொண்டால், ஆராதனைகளில் கும்பலில் கோவிந்தாபோடும் **"வழிபாட்டை"** விட இப்பணி ஆழமானது, அவசியமானது, நலன் தரக்கூடியது.

### இருபத்து நான்கு மணிநேரப் பணி

இப்படிப்பட்ட ஒரு பணி இருபத்து நான்கு மணி நேரப் பணி. எந்த நேரமும் மருத்துவமனையில் இருந்து அழைப்பொன்று வரும்பொழுது உடனேயே மருத்துவமனை செல்லவேண்டும். இரவு பகல் என்று பார்க்க முடியாது. இது இலகுவான ஒரு பணியல்ல. அதுமட்டுமல்ல, இப்பணியைக் கத்தோலிக்க குருக்கள் மட்டும்தான் செய்ய வேண்டுமென்று ஒரு சட்டமும் கிடையாது. ஒரு இந்து மதக்குரு, பௌத்த மதக்குரு, ஒரு மௌலவி என்று எந்த மதத்தினரும் செய்யலாம். ஆனால், இவர்கள் போட்டியிலும், பொறாமையிலும் வேதம் ஓதுவதிலும் ஈடுபட்டால் மருத்துவர்கள் இவர்களை மருத்துவமனைப் பக்கமே செல்ல விடமாட்டார்கள். அவர்கள் செய்வது சரி. இவர்களுடைய அதிமுக்கியமான மருத்துவப்பணி மதம் சார்ந்தது அல்ல. நோயாளிகளைப் பராமரிக்கும் (Pastoral Care) ஒரு சிறப்பான பணி. இதை இப் பணியில் ஈடுபடுவோரும் சரி, இவர்களுடைய மதநிறுவனங்களும் சரி நன்கு உணர்ந்து கொள்வது அவசியம்.

### நாற்பது வருடங்கள்

அமலமரித் தியாகிகள் யாழ். போதனா மருத்துவமனையில் இப் பணியை அதிகாரபூர்வமாக ஏற்று இன்று நாற்பது வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளமை நன்று கொண்டாடப்பட வேண்டும். அதேவேளை ஒரு மதிப்பீடு செய்யப்பட வேண்டியதும் அவசியம். நாற்பது வருடங்களுக்கூடாக இப்பணி விரிந்து ஆழப்படுத்தப்பட்டு வளர்ந்துள்ளதா? யாழ் மாகாண அமலமரித் தியாகிகளின் நிர்வாகம் இப் பணிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதா? கிளிநொச்சி, வவுனியா, திருமலை, மட்டுநகர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வடகிழக்கில் இப் பணி வளருகின்றதா? திருமலையில் நேற்றுவரை நடந்த இப்பணி இன்று ஏன் கைவிடப்பட்டது? நான்கு தமிழ் மறை மாவட்டங்களில் இப்பணியில் ஈடுபடுபவர்கள் இடையிடையே ஒன்றுகூடி தங்கள் பணிகளையும் அதிலுள்ள கடினங்களையும் பகிர்ந்து கொள்கின்றார்களா?

**பெண்கள் துறவற சபையினர்**

வடகிழக்கு பகுதியில் பெண்கள் துறவற சபைகள் பல உண்டு. நேற்றுப் பெய்த மழைக்கு இன்று முளைத்த காளான்கள்போல புதிய புதிய துறவற சபைகள் தோன்றியுள்ளன. இவர்கள் இந்த முக்கியமான பணிகளைச் செய்கின்றார்களா?

மருத்துவமனைகளில், பெண்கள் பகுதிக்கு பெண் துறவிகள் செல்வது பயன்தரும். அவர்களுடன் இருந்து அவர்களுடைய வேதனைகளை, இழப்புகளை நோவுகளை, தனிமையை உணர்ந்து அவர்களுடன் ஒத்துணர்வு கொள்வது பெரிய பராமரிப்புப் பணி.

பொதுநிலையினரும் இப்பணியில் ஈடுபடலாம். ஆனால் இப்பணியில் ஈடுபடும் அனைவருக்கும் ஒரு பயிற்சி அளிக்கப்படுவது அத்தியாவசியம். இப்பணி எங்கே ஆரம்பிப்பது? எங்கே முடியவேண்டும்? என்ற தெளிவு இப்பணியில் ஈடுபடும் அனைவருக்கும் தேவை. நோயாளிக்கும் பராமரிப்பவருக்கும் உள்ள உறவு என்ன என்பதில் கவனம் செலுத்துவது மிக முக்கியமானது.

**முடிவுரை**

இது சம்பிரதாய முடிவுரை அல்ல. இந்த **"முடிவுரை"** எதிர்காலத்திற்குத் திட்டமிடும் மருத்துவமனைப் பராமரிப்புப் பணியைப் பற்றிய விழிப்புணர்வை அனைவரும் உணரவும் மதங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர்கள் இப்பணியின் அவசியத்தை அறியவும் அதற்கான உதவிகளை வழங்கவும் முன்வர வேண்டும். காளான்கள் போல் பரவிவரும் உளவளத் துணைப் பயிற்சிப் பட்டறைகளும் இப்பணிகளை நன்கு உணரவேண்டும். இந்தப் பராமரிப்புப் பணியின் ஆழத்தை உணர்ந்து கொண்டால், ஆராதனைகளில் கும்பலில் கோவிந்தா போடும் **"வழிபாட்டை"** விட இப் பணி ஆழமானது, அவசியமானது நலன் தரக்கூடியது.

*அருட்பணி. கரவையூர் செல்வரட்ணம் அ.ம.தி*
*சங்கமமம்*
*கோப்பாய்*
*யாழ்ப்பாணம்*

"Without the burden of afflictions it is impossible to reach the height of grace. The gift of grace increases as the struggle increases."
**- St. Rose of Lima**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாற்பது ஆண்டுப் பணிகளுக்கு நல்வாழ்த்துக்கள்

ஆலயம் என்பது ஆண்டவன் உறையுமிடம்
ஆன்மாவும் உடலும் ஆறுதல் அடையுமிடம்
காலையும் மாலையும் கடவுளைத் தொழுதால்
கவலைகள் நீங்கி மகிழ்ச்சி நிலைத்திடும்
நாளை என்பது நம் கையில் இல்லை
நன்மைகள் செய்தால் நிம்மதி பெருகிடும்
பாலமாய்ப் பலருக்கு உதவியாய் இருந்தால்
பாவங்கள் நீங்கியே ஈடேற்றம் கிடைத்திடும்
மருத்துவமனையில் நோய்கள் நீங்கிட
மருந்துகள் மட்டும் காரணம் ஆகிடா
நித்திய இறைவனின் பிரசன்னம் இருப்பதால்
ஆயிரமாயிரம் மக்கள் குணம் பெறுகின்றார்
சித்தமில்லாமல் எதுவும் நடந்திடாது
சிரிப்பாலே நாள்பட்ட நோய் கூட நீங்கிடும்
பூரித்த முகத்தினராய் புரியும் சேவைகளால்
பீடித்த நோய்களும் நீங்கி சுகம் கிடைக்கும்.
புரட்டாதித் திங்களிலே ஆரோக்கிய அன்னைக்கு
போதனா மருத்துவமனையில் திருவிழா
கோடி அற்புதங்கள் செய்திடும் அன்னை
குறையெல்லாம் போக்கி குணமளிக்கும் அன்னை
நாடிவரும் அடியவர்க்கு நலமளிக்கும் அன்னை
நம்பியவர் குணம் பெறுவார் இதுவே உண்மை
பாடிப் புகழ்பவரும் அடைந்திடுவர் பல நன்மை
பாடாரும் பார்வைபட்டால் பெற்றிடுவார் நன்மை.
நாற்பது ஆண்டுகளாய் அமலமரித் தியாகிகள்
நலன்நோக்காது நல்கி வரும் சேவைகளால்
ஏற்றகாலங்களில் எல்லோரும் பயன்பெற்று
மாற்றங்கண்டு போற்றியவர் அநேகம் பேர்கள்
காற்றைப்போல் முன்வந்து தன்னார்வப் பணியாளர்
அருட்கன்னியரும் ஆன்மீகப்பணிகளுக்கு அணிசெய்தார்
போற்றவேண்டும் அமதிகளின் ஆன்மீகப்பணியை
பொன்னேட்டில் எழுதத்தரும் நற்பணிக்கு வாழ்த்துக்கள்!

அபிராஜன் அன்ரனி பீற்றர்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வின் தருணங்களில்........



மண்ணித்தலையில் மருத்துவமனை ஊழியர்களுடன்



உணவு தயாரிக்கையில்......



குளிர்களி அருந்துகையில்....



மருத்துவமனை ஊழியர்களுடன்....



நிர்வாக ஒன்றுகூடலின் போது...



பிறந்தநாள் மகிழ்வின் போது....



சந்தையில் பொருட்கள் வாங்கும் போது.....



திருவிழா அன்னதான தயாரிப்பின் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் மேகங்கள் சூழ்ந்த நாட்கள் அவை!

எனது குருத்துவப் பணியின் முதல் பணித்தளம் யாழ். போதனா மருத்துவமனையாகும். யாழ். போதனா மருத்துவமனையின் ஆன்மகுருவாக 1998 ஆனி மாதம் தொடக்கம் 2002 மார்கழி மாதம் வரை ஏறக்குறைய நான்கரை ஆண்டுகள் இப்பணியினைச் செய்வதற்கு இறைவன் எனக்கு ஒரு வாய்ப்பினைத் தந்தார்.

இராணுவ நடவடிக்கைகள் மிகமிக உக்கிரம் கொண்டு போர் மேகங்கள் யாழ். குடாநாட்டினை மையம் கொண்டு குண்டுமழை பொழிந்து கொண்டிருந்த காலப்பகுதியில் இங்கு பணிசெய்ய அழைப்புப் பெற்றிருந்தேன். எவ்வாறான இறுக்கமான அரசியல் சூழ்நிலை என்றால் யாழ். குடாநாட்டில் அந்நேரத்தில் அச்சிடுவதற்குக்கூட கடதாசிகள் இல்லாது சில பக்கங்களோடு தடித்த மட்டைகளில் ஒரேயொரு நாளேடாக உதயன் பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்த காலமாகும்!

**அன்றைய யாழ். போதனா மருத்துவமனையின் நிலை!**

யாழ். மருத்துவமனையில் செய்த பணிகளும் அங்கு கிடைத்த அனுபவங்களும் என்னுடைய வாழ்வில் மறக்கமுடியாத பல நினைவுகளை ஏற்படுத்தியிருந்தன. அந்நாட்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்தவர்களின் பல உடலங்கள் அங்கு கொண்டுவரப்படும். இதனைவிட அநேகமாக ஒவ்வொரு நாளும் சுட்டுக்கொல்லப் பட்டவர்கள் யாழ். மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படுவார்கள். கொல்லப்பட்டவர்களின் உடலங்கள் பிரேத அறைக்கு வெளியே பல நாட்களாக வைக்கப்பட்டிருக்கும். மருத்துவமனையில் நோயாளருக்குத் தேவையான மருத்துவப் பொருட்கள் ஒழுங்காகக் கிடைக்காத காலச்சூழல் தொடர்ந்து நிலவிக் கொண்டிருந்தது. மேலதிக சிகிச்சைக்காக செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மாதத்தில் ஓரிரு தடவைகள் மாத்திரம் நோயாளரைத் தென்பகுதிக்கு அழைத்துச் செல்கின்ற நிலை தொடர்ந்தது. இவ்வாறு மிகமிகக் கடினமான ஒரு காலகட்டத்தில் யாழ். போதனா மருத்துவமனை ஏதோ ஒரு வகையில் இயங்கிக் கொண்டிருந்தது!

**அந்நாள் அவலங்களில் சில 'காலத்தின் பதிவுகள்' இல்!**

இத்தகைய காலகட்டத்தில் - இப்பேர்ப்பட்ட இராணுவக் கெடுபிடிகள் நிறைந்த சூழலில் யாழ். போதனா மருத்துவமனையின் ஆன்மகுருவின் பணி மிக முக்கியமான தாக உணரப்பட்டது. யாழ். போதனா மருத்துவமனையை வைத்துக்கொண்டு மருத்துவமனையிலும் வெளியிலும் சாதாரண மக்கள் நாளாந்தம் சந்தித்துக் கொண்டிருந்த பல்வேறுபட்ட அவலங்களை வெளி உலகம் அறியாதிருந்தது.

இவ்வேளையில் ஒருசில பக்கங்களோடு வெளிவந்த ஒரே பத்திரிகையான உதயனில் **'மக்கள் குரல்'** என்ற பகுதியில் சாதாரண ஏழை மக்கள் சந்தித்த கொடுமைகளை எழுதி வெளியுலகு அறியச்செய்து வந்தேன். இதற்குச் சான்றாக **'காலத்தின் பதிவுகள்'** என்ற எனது இரண்டாவது நூல் திகழ்கின்றது. இக்காலத்தில் எழுதியவை பல, ஆனால், சில காரணங்களால் வெளிவந்தவையோ சில. நாளிதழில் வெளிவந்தவற்றை அந்நூலில் தரிசிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்வேறுபட்ட பணிகளில் பலரும் இணைந்தனர்**

ஓர் ஆன்மகுருவாக கிறிஸ்தவ (கத்தோலிக்க) இறைமக்களுக்கு திருவருட்சாதனங்களை வழங்குதல், திருப்பலி நிறைவேற்றுதல், நோயாளர் சந்திப்பு போன்றவற்றுக்கு அப்பால் நோயாளருக்கும் மருத்துவமனைப் பணியாளர்களுக்கும் இடையிலான உறவை மேம்படுத்தல், நோயாளரைச் சந்தித்து அவர்களை ஆற்றுப்படுத்த தன்னார்வப் பணியாளர்களை - தன்னார்வ அமைப்புக்களை ஊக்குவித்தல், மருத்துவமனைப் பணியாளர்களான மருத்துவர்கள், தாதியர்கள், தாதிய மாணவ மாணவியர் போன்றவர்களுக்குத் தேவையான கருத்தமர்வுகளை நடத்தி அவர்களது பணிக்கு வலுவூட்டுதல், வறுமைநிலையில் உள்ள நோயாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல், மேலதிக சிகிச்சைக்காகத் தென்பகுதிக்கு அனுப்பப்படும் நோயாளர்களுக்குத் தேவையான வசதிகளை அங்குள்ளவர்களுடன் தொடர்புகொண்டு ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற பல்வேறுபட்ட பணிகளை அக்காலச் சூழ்நிலை கருதி முன்னெடுக்கவேண்டி இருந்தது.

இதற்கு எனக்குப் பெரும் உறுதுணையாக இருந்தவர்கள் யாழ். அமல மரித் தியாகிகளின் முன்னாள் முதல்வர்கள், ஏனைய அருட்பணியாளர்கள், தன்னார்வப் பணியாளர்கள், யாழ். மனித முன்னேற்ற நிலைய இயக்குநர், மருத்துவமனைப் பணியாளர்கள் போன்றவர்கள். இவர்கள் மிகவும் ஆதரவாக இருந்து செயற்பட்டு வந்ததை நன்றியுணர்வுடன் நினைக்கின்றேன்.

**சிற்றாலயமும் அதன் பணிகளும் விரிவாக்கப்படல்**

இக்காலகட்டத்தில் யாழ். மருத்துவமனையின் புனித வேளாங்கண்ணிச் சிற்றாலயம் மிகச் சிறியதாக இருந்தது. 2000 ஆண்டளவில் அதனைப் பெருப்பித்து வழிபாட்டிற்கு உகந்ததாகவும் கருத்தமர்வுகள் சந்திப்புக்களை மேற்கொள்ளவும் ஏனைய செயற்பாடுகளுக்கு ஏதுவாகவும் சிற்றாலயத்தோடு இணைந்த மேல்மாடிக் கட்டடம் அமைக்கவேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியபோது அதற்கு மிக இக்கட்டான சூழ்நிலையிலும் ஆதரவு தந்து அதனைச் செய்ய உறுதுணையாய் இருந்த முன்னாள் யாழ். மாகாண அமலமரித்தியாகிகளின் முதல்வர் அருந்தந்தை ஜீவேந்திரா போல் அமதி அடிகளாரையும், அதனைச் செய்வதற்கு பண உதவிகளைத் தந்துதவிய முன்னாள் பிரான்ஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப்பணியக இயக்குநர் எஸ்.எம். செபஸ்ரியன் அமதி அவர்களையும் நன்றியுடன் எண்ணிப் பார்க்கின்றேன்.

அவர்களின் உதவியினால்தான் இச்சிற்றாலயத்தின் இன்றைய தோற்றத்தினையும் ஏனைய பணிகளை முன்னெடுக்க சிற்றாலயத்தோடு இணைந்த மேல்மாடியினையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

**நிறைவையும் மகிழ்வையும் கண்டேன்**

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் நோய்கள், விபத்துக்கள், காயங்கள் தவிர்க்க முடியாதவை. அவ்வகையில் நோய்வாய்ப்படும்போது, விபத்துக்களைச் சந்திக்கும்போது, காயங்கள் ஏற்படும்போது மருத்துவமனையை நாடுவதுண்டு. **மருத்துவமனை** மனிதனுக்கு ஏற்படக்கூடிய இயலாமையை, பலவீனத்தை உணர்ந்துகொள்கின்ற இடமாகும். இந்நிலையில் ஒருவருக்கு ஆற்றப்படும் மருத்துவப் பணியென்பது மகத்தான பணியாகின்றது. ஏனெனில், நோயுற்று இருப்பவரைப் பார்த்தெடுக்கும்போது இயேசுவையே நாம் சந்திக்கின்றோம் என மத்தேயு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செய்தியில் இயேசு கூறுவதைக் காணலாம். ஆக, இத்தகைய பணியில் என்னை இணைத்த இறைவனை நினைத்து அவருக்கு நன்றி கூறுகின்றேன்.

இப்பணியில் பலநூறு இயேசுக்களைப் பார்க்கவும் சந்திக்கவும் பெரும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த இயேசுக்கள், நோயாளர்களாகவும் நோய்களைக் குணமாக்கும் மருத்துவர்களாகவும் (சிகிச்சையளிக்கும் பணியில் ஈடுபடும் அனைவரும்) இருந்திருக்கின்றார்கள். இதனால், இப்பணியில் நிறைவையும் மகிழ்வையும் கண்டிருக்கின்றேன். அதனால்தான், யாழ். மருத்துவமனையின் ஆன்மகுருவாக நான்கரை ஆண்டுகளாகத் தொடர்ந்து பணிசெய்யக்கூடியதாக இருந்தது.

இப்பணியில் கடந்த காலங்களில் ஆர்வத்தோடு ஈடுபட்டு உழைத்தவர்களுக்கு நன்றியையும், இணைய இருப்பவர்களுக்கு வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வடைகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் யாழ். போதனா மருத்துவமனை புனித வேளாங்கண்ணி சிற்றாலய தற்போதைய ஆன்மகுரு அருட்பணி அருள்சுதர்சன் அடிகளாருக்கும், அவருடன் இணைந்து பணியாற்றும் அருட்சகோதரிகள், ஏனைய பணியாளர்களுக்கும், யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளருக்கும், மருத்துவர்கள், தாதியர்கள், தாதிய மாணவ மாணவியர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களையும் அன்பையும் கூறி மகிழ்கின்றேன். உங்கள் பணியில் நிறைவையும் மகிழ்வையும் காண ஆசித்து நிற்கின்றேன்.

*அருட்பணி. செ. அன்புராசா, அமதி*
*'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு*
*முல்லைத்தீவு*

> "If you are humble nothing will touch you, neither praise nor disgrace, because you know what you are."
>
> **- St. Mother Teresa of Calcutta**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனிருந்து வழிநடத்திக் காத்திடம்மா...

யாழ் மருத்துவமனை வளாகத்தில்
கோயில் கொண்ட தாயே
ஆரோக்கியம் அருளும் அன்னையே
திருச்சுதனின் மாதாவே
நோயாளரின் அடைக்கலமே, நம்பிக்கையே
நின் பொற்பாதம் தொழுது
போற்றி வணங்குகின்றோம்

நால் பத்து ஆண்டுகளாய்
உன் அருள் வேண்டி வருவோருக்கு
பிணிகள் நீங்க வேண்டுமென்று
விழிநீர் சொரிந்து அழுவோருக்கு
கனிவோடு நின் கரம் தந்து
அற்புதமாய் உடல் நலமளிக்கும்
தாயே உனைப் போற்றுகின்றோம்

நீயாக மனமுவந்து முன்வந்து
எலிசபெத்துக்கு உதவி செய்ததுபோல்
கானாவூர்த் திருமணத்தின் குறைதனை
பரிந்துரைத்து நிறைவேற்றி விட்டது போல்
நின்பதியை நாடிவரும் அடியவரை
தாயே அன்புடன் அரவணைத்து
அருள் தந்து பரிவுடனே காத்திடம்மா

இனம் கடந்து மதம் கடந்து
நின் பதியினை நாடி வருவோரை
தீராத நோய்களை உடல்தனிலே
தாங்கி வந்து உன் முன்னே இருப்போரை
பரிவுடனே கண்ணோக்கித் தாயே நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமளித்து அன்புடனே காத்து
நல்வாழ்வு எல்லோர்க்கும் தந்திடம்மா

நோயாளர் நலன் வேண்டி பணிகள் பல
ஆற்றுகின்ற மருத்துவரும், தாதியரும்
அவர்களோடு எப்போதும் இணைந்து நின்று
கரங்கொடுத்து சேவையாற்றும் ஏனையோரும்
பரிவுடனே, இரக்கமும் கொண்டவராய்
சிறப்பாக தம் பணிகள் செய்திடவும்
அருள் தந்து வளமோடு காத்திடம்மா

இவ்வாலயத்தில் பணிபுரியும் ஆன்மகுரு
சோதரர்கள், சோதரிகள் அனைவருமே
அவர்களோடு தன்னார்வப் பணிபுரியும்
சீடத்துவப் பணியாளர் எல்லோரும்
நற்செய்தி விழுமியங்கள் தாங்கி நின்று
உப்பாக ஒளியாக வாழ்ந்திடவும்
உடனிருந்து வழி நடத்திக் காத்திடம்மா

*இ.அ. அமலரட்ணம்*
*200, குருசோ வீதி*
*யாழ்ப்பாணம்*

"The Lord is good, a refuge in times of trouble. He cares for those who trust in Him."

**Nahum 1:7**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# History of the Teaching Hospital Jaffna

The Friend in Need Society Hospital at Jaffna was established by Acland Dyke, the Government Agent, Northern Province, with the assistance of Dr. Green and in collaboration with the Friend-in-Need Society of Jaffna. This hospital has grown into what is now the Teaching Hospital Jaffna. From 1850-1907, the medical staff of the Friend-in-Need Society hospital was drawn almost totally from the graduates of Dr. Green's Medical School. Dr. Samuel Green was a surgical giant of his days and was the first Visiting Surgeon of the Friend-in-Need Society Hospital. The Friend-in-Need Society Hospital was administered by the Friend-in-Need Society of Jaffna. It was run by volunteers. In 1907 it came under Civil Medical Department of the Government. The Civil Medical Department was the successor of the Military Medical Department of the Nineteenth Century. The hospital was renamed the Jaffna Civil Hospital.

Three qualified surgeons worked at the Jaffna Civil Hospital from the mid 1920s to early 1930s. They were Dr. I.T. Kunaratnam, F.R.C.S, Dr. A.H.C. De Silva, F.R.C.S and Dr. Milroy Paul, F.R.C.S. The total bed strength of the hospital was 200 (including a 6 bed ward for private patients- the Thirunavukarasu Memorial Ward). The total medical staff consisted of 4 doctors in the capacity of Physician, Surgeon and Eye Surgeon and one Houseman. Dr. Milroy Paul on his arrival got an experienced Theatre Sister appointed, got down a high pressure sterilizer from Colombo, trained a Theatre Attendant and did casualty operations even at night under Petromax and Torch light. Dr. Paul records in 1931; post-operative sepsis was uncommon in elective surgery which he felt was due to lack of overcrowding, the total lack of visitors except during prescribed hours, the strict observance of asepsis and mostly to the excellent nursing in both the Theatre and the Ward.

Rapid expansion and development commenced in the 1950s in the government sector of the Health Services of Jaffna. With the appointment of specialists to the basic and sub-specialties, Jaffna Civil Hospital became a General Hospital. In the 1960s, Jaffna General Hospital was a recognized centre for postgraduate training of doctors for the Final Examinations of the Royal College of England.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Present Teaching Hospital Jaffna

The increase health needs and demands brought about in the Jaffna General Hospital extensions and constructions of new buildings without a comprehensive long-term plan resulting in a clumsy, overcrowded hospital. The batch of medical students moved into Jaffna Hospital for the clinical and Para-clinical studies in June 1980. As a consequence of the establishment of Jaffna Medical School, Jaffna Hospital became elevated to the status of a Teaching Hospital.

## Present History and Statistics of Teaching Hospital Jaffna.

The Jaffna district is located in the Northern Province of Sri Lanka; it is 410 km away from the Colombo. The district consists of 15 Divisional Secretariat divisions with estimated population of about 610,000. The Jaffna district had been neglected and totally cut off from other parts of Sri Lanka by A-9 road due to the armed conflict. During the past 30 years, the hospital had been shifted 2 times to other places.

In Jaffna there are 42 curative institutions, which provide the primary and secondary care service under the provincial administration. The tertiary care services are provided by the Teaching Hospital, Jaffna, which is the only tertiary hospital in the Northern Province and it is under the administration of Central Ministry of Health, Nutrition and Indigenous Medicine.

Although, it is the tertiary care provider for the whole Northern Province, it has shortcomings of human resources, infrastructure and transport facilities. Teaching Hospital, Jaffna has the bed strength of 1280, with specializes care units, MICU, CCU, SICU, NICU, ICU, Orthopedic, Neurology, Neurosurgery, OMF, Nephrology, Cardiothoracic Surgery, etc. More than 1600 dedicated staff members are working 24 hours in 3 shifts. Of this staff 77 are consultants in various fields including medical faculty consultants. There are 244 medical Officers, 494 Nursing Officers, 97 PSM staff, 50 Para Medical Staff, 125 Attendants, 348 Health Assistants and 50 Office Staff, etc.

The hospital treats nearly 4500 patients a day of these 800 are Outdoor Patients, 1200 are In-patients and 2500 get treatment in various clinics. Majority of the critical ill patients are transferred here from the other districts for specialized care. Hence, there is a necessity to improve the hospital in each and every aspect.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The first open heart surgery at Teaching Hospital Jaffna.

A Thoracic surgery section had functioned at the Teaching Hospital Jaffna till 30 years ago. A team under the leadership of Dr. A.T.S. Paul had performed thoracic surgeries at Teaching Hospital Jaffna, during the period 1969-1970. Later, eminent Consultant Thoracic Surgeons like Dr. Stephen, Dr. R. Natkunam and Mr. Rudra Rajaretnam, had worked at Teaching Hospital Jaffna, up to 1984. During this period, cardio thoracic surgeries including minor heart surgeries like CMV- Closed Mitral Valvotomy, PDA Ligation, ASD Closure etc. were performed. However, modern facilities for performing the surgery by suspending the beating of the heart were not available.

Open heart surgeries for two patients by making use of cardio pulmonary bypass machine with latest technology have been successfully performed on 20th and 21st December 2017 for the first time, at Teaching Hospital Jaffna. This was done by a team led by Dr. M.S. Mugunthan, Consultant Cardiothoracic Surgeon. This is an important milestone in the growth of the Jaffna Teaching Hospital. It is a matter for pride that the Jaffna Teaching Hospital is now one of only 4 government hospitals where open heart surgery is being performed in Sri Lanka.

## Teaching Hospital Jaffna Museum.

Today, 10th of March 2018, we are delighted to open this renovated building. It is a hundred years old-the oldest building in the hospital. It will be preserved now as a museum. Mrs. Thayarathi Seevaratnam has given a generous donation to make this event possible. This donation is in the memory of her husband Mr. S.V.P. Seevaratnam.

Thanks

**NB: The above artical was published as a leaflet on 10.03.2018 in memory of the Opening Ceremony of the Jaffna Teaching Hospital Museum.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கருணைப் பெருவிழா










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை வேளாங்கண்ணி மாதாவுக்கு...

அன்னை மரியே உன்னடியில்
என்னை நானும் அர்ப்பணித்தேன்
கண்ணின் மணிபோல் காத்தருள்வாய் - இம்
மண்ணின் துயர்தனைப் போக்கிடுவாய்

பாவப்பட்ட மனிதருக்கு
பாவமாய் என்றும் நீயிருந்தாய்
தாவிடும் துன்ப துயரங்களை
தாங்கிடும் சக்தி நீயளித்தாய்

ஏவாள் செய்த பாவங்களால் - வந்த
சாபங்களின்றி நீ பிறந்தாய்
ஏவப்பட்ட பசாசுகளை - என்றும்
கோபப்பட்டு நீ மிதிப்பாய்

அருமை அம்மா உனை நினைந்து
உருகும் உள்ளம் ஏராளம்
பெருகும் துன்பம் பிணிதீர்க்கும் - உன்
பெருமை பாடிப் புகழ்கின்றோம்

பிணியும் மூப்பும் மரணமுமே
அணிகலனானது இகவாழ்வில்
பணிந்தோம் உந்தன் பாதங்களை
தணிப்பாய் மாந்தர் நோய்தனையே

*ஜெனோவா குருஸ்*
*மன்னார் மாவட்ட மருத்துவமனை*
*மன்னார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TOUCHED BY THE GENTLE HAND OF GRACE

**"Whatsoever you do to the least of my Brethren you do unto me"**

**- (Mt.25:40)**

I am happy to share my experience in my healing ministry. When I reflected back the reason of my choice, it reminded me of my sad, wounded, and depressed and guilt experience. During the dark period of my life, God sent a person to heal my wounded heart and walked down the ladder to meet myself where I encountered the source of my energy at the core of my being. I was completely changed. Jesus comes to each one in their sorrow, their pain and He heals them, give them life. This took place in my life too. I became Alive. When I was freed from my false self Jesus entered into a relationship of love with me, then through the relationship of love, this communion, He taught me to open in a relationship of love with other people, especially with the wounded.

This was the time the Parish Priest of our Lady of Refuge put forward his need that he wants two sisters to visit the patients in the hospital and to distribute communion. I volunteered because I know the pain of growth, and became vulnerable enough to love and to discover the pearl of great price.

So, two of us planned together, chose three days (Friday, Saturday and Sunday) to visit the patients after school from 4.00pm to 6.00pm. Being Teachers we had to rush to go to the hospital, but the love and enthusiasm for the sick and suffering led us to walk joyfully. Our mission is to listen deeply, and understand the non- verbal language of the body, as well as the language of words. Without judging them and their ways; instead respect them and love them. If you come in this way, then gradually you will discover that you are trusted. Your heart will be touched; you will begin to discover the secret of communion.

As trust deepens between the listener and the patient, New life begin to surge, springing from the very depths, from the source and centre of their being, ' love ' ,the capacity to listen, to welcome engenders meaning and hope, gradually transforming a broken self image into a positive one. By their very presence, by accepting people as they are, the helpers become healers. In this stage the catholic patients might ask for Holy Communion. Reading the Word



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of God and pause for some minutes and we pray together for some minutes then we distribute Communion. Distributing Communion for the catholic patients not only food for the soul but also witnessing value to those around them. During our visit some patients might ask for confession or extreunction. When we tell the chaplain he will visit them. Though it's a tiring mission, walking, climbing up and down the stairs and on Saturdays cleaning the chapel and it' surroundings, preparing for Sunday mass liturgy with the Nurses and attending Sunday mass with the care takers, nurses and patients. I felt it is something beautiful before God.

I remembered how Jesus was moved to compassion as Jesus sees people with all kinds of infirmities, sickness coming to be healed. Jesus was moved in his guts, it is as if he cannot keep away from them and as though he cannot prevent the healing power flowing from him. The patients in the wards, who have taught me that how to live and how to love those who have taught me about pain and suffering, and also taught me how to follow Jesus. Jesus calls each one of us to go deeper and to be compassionate as He was compassionate wherever we find ourselves whatever our circumstances.

When we are sick and suffering, broken and wounded, this becomes an opportunity to reflect, and it is through our very wounds that this love surges up within us, it is then we discover the meaning of life. St. Ignatius of Loyola, when he was wounded in the battle, he was admitted in the hospital during those moments he discovered that **"what does it profit a man if he gains the whole world and suffer the loss of its own soul".** When he came home he left everything and entered Religious life and became the Founder of the Jesuit society.

**Pioneer sister Rev. Sr. Christabel, HFB**

" Hate what the world seeks,

and seek what it avoids"

**- St.Ignatius of Loyola**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் போதனா மருத்துவமனை புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் தொடர்பான சுருக்க வரலாறு

- 1972ம் ஆண்டு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலய உதவி பங்குத் தந்தையாக இருந்த ரி.தேவதாசன் அடிகள் ஆயரின் உதவியுடன் மருத்துவமனை ஆன்மீகப் பணியினைப் பொறுப்பெடுத்தார். அவருக்கு உதவியாகத் திருக்குடும்ப கன்னியர் சபை அருட்சகோதரிகளான கிறிஸ்ரபெல் மற்றும் கார்மேல் மேரி ஆகியோர் பணிபுரிந்துள்ளார்கள்.

- 1973ம் ஆண்டு சிறிய ஆலயம் ஒன்றை அமைத்தார். இவ் ஆலயம் ஆரம்பத்தில் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் பெயரிலேயே அமைக்கப்பட்டது. அதன் திருவிழாவை இரண்டு தடைவைகள் மாத்திரமே கொண்டாடினர் என அறியப்படுகின்றது. பின்னர் யூதாததேயுவின் பெயரில் அமைக்கப்படுவதைக் காட்டிலும் இறைமகனின் அன்னையும் இறை மக்களின் அன்புத் தாயுமாக விளங்கும் புனித வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் பெயரில் அமைக்கப்படுவதே சாலப் பொருத்தமானது என உணரப்பட்டது. அதை ஆயரின் அனுமதியுடன் 1976ம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டும் வந்தனர்.

- 1972-1979 வைகாசி வரை யாழ் அடைக்கல அன்னை மற்றும் யாழ். பேராலய உதவிப் பங்குத்தந்தையர்கள் பங்கில் பணிபுரிந்து கொண்டு யாழ் மருத்துவ மனையையும் தரிசித்து ஆன்மீகக் கடமைகளை பகுதி நேரமாக நிறைவேற்றி வந்தார்கள்.

- 1979ம் ஆண்டு அருட்தந்தை பிரான்சிஸ் டானியேல் அ.ம.தி அவர்களோடு அமலமரித் தியாகிகளுடைய பணி முழு நேரப்பணியாக ஆரம்பமாகி இன்று வரை 40 ஆண்டுகளைக் கடந்து பணிபுரிந்து. இந்த ஆண்டு (2019) மாணிக்க விழாவினைக் கொண்டாடுகின்றனர். இவர்களுக்கு உதவியாகத் திருக்குடும்ப கன்னியர் சபையைச் சார்ந்த அருட்சகோதரிகளும் இடைக்காலத்தில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சார்ந்த அருட்சகோதரிகளும் பணிபுரிந்துள்ளார்கள். தற்போது திருக்குடும்ப கன்னியர் சபையைச் சார்ந்த அருட்சகோதரிகளுடன், 2015 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ம் திகதியிலிருந்து சலேசியன் சபையைச் சார்ந்த அருட்சகோதரி அலிஸ் மத்தியு அவர்களும் தன்னுடைய மருத்துவமனைப் பணியை ஆரம்பித்துள்ளார்.

- அருட்பணி பிரான்சிஸ் டானியேல் அ.ம.தி அவர்களின் காலத்தில் இச் சிற்றாலயம் புனரமைக்கப்பட்டது. அதன் பின்னர் அருட்பணியாளர்களான மரிய செபஸ்ரியன் அமதி, லீனஸ் சொய்சா அமதி, ஜீவேந்திரா போல் அமதி, எட்மன் றெஜினோல்ட் அமதி, செலஸ்ரீன் மஸ்கிறிஞ்ஞு அமதி, ஜேக்கப் யோகராஜா அமதி, ஸ்ரனி சுவாம்பிள்ளை அமதி, செபமாலை அன்புராசா அமதி, ரட்ணராஜா அமதி, வின்சன்ற் அமதி. அந்தோனிமுத்து குருஸ் அமதி, ஜெயபாலன் அமதி, செபமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரேரா அமதி, யோண் பற்றிக் அமதி, செபஸ்ரியன் றெஜினோல்ட் அமதி, பிலிப் றஞ்சனகுமார் அமதி, ஜெறால்ட் அமதி, அவருக்கு உதவியாக அருட்பணி யூட் கரோவ் அமதி ஆகியோர் பணி செய்துள்ளனர். தற்போது அருட்பணி அருள் சுதர்சன் அமதி அவர்கள் ஆன்ம குருவாகப் பணிபுரிகின்றார்.

- அருட்தந்தை எட்மன் றெஜினோல்ட் அமதி, காலத்தில் அயல் பங்குகளில் உள்ள மரியாயின் சேனை மற்றும் வின்சன்டி போல் பக்தி சபைகளைச் சார்ந்த ஆன்ம நலன் பேணும் பணியாளர்களை ஒன்று திரட்டி நோயாளர் விடுதிகளைச் தரிசித்து அவர்களுக்குத் தேவையான ஆன்மீகப் பணிகளை முன்னெடுத்து வந்தார்.

- 1994 ஆம் ஆண்டு அருட்பணி ஜேக்கப் யோகராஜா அமதி மருத்துவமனைப் பணியாளர்களுக்கான கத்தோலிக்க ஆன்மகுழுமத்தையும் ஆன்ம நலன்பேணும் தன்னார்வப் பணியாளர்களையும் ஊக்குவித்ததோடு, அவர்களது ஆன்மீக நலன்களையும் செயற்படுத்தினார். இக்காலத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் வழிபாடுகளும், பாடல்களும் கிறிஸ்து பிறப்புக் காலத்தில் கரோல் கீதங்கள், நடனங்கள், தெரு நாடகங்கள், சமூக விழிப்புணர்வு சம்பந்தமான செயற்பாடுகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

- 1995ம் ஆண்டு ஐப்பசி 30ம் திகதி பாரிய இடப்பெயர்வின் பின்னர் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு, மருத்துவமனை சிற்றாலயம் புனரமைக்கப்பட்டது. (1997- 1999)

- 2000 ஆண்டளவில் அருட்பணி செபமாலை அன்புராசா அமதி காலத்தில் ஆலயமும் ஆலயத்தினுடைய மேல் மண்டபமும் போர்க்காலச் சூழ்நிலையிலும் அப்போதைய மாகாண முதல்வராக இருந்த அருட்பணி ஜீவாபோல் அமதி தலைமையின் கீழ் பிரான்ஸில் உள்ள தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியக இயக்குநர் அருட்பணி மரிய செபஸ்ரியன் அமதி அவர்களின் உதவியினூடாக அமைக்கப்பட்டன.

- 2002ம் ஆண்டு காலப்பகுதியில் மருத்துவமனை ஆன்மீகக் குருவாக இருந்த அருட்பணி செபமாலை அன்புராசா அமதி அடிகளாரினால் மருத்துவமனை தொடர்பான **"காலத்தின் பதிவுகள்"** என்ற நூல் வெளியிடப்பட்டது.

- 2010ம் ஆண்டு அருட்பணி யோண் பற்றிக் அமதி அவர்களின் காலத்தில் கிறிஸ்து பிறப்புக் காலங்களில் பாடசாலை மாணவர்களிடமிருந்தும் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க பங்குத் தளங்களில் உள்ள பங்கு மக்களிடமிருந்தும், உபகாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பொருட்கள் மற்றும் பணத்தில் இருந்து நோயாளர் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறுவோர் அனைவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்மஸ் கரோல் அன்பளிப்புக்களை வழங்குவது ஆரம்பிக்கப்பட்டது. இவருடைய காலத்தில் தாதிய மாணவர்களுக்கான ஆன்மீகக் கருத்தமர்வுகளும் இடம்பெற்றன.

- 2014ம் ஆண்டு மருத்துவமனையில் ஆன்ம நலன்பேணும் தன்னார்வப் பணியாளர்களாக பொது நிலையினர் ஈடுபட்டு அருட்தந்தை பிலிப் ரஞ்சனகுமார் அமதி தலைமையில் மருத்துவமனை நோயாளர் விடுதிகளைத் தரிசித்து தங்களுடைய செயற்திட்டங்களின் ஊடாக தங்கள் பணிகளை ஆரம்பித்தார்கள்.

- 2017ம் ஆண்டு செப்ரெம்பர் 24ம் திகதி அருட்தந்தை ஜெறாட் அமதி தலைமையிலே மருத்துவமனை ஆலயத்திற்கு முன்பாக புனித வேளாங்கண்ணித் தாயாருடைய திருச்சுரூபம் அதி வந்தனைக்குரிய யாழ். மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் திருவிழா திருப்பலியின் பின்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

- 2018ம் ஆண்டிலிருந்து திருவிழா நாட்களில் அன்னதான நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

- 2019ம் ஆண்டு ஹினிதும தவக்கால யாத்திரை முன்னெடுக்கப்பட்டு ஏறக்குறைய 150க்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றினார்கள். சிலுவைப் பாதைப் படங்களும் மற்றும் உயிர்த்த ஆண்டவரின் திருச்சுரூபமும் ஸ்தாபிக்கப்பட்டது.

- 2019ம் ஆண்டு அமலமரித் தியாகிகள் சிற்றாலயத்தை பணிப்பொறுப்பேற்று 40 ஆண்டுகளைக் கடந்து மாணிக்க விழாவினை சிறப்பாகக் கொண்டாடினர். குறையாகவுள்ள மேல் மண்டபத்தினை அமைப்பதற்குரிய முன் அனுமதி மருத்துவமனை பணிப்பாளர் அவர்களினால் வழங்கப்பட்டுள்ளது.

- 2019ம் ஆண்டு மருத்துவமனை கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வுகளின்போது நோயாளர்களுக்கு வழங்குவதற்கான அன்பளிப்புப் பொருட்கள் யாழ் மாவட்டத்தில் உள்ள 104 பாடசாலைகளிலும் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் உள்ள ஏறக்குறைய 46 பங்குகளிலும் மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள சிறு அமைப்புக்களின் உதவியின் ஊடாகவும் சேகரிக்கப்பட்டது.

- 2020 ஆண்டு கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனை விடுதிகளில் சிகிச்சை பெற்று வந்த வெளிமாவட்டத்தைச் சார்ந்த நோயாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழா நிகழ்வுகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A brief history of the Chapel of Our Lady of Good Health (Velankanni) of the Jaffna Teaching Hospital

❖ In 1972, Rev. Fr. T. Thevathasan, when he was the Assistant Parish Priest of Our Lady of Refuge Church, Jaffna, was given the responsibility of the Chaplaincy of the General Hospital by Rt. Rev. Dr. B. Deogupillai, the Bishop of Jaffna. For him to help Sisters of the Holy Family Rev. Srs. Christabel and Carmel Mary served as pioneers.

❖ In 1973, Fr. Thevathasan erected a small chapel in the hospital for the use of the patients. At the beginning it was dedicated to St. Jude, the patron of the desperate people. But after two years, it was felt that it is well appropriate to dedicate the chapel in the hospital to Our Lady of Good Health, Mother of God and Mother of the people of God (Our Lady of Velankanni). So with the approval of the Bishop, the Chapel was dedicated to Our Lady of Good Health (Velankanni).

❖ From 1972-1979, the Parish Priest of Our Lady of Refuge and the Assistant Parish Priests of St. Mary's Cathedral acted as part-time Chaplains and visited the Wards and attended to the spiritual needs of the patients.

❖ In 1979, Bishop Deogupillai handed over the responsibility of the Chaplaincy of the Jaffna Teaching Hospital to the Oblates of Mary Immaculate and Rev. Fr. Francis Daniel OMI was appointed as the full-time Chaplain of the hospital.

❖ From 1979 to date, for the last 40 years, the Oblate Fathers have been ministering as fulltime Hospital Chaplains with total dedication and commitment. Sisters of the Holy Family and the Apostolic Carmel Sisters have been helping the Chaplains in their ministry. Now the Holy Family Sisters, the Salesian Sisters are helping the Chaplain in the ministry. Further now some voluntary lay helpers, some Major Seminarians from Oblate Scholasticate and St. Francis Xavier's Seminary give support in visiting the wards and helping the patients in their various needs.

❖ During the time of Rev. Fr. Francis Daniel, the chapel which was built by Rev. Fr. Thevathasan was extended and renovated. After Fr. Francis Daniel, Fr. Maria Sebastian OMI, Fr. Linus Adrian Soyza OMI, Fr. Antonine Jeevendra Paul OMI, Fr. Edmund Reginald OMI, Fr. Celestine Mascringhe OMI, Fr. Jacob Yogarajah OMI, Fr. Stanislaus Swampillai OMI, Fr. Sebamalai Anpurasa OMI,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fr. David Emmanuel Ratnaraj OMI, Fr. Arokiyanathar Bagus Vincent OMI, Fr. Anthonymuthu Croos OMI, Fr. Balasingam Jeyabalan OMI, Fr. Michael Sebamalai Perera OMI, Fr. J.M. John Patrick OMI, Fr. Sebastian Reginald OMI, Fr. S. Philip Ranjanakumar OMI, Fr. Jesuraja Gerald OMI, with Fr. Anthonypillai Jude Carowf OMI as assistant have served as Hospital Chaplains. At present, Fr. S. Arul Sutharson OMI is serving as the Chaplain.

**Psycho-Social and Spiritual Ministries offered at the Jaffna Teaching Hospital**

- Every Sundays and Fridays Holy Mass is offered at 12.00 noon.
- On every Fridays after the Holy Mass, Blessed Sacrament is exposed for adoration and ends with a prayer service organized from 4.00 pm to 4.45 pm and the Benediction of the Blessed Sacrament.
- The patients staying in the wards are given Holy Communion on Sundays, Tuesdays and Fridays and Sacraments of Reconciliation and Anointing of the sick are administered whenever necessary and when requested.
- Visiting the patients and the staff members and others working in the wards regularly.
- Psycho-Social and Spiritual animation seminars are organized regulary Hospital staff.
- In order to encourage and facilitate the regular visitation of the sick patients, the lay volunteers and others who are interested are gathered together and formed into a group.

**Contact us:-**

**The Chaplain,**
**Annai Velankanni Church,**
**Government Teaching Hospital,**
**Jaffna, Sri Lanka.**
**Telephone No: -**
**+94 0212215016,**
**+94 0776286506**

**The Chaplain,**
**"Thodarpaham"**
**657/1, Hospital Road,**
**Jaffna, Sri Lanka.**
**Telephone No: -**
**+94 0212222721,**
**+94 0776286506**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழா நிகழ்வுகள் — 2018

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணம் ஒன்று பாதைகள் இரண்டு

ஒரு மனிதன் தாயின் வயிற்றுக் கருவறையில் கருவாகும்போதே அவனது உடலோடு சில சமூகப் **'படிமங்கள்'** ஒட்டிக் கொள்கின்றன. அச்சமூகப் படிமங்களில் முக்கியமான மூன்று படிமங்களை இங்கு குறிப்பிடலாம். முதலாவதாக அவனது இனம். இரண்டாவதாக அவனது சாதி, மூன்றாவதாக அவன் சார்ந்த மதம். அவ்வளவிற்கு மதம் ஒருவனின் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

விஞ்ஞான சாதனங்களை அவற்றின் வளர்ச்சிப் படிமுறைத் தரவுகளை நிரைப்படுத்துவதன் மூலம் நாம் விளங்கிக் கொள்ளலாம். ஏனென்றால் விஞ்ஞானம் சித்தாந்தத்திற்குட்பட்டது. அதே போன்று மதங்களையும் அவற்றின் தரவுகளையும் நிரைப்படுத்துவதோ, அல்லது விளங்கிக் கொள்வதோ இலகுவான காரியமல்ல. ஏனெனில் மதம் என்பது வேதாந்தக் கருத்துக்களினால் உருவாக்கப்பட்டதாகும்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வளாக எல்லைக்குள் நிர்மாணிக்கப் பட்டிருக்கும் ஆலயங்களுள் கத்தோலிக்க தேவாலயமான **'புனித ஆரோக்கிய அன்னை'** தேவாலயத்தின் சமூக வகிபங்குகள் பற்றி சுருக்கமாக விபரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

1972ம் ஆண்டு யாழ்ப்பாணம் புனித அடைக்கல அன்னை தேவாலயத்தின் உதவிப் பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு ரி.தேவதாசன் அடிகளால் ஆயரின் அனுமதியுடன் இத் தேவாலயம் அமைக்கப்பட்டதாக வரலாற்றுப் பதிவுகள் தெரிவிக்கின்றன. கடந்த நாற்பத்தேழு (47) ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையில் இப்போதுள்ள ஆலய நிர்வாகம் இத் தேவாலய வரலாறு பற்றியதொரு விபரத்தைப் பதிவாக்க முன்வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

மதம் என்ற ஒரு உணர்வு வரையறை செய்யப்படாத காலத்திலேயே மதம் சார்ந்த சில உணர்வுகள் மனிதனிடம் இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இந்தச் செய்திகளை **'உளவியல் சார்ந்த'** நடத்தைக் கோலங்களாகவே வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

காடுகளில் உதிரிகளாக **'வேடுவர்'** என்ற நிலையில் வாழ்ந்த மனிதன் காட்டு மிருகங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டான். தனது உயிர் அச்சத்திலிருந்து விடுபடுவதற்கு மனிதன் நெருப்பைப் பயன்படுத்தியிருக்கின்றான். நெருப்பை மூட்டி அந்த நெருப்புச் சூழலில் மனிதன் வாழ்ந்திருக்கின்றான். இந்த நெருப்பு வெப்பத்தை மிருகங்களால் நெருங்க முடியவில்லை. தங்களின் உயிர் பாதுகாப்பிற்குக் காரணமான நெருப்பின் மீது அவர்களுக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது. அந்த மதிப்பின் வளர்ச்சி நிலை அந்த மக்களின் மனங்களில் உறைந்து. அடுத்தடுத்த படிமுறைகளில் நெருப்பு அவர்களின் வணக்கத்திற்குரியதாயிற்று.

மேற்குறிப்பிட்ட செய்தியில் நாம் அவதானிக்க வேண்டியதொரு முக்கியமான செய்தியுண்டு. 'நெருப்பு தங்களின் உயிருக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளது' என்ற உளவியல் நம்பிக்கையே அவர்களின் வணக்க நிலைக்கு வடிகாலாக அமைந்துள்ள தென்பதே அச்செய்தியாகும்.

வேதாந்தக் கருத்துக்கள் மனிதனின் உளவியல் நம்பிக்கைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தளத்திலேயே உற்பத்தியாகி வளர்ச்சியடைகின்றனவென்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

காலம் ஒருபோதும் தரிப்பதில்லை. காலம் நகர்ந்தது . காட்டில் உதிரிகளாக வாழ்ந்த மனிதர்கள் சிறுகச் சிறுக ஒன்று சேர்ந்து **'கிராமத்தை'** உருவாக்கினர். கிராமங்கள் சேர்ந்து நகரங்களாகின. நகரங்கள் சேர்ந்து நாடு உருவாயிற்று. இன்று எத்தனையோ மதங்கள் உருவாகிவிட்டன. இந்த மதங்களின் வரிசையில் கத்தோலிக்க மதமும் ஒன்று.

ஏறத்தாழ ஐநூறு ஆண்டுகள் வரை இலங்கை அந்நிய ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்திருக்கின்றது. போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற படிமுறையில் இலங்கையை ஆக்கிரமித்திருந்திருக்கின்றனர். இந்தக் காலப் பகுதியில்தான் இலங்கையில் கத்தோலிக்க சமயம் தோற்றம் பெற்றிருக்கின்றது.

இயல்பாகவே மனித மனங்களில் அவர்களின் வாழ்க்கைச் சூழல்களால் உருவானதொரு பக்தி உணர்வு உருவாகியிருந்ததை இக்கட்டுரையின் ஆரம்பத்தில் பார்த்திருக்கின்றோம். மதங்களின் வருகையோடு மக்களின் மனங்களில் பக்தி உணர்வு விரிவடைய ஆரம்பித்தது. மனிதத்தைப் பேணுகின்ற நடவடிக்கைகள் சகல மதங்களிலும் காணப்பட்டாலும், கத்தோலிக்க மதத்தில் மனிதத்தைப் பேணுகின்ற நடவடிக்கைகள் மிகக் கூர்மையானதாக இருந்திருக்கின்றன - இப்போதும் இருக்கின்றன.

மனித வாழ்வியல் ஒழுக்கங்கள் - கட்டுப்பாடுகள் பற்றிய தளத்திலேயே சகல மதங்களும் இயங்கினாலும் கத்தோலிக்க மதம் இந்த நடவடிக்கைகளில் மிகக் கூர்மையானதாகக் காணப்படுகின்றது. அதற்கு மேற்கத்தேய நாகரீகமும், நெறிப்படுத்தப்பட்ட ஒரு கல்வி முறைக்கூடாகக் கத்தோலிக்க குருமார் உருவாக்கப் படுவதும் காரணங்களாய் அமையலாமென மத ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இச் சமுதாயத்தில் வாழ்கின்ற மனிதர்களை பொருளியல் வல்லுநர்கள் மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். சகல வசதிகளும் உள்ளவர்களை **'மேற்தட்டு'** வர்க்கத்தினர் என்றும், கட்டுப்பாடான வசதி (அரசசேவையில் உள்ளவர்களைப் போன்றவர்கள்) உள்ளவர்களை **'நடுத்தர'** வர்க்கத்தினர் என்றும், தினசரி வயிற்றோடு போராடுபவர்களை **'அடித்தட்டு'** வர்க்கமென்றும் வகுத்துள்ளனர். இந்த மூன்று பிரிவினரில் மேற்தட்டு வர்க்கத்தினருக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும் பணப்பிரச் சினைகள் பெருந்தாக்கங்களை ஏற்படுத்துவதில்லை. நோய்கள் வந்தால்கூட தனியார் மருத்துவமனைகளை நாடுவார்கள். இவர்களில் பெரும் சோதனைக்கு உள்ளாவது அடித்தட்டு மக்களே.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை போன்ற அரசாங்க மருத்துவ மனைகளில் சிகிச்சைபெறும் நோயாளர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் அடித்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மருத்துவ மனையைவிட இறைவனையே நம்புகின்றனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வளாகத்தினுள் அமைந்திருக்கும் புனித ஆரோக்கிய அன்னை தேவாலயத்தில் பிறமதங்களைச் சார்ந்த பெரும்பாலான மக்கள் மெழுகுதிரி கொழுத்தி வழிபடுவதை நான் கண்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, அங்கு வருகின்ற பிறமதத்தைச் சார்ந்தவர்களையும் அத்தேவாலய ஆன்ம குரு கரிசனையுடன் வரவேற்று ஆறுதல் கூறி ஆசீர்வதிப்பதையும் கண்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் உளவியல் அடிப்படையில் எப்போது தனது சுயநம்பிக்கையை இழக்கின்றானோ, அந்த வினாடியிலேயே தனது செயற்பாட்டையும் இழக்கின்றான். அந்த சுய நம்பிக்கையை இந்தத் தேவாலயம் வழங்குகின்றது.

மருத்துவமனையின் மருத்துவ நடைமுறைகள் அனைத்துமே விஞ்ஞான மயமானவைகள். அவைகள் சித்தாந்த தளத்திலேயே இயங்குகின்றன. அதேவேளை, புனித ஆரோக்கிய அன்னை தேவாலயத்தின் வணக்க முறைகள் யாவும் வேதாந்தத் தளத்தில் நிகழ்கின்றன. அதேபோல மனித உடலின் இயக்க நிலைகள் பூரணமாகவே விஞ்ஞானம் சார்ந்தது. அதேவேளை, மனித உடலின் மனமோ வேதாந்தக் கோட்பாடுகளை நம்புகின்றது.

**சித்தாந்தம் - வேதாந்தம்** இரண்டும் கலந்ததுதான் மனித வாழ்க்கை.

சித்தாந்தம் - வேதாந்தம் இரண்டுமே இரண்டு தண்டவாளங்கள். இந்த இரண்டு தண்டவாளங்களில் ஒரு தண்டவாளம் பிசகினாலும் ஆபத்துத் தவிர்க்க முடியாததாகின்றது.

*கே.ஆர்.டேவிட்*

*ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்*

*ஆனைக்கோட்டை*

"God wants only one thing from us humility. Nothing else"

**- St. Paisions the Athonite**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை மரியே தேவதாயே!

அன்னை மரியே தேவதாயே
உன்னை நம்பி வந்தோம் நாமே
கண்ணின் மணி போல் காப்பாய் நீயே
கருணைக் கடலே கன்னித்தாயே

தேவன் மகனை மடி சுமந்த தேவதாயே - எம்
தேவைகள் யாவும் உம் பதம்
வைத்தோம் அன்னை நீயே
தேனின் சுவையை வண்டுகள் அறியும் தேவதாயே - உம்
அருளின் சுவையை அனைவரும் அறிவோம் அன்னை நீயே *(அன்னை மரியே)*

மாசில்லாமல் உற்பவித்த அமலோற்பவமே - உம்
மனுக்குலத்தை மீட்டெடுத்த அற்புதம் நீயே
காசினி எங்கும் நல் அருள்
பொழியும் அரசியும் நீயே - உம்
கருணைக்கு ஏது கரைகள்
இங்கே அன்பின் கடலே *(அன்னை மரியே)*

பாவச் சேற்றில் புரண்ட எம்மைத் தேவதாயே - எம்
பாலகன் மூலம் காத்தருளிய காவலி நீயே
துடுப்பிழந்த தோணியானோம் அன்னைமரியே எம்
இடுக்கண் களைந்து கரை சேர்ப்பாய் கன்னித்தாயே *(அன்னை மரியே)*

வேசம் போடும் மனிதர் நடுவில் வாழ்ந்தாயே - பெரும்
மோசம் செய்யும் பகைவர்க்கும் நல்
மார்க்கம் காட்டி நின்றாய் நீயே
வாசம் செய்து நேசம் கொள்ளும் வாச மலரே- உன்மேல்
பாசம் வைத்துப் பழகும் எம்மை
மோட்சம் சேர்க்க வல்ல தாயே *(அன்னை மரியே)*

அல்வின் எட்வின் பீரிஸ்
(பண்டைநகர் நாயகன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வின் தருணங்களில்........



கீரிமலை கடலில்
தாதிய மாணவர்களுடன்



தெனியாயவில்......



சுற்றுலாவில் தாதிய மாணவர்களுடன்
உணவு அருந்துகையில்



மண்ணித்தலையில் தன்னார்வப்
பணியாளர்களுடன்......



அருட்பணி. மரிய செபஸ்ரியனின்
பிரியாவிடையின் போது



தாதிய மாணவர்களுடன்



தன்னார்வ பணியாளர்களின்
உணவு தயாரிக்கையில்



பள்ளிக்குடாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை ஆன்ம குருவின் பணி பற்றிய ஓர் பார்வை...

அருட்பணி அருள் சுதர்சன் அ.ம.தி

மருத்துவமனை ஆன்ம பணி என்பது சவால்கள் நிறைந்த உலகில் மிகவும் மகத்தான மனிதநேயமிக்க பணியாகும். உன்னைப்போல் உன் அயலானையும் நேசி என்ற இயேசுவின் வார்த்தைகளை அடியொற்றியது. இறை விசுவாசத்திலும் ஆழ மான நம்பிக்கையிலும் கட்டி எழுப்பப்படவேண்டிய சாட்சியம் பகருகின்ற பணியாகும். இப் பணியினைச் செய்வதற்குக் கடவுளின் ஆசீர் நிறைவாகத் தேவைப்படுகின்றது. அதேவேளையில், அன்பினாலும் கரிசனையினாலும் தன்னையே முற்றுமுழுதாக இறைதிட்டத்திற்கு உவந்தளிக்கின்ற பணியாகும். இப்பணிக்கு மேலைத்தேய ஐரோப்பிய நாடுகளில் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் ஆசிய நாடுகளில் உள்ளவர்களால் கொடுக்கப்படுவதில்லை என்பது கண்கூடு. இதற்கு முக்கிய காரணமாக' இருப்பது நான் என்ற சுயநலமும் கடவுள் பயமின்மையும் குறுகிய மட்டப் பார்வையுமே ஆகும். பொதுவாக மருத்துவமனைக் கத்தோலிக்க ஆன்ம குரு என்பவர் தனித்து ஒரு மதத்தினையே சார்ந்தவர் என்ற தவறான கண்ணோட்டம் உண்டு. எனவே இக் கட்டுரையின் நோக்கம் இப்பணியினுடைய மகத்துவத்தையும் மாண்பினையும் பிறருக்குத் தெரியப்படுத்தி, மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இப்பணி எதிர்காலத்தில் சிறப்பானதாக அமைய ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பது எம் கைகளிலேயே தங்கியுள்ளது. கத்தோலிக்க சமூகத்தைச் சார்ந்தவர்கள்கூட இதனுடைய அவசியத்தை உணராமல் இருப்பது கவலையினை வரவழைக்கின்றது.

### ஆன்ம குரு என்றால் யார்?

ஆன்ம குரு என்றால் ஒரு நிறுவனத்தின் அல்லது பணிமையத்தின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பணிமையத்தினால் அதிகாரபூர்வமாக நியமிக்கப்படுகின்ற ஒரு நபர் ஆவார். இவர் எப்போதும் தான் பணியாற்றும் அந்நிறுவனத்தோடு அல்லது பணிமையத்தோடு சேர்ந்திருப்பார். பொதுவாக ஆன்ம குரு என்கின்றபோது தான் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்ற மதத்தினை அல்லது மத விசுவாசத்தினை அடிப்படையாகக் கொண்டவராகவும் மற்றவர்களினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சாட்சியம் பகருகின்ற வாழ்வினைக் கொண்டிருப்பவராகவும் இருக்கவேண்டும். ஆனால் மருத்துவமனை ஆன்ம குரு என்கின்றபோது இதனுடைய தார்ப்பரியமும் பாரம்பரியமும் கிறிஸ்தவ மதத்தினையே சாரும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஏனெனில், அடிப்படையில் மக்களினுடைய காலத்தின் தேவைகளை உணர்ந்து மக்களோடு மக்களாகப் பணியாற்றுவது தான் ஆன்மகுருவினுடைய தார்மீகக் கடமையாகவும் பொறுப்பாகவும் இருக்கின்றது.

### மருத்துவமனை ஆன்ம குருவினுடைய பணிகள் கடமைகள்

ஒரு ஆன்ம குருவினுடைய மிகவும் முக்கியமான பணியாக தன் மதம் சார்ந்த வழிபாடுகளை நடாத்துவதையும், தேவையில் உள்ளவர்களுக்கு ஆன்மீக வழிகாட்டல் களையும் மற்றும் உளநல ஆற்றுப்படுத்தல் ஆலோசனைகளையும் வழங்குதல், சமுதாயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனையில் பணிசெய்யும் ஆன்ம குரு என்கின்றபோது நோயாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் மற்றும் மருத்துவமனையில் கடமையாற்றும் பணியாளருக்கும் தனது சேவைகளையும், ஆலோசனைகளையும் வழங்குதல் போன்றவை அவரது பணிகளாகும்.

**யாழ் போதனா மருத்துவமனையில் உள்ள கத்தோலிக்க ஆன்ம குருவின் சமூக உளநலப் பணியகத்தின் பணிகள்**

அமலமரித் தியாகிகளின் நிறுவுனர் தந்தை புனித இயூஜின் டி மசனெட்டின் வார்த்தைகளின் வாஞ்சை என்னை இப்பணிக்கு ஆழமாக இட்டுச் சென்றது. **"நாம் பலதரப்பட்ட மக்கள் மத்தியில் ஆற்றும் பணிக்கு நாம் அணிந்திருக்கும் திருச் சிலுவையே சான்றாகும்"**. ஆகவே எப்படிப்பட்ட பணியாகினும் அமலமரித் தியாகிகள் மருத்துவமனையில் மேற்கொள்ளுகின்ற ஆன்மீகப் பணியானது மிகவும் சாலச்சிறந்ததாகும். இப்பணியானது மதத்தினையும் தாண்டி, மனித நேயத்தோடும் வாழ்வில் எதிர்கொள்கின்ற உடல் நோய்கள் துன்ப துயரங்களையும் சவால்களையும் தாண்டி, நம்பிக்கையோடு பயணிக்கின்ற பாரிய பணியாகும். இதற்குத் தூய உள்ளமும் கடவுள் நம்பிக்கையும் பணிக்கூற்றும் தொலைநோக்குப் பார்வையும் அவசியமாகும்.

- ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நண்பகல் 12.00 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது.
- ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் திருப்பலியின் பின்னர் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு மாலை 4.00 மணி தொடக்கம் 4.45 மணி வரை சிறு வழிபாட்டுடன் நற்கருணை ஆசீர்வாதம் வழங்கப்படுகின்றது.
- தேவை ஏற்படுகின்ற வேளையில் நோயாளர் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறுபவர்களுக்கு செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் நற்கருணை, ஒப்புரவு, நோயில் பூசுதல் போன்ற ஆன்மீகக் கடமைகளை நிறைவேற்றுதல்.
- நோயாளர்களையும் மருத்துவமனையில் பலதரப்பட்ட நிலைகளில் பணி புரிபவர்களையும் சந்தித்தல்.
- மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உளநலம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த கருத்தமர்வுகளை வழங்குதல்.
- மருத்துவமனையில் நோயாளர் விடுதிகள் சந்திப்புக்களை ஊக்குவிக்க பக்தி சபையில் உள்ள பொதுநிலையினர், ஆன்ம நலன் பேணும் தன்னார்வப்பணி யாளர்களை ஒன்று கூட்டுதல்.
- யாழ் மாவட்ட பாடசாலைகள் மற்றும் தேவாலயப் பங்குகளில் நத்தார் காலங்களில் நோயாளர் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறுபவர்களுக்குப் பரிசில்களை வழங்க பொருட்களைச் சேகரித்தலும் குருதி நன்கொடையினை ஊக்குவித்தலும்.
- மருத்துவமனையில் நாம் மேற்கொள்கின்ற ஆன்மீக, சமூக உளநலப் பணிசார்ந்த கருத்தமர்வுகளை நடாத்தி அப்பணி தொடர்பான விழிப்புணர்வை சமுதாயத்திலும் புலம்பெயர்ந்த நாட்டில் உள்ள எமது உறவுகளுக்கும் தெளிவுபடுத்தி அதை ஊக்குவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ் போதனா மருத்துவமனையில் உள்ள கத்தோலிக்க ஆன்ம சமூக உளநல பணியகத்தின் சவால்கள்.**

- வட மாகாணத்திலே உள்ள மருத்துவமனைகளில் மிகவும் முக்கியமான மற்றும் பெரிய மருத்துவமனையாக இருப்பது யாழ் போதனா மருத்துவமனை. ஏனெனில் ஐந்து மாவட்டங்களிலுமிருந்தும் இங்கு ஏராளமான நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்காக வருகின்றார்கள். இது 24 மணித்தியால முழுநேரப் பணியாகும். இதனால் இப்பணியினைச் செய்வதற்கு இன்னும் மேலதிகமாகப் பணியார்வமிக்க அருட்பணியாளர்களும் அருட்சகோதரிகளும் தேவைப்படுகின்றார்கள்.
- இப்பணி பற்றிய மகத்துவமும் போதிய அறிவும் மக்களுக்கும் மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் இல்லாமை.
- கத்தோலிக்க துறவற சபையில் உள்ள துறவிகளின் பெற்றோர், சகோதர சகோதரிகள் போன்றோர் அருட்பணியாளர்களின் மருத்துவமனை நோயாளர் விடுதி அனுமதி குறித்து ஆன்மீக அருட்பணியாளருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற தகவல் பரிமாற்றத்தில் உள்ள அசமந்தப் போக்கு. இவர்களே இதில் அக்கறை இல்லை என்கின்றபோது சாதாரணமான பொதுநிலையினரிடம் இதனை எதிர்பார்க்க முடியாது.
- கத்தோலிக்க அருட்சாதனங்களை நிறைவேற்றுவதற்குத் தகுந்த ஆயத்தங்களை மேற்கொள்ள முடியாமை.
- சுயநலம் நிறைந்த குறுகிய பார்வையும் கடுமையான மதப் போக்கும் அர்ப்பணமற்ற தன்மையும்.
- நோயாளர் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களுக்கு உரிய பணியை செய்வதற்குப் போதிய நேரம் இல்லாமை மற்றும் அருட்பணியாளர்கள் மதிக்கப்படாத தன்மை.
- எப்போதும் சந்தேகக்கண் கொண்ட பார்வை.
- கடவுள் பயம் மற்றும் மத நம்பிக்கை இல்லாத போக்கு.
- ஒரு சில குறிப்பிட்ட கத்தோலிக்க பணியாளர்களைத் தவிர்த்து மற்றவர்களின் பங்களிப்பு இல்லாத் தன்மை.
- பொதுநிலை தன்னார்வப் பணியாளர்களின் ஆர்வமற்ற தன்மை.
- மற்றவர்களைச் சுரண்டி வாழ்கின்ற தன்மை.
- படித்த சமூகத்தினரும் சமூக ஆர்வலர்கள் அரசியல் தலைவர்கள் மற்றும் திருச் சபையின் தலைவர்கள் போன்றோருக்கு இப்பணி குறித்து ஆர்வமில்லாத்தன்மை.

இம் மருத்துவமனை ஆன்ம பணியினை மன்னார், வவுனியா, கிளிநொச்சி, தற்போது யாழ்ப்பாணம் போன்ற மருத்துவமனைகளில் மேற்கொள்ளுகின்றபோது நான் என் உள்ளத்தில் உணர்ந்ததை அனுபவித்ததை இக் கட்டுரையின் ஊடாக வரைந்துள் ளேன். இதில் பல நிறை குறைகள் உண்டு. மற்றும் கருத்து முரண்பாடுகள், பக்கச்சார்புகள் கூட இருக்கலாம். ஆனாலும், இப்பணியினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே என்னுடைய நோக்கமாக இருக்கின்றது. இப்பணியினைச் செய்கின்றவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பது உங்கள் ஒவ்வொருவரின் தார்மீகக் கடமையும் பொறுப்புமாகும். வாருங்கள் ஒன்றிணைவோம். மருத்துவமனை ஆன்மீகச் செயற்பாடுகளை ஊக்குவிப்போம். என்றும் மனிதநேயம்மிக்க பணிசெய்து இறை சாட்சிகளாய் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபமாலையின் மகிமை

திருச்சபை தோன்றிய காலம் முதல் இன்றுவரை செபமாலை செபத்தின் அடிப்படையாக அமைந்திருப்பது கர்த்தர் கற்பித்த செபமும் மங்களவார்த்தைச் செபமுமேயாகும். இந்த இரண்டு செபங்களும்தான் விசுவாசிகளின் முதல் பக்தி முயற்சியாக இருக்கின்றன. இன்று செபமாலை செபித்துக்கொண்டிருக்கும் முறையை 1224 ஆம் ஆண்டில்தான் நமது தாய்த் திருச்சபை பெற்றுக்கொண்டது.

மகாவல்லமையும் மேன்மையும் பொருந்திய இச் செபமாலையை புனித சாமிநாதர் தேவ அன்னையிடமிருந்து பெற்றுக்கொண்டார் என்பதைத் திருச்சபையின் வரலாற்றுச் சான்றுகள் பதிவு செய்துள்ளன. ஆல்பிஜென்சியர் மனம் திரும்புவதற்குத் தடையாக இருப்பது மக்களின் பாவங்களே என்று கருதினார் புனித சாமிநாதர். அதனால் அவர் துலூஸ் பட்டணத்திற்கு அருகே இருந்த ஒரு காட்டிற்குள் சென்று மூன்று நாட்கள் இரவும் பகலும் இடைவிடாது செபித்தார். பாவத்தால் ஏற்பட்ட இறைவனின் கோபத்தைத் தணிப்பதற்காக அவர் அந்த மூன்று நாட்களும் சாட்டையால் தம்மையே அடித்துக்கொண்டார். அதில் அவரது உடல் முழுவதும் புண்ணானது. இறுதியில் அவர் மயக்கமுற்றுக் கீழே விழுந்தார்.

அப்போது மரியன்னை மூன்று சம்மனசுகளுடன் அவருக்குத் தோன்றி அவரிடம் **"சாமிநாதா! எந்த ஆயுதத்தைக் கொண்டு உலகத்தைச் சீர்திருத்த பரிசுத்த ஆவி விரும்புகிறார் என்பதை நீ அறிவாயா"**? என்று கேட்டார். அதற்குப் புனித சாமிநாதர் **"அம்மா! அது என்னைவிட உங்களுக்கே நன்றாகத் தெரியும். ஏனெனில் உம் திருக்குமாரன் யேசுவுக்குப் பின் எங்களை இரட்சிக்கும் கருவியாக நீங்கள் அல்லவா இருக்கிறீர்கள் தாயே "** என்றார்.

அதற்குப் பதிலாக அன்னை அவரிடம் **" மகனே சாமிநாதா! கபிரியேல் கூறிய மங்கள வார்த்தைச் செபம்தான் வெற்றி தரும் கருவியாக உள்ளது. புதிய ஏற்பாட்டின் அடித்தளம் அதுவே. எனவே கடினமான இதயங்களை இறைவன் பக்கம் திருப்ப வேண்டுமானால் செபமாலை செபம் செய்"** என்று கூறினார்.

இவ்வாறாக, மகாவல்லமையும் மேன்மையும் பொருந்திய திருச் செபமாலையை தினந்தோறும் அடிக்கடி செபிக்கும்பொழுது தேவதாயார் தனது பிள்ளைகளின் மழலைச் சொற்களையும் இனிய குரலையும் கேட்டு இன்புறும் தாயைப்போல் முகமலர்ச்சியோடு நம்மை நோக்குவாள். அதில் இடம்பெறும் தேவ இரகசியங்களின் மூலம் பரிசுத்த கன்னித்தாயைப் போற்றிப் புகழுகின்றோம். பரிசுத்த மரியாயே இறைவனின் தாயே என நாம் அடிக்கடி சொல்லும்பொழுது அவருடைய பரிசுத்தம் நிறைந்த புண்ணிய சீவியத்தைப் பெருமையுடன் பாராட்டுகின்றோம்.

செபமாலை என்னும் பொக்கிஷமானது நமது நேசத்தாயின் இரக்கம் நிறைந்த இதயத்தை இனிதாக்கி, நமது தேவைகளையும் வேண்டுதல்களையும் மரியன்னை வழியாகப் பெற்றுத் தருகின்றது. திருச்செபமாலையின் மேன்மை அதில் சொல்லப்படும் செபங்களினின்று காணக்கிடக்கின்றது. செபமாலையை நாம் செபிக்கும்போது திவ்விய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுநாதருடையவும் அவருடைய திருமாதாவினுடையதும் சீவியங்களைச் சிந்தித்து அவ்விருவரையும் வாழ்த்தித் துதித்து அவர்கள் நமக்கு ஆதரவாக இருக்கும்படி வேண்டுகின்றோம். இப் பரிசுத்த செபமாலையானது தேவ அன்னையின் மட்டில் நமக்குள்ள சிநேகத்தையும் நன்றியறிதலையும் காட்டுவதற்கு ஏதுவானதொரு பக்திக் கருவியாகும். இது நமது இதயங்களை தேவ அன்னையின் இதயத்துடன் ஒன்றுசேர்க்கும் உத்தம பாசபந்தமாயிருக்கின்றது.

## செபமாலை செபிக்கும் முறை

நாம் செபமாலையை செபிக்க ஆரம்பிக்கு முன் பரிசுத்த ஆவியின் துணையை நாடவேண்டும். நமது ஆன்மாவைப் பலப்படுத்துமாறு தூய ஆவியானவரிடம் ஒரு நிமிடம் மன்றாட வேண்டும். தேவ இரகசியங்களைத் தியானிக்கும்போது நமக்குத் தேவைப்படும் புண்ணியத்தை இறைவனிடம் உருக்கமாக மன்றாட வேண்டும்.

செபமாலை செபிக்கும் முன் எந்தக் கருத்துக்காக ஒப்புக்கொடுக்கின்றோம் என்பதனைத் தெளிவாக அறிந்து உறுதியாக அதைத் தியானிப்பது அவசியம். செபமாலை செபத்தில் நாம் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் ஆழ்ந்த பொருள் கொண்டது. எனவே அதனை நாம் நம் மனங்களில் சிந்தித்துத் தியானித்துப் பொருளோடு செபிக்கவேண்டும்.

செபமாலை ஆழ்ந்த விசுவாசத்துடன் செபிக்கப்படும்போது நாம் அன்னையின் வழியாக இறைவனிடம் கேட்கின்ற அனைத்தையும் பெற்றுக்கொள்கின்றோம். தாழ்ச்சியுடன் நாம் தொடர்ச்சியாக செபித்து வந்தால் இறைவன் நம்மை எல்லா நன்மைத்தனங்களாலும் நிரப்புவார். அன்னை மரியாவின் அருளும் இரக்கமும் எப்போதும் நம்மோடிருந்து நம்மை வழிநடத்தும்.

அன்னை மரியாள் மீதான செபமாலைப் பக்தியை வாழ்வில் தொடர்ந்து கடைப்பிடித்து, பாவ அழுக்குகளிலிருந்து நம்மைத் தூய்மைப்படுத்தி, இவ்வுலக வாழ்வின் தீமைகளை வெற்றிகொள்வோம். இறைவனோடும் அன்னை மரியாவோடும் அவர்தம் புனிதர்களோடும் இணைந்து நிறைவாழ்வினை அடைவோம்.

*செல்வி. ப. வினுஷியா*
*2017 A பிரிவு தாதியக் கல்லூரி மாணவி*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## " Whom shall I send? Here I am Lord"

**( Is: 6/8 )**

God's ways are wonderful and they are mysterious too. The experiences which I have had are sure proof of His mysterious ways. Getting myself involved in Education ministry I felt another call for me to minister to people who are in hospital, suffering with various kinds of sickness, ailments of both soul and body. A call that demanded not only my time but to be a person with a listening heart. A hope-giver, a sharer, a pain reliever, an empathizer, a consoler, and above all a messenger of peace, hope and love to those who were suffering in hospital.

So I responded to God's call and said "YES" and put my step into this ministry. It was in 1981, Rev Fr.Daniel OMI was the chaplain of the hospital in Jaffna, and he needed assistance. He had shared his situation and feelings to the Bishop Rt.Rev.Dr.Deogupillai who was then the Bishop of Jaffna. Bishop in negotiation with the Provincial of the Holy Family sisters of Jaffna managed to get the assistance of the sisters. The two sisters who were chosen for this special and challenging ministry, Sr.Josephine Mary and myself.

Rev.Fr.Daniel was our guide, leading us on into this new path, new venture. Our ministry involved first prepares the venue and the people for the Eucharistic celebration. The catholic nurses joined us in the above preparations. Taking the Eucharist to the wards where the patients are unable to move or walk and preparing them to receive Jesus in communion. Rekindling the faith they have received in Baptism and other sacraments. We are drawn to listen to their pathetic stories and the pain of loneliness, We console them with our empathetic listening and give them hope and assure them of our prayers. We do not exclude any patient who is not a catholic. Our love, concern, visit, listening is shared with all patients of all religions.

I enjoyed my hospital ministry for four years. I had to say "good bye" to this ministry because of my transfer to another school. But the experiences which I have received through this ministry are within me and alive in me. I thank God for this golden opportunity of working with the powerless and suffering people.

My gratitude goes to Rev Fr. Daniel who is so kind, understanding, encouraging, and ready to help any time. Above all his good sense of humour, and joking are always stay unforgettable. My special thanks to my co-worker Sr.Josephine Mary and all those who assisted me in every way.

I thank God Almighty that this ministry still continues by our Holy Family Sisters.

***Glory Be To God Alone***

***Sr.Kalasiyona Anthonipillai (H.F)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை ஆன்ம குருவின் பணிகள் விரிவாக்கப்படுகின்றன அன்புராசா அடிகளாருடன் ஒரு நேர்காணல்

**கேள்வி :** யாழ். போதனா மருத்துவமனையின் ஆன்மீகக் குருவாகப் பணிபுரி கின்றீர்கள். இப்பணிபற்றி மக்கள் அறிந்துகொள்ளும் விதமாக உங்கள் அனுபவங்களை, பாதுகாவலன் பத்திரிகை ஊடாகப் பகிர்ந்து கொள்வீர்களா?

**பதில் :** நிச்சயமாக! எனது சிறிய இவ்வனுபவத்தை உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். 1972 ஆம் ஆண்டு இச்சிற்றாலயத்தை யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய உதவிப்பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி தேவதாசன் அடிகள், ஆயரின் உதவியுடன் உருவாக்கினார். இக்காலப் பகுதியில் மருத்துவமனையின் சிற்றாலய ஆன்ம குருவின் பணியினை யாழ். புனித அடைக்கல அன்னையின் ஆலயப் பங்குக் குருவே கவனித்துக் கொண்டிருந்தார். எனினும், இப்பணியின் தேவை, காலம் செல்லச்செல்ல, பரந்து விரிந்ததாகவே அமைந்தது. தேவைகளும் அதிகரித்தன.

**கேள்வி :** இந்தப் பணி அமலமரித் தியாகிகளிடம் கைமாறப்பட்டது எப்போது என்பது பற்றிச் சற்றுக் கூறுவீர்களா?

**பதில் :** அருட்பணி தேவதாசன் அடிகளாரைத் தொடர்ந்து 1979 ஆம் ஆண்டு அமலமரித் தியாகிகளினுடைய பணி மருத்துவமனையில் ஆரம்பமாகியது. தேவை எங்கோ அங்கே சேவை என்ற மனநிலையில் அருட்பணி. பிரான்சிஸ் டானியல் அ.ம.தி அடிகளார் மருத்துவமனையின் முதல் முழுநேர ஆன்ம குருவாகப் பணிபுரிய முன்வந்தார். இவரின் பணி 1979 ஆம் ஆண்டு ஆனி மாதம் முதல் 1987 ஆம் ஆண்டு ஆவணி வரை சுமார் 8 வருடங்கள் நீடித்தது. இவருடைய காலப்பகுதியிலேயே இச்சிற்றாலயம் புனரமைக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டில் இப்பணியை ஏற்று, இற்றைவரை சுமார் 21 ஆண்டுகளாகத் தொடர்ந்து அமலமரித் தியாகிகளே மருத்துவமனையின் ஆன்மகுருக்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள்.

**கேள்வி :** 21 ஆண்டுகள் மிக நீண்டகாலம். - அக்காலப் பகுதியில் ஆன்ம குருக்களாக யார்யாரெல்லாம் பணியாற்றினார்கள் என்று கூறமுடியுமா?

**பதில் :** நிச்சயமாக! அது என் கடமையும் கூட அருட்பணியாளர்களான பிரான்சிஸ் டானியல், அ.ம.தி, ஜீவேந்திராபோல் அ.ம.தி, செபஸ்ரியன் அ.ம.தி, எட்மன் றெஜினோல்ட் அ.ம.தி, ஸ்ரனி சுவாம்பிள்ளை அ.ம.தி, யோகராசா அ.ம.தி ஆகியோர் இந்த 21 ஆண்டுகளில் பணிபுரிந்தவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களோடு இணைந்து பல ஆண்டுகளாக உழைத்தவர்களில் திரு. எட்வேட் குடும்பத்தினர், திருமதி பொன்னுக்கோன் (ஓய்வு பெற்ற தாதி), திருமதி உடையார் (தாதி), திரு. ஜேக்கப் (தாதி), திருமதி. மேரி மாக்கிரட் போன்றோரை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென எண்ணுகின்றேன்.

**கேள்வி : சிற்றாலய வரலாற்றினைச் சுருக்கமாகக் கூறினீர்கள். தற்போது, சிற்றாலயம் புதுப்பொலிவுடன் மட்டுமல்லாது இப்பணியினை எதிர்காலப் பார்வையுடன் நீங்கள் சிந்தித்துச் செயல் வடிவம் கொடுக்க முனைவதாகத் தோன்றுகிறது. இது பற்றி...?**

**பதில் :** பல ஆண்டுகளாக இங்கு ஆன்ம குருக்களாக இருந்தவர்கள் கண்ட கனவே இப்போது நனவாகி இருக்கிறது. ஏனென்றால், ஆலய ஆராதனைகளோடு மட்டும் - நின்றுவிட்டால், எமது மருத்துவமனைப் பணி முழுமை பெறமுடியாது, பெறவும் கூடாது. மாறாக நோயாளர்களை, நோயாளர்களுக்குப் பணிபுரிபவர்களை பராமரிப்பவர்களைத் தொடுகின்ற, இவர்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற பணியாகப் பரிணமிக்கவே ஆத்மீக சமூக உளநலப் பணியகம் ஒன்றை உருவாக்க நீண்டகாலமாக நாங்கள் சிந்தித்துக் கொண்டிருந்தோம். அதன்செயல் வடிவம் தான் சிற்றாலயத்தோடு இணைந்த இப்பணியகம் ஆகும்.

**கேள்வி : இப்பணியகம் எவ்வித பணிகளையெல்லாம் ஆற்றத் திட்டமிட்டிருக்கிறது என்பதை விளக்கிச் சொல்லுவீர்களா?**

**பதில் :**

- நோயாளிகளையும் மருத்துவமனையில் பல தரப்பட்ட நிலைகளில் பணிபுரிபவர்களையும் சந்தித்தல்.
- மருத்துவமனை சந்திப்புக்களை ஊக்குவிக்க பொதுநிலையினரை ஒன்று கூட்டல்,
- மருத்துவமனையில் பணிபுரிபவர்களுக்கு மாதாந்த ஒன்றுகூடலை ஒழுங்கு செய்தல்.
- தேவை ஏற்படுகின்ற வேளைகளில் ஆன்மகுரு தங்கிச் செல்லல்.
- புதுப்பித்தல் பயிற்சி நெறிகளையும், கருத்தரங்குகளையும் காலத்துக்குக் காலம் ஒழுங்கு செய்தல்,
- இவற்றோடு இன்னும் பல பணிகளை இப்பணியகம் தேவை ஏற்படும்போது தன்னோடு இணைத்துக் கொள்ளும் என்பது எனது நம்பிக்கை.

**கேள்வி : இன்றைய காலத்தில் அதுவும் ஒரு போர்ச் சூழலில் துணிந்து கட்டடப் பணிகளில் இறங்கியுள்ளீர்கள். இப்பணிக்கான பணம் மற்றும் உதவிகளையும் எப்படிப் பெற்றுக் கொண்டீர்கள்?**

**பதில் :** நல்ல கேள்வி. பல நல்ல உள்ளங்களின் முயற்சியும், பிரயாசையும், தியாகமும் தான் இதற்கு வழிவகுத்தன. குறிப்பாக இம் முயற்சிக்கு உதவி மட்டுமல்லாது ஊக்கமும், உற்சாகமும் தருகின்ற அமலமரித் தியாகிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்திற்கும், யாழ். மாகாணத்தின் அ.ம.தி முதல்வர் அருட்திரு. ஜீவேந்திரா போல் அ.ம.தி அவர்களுக்கும் நன்றி கூறவேண்டும். எமது தேவை உணர்ந்து உதவி புரிகின்ற முன்னாள் மருத்துவமனை ஆன்ம குருவும், பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக ஆன்ம குருவுமான அருட்திரு. செபஸ்ரியன் அ.ம.தி அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன் அத்துடன் இலைமறை காய்களாக என்னுடன் தோளோடு தோள் நின்று பல வழிகளில் உழைக்கின்றவர்களையும் பாராட்டுகின்றேன்.

**கேள்வி : மருத்துவமனைச் சிற்றாலய ஆன்மீக குரு என்ற வகையில் உங்கள் பணி யார் யாரைச் சென்றடைகிறது? எப்படியான மக்களைச் சந்தித்திருக் கிறீர்கள்?**

**பதில் ;** ஓர் இறையியல் அறிஞர் கூறுவது போல இரண்டு வகையான கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். ஒன்று ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்தவர்கள் என்ற பெயரைக் கொண்டு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்பவர்கள். இரண்டாவது வகையினர், கிறிஸ்தவர்கள் என்று பெயரிடப்படாமல், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்பவர்கள், கத்தோலிக்க இறை மக்களுக்காக ஆன்ம குருவாகப் பணிபுரிய அனுப்பப்பட்டாலும், இப்பணியினுடைய பண்பும் தன்மையும் அதிலும் சிறப்பாக இப்போர்க் காலச் சூழலில் உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்டு, சோர்ந்துபோன, நொந்துபோன, காயப்பட்ட, வேதனைப்படுகின்ற பலரை இப்பணியினூடாகத் தொடக் கூடியதாக இருக்கின்றது. காரணம், மனிதனையும் மனிதத்தையும் வாழ வைக்கவே இறைமகன் இயேசு பணிபுரிந்தார்.

**கேள்வி : ஒட்டு மொத்தமாக உங்கள் பணிபற்றி என்ன கூறுகிறீர்கள்?**

**பதில் :** உடைந்துபோன உள்ளத்துக்கு உற்சாகத்தையும், வேதனைப்படுகின்ற இதயங்களுக்கு தேற்றரவையும், அழுகிறவர்களுக்கு ஆறுதலையும், கஸ்ரப்படுகின்றவர் களுக்கு ஆதரவையும், விரக்தியுற்ற மனங்களுக்கு வாழ்வில் நம்பிக்கையையும் கொடுக்கின்ற பணியாக அமைகின்றது.

**பேட்டி கண்டவர் T. கண்ணன்**

(03.09.2000 ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகையில் பிரசுரமாகியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவமனையில் என்னுடைய ஆன்மீகப் பயணம்...

*வாழ்க்கை என்பது இறைவன் வரைந்த ஓவியம்,*
*வாழ்வதென்பது நாம் படைக்கும் காவியம்!*

மனிதர்களாகிய நாம் போகவிரும்பாத இரண்டு முக்கிய இடங்கள்: ஒன்று வைத்தியசாலை, அடுத்தது சிறைச்சாலை. இவ்விரண்டு சாலைகளுமே எனக்குப் பிடித்த இடங்கள். இவை கற்றுத் தந்த வாழ்க்கைப் பாடங்கள் ஏராளம், ஏராளம். அவற்றுள் என் மனங்கவர்ந்த மனைதான் யாழ் போதனா மருத்துவமனை. நான் இங்கு பணி செய்வதை எண்ணிப் பெருமைப்படுகின்றேன்.

நாம் வாழ்வது ஒரு முறை மட்டுமே. இந்த வாழ்க்கை எனும் குறுகிய வட்டத்துக்குள் நாம் எத்தனையோ நன்மைத்தனங்களைச் செய்யலாம். அவை யாவற்றையும் செய்யக்கூடியதாக மருத்துவமனை அமைகின்றது. பிறருக்கு ஆறுதலாகவும், தேறுதலாகவும், துன்பத்தில் துணையாகவும், அவர்களது இறை விசுவாசத்தைப் புதுப்பிக்கின்ற ஒரு இடமாகவும் மருத்துவமனை உருப்பெறுகின்றது என்று கூறுவதில் நான் பெருமிதம் அடைகின்றேன். ஒரு ஆன்மீகப் பணியாளனாகப் பணிசெய்வது எனக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பு.

நான் 10.10.2015ம் ஆண்டில் இருந்து இன்று வரை யாழ் போதனா மருத்துவமனையில் அமலமரித் தியாகிகளோடு இணைந்து பணிசெய்து வருகின்றேன். இப்பணியூடாக நான் பெற்ற ஆசீர்வாதங்கள் ஏராளம். நான் சந்திக்கும் உள்ளங்களுக்குப் புதுவாழ்வை அளிக்கும் ஒரு கருவியாக இறைவன் என்னைப் பயன்படுத்துவதை எண்ணி நான் நன்றியோடு புகழ் பாடுகின்றேன். நோயாளர்களைச் சந்தித்து, அவர் களுக்கு நற்கருணை வழங்கி, இறைவனின் இரக்கத்தையும் அவரின் குணப்படுத்து தலையும் பகிர எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் கடந்த வருடங்களில் பணியாற்றிய அருட்பணியாளர்களான பிலிப், ஜெரால்ட் மற்றும் அருள் சுதர்சன் ஆகியோரின் ஆன்மீக தாகத்தையும் ஆன்மீக வழிநடத்து தலையும் நினைத்துப் பெருமைப்படுகின்றேன். அவர்களை வாழ்த்தி நிற்கின்றேன். கடவுள் என்றும் அவர்களை ஆசீரவதிப்பாராக. என்னுடைய இந்த ஆன்மீகப்பணியில் நிகழ்ந்த ஒரு உண்மை நிகழ்வை உங்களோடு பகிர ஆசைப்படுகின்றேன்.

நான் 22ம் நோயாளர் விடுதியில் ஒரு இளம் பெண்மணியைச் சந்தித்தேன். அவர் கூறியது **"எனக்கு வயிற்றில் ஒரு கட்டி உள்ளது. அதை அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்று மருத்துவர்கள் சொல்லுகிறார்கள். நான் திருமணம் செய்து சொற்பகாலம் தான். எனக்கு மிகவும் பயமாக உள்ளது"**. என்று சொல்லி அழ ஆரம்பித்தாள். அப்போது அவளுக்கு ஆறுதல் கூறி செபித்துவிட்டு அவளிடம் எப்பொழுதும் இறைவனுக்கு நன்றி கூறும்படியும், என்னுடைய செபங்களையும் அவர்களுக்கு ஒப்புக்கொடுப்பதாகவும் சொல்லிவிட்டுச் சென்று விட்டேன். மூன்று மாதங்களுக்குப் பிறகு நான் ஒரு சைவசமயப் பெண்ணை திருமணத்திற்கு முன் ஆயத்த வகுப்பிற்குத் தயார்படுத்தி, அடைக்கல அன்னை ஆலயத்தில் அவளது திருமுழுக்குச் சடங்கில் கலந்துகொள்ளச் சென்றிருந்தேன். அப்பொழுது நான் மருத்துவமனையில் சந்தித்த அந்தப் பெண் அவளது கணவனோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அணுகி வந்து எனக்கு நன்றி கூறினாள். ஆனால் என்னால் அவளை அடையாளம் காணமுடியவில்லை. அப்பொழுது அவள் என்னிடம் கூறியது **"சிஸ்ரர் என்னுடைய வாழ்க்கையிலே நடந்த புதுமை நீங்கள் சொல்லிவிட்டுச் சென்றவாறு நான் தினமும் இறைவனுக்கு நன்றி சொன்னேன். அறுவைச் சிகிச்சை செய்யாமலே என்னுடைய வயிற்றுக் கட்டி கரைந்து போனது. நீங்கள் தான் என்னுடைய விசுவாசத்தை புதுப்பித்திருக்கிறீர்கள்."**

கணவனும் மனைவியும் இணைந்து கண்ணீர் மல்க கைகூப்பி எனக்கு நன்றி தெரிவித்தார்கள். இதைக்கேட்ட பொழுது எனக்கு ஆச்சரியமாகவும் வியப்பாகவும் இருந்தது. நான் மகிழ்ச்சியின் மழையில் நனைந்தேன். இறைவன் என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்தியதை எண்ணிப் பெருமைப்பட்டேன். நன்றி கூறினேன். நாம் எமக்காக வாழாது பிறருக்காக எம்மைக் கொடுப்பதில் இருக்கும் இன்பம் அளவிட முடியாதது. மறக்க முடியாதது. மகிழ்ச்சியின் உச்ச விளிம்பில் எம்மை நிலைநிறுத்தும்.

கடவுளின் ஆசீர்வாதம் என்றும் எம்முடன் இருக்கும்.

நன்றி

*அருட்சகோதரி ஆலிஸ் மத்தியு*
*சலேசிய அருட்சகோதரி*
*52 D, வேம்படி வீதி*
*யாழ்ப்பாணம்*

All of us must be saints in this world.
Holiness is a duty for you and me. So let's be
saints and so give glory to the Father.

**- St. Mother Teresa of Calcutta**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரி வழங்கும் அன்னை

இறைவனைக் கருவில் சுமக்கும்
பெருவரம் பெற்ற எம் அன்னையே
உம் புதுமைகள் எத்தனையம்மா
உம் அருளுக்காய் மாந்தர்
எத்திசையினின்றும் ஓடோடி வருவாரம்மா
உம் கண்ணில் சொரியும்
கருணைக்கு நிகர் ஏதம்மா
உம் பாதார விந்தத்தைப்
பணிந்து நிற்கும் எளிய உள்ளங்கள் ஏராளமம்மா
எளிமையின் பேரரசி
எளியோர்க்கு வானரசி
எமக்காக உம் திருமகனிடம்
பரிந்து பேசுதலின் இரகசியம் என்னம்மா
தாயாக எமைக்காத்து
தாராளமாய் அருள் மழை பொழிந்து
வானத்து விண்மீன்கள் போல்
உம் வாசல் தேடி வரும் அடியார்க்கு
வாரி வரங்களை அருளும் தாயே
இன்றும் என்றும் எப்பொழுதும்
எமக்காகத் திருமகனிடம் பரிந்து பேசுமம்மா.

*ஞா. தர்சினி*
2017[A] *பிரிவு தாதியக் கல்லூரி மாணவி*
*தாதியக் கல்லூரி*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வின் தருணங்களில்........



நான்காம் வருட இறையியல்
மாணவர்களின் பயிற்சியின் போது



திருவிழா விருந்துபசாரத்தின் போது



இதய சத்திரசிகிச்சை பிரிவின்
ஆண்டு விழாவின் போது



பணியாளர்களின் ஒன்றுகூடல்



காலி கோட்டையில்



கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வில்
அருட்சகோதரருடன்



விருந்துபசாரத்தில்



மருத்துவமனை காவல் பணியாளர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைக்கு

# கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்பு

## முன்னுரை

பொதுவாக வரலாறு என்கின்றபோது அது ஒரு கூரான வாளின் மீது நடப்பது போன்றது என்பார்கள் வரலாற்று ஆசிரியர்கள். ஏனெனில் அது பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கும் விமர்சனத்திற்கும் சிக்கல்களுக்கும் உள்ளாக்கப்படுவதுடன் சில தேவையற்ற இனம், மதம், மொழி, சாதியம், பிரதேசம் சார்ந்த மனத் தாங்கல்களையும் கருத்துவேறுபாடுகளையும் கொண்டுவரும். எம்மில் பலர் ஏன் இதில் நுழைந்து வீண் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்று விலகிச்செல்வதுமுண்டு. இப்படி என்ன நடக்குமோ, மற்றவர்கள் எம்மைப் பற்றி, என்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்று எண்ணி எமது வரலாறுகளுக்கு உருக்கொடுக்காமல், பேணிப்பாதுகாக்காமல், ஆவணப்படுத்தாமல் அதை தொலைத்துக் கொண்டிருப்பவர்கள் நாங்கள். ஒரு சமூகத்தின் காலத்தின் கண்ணாடியாக இருப்பது வரலாறு. அதற்கு உயிர் உண்டு; உணர்வுகள் உண்டு. எனவே இந்தத் தலைப்பினைப் பார்த்தவுடனேயே, என்ன மருத்துவமனை என்றால் பொதுவானதுதானே, எல்லா இன, மத, மொழியினரும் பங்களிப்புச் செலுத்தியுள்ளார்கள் தானே, அதை ஏன் இப்படிப் பிரித்துப் பார்க்கிறீர்கள் என்று கேள்வி எழுப்பலாம். ஆனாலும், என்னுடைய பாரிய பணியாக இதை நான் நினைக்கின்றேன்.

இந்த ஆண்டு அமலமரித் தியாகிகள் முழுநேரப் பணிப்பொறுப்பேற்று நாற்பது ஆண்டுகளின் மாணிக்க விழாவினைக் கொண்டாடுகின்றார்கள். நாற்பது ஆண்டுகளாக அமலமரித் தியாகிகள் என்ன செய்தார்கள் என்ற ஆழமான கேள்வி என்னை சிந்திக்கத் தூண்டியது. இதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டு இப்பணியினை மேற்கொண்ட பலரைச் சந்தித்தேன். அதில் பலர் பழையவற்றை மீட்டிப்பார்த்து ஞாபகப்படுத்துவதற்கு மிகவும் கஷ்ரப்பட்டார்கள். இந்நிலையில் எனக்கு பொக்கிஷமாகக் கிடைத்தவர்கள்தான் மிஷனறியாக இருந்த திருச்சிலுவை கன்னிய தாதியர்களோடு இணைந்து யாழ்ப்பாண மருத்துவமனையில் பணி செய்த மூத்த தாதி திருமதி அருளப்பு (லூர்த்தம்மா தவமணி), திருக்குடும்ப சபையின் ஆரம்ப முன்னோடியாக மருத்துவமனையில் பணிபுரிந்த அருட்சகோதரி கிறிஸ்ரபெல், திருச்சிலுவை கன்னியர் சபையைச் சார்ந்தவரும் அத்துடன் தாதிய கல்லூரியில் தாதிய போதனாசிரியராக பணிபுரிந்த அருட்சகோதரி ஜேம்ஸ் விக்ரறீன் ஆகியோர். அருட்சகோதரி ஜேம்ஸ் விக்ரறீன் திருச்சிலுவை கன்னியர்களுடைய சபை சார்ந்த **"இலங்கை மாகாண வரலாற்று நூல் 1930-2010"** என்ற நூலையும் எழுதியுள்ளார், முன்னை நாள் யாழ் பேராலய உதவி பங்குத்தந்தையாக இருந்த ம.ஜெயசீலன், முன்னைநாள் யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய உதவிப் பங்குத்தந்தையாக இருந்து ஆன்மீகப்பணி புரிந்த அருட்பணி மங்களராஜா ஆகியோரும் ஆன்மீகப் பணிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

அருட்பணி இம்மானுவேல் பிலிப்ஸ் யேசுதாசன் அ.ம.தி அவர்கள் எழுதிய அமலமரித் தியாகிகளின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூல் **"Our Tribute"**, மற்றைய நூலான **"Gleanings from the Oblate Mission Field in Ceylon"** , என்ற நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பணி இம்மானுவேல் L. அலிஸ் அ.ம.தி என்பவரினால் எழுதப்பட்டு இலங்கை கத்தோலிக்க பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட பிரசுரங்களைத் தொகுத்து பதிப்பித்து அமைத்த நூலாகும். அமலமரித் தியாகிகளின் மருத்துவமனை பணிப்பொறுப்பை முதன் முதல் ஏற்ற ஆரம்ப முன்னோடியான அருட்பணி பிரான்சிஸ் டானியேல் அ.ம.தி, மருத்துவமனை பணி பற்றிய பல ஆக்கத்திற்கும் செயற்பாட்டிற்கும் ஊக்கமளிக்கின்ற அருட்பணி செபமாலை அன்புராசா அ.ம.தி, முன்னைய நாட்களில் பணிபுரிந்த அருட்பணியாளர்கள், சிரேஸ்ட தாதியாக இருந்து ஓய்வுபெற்ற திருமதி புவேந்திரன் (உடையார்), திரு. ஜேக்கப், ஓய்வு பெற்ற தாதியர்கள், மற்றும் தற்போது பணியாற்றி வருகின்ற கத்தோலிக்க ஆன்மீக குழுமத்தைச் சார்ந்த பணியாளர்கள் போன்றவர்களின் உதவியுடன் என்னுடைய தேடலைத் தொடங்கினேன்.

ஒரு இளம் குருவாக இருந்து வரலாற்றைத் தேடிப் பிடித்து எழுதுவது என்பது சுலபமான காரியமல்ல. அதனுடைய வலிகளை ஆழமாக அறிந்தவன் நான். யாழ் போதனா மருத்துவமனையில் நூதனசாலை திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவேடும், இறுதியாக யாழ் போதனா மருத்துவமனை நூதனசாலைக்குப் பொறுப்பாக இருக்கின்ற திரு. துவாரகன் அவர்களின் உதவிகளும் வழிகாட்டலும் எனக்கு உறுதுணையாக இருந்திருக்கிறன. தடைகளையும் தாண்டி பல உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளேன். ஆனாலும், என்னுடைய தேடல் இன்றும் சவால்களோடு தொடர்கின்றது. ஏனெனில், தேடல் உள்ள உயிர்களுக்குத் தான் வாழ்விலும் பணியிலும் ருசியிருக்கும்.


## யாழ்ப்பாணத்தில் அமலமரித் தியாகிகளின் ஆரம்ப மிஷனறிகளின் மருத்துவம் சார்ந்த ஆன்மீகப் பணி

இலங்கை நாட்டிற்கு போர்த்துக்கேயர் 1505ம் ஆண்டு வந்தார்கள். அவர்களின் வருகையின் பின்புதான் கத்தோலிக்க விசுவாச மறை ஆரம்பிக்கப்பட்டது என்பார்கள். ஆனால் அதற்கு முன்பே கத்தோலிக்க மறை இருந்தது என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. ஒல்லாந்தர் 1658ம் ஆண்டு இலங்கையைக் கைப்பற்றினர். ஒல்லாந்த ஏகாதிபத்திய ஆட்சியினால் கத்தோலிக்க திருமறை பலத்த எதிர் விளைவுகளையும் துன்புறுத்தல்களையும் சந்தித்தது. இக்காலத்தில் ஆன்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு குருக்கள் இன்றி, பூசையின்றி பல துன்பங்களை கத்தோலிக்க மக்கள் சந்தித்தார்கள். இக்காலத்தில்தான் புனித ஜோசவ் வாஸ் பிச்சைக்கார வேடம் பூண்டு இறை பணியாற்றினார். பிரித்தானியர் 1796ம் ஆண்டளவில் இலங்கையைக் கைப்பற்றினர். இவர்களின் வருகையின் பின்னர் 1806ம் ஆண்டளவில் கத்தோலிக்க திருமறைக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. 1847ல் யாழ். ஆயர் **ஒ. பெற்றாக்கீனி (Mgr. Bettacchini)** அவர்கள் **அமலமரித் தியாகிகள் சபைத் ஸ்தாபகர் இயூஜினைப்** பிரான்ஸ் தேசத்தில் நேரில் சந்தித்ததன் விளைவாக, அமலமரித் தியாகிகள் மிஷனறி குருக்கள் 1847ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி அவரோடு இலங்கைக்கு வந்தார்கள். இவர்களுக்கு தலைமையேற்று **அருட்பணி யோண் ஸ்ரீபன் சமேரியா (Fr. John Stephen Semeria)** அ.ம.தி அவர்களும், **அருட்பணி லூயிஸ் கீற்த் ( Fr. Louis Keating)** அருட்பணி **ஜோசப் அலெக்சாண்டர் சியமின் (Fr. Joseph Alexander Ciamin)** அ.ம.தி, மற்றும் அருட்சகோதரர் **கஸ்பார்ட் டி ஸ்ரெபானிஸ் ( Bro. Gaspard De Steffanis)** அ.ம.தி ஆகியோருமே முதற் குழுவினர் ஆவார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமலமரித் தியாகிகள் சபையின் ஸ்தாபகர்




**Mgr. Charles Joseph Eugene de Mazenod**
**(1782 - 1861)**



**Mgr. Orazio Bettacchini**
**Oratorian**
**(1810 - 1857)**

Coadjutor to the Vicar Apostolic of Ceylon who pleaded with Bisho Eugene to send Oblates to Ceylon



**Mgr. John Stephen Semeria OMI**
**The Founder of**
**The Oblate Mission**
**(1813 - 1868)**


The Pioneer of The Oblate Mission in Ceylon

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Rev. Fr. Felix François Leydier OMI**
**(1821 - 1851)**
He was the first Missionary Oblate to die in Sri Lanka




**Bro. Gaspard de Stephanis OMI**
**(1821 - 1878)**
A member of the first batch of Oblates to come to Ceylon

# யாழ். போதனா மருத்துவமனையின் ஆரம்ப வரலாறு



**Sir Percival Acland Dyke**
**1st Government Agent**
**Jaffna District**
**01.10.1829 - 09.10.1867**



**Sir William Twynam**
**Government Agent**
**Jaffna District**
**15.09.1869 - 15.01.1896**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது மருத்துவ மாணவ அணி



DR. GREEN'S FIRST MEDICAL CLASS

| Valoopilly, Alias S. Miller | Kanapathy, Alias C. Mead | Adonarsalam, Alias N. Parker | Padeatamby, Alias J. Danforth | Poopaladasingam, Alias J. H. Town | Koomadoo, Alias A. C. Hall |
|---|---|---|---|---|---|


# திருச்சிலுவை மிஷனரி கன்னியர்களின் ஊர்காவற்துறை மருத்துவமனை பணி (1930 – 1964)




Mgr. Guyomard, Alfred OMI
1884-1956



The Sisters' Quarters, Kayts



Sr. Carola's grave in Kayts



Sr. Agathina in the ward Civil Hospital, Kayts

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலமரித் தியாகிகளின் ஆரம்ப மிஷனறி குருக்கள் ஈழ மண்ணில் கால் பதித்ததிலிருந்தே சமயப் பணி, சமூகப் பணி, கல்விப் பணி, உருவாக்கற் பணி என பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளனர்; இன்றுவரை பல மறை மாவட்டங்களில் ஆற்றி வருகின்றனர். குறிப்பாக அமலமரித் தியாகிகளின் ஆரம்ப மிஷனறி குருக்கள் 1849-1855 வரையான காலப்பகுதியில் நிகழ்ந்த கொலரா, கொள்ளை நோய், மற்றும் அம்மை நோயின் காலத்தில் ஆற்றிய பணிகளை விசேடமாகக் குறிப்பிடலாம். மருத்துவ முன்னேற்றம் இல்லாத இக்காலப்பகுதியில் மக்கள் எல்லோரும் திக்கித் திகிலடைந்து, மரணபயம் ஊசலாடிய நிலையிலும்கூட, தம் உயிர்களை துச்சமென மதித்து நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன, மத, மொழி பேதமின்றி பல மருத்துவ உதவிகளையும் விசேடமாக நோயாளிகளைப் பராமரித்தல், இறக்கும் தறுவாயில் இருப்போருக்கு உதவி செய்தல், இறந்தோரை நல்லடக்கம் செய்தல், துன்பப்படுவோருக்கு ஆறுதலாக இருத்தல் போன்ற பணிகளையும் மற்றும் கத்தோலிக்க மக்களுக்கு ஒப்புரவு மற்றும் நோயிற்பூசுதல் போன்ற திருவருட்சாதனக் கடமைகளையும் நிறைவேற்றியுள்ளனர் என்பதனை அருட்பணி யோண் ஸ்ரீபன் சமேரியா அ.ம.தி அவர்களின் கடிதங்களில் இருந்து காணமுடிகின்றது. இதனால் மக்கள் மத்தியில் நன் மதிப்பினையும் பெற்றனர். கொலரா நோயினால் பீடிக்கப்பட்டு மக்களோடு மக்களாகப் பணிசெய்து **அருட்பணி பீலிக்ஸ் பிரான்சிஸ் லெய்டியர் (Fr. Felix Francois Leydier) அ.ம.தி அவர்கள்** முதன் முதலாக தனது மந்தைகளுக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த அமலமரித் தியாகிகளின் ஆரம்ப மிஷனறி குரு ஆவார். அவரைத் தொடர்ந்து இன்னும் சில குருக்கள் கொலரா, கொள்ளை நோய் மற்றும் அம்மை நோயினால் இறந்துள்ளனர். இவர்கள் கடவுளின் மகிமைக்காகவும் ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்காகவும் மனிதநேயமிக்க பணியினை ஆற்றியுள்ளனர். இவர்கள் உண்மையிலேயே பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

## யாழ்ப்பாண மருத்துவமனையின் ஆரம்ப உருவாக்கக் காலம்.

ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாண மருத்துவமனை ஆபத்துக்கு உதவும் மருத்துவமனை, அதாவது **(The Friend in Need Society Hospital)** என்ற பெயரிலேயே 1850ம் ஆண்டு வட மாநிலத்திற்குப் பொறுப்பாக இருந்த அரசாங்க அதிபர் **பேர்சிவல் அக்லண்ட் டைக் (Percival Acland Dyke)** என்பவரினால் **மருத்துவர் கிறீன் (Dr. Green)** என்பவரின் உதவியுடனும் மற்றும் யாழ்ப்பாண ஆபத்துக்கு உதவும் நண்பர் ஒன்றியத்தின் ஒத்துழைப்புடனும் ஆரம்பிக்கப்பட்டது. இது முழுமையாக மருத்துவர் கிறீனுடைய மருத்துவப் பாடசாலையின் பட்டதாரிகளினாலான தன்னார்வப் பணியாளர்களால் 1907 வரை செயற்படுத்தப்பட்டது. இதனுடைய முகாமைத்துவம் ஆபத்துக்கு உதவும் நண்பர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்டது. அதன் பின்பு இம் மருத்துவமனை அரசாங்கத்தின் சுதேச மருத்துவத் திணைக்களத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. பின்னர் இம்மருத்துவமனைக்கு யாழ்ப்பாணம் சுதேச மருத்துவமனை எனப் பெயரிடப்பட்டது. 1950ம் ஆண்டளவில் இம் மருத்துவமனை அபிவிருத்தியுடன் கூடிய கட்டடமாக நிர்மாணிக்கப்பட்டதுடன் பொது மருத்துவமனை யாக தரமுயர்த்தப்பட்டது. பின்னர் 1980களில் யாழ்ப்பாண மருத்துவ வளாகம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். போதனா மருத்துவமனையாக தரமுயர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க மிஷனறி திருச்சிலுவை கன்னியர்களின் மருத்துவமனைப் பங்களிப்பு

## ஊர்காவற்துறை ஆதார மருத்துவமனையில் திருச்சிலுவை தாதிய அருட்சகோதரிகளின் மருத்துவப் பங்களிப்பு

1924ம் ஆண்டு அதி வணக்கத்திற்குரிய **யாழ் ஆயர் யோண் அல்பிறட் கியோமர் அ.ம.தி** ஆண்டகை அவர்கள் தென் இந்தியாவிற்குச் சென்றபோது அங்கு திருச்சிலுவை அருட்சகோதரிகளின் தன்னலமற்ற அர்ப்பணிப்புள்ள மருத்துவ சேவையினைக் கண்டு மிகவும் உந்தப்பட்டார். தன் மக்களின் தேவையினை ஒரு ஆயனால் தான் உணர முடியும் என்பதற்கு ஏற்ப இத்தகைய மருத்துவ சேவை யாழ் பகுதி மக்களுக்கும் அத்தியாவசியமானது என்பதனை உணர்ந்தவராக அதற்காக அன்றைய அரசிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். ஆனால், அதை செவிசாய்க்காத அரசு காலப்போக்கில் ஆயரின் அயராத விடாமுயற்சியின் விளைவாக ஆறு ஆண்டுகளின்பின் பயிற்சி பெற்ற அருட்சகோதரிகள் யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை ஆதார மருத்துவமனையில் பணிபுரியலாம் என்று அனுமதி அளித்தது. இதனடிப் படையில் ஆயரின் அழைப்பை ஏற்று தென் இந்தியாவில் இருந்து மூன்று திருச்சிலுவை அருட்சகோதரிகளான **பெனடிற்ரா ஸ்ரொக்கர் (Sr. Benedikta Stocker ),ஒத்மா குறுன்ரர் (Sr. Othmar Gruter ), மரியா கரோலா (Sr. Maria Carola )** ஆகியோர் 1930ம் ஆண்டில் முதன் முதலாக ஊர்காவற்துறை ஆதார மருத்துவமனைக்கு பணிபுரிவதற்காக அழைக்கப்பட்டாரகள். இவர்கள் 27ம் திகதி ஆடி மாதம் 1930ம் ஆண்டு தங்களுடைய மருத்துவப் பணியினை ஆரம்பித்தார்கள். இவர்கள் தங்கி நின்று பணி செய்வதற்கு மருத்துவமனைக்கு அருகாமையில் சிறிய இல்லம் அமைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் திருச்சிலுவை அருட்சகோதரிகளின் வருகையினை சந்தேகக் கண்கொண்டு மதம் மாற்ற வந்தவர்கள் எனப் பலர் எதிர்த்தனர். ஆயினும், இவர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பு நிறைந்த மருத்துவ சேவையினைக் கண்டு மக்கள் வியந்து பெரும் மகிழ்ச்சியடைந்தனர். காலப்போக்கில் இவர்களின் சேவையினை மிகவும் பாராட்டினார்கள். இம் மருத்துவமனையில் 32 ஆண்டுகளாக ஐந்து அருட்சகோதரிகள் பணிபுரிந்துள்ளார்கள். இதில் **மரியா கரோலா** என்னும் அருட்சகோதரி 1931ம் ஆண்டு மார்கழி மாதம் 12ம் திகதி இறந்து ஊர்காவற்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டார். இவர்கள் கடவுளுடைய பணிக்காக தம்மையே முற்றுமுழுதாக அர்ப்பணித்தவர்கள். தங்களுடைய இனம், சுற்றத்தார் உறவுகளை மறந்து, நாடு ,மதம், மொழி, போன்ற வேறுபாடுகளைக் களைந்து தாம் பெற்ற துறவற அழைத்தல் வாழ்வில் தமது மருத்துவப் பணியின் ஊடாக இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்த உத்தமிகள். இவர்கள் போற்றுதலுக்குரிய வர்கள். இவர்களது பணியே இவர்களின் துறவற வாழ்விற்கு சாட்சியாக அமைகின்றது.


## 1938ம் ஆண்டு யாழ் அரசாங்க பொது மருத்துவமனையில் மிஷனறியாக பணி செய்த திருச்சிலுவை கன்னியர் சபை அருட்சகோதரிகள்

திருச்சிலுவை கன்னியர் சபை அருட்சகோதரிகள் ஊர்காவற்துறை ஆதார மருத்துவமனையில் சேவையாற்ற ஆரம்பித்த காலத்திலிருந்தே யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சிலுவை மிஷனறி கன்னியர்களின் யாழ். போதனா மருத்துவப் பணி (1938 – 1963)



The Sisters' Quarters, Jaffna Hospital



Recreation Hall Jaffna Hospital




Sr. Tharzilla in the Operation Theatre

## யாழ் அரசினர் பொது மருத்துவமனை தாதியக் கல்லூரியின் ஆரம்பம் (1960)



Sr. M. Aloisia Röösli
Pioneer Sister



Sr. Bernharda Rohrer
with Mrs. N . Vallipuram
(The Principal of Nursing School)



Sr. Margaret Mary
1st Batch of Nursing Student




Sr. Bernharda

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா மருத்துவமனையில் பணியாற்றிய மிஷனறி துறவிகள்



**Rev. Fr. Julien Brohan OMI (1894-1977)**

1938ம் ஆண்டு கிறிஸ்மஸ் திருப்பலியை நிறைவேற்றிய ஆன்மகுரு அருட்பணி யூலியன் புறோஹான் அ.ம.தி




**Rev. Sr. Aloisia Röösli H.C**

அருட்சகோதரி அலோசியா 1955ம் ஆண்டு மருத்துவமனையின் பிரதம தாதியாக பொறுப்பேற்றார்

## திருச்சிலுவைக் கன்னியர்மடத்தில் பாதுகாக்கப்படுகின்ற வரலாற்றுப் படங்கள்



மிஷனறி அருட்சகோதரிகளினால் வணங்கப்பட்ட மரியன்னையினுடைய திருச்சுரூபம்



யாழ். போதனா மருத்துவமனையில் மிஷனறியாகப் பணிசெய்து பிரியாவிடையின் போது எடுக்கப்பட்ட குழுப்புகைப்படம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் இவ் அருட்சகோதரிகளை யாழ் அரசாங்க மருத்துவமனையிலும் பணியாற்ற வேண்டுமென்று வேண்டிக்கொண்டிருந்தார்கள். எனவே எட்டு ஆண்டுகளின் பின் எதிர்பாராத விதத்தில் ஒரு சாத்தியமான நிலை உண்டாகியது. தாதிய பயிற்சியும் நல் அனுபவங்களும் நிறைந்த ஏழு அருட்சகோதரிகள் ( **Sr. Aloisia, Sr. Aurelia, Sr. Anthony, Sr. Gabriel, Sr. Bernadette, Sr. Helen and Sr. Emmanuel )** 1938 ஆவணி 10 இல் மருத்துவமனையின் வேலைத்திட்டத்தினை பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். இவ் வேண்டுகோளுக்கு ஏற்ப ஏழு அருட்சகோதரிகளும் மருத்துவமனையில் தமக்குப் பணிக்கப்பட்ட வேலைத்திட்டப் பொறுப்புக்களை ஏற்கச் சென்ற வேளையில் அவர்களை மருத்துவர் விக்கிரமசிங்க அவர்களும் அவருடைய குழுவினரும் அன்புடன் வரவேற்றார்கள். அதேவேளை, அருட்சகோதரிகளிடம் உள்ள சான்றிதழ்கள் சத்திரசிகிச்சைக் கூடத்தையும், மகப்பேற்று விடுதியையும் பொறுப்பேற்கத் தகைமையானதா என ஆராய்ந்தார்கள். ஒவ்வொரு அருட்சகோதரிக்கும் ஒன்று அல்லது இரண்டு விடுதிகள் பொறுப்பாகக் கொடுக்கப்பட்டன. அதேவேளை அருட் சகோதரி அலோசியா அவர்களுக்கு மருத்துவமனையின் முழு நிர்வாகப் பொறுப்பும் அளிக்கப்பட்டது. ஆனால், அருட்சகோதரிகளுக்கு மக்களுடன் உரையாடுவதற்கு அவர்களின் மொழி சற்றுப் பிரச்சினையாக இருந்தது. இதேவேளை, அருட்சகோதரி அன்ரனி அவர்களுக்கு சிறிதளவு தமிழ்மொழி அனுபவம் இருந்தமையால் மருத்துவ மனை இரவு சேவையினை ஆரம்பித்தார். அருட்சகோதரிகளுக்குரிய திருப்பலிகள் அனைத்தும் அவர்கள் தங்கியிருந்த விடுதியில் அதற்கென ஒழுங்குபடுத்தப்பட்ட அறை ஒன்றிலே இடம்பெற்றது. 1938ம் ஆண்டில் அருட்சகோதரிக்களுக்கான மூன்று கிறிஸ்மஸ் திருப்பலிகளையும் அருட்பணி யூலியன் புறோஹன், அ.ம.தி அவர்கள் மருத்துவமனையில் நிறைவேற்றினார்.

1939ம் ஆண்டு பங்குனி 25ம் திகதி மருத்துவமனையின் அழைப்பை ஏற்று மேலதிகமாக இரு அருட்சகோதரிகளான **Sr. Bernharda Rohrer and Philomena Bastiampillai** ஆகியோர் அனுப்பிவைக்கப்பட்டார்கள். அன்றைய தினமே இதய சிகிச்சைப் பிரிவினை அருட்சகோதரி ஜோண் பொறுப்பேற்றார். 1941ம் ஆண்டு இன்னும் மேலதிக மாக இரு அருட்சகோதரிகள் **(Hidegard Heimburger and Theodose Chambers)** அனுப்பி வைக்கப்பட்டார்கள். 1955-01-01 அன்று அருட்சகோதரி அலோசியா அவர்கள் மருத்துவமனையின் பிரதம தாதியாகப் பொறுப்பேற்றார்.

தொடர்ச்சியாக யாழ் அரசாங்க மருத்துவமனையில் பணியாற்றும் திருச் சிலுவை அருட்சகோதரிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆரம்பத்தில் ஏழு அருட் சகோதரிகளுடன் ஆரம்பித்த மருத்துவமனைப் பணியினை 1951ம் ஆண்டு தை மாதம் வரை 19 அருட்சகோதரிகளும், 1961ம் ஆண்டு பங்குனி வரை 18 அருட்.சகோதரிகளும், 1963ம் ஆண்டு பங்குனி வரை 8 அருட்சகோதரிகளும், அதே ஆண்டு ஐப்பசி வரை 2 அருட்சகோதரிகளும் 25 வருடங்களாக யாழ் அரசாங்க மருத்துவமனைக்கு தங்களது சேவையை வழங்கியுள்ளார்கள். மிஷனறியாகப் பணி செய்த திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரிகளால் போற்றி வணங்கப்பட்ட புனித மரியன்னையின் தெய்வீக திருச்சுரூபமும் அவர்கள் யாழ் அரசாங்க பொது மருத்துவமனையில் மிஷனறியாக பணிசெய்தபோது பிரியாவிடையின்போது எடுக்கப்பட்ட குழுப் புகைப்படமும் கடற்கரை வீதியில் உள்ள திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரிகளின் மடத்திலே இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. கத்தோலிக்க திருச்சபைச் சமூகத்தினால் யாழ் போதனா மருத்துவமனைக்குச் செய்யப்பட்ட இவ் அளப்பரிய, உன்னத மகத்துவ மிக்க சேவையானது மனநிறைவைத் தருகின்ற ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண அரசாங்க மருத்துவமனையில் 1960 இல் ஸ்தாபிக்கப்பட்ட முதல் தாதிய பயிற்சிப் பாடசாலை

அக்காலத்தில் இலங்கைத் திருநாட்டில் வெவ்வேறு பகுதிகளில் 9 தாதிய பயிற்சிப் பாடசாலைகள் இருந்தன. அதில் ஒன்றுகூட நாட்டின் வட பகுதியில் இல்லாமை ஒரு குறையாகக் காணப்பட்டது. ஆரம்பத்தில் இருந்த **அன்னை அலோசியா** அவர்கள் மருத்துவமனையின் பிரதம தாதியாக இருந்தவேளை இளம் பெண்களுக்கு அவசர நிலை தாதியப் பயிற்சியினை அளித்து உருவாக்கியிருந்தார். இவ்வாறு உருவாக்கப்பட்ட தாதியர்கள் 17 பேர் தமக்குரிய நியமனத்தினை 1953ம் ஆண்டு பெற்று இம் மருத்துவமனையிலேயே பணியாற்றுவதற்கும் தொடர்ந்து தமது பயிற்சியினைப் பெறுவதற்குமான நியமனத்தினையும் பெற்றனர். யாழ்ப்பாண அரசாங்க மருத்துவமனை நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் இரண்டாவது மிகப் பெரிய மருத்துவமனையாக வளர்ச்சியடைந்தது. எனவே தாதியப் பயிற்சிப் பாடசாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக அதனை அமைப்பதற்குரிய முயற்சிகளை முன்னெடுத்தார்கள். இதனை அமைப்பதற்கு திருச்சிலுவை அருட்சகோதரிகள் தங்களின் வேலைப்பளுவின் மத்தியிலும் ஆற்றல், திறமை மற்றும் நேரத்தைச் செலவழித்து முழு முனைப்புடன் செயற்பட்டார்கள். **திருமதி நவமலர் வல்லிபுரம்** தனது தாதியப் பயிற்சியின் கலைமாணி பட்டப்படிப்பை வேலூர் இந்தியாவிலும் மற்றும் முதுமாணி பட்டப்படிப்பை அமெரிக்காவிலும் முடித்துவிட்டு நாடு திரும்பியிருந்தார். இதனை சாதகமாகப் பயன்படுத்தியதால் 1960ம் ஆண்டு **அருட்சகோதரி பேன்ஹடா** மருத்துவமனையின் தலைமைத் தாதியராக இருந்தபோது திருமதி நவமலர் வல்லிபுரம் போதனாசிரியராக முதன் முதல் தாதிய கல்லூரி அதிபராக பணியேற்றார். அப்போது மூன்று வருட தாதிய டிப்ளோமா பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. தமது இளம் அருட்சகோதரிகளையும் தாதியர் பயிற்சிக்கு அனுப்பலாம் என்ற நம்பிக்கை அன்னைக்கு ஏற்பட்டது. ஆனால் அரசாங்க செயற்திட்டத்தின்படி ஒரேயொரு அருட்சகோதரி மட்டுமே முதல் தாதிய பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவருடைய பெயர் **மாக்கிறட் மேரி**. ஆயினும் அவருக்குரிய வகுப்புக் கட்டணத்தை அருட்சகோதரிகளே செலுத்த வேண்டியதாக அமைந்தது. மற்றைய தாதிய மாணவர்களுக்கு அரசினால் கொடுப்பனவு வழங்கப்பட்டது. இது பெரும் ஏமாற்றமாகவே அமைந்தது. சில வருடங்களின் பின்பு யாழ். தாதிய கல்லூரியில் கல்வி பயின்று தாதியாக வெளியேறி பின்பு கன்னியர் மடத்தில் இணைந்த **அருட்சகோதரியான எமிறேற்றா** இவர்களுடைய பணியின் அறுவடை என்றே கூறலாம்.

இக் காலப்பகுதியில் இலங்கையில் ஏறத்தாழ 600 இற்கும் மேற்பட்ட கத்தோலிக்க பாடசாலைகள் அரசாங்க மயமாக்கப்பட்டதன் காரணமாக மருத்துவமனைகளில் மிசனறியாகப் பணிபுரியும் அனைத்து அருட்சகோதரிகளையும் மருத்துவமனையில் இருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டது. இலங்கையில் உள்ள மருத்துவமனைகளில் ஏழு துறவற சபையைச் சார்ந்த அருட்சகோதரிகள் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய 1963ம் ஆண்டு ஐப்பசி வரை யாழ் போதனா மருத்துவமனையில் பணிபுரிந்த அருட்சகோதரிகள் வெளியேறினர். நீண்ட இடைவெளியின் பின்பு திருச்சிலுவை சபை **அருட்சகோதரி விக்ரறின் ஜேம்ஸ்** தாதிய போதனாசிரியராக தாதியக் கல்லூரியில் 1988ம் ஆண்டு ஐப்பசியில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மருத்துவமனைகளில் பணி செய்த தாதிய அருட்சகோதரிகளை வெளியேறுமாறு சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை

COLOMBO, SATURDAY EVENING, JUNE 22nd, 1963

Directive to Archbishop sets March 15th, 1964, as deadline

## NURSING NUNS MUST GO

### Order applies to Ceylonese, too

THE Director of Health Services has informed the Archbishop of Colombo that all nursing nuns in government hospitals will have to quit by March 15th, 1964.

Their services will be terminated in the following orders:—

Sisters of the Holy Family at the District Hospital, Nawalapitiya. — June 1st, 1963

Sisters of Our Lady of Good Hope at the Chest Hospital, Ragama.—June 1st, 1963.

Sisters of the Order of the Holy Cross at Kayts Hospital and the General Hospital Jaffna.—October 1st, 1963.

Sisters of the Order of Divine Providence at the Chest Hospital, Welisara.—October 1st 1963.

Franciscan Sisters of Mary at leprosy hospitals at Mannar, Mullaitivu and Hendala.—January 1st, 1964.

Franciscan Sisters of Mary at the General Hospital, Colombo [illegible] 15th, 1964.

The directive that religious Nursing Sisters should leave government hospitals includes Ceylonese.


## இலங்கை மருத்துவமனையில் பணி செய்த ஏழு துறவற சபையினரின் விபரம்

| | | |
|---|---|---|
| 1. Franciscan Missionaries of Mary From | - | 1886 |
| 2. Holy Family Sister | - | 1892 |
| 3. Perpetual Succour Sisters | - | 1929 |
| 4. Holy Cross Sisters | - | 1930 |
| 5. Divine Providence Sisters | - | 1948 |
| 6. Maryknoll Sisters | - | 1949 |
| 7. Salvatorian Sisters | - | 1954 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையின் தாதிய கல்லூரியில்



அருட்சகோதரி விக்றறின் ஜேம்ஸ்
தாதிய போதனாசிரியர்
(1988 – 1993)



திருமதி. தேவமலர் அருளானந்தம்
தாதியர் கல்லூரியின் முதல்
கத்தோலிக்க அதிபர்
(2005 – 2010)



திரு. அருள்ஞானரட்ணம்
தற்போதைய சிரேஷ்ட
தாதிய போதனாசிரியர்



செல்வி பத்மநாதன் வினுஷியா
உடல் அமைப்பியலும் தொழிலியலும்
எனும் பாடத்தில் அகில இலங்கையில்
முதல் இடம்



தாதிய மாணவர்களின் விசேட பரீட்சை இறையாசீரின் போது



கத்தோலிக்க ஆன்ம குழுமத்தின் கரோல் நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993ம் ஆண்டு மார்கழி வரை ஏறக்குறைய ஐந்து வருடங்கள் பணியாற்றியுள்ளார். **திருமதி. தேவமலர் அருளானந்தம்** 2005-2010 வரை யாழ்ப்பாண தாதிய கல்லூரியில் முதல் கத்தோலிக்க தாதியக் கல்லூரி அதிபராக பணியாற்றியுள்ளார். தற்போது **திரு. அருள் ஞானரட்ணம்** சிரேஷ்ட தாதிய போதனாசிரியராக பணியாற்றுகின்றார். 2015ம் ஆண்டிலிருந்து இலங்கை கடற்படை தாதிய மாணவர்களும் சகோதர மொழி பேசும் சிங்கள மாணவர்களும் இக் கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றார்கள். இதில் கத்தோலிக்க தாதிய மாணவர்களும் உள்ளனர். ஒவ்வொரு வருடமும் தாதிய மாணவர்கள் தங்களுடைய பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை அடைந்து வருகின்றார்கள். குறிப்பாக என்னுடைய பணிக்காலத்தில் 2019ம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் யாழ்ப்பாண தாதிய மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் முதல் ஆறு இடங்களையும் பெற்றுக்கொண்டனர். 26 பேர் merit passல் சித்தியடைந்துள்ளனர். 2019ம் ஆண்டு முதலாம் ஆண்டு தாதிய மாணவ பரீட்சையில் கத்தோலிக்க தாதிய மாணவி **செல்வி பத்மநாதன் வினுஷியா** உடல் அமைப்பியலும் தொழிலியலும் (Anatomy and Physiology) என்னும் பாடத்தில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தை பெற்றுக்கொண்டமை வரலாற்றில் பதிவிடக்கூடிய விடயமாக இருக்கின்றது. இது எமது தாதிய கல்லூரிக்கு மட்டுமல்ல எமது மண்ணுக்கும் பெருமை சேர்க்கின்றது. இந்தப் பெருமை கிடைப்பதற்கு தாதியக் கல்லூரி அதிபர் மற்றும் தாதிய போதனாசிரியர்களின் வழிநடத்துதலும் நெறிப்படுத்தலுமே காரணமாக அமைகின்றது. இவர்களுக்கு எமது சிறப்பான வாழ்த்துக்கள்.

இன்றுவரை தாதிய கல்லூரி அதிபர் மற்றும் போதனாசிரியர்களுடைய ஒத்துழைப்புடன் கத்தோலிக்க தாதிய மாணவர்கள் தங்களுடைய மருத்துவமனை சிற்றாலய கடமைப் பொறுப்புக்களை நேர்த்தியான முறையில் செய்து வருகின்றார்கள். அவர்களுக்குரிய ஆன்மீக, சமூக, உள கருத்தமர்வுகளும் வழங்கப்படுகின்றன. விசேடமாக சிறப்புப் பூசைகளிலும், ஆராதனைகளிலும் இன, மத, மொழி பேதமின்றி அனைத்து மாணவர்களும் பங்குபற்றுகின்றார்கள். சிற்றாலய திருவிழா மற்றும் கிறிஸ்மஸ் கரோல் விடுதி தரிசிப்பு நிகழ்வுகளிலும் இவர்களுடைய பங்களிப்பு அளப்பரியது. ஒவ்வொரு வருடமும் தாதிய கல்லூரி கிறிஸ்மஸ் நிகழ்வுகள் சிறப்பான முறையில் நடைபெறுகின்றது. இது அனைத்து மதங்களுக்கிடையிலான நல்லுறவையும் இனங்களுக்கிடையிலான சமூக ஒற்றுமையுணர்வையும் மற்றும் மனித நேயத்தையும் படிப்பினையாகப் போதிக்கின்றது. இதற்காகவே இவர்கள் இப்பணியினை மனமுவந்து தேர்ந்தெடுத்தார்கள். இப்பணிக்கு தங்களை முற்றும் முழுதாக அர்ப்பணித்தார்கள். ஒவ்வொரு வருடமும் தாதியப் பயிற்சிக்காக வரும் கத்தோலிக்க மாணவர்களுடைய அளவு தாதியக் கல்லூரியில் குறைவானதாகவே உள்ளது. **இதை யாழில் உள்ள கத்தோலிக்க திருஅவையும் பாடசாலைகளும் கருத்திற்கொண்டு இத்துறையினை ஊக்கப்படுத்துமா?** என்பதை கத்தோலிக்க சமூகத்தின் பார்வைக் கண்ணோட்டத்தில் ஒரு தேடலாகவும் பாரியதொரு கேள்வியாகவும் விட்டுவிடுகின்றேன்.

## யாழ் புனித மரியன்னை பேராலய, யாழ் புனித அடைக்கல அன்னை பங்குத்தந்தையர்களின் பகுதி நேர மருத்துவமனை ஆன்ம பணி

ஆரம்பத்தில் இருந்தே யாழ் போதனா மருத்துவமனை ஆன்ம பணியினை யாழ் மரியன்னை பேராலய உதவிப் பங்குத்தந்தையர்கள் செய்து வந்தார்கள். இதனடிப்படையில் மறைமாவட்டக் குருக்களுடன் இணைந்து அமலமரித் தியாகிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைக் குருக்களும் தமது பணியினை ஆற்றியுள்ளனர். ஏறக்குறைய 30இற்கு மேற்பட்ட குருக்கள் பணிசெய்துள்ளார்கள் என்பதை யாழ் மரியன்னை பேராலய பங்குத்தந்தையர்களின் வரலாற்று ஏடு குறிப்பிடுகின்றது. பின்னர் இப்பணியானது 1972ம் ஆண்டு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் உதவிக் குருவாக பணிபுரிந்த மறை மாவட்டக் குரு ரி. தேவதாசன் அடிகளாருக்கு வழங்கப்பட்டது. இவருக்கு உதவியாக திருக்குடும்பக் கன்னியர் சபை அருட்சகோதரிகளான கிறிஸ்ரபெல், மற்றும் கார்மேல் மேரி ஆகியோர் பணிபுரிந்துள்ளார்கள். 1973ம் ஆண்டில்தான் மருத்துவமனையின் சிற்றாலயம் புனித யூதாததேயுவின் பெயரிலே அமைக்கப்பட்டது. ஆலயத்தைக் கண்காணிக்கும் பொறுப்பும் திருப்பண்டக் காப்பகப் பொறுப்பும் மருத்துவமனையில் ஆண் தாதிய உத்தியோகத்தராகப் பணிபுரிந்த திரு. பேதுருப்பிள்ளை எட்வேட் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதை அவர் மனமுவந்து தாமாகவே முன்வந்து ஏற்றுக்கொண்டார். ஆலய கட்டுமானப் பணிகளில் இவரின் பங்களிப்பு மறக்க முடியாதது. ஏறக்குறைய 25 ஆண்டுகளாக இவர் இப் பணியினை ஆற்றியுள்ளார். 1976ம் ஆண்டு இச்சிற்றாலயம் பலரின் வேண்டுகோளிற்கு இணங்க ஆயரின் அனுமதியுடன் புனித வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் பெயரிற்கு மாற்றப்பட்டது. தேவதாசன் அடிகளாரைத் தொடர்ந்து கிறிஸ்ரியன் வாஸ், மங்களராஜா, குணசீலன் போன்ற குருக்கள் மருத்துவமனை ஆன்ம பணியினை பகுதி நேரமாக ஆற்றியுள்ளனர். பின்னர் 1979ம் ஆண்டில் இருந்து இப் பணியானது அமலமரித் தியாகிகள் சபை குருக்களிடம் முழுநேரப் பணியாகக் கையளிக்கப்பட்டது. **அருட்பணி பிரான்சிஸ் டானியேல் அமதி** முதன்முதலாக பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவர் மருத்துவமனை ஆன்ம பணியினையும் அத்துடன் சிறைச்சாலைப் பணியினையும் ஆற்றியுள்ளார். தொடர்ந்து இவர்களுக்கு உதவியாக திருக்குடும்பக் கன்னியர் சபை அருட்சகோதரிகள் தொடக்கத்தில் இருந்து இன்றுவரை பணிபுரிந்து வருகின்றார்கள். இடைக்காலத்தில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினைச் சார்ந்த அருட்சகோதரிகளும் பணிபுரிந்துள்ளார்கள். 2015ம் ஆண்டிலிருந்து சலேசியன் சபையினைத் சேர்ந்த அருட்சகோதரிகளும் பணிபுரிகின்றார்கள்.

## 1985 இற்குப் பிற்பட்ட காலப்பகுதி

முப்பது வருட ஈழப்போரின் காரணமாகப் பலவிதமான வடுக்களையும் துன்பங்களையும் தாண்டி மனிதநேயமிக்க அர்ப்பணம் நிறைந்த சேவையினால் பல மனித உயிர்களை காப்பாற்றிய பெருமையினை இம்மருத்துவமனை தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பாக 1987ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21ம், 22ம் திகதிகளில் மருத்துவமனையில் பணி செய்துகொண்டிருக்கும்போது இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மருத்துவர்கள், தாதியர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்களை நினைவுகூருகின்றோம். இவர்களுடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒவ்வொரு வருடமும் ஐப்பசி 21ம் திகதி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. இவ் அசம்பாவித நிகழ்வில் மருத்துவமனையில் உள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் திருப்பண்ட அறையினில் தஞ்சம்கோரி தங்களுடைய உயிர்கள் காப்பாற்றப்பட்டதை எண்ணி, தங்கள் அனுபவங்களையும் கூறி, இறை பராமரிப்புக்காக நன்றி கூறிய நல்லுள்ளங்களையும் நன்கு அறிவேன்.

1990ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ் கோட்டைப் பிரச்சினை காரணமாக யாழ் போதனா மருத்துவமனை இடம்பெயர்ந்து மானிப்பாயில் இயங்கியது. கோட்டை 1991ம் ஆண்டு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்ததன் பின்னர் திரும்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா மருத்துவமனை வரலாற்றுப் பதிவுகள்



1987ம் ஆண்டு ஒக்டோபர் 21,22ம் திகதிகளில் இந்திய அமைதிப்படையினரால்
கடமையின்போது படுகொலை செய்யப்பட்டவர்கள்



அருட்பணி. ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி
(1943 – 1993)



மருத்துவர். அ. எ. ஞானஜோதி
(யாழ். போதனா மருத்துவமனையின்
முதல் கத்தோலிக்க பணிப்பாளர்)
(2006 – 2009)




அருட்பணி. செபமாலை அன்புராசா அ.ம.தி
அடிகளாரினால் பணிக்காலத்தில்
வெளியிடப்பட்ட மருத்துவமனையின்
நிலைமை பற்றிய நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த இடத்திற்கே வந்தது. இக்காலத்தில் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆனையிறவு ஆகாய கடல் வெளிச்சமர் தாக்குதலில் விழுப்புண் அடைந்த போராளிகளையும் சரமாரியான ஷெல் வீச்சினால் காயமுற்ற பொது மக்களையும் மருத்துவ உபகரண பற்றாக்குறை நிரம்பிய காலத்திலும் நல்ல முறையிலே அன்போடும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் பாதுகாத்த பெருமை மருத்துவமனை சமூகத்தையே சாரும். இக் காலப்பகுதியில் **"பாலம்"** என்ற அமைப்பின் ஊடாக **அருட்பணி ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி** அவர்கள் ஆற்றிய பணி சிறப்பானதாகும். போர்க்கால சூழ்நிலைகளில் பிறிதொரு மாவட்டத்தில் இருந்து யாழ் போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்களுடைய உறவினர்கள் தங்கி நின்று தமது உறவுகளுக்கு மருத்துவ பராமரிப்பை மேற்கொள்வதற்கு அடைக்கலம் கொடுக்கும் இடத்தை இவ்விடத்தில் அவர் அமைத்தார். ஆனால் இவருடைய பணி அக்காலத்தில் திருச்சபையினாலும் அமதிகள் சபையினாலும் அடையாளப் படுத்தப்படாமை வருத்தத்திற்குரிய விடயமாகும். ஆனாலும், என்னைப் பொறுத்த வரை காலத்தின் தேவையினை உணர்ந்து இவரும் மருத்துவமனை ஆன்ம பணியினையே செய்திருந்தார்.

**அருட்பணி எட்மன் றெஜினோல்ட் அமதி**, காலத்தில் அயல் பங்குகளில் உள்ள மரியாயின் சேனை மற்றும் வின்சன்டி போல் பக்தி சபைகளைச் சார்ந்த ஆன்ம நலன் பேணும் பணியாளர்களை ஒன்று திரட்டி நோயாளர் விடுதிகளைத் தரிசித்து அவர்களுக்குத் தேவையான ஆன்மீகப் பணிகளை முன்னெடுத்து வந்தார். இவருடைய காலத்தில்தான் நோயாளர் விபரப் பெட்டி சிற்றாலயத்தில் அமைக்கப்பட்டது. 1994ஆம் ஆண்டு **அருட்பணி ஜேக்கப் யோகராஜா அமதி** மருத்துவமனைப் பணியாளர்களுக்கான கத்தோலிக்க ஆன்ம குழுமத்தையும் ஆன்ம நலன்பேணும் தன்னார்வப் பணியாளர்களையும் ஊக்குவித்ததோடு, அவர்களது ஆன்மீக நலன்களையும் செயற்படுத்தினார். இக்காலத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வழிபாடுகளையும், பாடல்களையும் கிறிஸ்து பிறப்புக் காலத்தில் கரோல் கீதங்கள், நடனங்கள், தெரு நாடகங்கள், சமூக விழிப்புணர்வு சம்பந்தமான செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்தனர்.

1995ம் ஆண்டு ஐப்பசி 30ம் திகதி இடம்பெற்ற மாபெரும் இடப்பெயர்வின்போது இம் மருத்துவமனையும் மக்களின் தேவை கருதி சாவகச்சேரிக்கு இடம்பெயர்ந்தது. பின்னர் இலங்கை இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். பிற்பாடு காலப்போக்கில் சாவகச்சேரியையும் கைப்பற்றினர். பின்னர் இம் மருத்துவமனை மந்திகைக்கு இடம்பெயர்ந்தது. இவ்வேளை மீளவந்து குடியேறிய யாழ் மக்களோடு மருத்துவமனையும் 1996ம் ஆண்டு சித்திரை மாதம் 27ந் திகதி திரும்பவும் யாழ் நகருக்கே வந்தது. இக்காலப் பகுதியில் **மருத்துவர் ஏபிரகாம்** மற்றும் தாதிய உத்தியோகத்தரான **திரு.ஜேக்கப்** ஆகியோர் பணி செய்துள்ளார்கள். ஆனாலும் போர்க்கால சூழ்நிலை தொடர்ந்தமையினால் ஒரு மந்தமான வளர்ச்சியே காணப்பட்டது. இக் காலப்பகுதியில் ஆலயத்தைக் கண்காணிக்கும் பொறுப்பும் திருப்பண்டக் காப்பகப் பொறுப்பும் திருமதி புவேந்திரன் (உடையார்) தாதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதை அவர் ஓய்வுபெறும் வரை சிறப்பாகச் செய்தார்.

2000 ஆண்டளவில் **அருட்பணி செபமாலை அன்புராசா** காலத்தில் ஆலயமும் ஆலயத்தினுடைய மேல் மண்டபமும் போர்காலச் சூழ்நிலையிலும் அப்போதைய மாகாண முதல்வராக இருந்த அருட்பணி ஜீவாபோல் தலைமையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் பிரான்ஸில் உள்ள தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியக இயக்குநர் அருட்பணி மரிய செபஸ்ரியன் அமதி அவர்களின் உதவியினூடாக அமைக்கப்பட்டது. 2002ம் ஆண்டுக் காலப்பகுதியில் மருத்துவமனை ஆன்மீகக் குருவாக இருந்த **அருட்பணி செபமாலை அன்புராசா** அடிகளாரினால் மருத்துவமனை சம்பந்தமான **"காலத்தின் பதிவுகள்"** என்ற நூல் வெளியிடப்பட்டது.

2004ம் ஆண்டு மார்கழி 26ம் திகதி சுனாமி எனும் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவமனையினால் ஆற்றப்பட்ட சேவையினை யாரும் மறக்க முடியாது. இக்காலப்பகுதியில் அவசர தேவையினை உணர்ந்து குருமடத்தில் கல்வி கற்ற அருட்சகோதரர்களை ஒன்றிணைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள, சமூக, ஆன்மீகப் பணிகளை இடைத்தங்கல் முகாமிலும் மருத்துவமனையிலும் சிறப்பாகச் செய்தார்கள். மருத்துவர் **அ. எ. ஞானஜோதி** அவர்கள் யாழ் போதனா மருத்துவமனையின் முதல் கத்தோலிக்கப் பணிப்பாளராக 2006 இலிருந்து 2009 வரை பணிபுரிந்துள்ளார். பின்னர் வடமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளராகவும் தேசிய சுகாதார அமைச்சின் கீழ் தனிமைப்படுத்தல் மையத்தின் பணிப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார். நாட்டின் போர்க்கால சூழ்நிலை உச்சக் கட்டத்தில் இருந்தமையினால் மருத்துவமனையில் பெரியளவில் அபிவிருத்தி இடம்பெறவில்லை.

## நவீன யுகத்தில் வளர்ச்சியை நோக்கி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை

மூன்றாம் கட்ட ஈழப் போர் 2009 ம் ஆண்டு முடிவிற்குக் கொண்டு வரப்பட்டதன் பின்பு மருத்துவமனையின் வளர்ச்சி ஒரு சீரான வேகத்தில் சென்றது. 2010ம் ஆண்டு **அருட்பணி யோண் பற்றிக்** அவர்களின் காலத்தில் கிறிஸ்து பிறப்புக் காலங்களில் பாடசாலை மாணவர்களிடமிருந்தும் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்கப் பங்குத் தளங்களில் உள்ள இறை மக்களிடம் இருந்தும் பெற்றுக் கொள்ளப்படுகின்ற பொருட்கள் மற்றும் பணத்தில் இருந்து நோயாளர் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறுவோர் அனைவருக்கும் கிறிஸ்மஸ் கரோல் கீதங்கள் பாடி அன்பளிப்புப் பொருட்களை வழங்குவது ஆரம்பிக்கப்பட்டது. அதை இன்றுவரை தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றோம். முதல் மூன்று நாட்களும் யாழ் போதனா மருத்துவமனையிலும் இறுதி நாள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலும் எம்முடைய கரோல் நிகழ்வுகள் இடம்பெறுகின்றது. 2018ம் ஆண்டிலிருந்து எமது அன்பளிப்புப் பொருட்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் உள்ள நோயாளருக்கும், கைதடி முதியோர் இல்லத்திற்கும், வன்னியில் உள்ள வறிய நிலையில் உள்ள குடும்பங்களுக்கும் வழங்கப்படுகின்றது. இவருடைய காலத்தில் பங்குகளில் உள்ள இளையோர் கழகங்களின் ஊடாக யாழ் போதனா மருத்துவ மனைக்கு இரத்ததான நன்கொடைகளும் ஒழுங்கமைக்கப்பட்டது. தாதிய மாணவர்க ளுக்கான ஆன்மீகக் கருத்தமர்வுகளும் இடம்பெற்றன. புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருமட இறுதி வருட இறையியல் மாணவர்களுக்கான மருத்துவமனை பராமரிப்புப் பணி பற்றிய ஒருவார அனுபவப் பயிற்சி இடம்பெறுகின்றது. தற்போது இப்பயிற்சி மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், மற்றும் பல்வேறுபட்ட நிலையில் பணிபுரியும் பணியாளர்களை ஒருங்கிணைத்து வழங்கப்படுகின்றது. தொடர்ந்து புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருமட அருட்சகோதரர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வுகள் – 2018

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வுகள் – 2019

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வுகள்

# சாவகச்சேரி ஆதார மருத்துவமனை – 2019













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி வருட இறையியல் மாணவர்களின் மருத்துவமனை பராமரிப்பு தொடர்பான களப்பயிற்சி











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையில் இறையியல் மாணவர்களின் களப்பயிற்சி அனுபவங்கள்



புனித பிரான்சிஸ் சவேரியார் உயர்குருமட இறையியல் அருட்சகோதரர்கள்



புனித இயூஜின் டி மசனெட் இறையியலக அருட்சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படும்போது



நேர்மையாளர் விருது பெற்ற
யாழ். போதனா மருத்துவமனை
பணிப்பாளர் வைத்தியக்கலாநிதி
த. சத்தியமூர்த்தி




நேர்மையாளன் விருது வைபவத்தில்

# மருத்துவமனை ஆலயத்தின் முன்னைநாள் திருப்பண்டக் காப்பாளர்



அமரர்

**திரு. எட்வேட்**

**(1928 – 2015)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித இயூஜின் டீ மசனெட் இறையியல் குருமட அருட்சகோதரர்களும் தங்களுடைய களப்பயிற்சிப் பணிக்காக மருத்துவமனைக்கு வருகின்றார்கள். 2014ம் ஆண்டு மருத்துவமனையில் ஆன்ம நலன்பேணும் தன்னார்வப் பணியாளர்களாக பொது நிலையினர் ஈடுபட்டு அருட்தந்தை பிலிப் றஞ்சனகுமார் அமதி தலைமையில் மருத்துவமனை நோயாளர் விடுதிகளைத் தரிசித்து பல செயற்திட்டங்களின் ஊடாக தங்கள் பணிகளை ஆரம்பித்தார்கள். 2015ம் ஆண்டு அமலமரித் தியாகிகளின் இளம் குருக்கள் இரத்த தானத்தினையும் வழங்கினர்.

2015ம் ஆண்டளவில் **வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி** அவர்கள் யாழ் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராக பொறுப்பேற்றதன் பின்னர் முன்னைய நிலையோடு ஒப்பிடும்போது பாரிய வளர்ச்சி கண்டுள்ளது என்றே கூறலாம். இது ஒரு பொற்காலமாகக் கருதப்படுகின்றது. காலத்தின் அவசர தேவையினை உணர்ந்தும் மக்களுக்காக சேவை செய்யும் உன்னத மருத்துவராக பார்க்கப்படும் இவர் போர்க்காலத்திலும் சரி, அதற்கு பின்னரான காலத்திலும் சரி தனது கடமைப் பொறுப்புக்களில் எந்தவித விட்டுக்கொடுப்புக்களும் இன்றி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றவர். 2009ம் ஆண்டு இறுதிப் போர் இடம்பெற்ற காலத்தில் கடும் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்தில் மக்களுடைய நலனுக்காக மருத்துவப் பணிகளை மேற்கொண்டவர். இவரைப் பற்றி இக்காலத்தில் அங்கே இறுதிவரை பணிபுரிந்த அருட்பணியாளர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அங்கிருந்து வெளியேறுவதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும், தன் நலனைக் கருத்திற்கொள்ளாது மக்கள் சேவை பெரிதெனக் கருதி சேவையாற்றியவர். அந்தச் சேவைக்காகப் போரின் பின்னர் பல நெருக்கடிகளைச் சந்தித்தபோதும் அவர் தனது மக்கள் சேவை என்ற நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்காது செயற்பட்டு வருகின்றார். 2019ம் ஆண்டு Integrity Icon Sri Lanka நடாத்திய சிறந்த நேர்மையான அரச அலுவலர் என்ற விருதைப் பெற்றுள்ளார். இது அவருக்கு மட்டுமன்றித் தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமையே. நாடாளாவிய ரீதியில் அவர் சிறந்த நேர்மையான அரச அலுவலர் என்ற விருதுக்கான தேர்வில் இரண்டாம் இடத்தைப் பெற்றாலும் தமிழ் மக்கள் மனங்களில் எப்போதும் முதன்மையான இடத்திலேயே உள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராக த. சத்தியமூர்த்தி பதவியேற்ற பின்னர் பௌதீக வளங்களிலும் சரி சேவையிலும் சரி ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பாராட்டத்தக்கது. இவற்றினால் மக்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைத் தனங்கள் ஏராளம். இவரது நேர்த்தியான நிர்வாகத் திறமையினால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நோயாளர் விடுதிகளின் சுகாதார முறைமையும் வசதி வாய்ப்புக்களும் பெருகியுள்ளன. நோயாளர்களில் மட்டுமன்றி, நோயாளர்களைப் பார்வையிட வரும் மக்களின் நலனுக்காகவும் அவர் பல திட்டங்களை மிகவும் சிறப்பாக நடைமுறைப்படுத்தியுள்ளமை கண்கூடு. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் மக்களின் அடிப்படைத் தேவையான மருத்துவ சேவை கீழ் மட்டத்திலேயே காணப்பட்டது. தென்னிலங்கையோடு ஒப்பிடும்போது வடக்கில் இருந்த மருத்துவமனைகளின் தரநிலைமை மிகவும் பின்தங்கியிருந்தது என்பது வெளிப்படை உண்மை. தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தெற்கில் உள்ள மருத்துவமனைகளுக்குச் சவால் விடும் நிலையில் காணப்படுகின்றது என்றால் அதில் மருத்துவர் த. சத்தியமூர்த்தியின் வகிபங்கு மிகப் பெரியது எனலாம். அவருடைய பணி மென்மேலும் சிறக்க செபத்துடன் கூடிய நல்வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் வளர்ச்சியினை நோக்குகின்றபோது மிகவும் ஒரு முக்கிய மைல்கல்லாக இருப்பது இருதய சத்திரசிகிச்சை வசதிகளும் அதன் அபிவிருத்தியுமாகும். 2017ம் ஆண்டு மார்கழி மாதம் 20,21ஆம் திகதிகளில் நடைபெற்ற இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் சிதம்பரநாதன் முகுந்தன் தலைமையில் வெற்றிகரமாக இடம்பெற்றது. இருதய சத்திரசிகிச்சையினை மேற்கொள்வதற்காக பல மாவட்டங்களில் இருந்தும் நோயாளிகள் இங்கே வருகின்றார்கள். இதற்கான விடுதிகளில் பல கத்தோலிக்க மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் பணிசெய்வதைக் கண்டிருக்கின்றேன். இவர்களுடைய கடமையுணர்வையும் தாதிய சேவையின் அர்ப்பணத்தையும் வியந்தும் இருக்கின்றேன். இந்த விடுதிக்கு பொறுப்பாக இருப்பவர் கத்தோலிக்க தாதி திருமதி ரமேஸ்குமார் ஆவார். இவர் கொரோனா காலத்தில் தாமாகவே முன்வந்து இப் பணியினை ஏற்றது மாத்திரமல்ல அதை திறம்படவும் ஆற்றியுள்ளார். கொரோனாவை சமூகத்தில் பரவவிடாமல் தடுத்த பெருமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையினையே சாரும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மற்றைய வளர்ச்சியாக தொலை மருத்துவத்தினைக் (Telemedicine) கூறலாம். இதற்கென உலகில் உள்ள பல மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையினைப் பெற்று மருத்துவ சத்திரசிகிச்சையினையும் ஆலோசனைகளையும் மக்களுக்கு வழங்குகின்றார்கள். கொரோனா காலத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பொதுமக்களுக்கான தொலை மருத்துவ சேவையும் ஆரம்பிக்கப்பட்டமை நவீன யுகத்தில் இமாலய வளர்ச்சி என்றே கூறலாம். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மருத்துவத்தினையும் தாண்டி சமூகத்திலும் பல கடமைப் பொறுப்புக்கள் உள்ளதை தெளிவாகக் கானமுடிகின்றது. இதற்காக தற்போது பல பணிகள் முனைப்போடு முன்னெடுக்கப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

2017ம் ஆண்டு புரட்டாதி 24ம் திகதி **அருட்பணி ஜெரால்ட் அமதி** தலைமையிலே மருத்துவமனை ஆலயத்திற்கு முன்பாக புனித வேளாங்கண்ணித் தாயாருடைய திருச்சுரூபம் அதி வந்தனைக்குரிய **யாழ். மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்** ஆண்டகையினால் திருவிழாத் திருப்பலியின் பின்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. 2018ம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், தாதிய மாணவர்கள் மற்றும் பல்வேறுபட்ட நிலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கான உள. சமூக, ஆன்மீக கருத்தமர்வுகள் அருட்பணியாளர்களான கரவையூர் செல்வரட்ணம், அன்புராசா போன்றவர்களினால் நடாத்தப்பட்டது. இக் கருத்தமர்வுகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள கத்தோலிக்க ஆன்மீக குழுமத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றது. இதில் பலர் பயனடைந்து தமது கருத்துக்களைப் பகிர்ந்தும், இதுபோன்ற கருத்தமர்வுகள் வாழ்விற்கு நல்லது என்பதனையும் பலர் சுட்டிக்காட்டினர்.

ஒவ்வொரு ஆண்டும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள புனித வேளாங்கண்ணி சிற்றாலயத்தினுடைய திருவிழா மருத்துவமனை கத்தோலிக்க ஆன்மீக குழுமத்தினரால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இதில் பலர் பங்குபற்றி இறைவனுக்கும் புனித வேளாங்கண்ணித் தாயாருடைய பரிந்துரை யினால் பெற்ற அனைத்து வேண்டுதலுக்கும் நலம் தரும் ஆரோக்கியத்துக்காகவும் நன்றிகூறி நினைவுகூரப்படுகின்ற உன்னத பெருவிழாவாகும். இந்த ஆலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையில் கொரோனா தடுப்புப் பணிகள்
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள சமூக ஆன்மீகக் கருத்தமர்வு











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடியேற்றமும் திரிதின வழிபாடுகளும்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்க விழா திருப்பலி நிகழ்வுகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.ம.திகளின் மருத்துவமனை ஆன்மீகப்பணியின் மாணிக்க விழா கௌரவிப்பு



அருட்பணி. பிரான்சிஸ் டானியேல் அடிகளாரை பொன்னாடை அணிவித்து கௌரவிக்கும் போது



அருட்பணி யோகராஜா அடிகளாரை பொன்னாடை அணிவித்து கௌரவிக்கும் போது



மூத்த ஓய்வுநிலைத் தாதி திருமதி அருளப்பு தவமணி அவர்களை பொன்னாடை அணிவித்து கௌரவிக்கும் போது



ஓய்வுநிலைத் தாதி திருமதி புவேந்திரன் அவர்களை பொன்னாடை அணிவித்து கௌரவிக்கும் போது



மூத்த ஓய்வுநிலைத் தாதி திருமதி அருளப்பு தவமணி அவர்களை மாலை அணிவித்து கௌரவிக்கும் போது



ஓய்வுநிலைத் தாதி திருமதி புவேந்திரன் அவர்களை மாலை அணிவித்து கௌரவிக்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.ம.திகளின் மருத்துவமனை ஆன்மீகப்பணியின் மாணிக்க விழா நூல் வெளியீடு



அருட்பணி. அருள் சுதர்சன் அடிகளாரின் நூல் அறிமுக உரையின்போது



அ.ம.திகளின் யாழ். மாகாண முதல்வர் அருட்பணி. எட்வின் வசந்தராசா அடிகளார் நூலினைப் பெறுகையில்



முதல் மருத்துவமனை ஆன்ம குரு அருட்பணி. பிரான்சிஸ் டானியேல் அடிகளார் நூலினைப் பெறுகையில்



அருட்சகோதரி ஜேம்ஸ் விக்ரறின் நூலினைப் பெறுகையில்



மூத்த ஓய்வு நிலைத் தாதி திருமதி அருளப்பு தவமணி நூலினைப் பெறுகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னார்வ பணியாளர்களின் செயற்பாடுகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக கத்தோலிக்கரும் பிறசமயத்தவர்களும் பெற்றுள்ள அதிசயங்களும் அற்புதங்களும் ஏராளம். பலர் என்னிடம் வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் சாட்சியம் பகர்ந்தும் உள்ளனர். இன்றும் நோயில் இருந்து ஆரோக்கியம் பெற்றவர்களும் பெரும் கோர விபத்திலிருந்து மரணத்தறுவாயில் நின்று தங்களுடைய உயிர் மீண்டவர்களும் பலதரப்பட்ட துன்பதுயரங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட வர்களும் குழந்தை வரங்கள் பெற்றவர்களும் வெளிநாட்டுப் பயணம் மற்றும் வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றவர்களும் திருமண பந்தம் பெற்றவர்களும், மனவிரக்தியோடும், குடும்பச் சிக்கல்களோடும், கடன் தொல்லைகளோடும் வாழ்வில் தவறான முடிவெடுத்து தங்களுடைய உயிரை முடித்துக்கொள்ள முனைபவர்களும் ஆறுதலும் அரவணைப்பும் தரும் தாயாக இருந்து வழிநடத்துபவள் அன்னை மரியாள் என்பதை உணர்கின்றனர். இது ஒட்டுமொத்த சமூகத்தின் நன்றிப் பெருவிழா. ஒளி மயமான வாழ்வைப் பெற்றவர்களுக்கு சாட்சியத்தினுடைய விழாவாக அமைகின்றது. எனவேதான் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள புனித வேளாங்கண்ணி சிற்றாலயத்தினுடைய திருவிழா கத்தோலிக்க ஆன்மீக குழுமத்தினரால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. 2018ம் ஆண்டிலிருந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறுகின்றது. இதற்கு எல்லா மக்களும் இன, மத, மொழி பேதமின்றி உதவிகளை வழங்கி ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்கள். அனைவருக்கும் அன்னையின் தொடர் பரிந்துரையும் பாதுகாப்பும் கிடைக்கவேண்டி பிரார்த்தித்து எமது மனமார்ந்த நன்றிகளையும் சமர்ப்பிக்கின்றோம்.

யாழ் போதனா மருத்துவமனையின் கத்தோலிக்க ஆன்ம பணி மையத்தினால் நடாத்தப்படும் கிறிஸ்து பிறப்பு கரோல் நிகழ்வுகளின்போது விடுதிகளில் தங்கிநின்று சிகிச்சை பெறுபவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்குவதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளினதும் கத்தோலிக்க பங்குத்தளங்களினதும், புலம் பெயர்ந்த நாட்டில் உள்ள எமது உறவுகள், நலன்விரும்பிகளினதும் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. பொருட்களைச் சேகரிப்பதில் இருந்து பொதிசெய்து உரிய இடங்களுக்கு அன்பளிப்புக்களை வழங்கும் வரை எமது மருத்துவமனையின் நிறைவான பங்களிப்பு மனநிறைவைத் தருகின்றது. இது ஒரு பாரிய பணி. இதனை நிறைவேற்ற கடவுள் நல்ல உள்ளங்களை எமக்குக் கொடுத்து வழிநடாத்தி வீருகின்றார். விசேடமாக யாழ் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், காவற்கடமையில் ஈடுபடும் நல்லுள்ளங் கள், எமது கத்தோலிக்க குழுமத்தினர் மற்றும் யாழ் போதனா மருத்துவமனையின் நோயாளர் ஆன்ம நலன் பேணும் தன்னார்வப் பணியாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இதுவும் மனிதநேயமிக்க இறைசெயலே.

## முடிவுரை

இது முடிவுரை அல்ல; ஆனால் ஒரு தொடர்கதை. கத்தோலிக்க திருச்சபையின் ஆரம்ப மிஷனறிமார்கள் இலங்கை நாட்டிற்கு செய்த அனுகூலங்களும் மறுமலர்ச்சிகளும் ஏராளம். விசேடமாக மருத்துவப் பணி மற்றும் கல்விப் பணி மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. இன்றுவரை இத்துறைகள் அரசினால் இலவசமாக வழங்கப்படுகின்றமைக்கு கத்தோலிக்க திருச்சபையே காரணமாகும். இவர்கள்தான் முன்னோடிகள் ஆவார்கள். மக்களைப் பாதிக்கின்ற விடயம் இயல்பாகவே மக்களோடு மக்களாக வாழும் திருச்சபையையும் பாதிப்பது உண்மை. இதில் எனது தேடல் பாரிய சமுத்திரத்தில் ஒரு சிறு துளியாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவப்பணி எவ்வளவு முக்கியமோ அதேபோல் மருத்துவமனையின் ஆன்மீகப் பணியும் மிக முக்கியமானதாகும். எதிர்காலத்தில் இதில் கூடிய கவனமும் கரிசனையும் அக்கறையும் விழிப்புணர்வும் தேவையானதாக இருக்கின்றது.

மூன்றாம் கட்ட ஈழப்போர் 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்காலோடு மௌனிக்கப்பட்டதன் பின்னர் வடமாகாணத்தில் உள்ள மக்கள் ஒருவித குழப்பத்தோடும் இழப்பதற்கு இனி ஒன்றும் இல்லையே எல்லாம் முடிந்துவிட்டதே என்று எண்ணி வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவர்களாகவும் இருந்தனர். ஏனெனில் முப்பது வருட நீண்ட போர் மக்களுடைய வாழ்வைச் சின்னாபின்னமாக்கியது. அது தந்த காயங்களும் வலிகளும் இழப்புக்களும் ஈடுசெய்யப்பட முடியாதவை. தொடர்ந்து வருகின்ற அரசியல் ஸ்திரத்தன்மைகள், குழப்பங்கள், பொருளாதார அபிவிருத்தியின்மை, சமூக கலாச்சார சீரழிவுகள், போதைவஸ்து பாவனை, வீதி விபத்துக்கள், கல்வியில் பின்தங்கிய நிலை, வேலைவாய்ப்பின்மை, மதவாதம், பிரதேசவாதம் போன்ற சூழ்நிலைகள் எமது மக்களின் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் சீர்குலைத்து நிற்கின்றது. **"உடையவன் இல்லாவிட்டால் ஒரு முழம் கட்டை"** என்ற வார்த்தைக்கு ஏற்ப எமக்குள்ளேயே கட்சிப் பூசல்கள், காட்டிக் கொடுப்புக்கள், மத வெறியாட்டம், விட்டுக்கொடுக்காமை, குறுகிய மனப்பான்மை, சுயலாபம், சுயநலப்போக்கு போன்ற காரணங்களினால் எம்மையே நாம் இழந்து கொண்டிருக்கின்றோம். ஆயினும் **"சாம்பலில் இருந்து மீண்டும் எழுவோம்"** என்ற வாக்கிற்கு இணங்க எம்மையே தயாரிக்க காலங்களும் நேரங்களும் அவசியமாகின்றது. ஒரு கணம் நாம் நடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்த்தோம் என்றால் எல்லாம் புலனாகும்.

**"இருக்கஇருக்க இருக்கை தெளியும்**
**இருக்கை தெளிந்தபின் இருப்பவை கைகூடும்"**

என்ற வள்ளுவனின் வாக்கிற்கு ஒப்ப எம்மை நாமே சுய தேடலுக்கு உட்படுத்துவதும், எம் இருப்புக்களைச் சரிசெய்து இந்தச் சமுதாயத்திற்கு என்ன செய்யலாம் என்பதை ஒவ்வொருவரும் ஆழமாகச் சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது. அது மதத் தலைவர்களாக இருக்கலாம், அரசியல் தலைவர்களாக இருக்கலாம், சமூக ஆர்வலர்களாக இருக்கலாம், புத்திஜீவிகளாக இருக்கலாம், மருத்துவமனை சமூகமாக இருக்கலாம், தாயக புலம்பெயர் சமூகமாக இருக்கலாம் எல்லோரும் ஒத்துணர்வோடும், மனிதநேயத்தோடும் பொதுநலனுக்காக உழைப்பதுதான் முதன்மைத் தேவையாக இருக்கின்றது. முதலில் எம்முடைய மனங்கள் மாற்றமடைய வேண்டும். நாங்கள் நல்லவற்றைச் சிந்தித்து பொதுநலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றபோது கடவுள் எம் கூட இருந்து வழிநடத்தி எம் பணிகளை நிறைவாக ஆசீர்வதிப்பார். எனவே, மருத்துவமனை ஆன்ம பணிக்கு எல்லோரும் கைகோர்த்துப் பயணிப்போம். எம் மருத்துவமனையினை முன்னேற்றப் பாதையில் நடத்திச்செல்ல ஆக்கமும் ஊக்கமும் கொடுப்போம். குறுகிய மனப்பான்மைகளைத் தவிர்த்து எப்போதும் நல்ல, மனிதநேயமிக்க உள்ளங்களாக வாழுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா உதவிப் பங்களிப்பு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பணி டானியலின் உள்ளத்திலிருந்து....

1978 மே 22 ஆம் திகதி பண்ணைப் பாலத்தில் எனக்கு ஒரு விபத்து நடந்தது. ஒரு காரோட அடிபட்டுத் தூக்கி எறிஞ்சுது. தர்மலிங்கம் மிஸ், டொக்ரர் பொன்னம்பலத்தின் வாட் 24. கோயிலுக்கு வலப்பக்கத்தில் இருக்குது. அங்கதான் அட்மிசன். அங்கதான் 2 மாதமாக இருந்தேன். அப்பதான் அங்க இருந்த எனக்கு இந்த யோசனை தொடங்கிச்சு. வந்த சுவாமிமார் ஒரு சற்பிரசாதம் தந்தாங்களா? ஒண்டும் இல்ல. அப்பதான் எனக்கு மருத்துவமனையை நாங்கள் பொறுப்பெடுக்க வேணும் எண்ட எண்ணம் வந்தது. நான் எழும்பி நடப்பேனோ தெரியாது. ஆனால் அதைக் கட்டாயம் செய்ய வேணும். அங்க தேவை இருந்தது.

1979 மருத்துவமனையால் வெளிக்கிட்டு மடுவெல்லாம் நேத்தி வைச்சு அப்ப எங்கட அதிபரா இருந்தது ஏ. எச். வேதநாயகம் சுவாமி. அப்ப அவரத்தான் நான் சொல்லி அனுப்பினான், விசப்பிட்டப்போய் கதைக்கச் சொல்லி, நான் இந்த வேலை செய்யப்போறன் எண்டு. அப்ப விசப் சொன்னாராம் இவன் என்ன ஒரு இளம் சுவாமி. நான் ஏன் துணிவாகக் கேட்டனான் எண்டா, அவர் தான் எனக்குக் குருப்பட்டம் தந்தது பிசப் தியோகுப்பிள்ளை. அவர் அப்ப இங்க இருக்கேல்ல. பிசப் எமிலியானுஸ்பிள்ளை பிசப்பா இருக்கேக்க, இவர் திருகோண மலையில உதவி மேற்றாணியாரா அங்க இருந்தவர். அவரை நான் கூப்பிட்டேன்.

62 இல் இருந்து அப்ப எனக்கு அவரோட நல்ல தொடர்பு. அப்ப அவரோட கதைக்கவரச் சொல்லிப் போனா, முதல் தரமாட்டேன் எண்டு சொன்னவர். பிறகு நான் வில்லங்கப்படுத்திக் கேட்டனான். அவர் சொன்னார் நீர் அடைக்கலமாதா கோவில இருந்து கொண்டு ஆஸ்பத்திரியப் பாரும் எண்டு. ஆனா ஒரு மாதிரி புனித வளனார் சிறிய குருமடத்தில் இருப்பதுதான் சரி எண்டு சொல்லி அவரும் சம்மதித்தார். அப்ப என்னுடைய இந்தப் பணி தொடங்கியது. 1979ம் ஆண்டு ஆனி மாதம் அதற்கு முதல் யார் பாத்ததெண்டா தேவைக்கு ஏற்றபடி அடைக்கல மாதா கோவிலில இருந்தோ, அல்லது பெரிய கோவிலில இருந்தோ யாரும் கூப்பிட்டா போய் பாப்பினம். நான் அறிய ஞாயிற்றுக்கிழமை பூசை அந்த நாட்களில அடைக்கலமாதா கோவில் சுவாமி பொறுப்பெடுப்பார்.

அப்ப சின்னச் சுவாமியா இருந்தது மாம்பழச் சுவாமி. அவருக்கு பெயர் தேவதாசன் சுவாமி. எனக்கு முதல் மாம்பழச்சுவாமி தேவைக்கு ஏற்ப ஞாயிற்றுக்கிழமை பூசை, அவஸ்தை பூசுதல் கொடுப்பார். நான்தான் இதை முழு மூச்சா எடுத்து முழு வாட்டும் ஒரு ரவுண்ட் அடிச்சு வந்து பூசை வைப்பேன். நான் 2 பூசை வைச்சேன். வெள்ளி, ஞாயிறு. சரியா ஞாபகம் இல்ல. அதுக்குப் பிறகு 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87 ஆவணி மட்டும். அதுக்குப்பிறகு நான் கிளினிக்கல் சைக்கோலொஜி படிக்கப்போயிட்டேன். பிறக்றிக்கல் மருத்துவமனை யிலேயே செய்தனான். பிறகு 1990 இல் தான் வந்தனான். அதுக்குப்பிறகு செபஸ்ரியன், லீனஸ், ஜீவாபோல் என இவர்களது பணி தொடர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமல உற்பவியே

அமல உற்பவியே அருள் நிறைந்த தாயே
இறைஞ்சிடும் அடியார்க்கு இரங்கிடும் தாயே
இல்லற வாழ்விலும் இறைபணி செய்ய
இகமதில் அருள்துணை ஈந்து வழி நடத்துமம்மா

பங்குகளாய்! பக்திச்சபைகளாய்! பணியாளர்களாய்!
விடுதிகள் தோறும் திருத்தூதர்களாய்
விரும்பியே உம்பணி செய்ய விடை கொடுக்கும் விமலனின் தாயே!
இகமதில் எம் துயர் தீர்த்திடுவாயே!

வந்தோம் உம் பணியாளர்களாய் கூடி நாம்
தந்தோம் பலரின் வேண்டுதல்களை உம்பதம்
வென்றோம் வாழ்வின் பல தடைகளை நாமும்
கண்டோம் கருவினில் சுமந்த யேசுவின் புகழை

கருவினில் கடவுளைச் சுமந்த தாயாய்க் கண்டோம்
பாடுகளின் பாதையில் பரமனோடு இணைவதாய்க் கண்டோம்
கல்வாரி வரை பாதச்சுவடு கண்டோம்
எம் வாழ்வின் பாதையில் விடிவெள்ளியாய் இருக்கக் கண்டோம்

சிலுவையில் இயேசுவைக் கண்டோம்
சிற்றாலயத்தில் உம்மைக் கண்டோம்
வைத்தியரில் உம் பாசம் கண்டோம்
தாதியரில் உம் தாழ்மை கண்டோம்
சிற்றூழியரில் உம் வேகம் கண்டோம்
அருட்சகோதரர், சகோதரிகளில் உம் அன்பைக் கண்டோம்
அமலமரித் தியாகிகளில் உம் ஆர்வம் கண்டோம்

அமலனைப் பெற்றெடுத்து! அமதிகளுக்கு உத்வேகம் கொடுத்து
அகிலமெல்லாம் உம் பணியாற்ற ஆசீர் அருளும் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனையைப் பொறுப்பேற்று நாற்பது ஆண்டு நிறைவில் அகமகிழும் அமதிகள், அருட்பணியாளர்கள் அருளாசீர் பெற்று வருந்தி, வறுமையில் வாடும் உள்ளங்களுக்கு இறையாசீர் வழங்கி உம் மகன் இயேசுவின் இறையாட்சிப் பணியை நிறைவோடு செய்ய நிறையாசீர் அளித்தருளும் அம்மா, நிறையாசீர் அளித்தருளும்.

எழில் பொங்கும் யாழ் நகர் மத்தியிலே
யாழ் போதனா மருத்துவமனை வளாகத்திலே
கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் எம் தாயே
அயராது அண்டிவரும் அடியார்க்கு
ஆரோக்கியம் கொடுக்கும் அருள்மிகப் பெற்றவளே
நன்றிப்புகழ் மாலையொன்று நாம் சூடுகின்றோம்

கையிழந்தும், காலிழந்தும் கண்களில் நீர் பெருக
கதறியே உம் காலடி பணிந்து நாம் கெஞ்சுமுன்
கண்விழித்துக் கட்டிலருகே காத்திருக்கும் கடவுளின் தாயே
காலமெல்லாம் நன்றிப்புகழ் மாலையொன்று நாம் சூடுகின்றோம்

ஐம்புலன்கள் அடங்கியங்கே அம்புலன்ஸில் வரும்வேளை
அர்த்தராத்திரியோ! அது யாருமற்ற நேரமல்லோ!
அதி தீவிர சிகிச்சையிலும்! அங்கிருக்கும் ஊழியர் பெயரினிலும்
உம் நாமம் புகழ உதவி புரியும் உத்தமியே!
உள்ளத்தால் நன்றிப்புகழ் மாலையொன்று நாம் சூடுகின்றோம்

பட்டமும் பதவியும் பயணித்த வாகனத்தில்
விதி வந்து விட்டனவோ, எம் வீறு நடையும் வீழ்ந்தனவோ
ஐயனே! ஐயப்பனே! அம்மாதாயே நீயாவது உதவி புரிவாயோ
ஆறுகுடம் நீரும் இரசமானது அன்று நம்பியதால்
அனைத்து நோயாளிகளும் குணமாகுகிறார்கள் இங்கு நம்பிக்கையால்

சு.மங்களம்
செயலர்
ஆன்ம நலன் பேணும் தன்னார்வப் பணியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவப் பணி நிறைந்த மகிழ்ச்சியளிக்கின்றது

இந்த மலருக்கு ஒரு ஆக்கம் தரும்படியாக யாழ். போதனா மருத்துவமனை ஆன்மகுரு அருட்பணி அருள் சுதர்சன் அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப இதை நான் வரைகின்றேன்.

சுகாதாரப்பணி ஒரு உன்னதமான பணி. அது எல்லாப் பணிகளையும் விட மேலானது என்று தான் நான் கூறுவேன். ஆனால் அது மிகவும் சிரமமான பணி. உயிரோடு சம்பந்தப்பட்டது.

1963 ஆம் ஆண்டு அதாவது என்னுடைய இருபது வயதிலே நான் யாழ் போதனா மருத்துவமனையில் இந்தச் சேவையில் சேர்க்கப்பட்டேன். நான் நினைத்தது போலன்று, மிகவும் சிரமமான பணி. இரவு பகல் சேவை. ஆனால், போகப்போக இந்த சேவை எனக்கு மிகவும் பிடித்ததொன்றாயிற்று. தொடர்ந்து 40 ஆண்டுகள் இந்தச் சேவையை ஆற்றினேன்.

கடைசி 23 வருடங்கள் அதாவது 1980ஆம் ஆண்டிலிருந்து நான் அவசர சிகிச்சைப் பிரிவில் சேவையாற்றும்படி எனது நிர்வாகத்தால் பணிக்கப்பட்டேன். மிகவும் சந்தோசமாகப் பொறுப்புத் தாதியப்பணியை ஏற்றுக்கொண்டேன். சுய நினைவின்றி வரும் நோயாளிகளை என் கையில் ஒப்படைத்தார்கள்.

மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் எங்கள் அயராத சேவையினால் குறித்த ஒரு சுயநினைவிழந்த நோயாளி மறுபிறப்பெடுத்து என்னை அம்மா என்று அழைத்தபோது நான் மிகவும் பூரிப்பு அடைந்தேன். என்ன நடக்குமோ என்று சித்தம் கலங்கியிருக்கும்போது உறவினர்களுக்கு ஆறுதல்கூறி மகிழ்ச்சியடையச் செய்தேன். என்னிடம் வரும் நோயாளர்கள் எல்லோருமே மிகவும் ஆபத்தான நிலையில்தான் கொண்டு வரப்படுவார்கள். என்னுடைய முழுச் சேவையையும் அவர்களுக்கு அர்ப்பணித்ததனால் கிட்டத்தட்ட 99% வீதமான நோயாளர்கள் மரணப் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்கள். இது எல்லோருக்கும் கிட்டாத ஒரு சந்தோசமாகும்.

தற்போது நான் ஓய்வு பெற்ற நிலையில் கடந்த கால அனுபவங்களை நினைத்துப் பார்க்கின்றேன். அவைகளெல்லாம் மிக இனிய அனுபவங்களாகவும், சிறந்த படிப்பினையாகவும் எனக்குத் தெரிகின்றது.

இந்நினைவுகளோடு எனது ஓய்வுக்காலத்தை நான் செலவிட எல்லாம் வல்ல இறைவன் எனக்கு அருள் புரிவாராக.

நன்றி.

திருமதி மரியமலர் பஸ்ரியாம்பிள்ளை
ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்
யாழ். போதனா மருத்துவமனை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதிய சேவை அர்ப்பணிப்பு விழா



தாதியர் சேவைக்குத் தங்களை அர்ப்பணிக்கும் 2016A வருட மாணவர்கள்



தாதியர் சேவைக்குத் தங்களை அர்ப்பணிக்கும் 2017A வருட மாணவர்கள்




தாதிய போதனாசிரியர்களுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதிய சேவை அர்ப்பணிப்பு விழா



தாதியர் சேவைக்கு தங்களை முற்றுமுழுதாக
அர்ப்பணிக்கையில்



2017^ வருட தாதிய மாணவர்கள்
பெற்றோருடன்



தாதிய கல்விப் பணிப்பாளர் கௌரவிக்கையில்



அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற முதல் ஆண்டு
இறுதிப்பரீட்சையில் மனித உடல் அமைப்பும்
தொழிற்பாடுகளும் (Anatomy & Physiology) பாடத்தில்
முதலாம் இடத்தைப் பெற்ற மாணவி பெற்றோர்
போதனாசிரியருடன்



2016^ வருட தாதிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க தாதிய மாணவர்கள்



இறுதி வருட தாதிய மாணவர்கள்



2ம் வருட தாதிய மாணவர்கள்



1ம் வருட தாதிய மாணவர்கள்



ஆன்மீகக் குருவுடன் கத்தோலிக்க தாதிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதிய மாணவர்களின் மாதாந்த ஆன்மீகக் கருத்தமர்வு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியர் கல்லூரியில் ஒளி விழா நிகழ்வு






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவோடு இணைந்த வாழ்வு

இயேசுவோடு இணைந்து வாழ்ந்து
இன்பமதைப் பெறுவோம்
நேசத்தோடு பழகி இந்த
நிலத்தில் அன்பை விதைப்போம்.
காலையிலே எழுந்தவுடன்
கடவுளையே துதிப்போம்.
மாலைவரை அவர் வழியில்
மகிழ்வுடனே நடப்போம்.
இயேசு இல்லா வாழ்க்கையிலே
இனிமையொன்றும் இல்லை.
மாசுவோடு வாழ்வோருக்கு
மண்ணில் என்றும் தொல்லை
காசைக்கொண்டு அமைதியினை
கண்டு கொள்ள முடியாது.
நேசர் இயேசுவை ஏற்றுக் கொண்டால்
நெஞ்சில் என்றும் களிப்பு உண்டு.

*A. ஏன்சி பிரதீகா*
*2017 A தாதியக் கல்லூரி மாணவி*
*தாதியக் கல்லூரி*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவினில் கடவுளைத் தாங்கிய தாய் மரியாள்

**"கர்த்தர் தனை தனயனாய்க் கொண்ட அன்புத்தாய்**
**வானவரின் தாயாக விளங்கும் மாமரித்தாய்"**

எமது அன்புத்தாயைப் பற்றி விபரிக்க உலகமே அடங்கா. அப்படிப்பட்ட அன்னை மரியை எமது தாயாக, இரட்சகியாக, இராக்கினியாக எமக்கு அருளிய பரம தந்தையைப் போற்றிப் புகழ்வோம். தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற தன்னையே தியாகப் பலியாக்கிய திருமகன் இயேசுவின் இரட்சணியப் பணியைத் தொடர்ந்து ஆற்ற, சிலுவையடியில் மைந்தன் அருளிய இறுதி வார்த்தையை சிரமேற்கொண்டு **"அம்மா இதோ உன் மகன்"** என்று கூறியதும் மனுக்குலம் முழுவதற்கும் தாயாகும் பேறு பெற்ற அன்புத்தாய்க்கு நிகரான வேறு தாயுண்டோ.

மக்களின் கண்ணீரைத் துடைக்க தமது திருமகனின் பலியை நிராகரித்து அலகையின் பிடியில் சிக்குண்டு, பாவத் தளையில் சிக்குண்ட பாவிகளை மனம்மாற்ற பற்பல இடங்களில் பலருக்கு அதுவும் ஏழைச் சிறார்களுக்குக் காட்சி அளித்து, பாவிகள் மனந்திரும்ப மன்றாடுங்கள் என்று இரத்தக் கண்ணீர் வடித்த இந்த அன்னையை ஏற்றிப் போற்றி வணங்குவோம். அந்தத் தாயின் போர்வைக்குள் தஞ்சம் புகுந்து எம்மைப் பாதுகாத்து ஆளும் வரத்தை அன்னையிடம் இரந்து கேட்போம்.

தேவதாய் எப்படிப்பட்ட கடவுளைக் கருவறையில் தாங்கித் தனது உறவினராகிய எலிசபேத்துக்கு உதவி செய்ய விரைந்து சென்றாளோ. அவ்விதமே நாமும் தினமும் நற்கருணை மூலம் இயேசுவை எமது உள்ளமாகிய கருவறையில் ஏற்று அவரை எமது நாளாந்த பயணத்தில் கொண்டு செல்வோம். அப்போது "வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்" என்ற உணர்வுடன் மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி சரீர, பண உதவி புரிவதுடன் எனது சக்தி, நேரம், ஆற்றல்களை மற்றவர்களுக்காக செலவு செய்து உறவுகளை வளர்க்க முடியும். தூய்மைச் சடங்கின் போது சிமியோன் கூறிய வார்த்தைகள் **"உமது இதயத்தை ஒரு வாள் ஊடுருவும்"** என்ற வார்த்தைகளைக் கூறியபோது எமது அன்னை கலங்கவில்லை. எதையும் தாங்கும் இதயமுடையவளாய் நல்ல மனத்துடன் ஏற்றுக் கொண்டாள். நாமும் எமது வாழ்வில் ஏற்படும் துன்ப துயரங்கள், கஸ்ரங்கள், கவலைகள், கண்ணீர்களை எல்லாம் நல்ல மனதுடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பக் குவத்தைத் தரவேண்டுமென்று மன்றாடுவோம். அன்னை மரியாள் கேட்டுக்கொண்டது போல் பாவிகள் மனந்திரும்பத் தினமும் மன்றாடுவோம். அவர்களுக்காக எங்கள் வாழ்க்கையை முழுவதும் ஒப்புக்கொடுப்போம். இன்னும் குறிப்பாக யாரும் நினையாத ஆன்மாக்களுக்காகவும் ஒப்புக் கொடுப்போம். அவைகளை ஏற்று இறைவன் எல்லா ஆன்மாக்களையும் விண்ணகம் சேர்ப்பாராக.

எமது அன்னைக்கு மதிப்பு, மரியாதை கொடுக்காமல் மாதாவைப் பற்றி அவதூறு, அவமானப்படுத்தும் மக்களால் அன்னையின் மனம் வேதனையுற்றிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் எமது அன்பும், மதிப்பும், வணக்கமும், நவநாட்களும் ஆறுதல் அளிக்கும். ஆனால் நாம் வெளி ஆடம்பரங்களில் களியாட்டங்களில் ஆலய விழாக்களைக் கொண்டாடாமல், ஆன்மீக வாழ்வில் அக்கறை உள்ளவர்களாக மனம்மாறி நவநாட்களில் பெறும் மறை உரைகள், இறைவார்த்தைகளை எமது வாழ்வுக்கு ஔடதமாக மாற்றவேண்டும். பதித மார்க்கங்கள் மற்றும் பிரிவினைச் சகோதரர்களுக்காக மன்றாடுவோம்.

அன்னையின் மூலமாகப் பெறும் அற்புதங்கள், மனமாற்றங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வோம். தேவதாயிடம் விளங்கிய பண்புகளாகிய பரிவு, இரக்கம், தாழ்மை, ஏழ்மை, பொறுமை, அன்பு இவைகளை எம்முள்ளும் எம் குடும்பங்களிலும் வளர்த்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவோம். தினமும் மூன்று அருள் நிறை மரியே என்ற செபத்தைச் சொல்லி மாதாவை மகிமைப் படுத்துவோம். "ஓ என் இயேசுவே" என்ற செபத்தை பாவிகள் மனம்மாற உணர்வோடு செபிப்போம். எங்கள் குடும்பங்களிலும், பணித்தளங்களிலும் தேவதாயைப் பற்றியும் அவள் அருளி வருகின்ற நன்மைகள், புதுமைகளைப் பற்றியும் பிறருக்கு எடுத்துக்கூறி அவளுக்கு மகிழ்ச்சி வருவிப்போம். எங்கள் மரண வேளையிலும் அவளின் துணையை நாடுவோம்.

**பா. பொலி அன்றூ**
**யா/பரியோவான் கல்லூரி**
**உயிரியல் மாணவன் (2021)**

Unless we believe and see Jesus in the appearance of bread on the altar, we will not be able to see him in the distressing disguise of the poor.

\- **St. Mother Teresa of Calcutta**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனாவில் தொலை மருத்துவம்
## TH Jaffna hosts Telemedicine

உலகில் இணைய வழியாகப் பொருட்கள் - சேவைகள் பரிமாற்றங்கள், கல்விச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

யாழ். போதனா வைத்தியசாலையானது நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதுடன் மருத்துவர்கள், தாதியர்கள் முதலானோருக்கான கற்றல் செயற்பாடு களையும் பல்வேறு வழிகளில் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. யாழ். போதனா வைத்தியசாலையில் பொதுமக்களுக்கான தொலை மருத்துவ (Telemedicine) சேவை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு தற்போது தொலை மருத்துவ சேவைகள் 3 நிலைகளில் நடைபெறுகின்றன.

### 1. உடலுறுப்பு ஊடுகதிர்ப் படங்கள், காந்த அதிர்வுப் படங்களுக் கான நிபுணத்துவக் கருத்தமர்வு (International Experts joining Teleradiology Forum)

யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் உடலுறுப்பு ஊடுகதிர்ப்படங்கள் மற்றும் காந்த அதிர்வு வரைவுகளுக்குத் (CT and MRI) தேவைப் படும் மேலதிக நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள, விசேட வைத்திய நிபுணர்கள் கலந்துகொள்ளும் காணொலிக் கருத்தரங்கு (video conferencing seminars) கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

### (அ.) இரைப்பை-குடல் படங்களுக்கான காணொலிக் கருத்தமர்வு (MDT Abdominal CT, MRI Experts' Forum)

அமெரிக்காவில் வசிக்கும் பேராசிரியர் குமார் சந்திரசேகரன் (Professor in Radiology with special interest in abdominal imaging, Mayo Clinic, Arizon, US) அவர்கள், 2019.09.27 முதல் 17.08.2020 வரை 35 காணொலிக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு இரைப்பை-குடல் பகுதியில் ஏற்படும் புற்றுநோய் தொடர்பில் CT, MRI படங்களுக்கான தனது நிபுணத்துவ ஆலோசனையை வடபகுதியில் உள்ள கதிரியக்கவியல், விசேட வைத்திய நிபுணர்களுடன் பகிர்ந்துள்ளார்.

பேராசிரியர் குமரேசன் அவர்களுடன் இரைப்பை குடல் சிகிச்சையியல் பேராசிரியை சி.வி. சிவானந்தம் (An Academic Gastroenterologist special interest on Inflammatory bowel disease, University of Mississippi) அவர்களும் தற்போது இக்கருத்தரங்கில் இணைந்துள்ளார்.

### (ஆ.) நரம்பு மற்றும் தசை - எலும்புப் படங்களுக்கான நிபுணத்துவக் கருத்தமர்வு (NESL MDT-Neuro-Musculoskeletal CT, MRI Experts' Forum)

நரம்பு மற்றும் தசை - எலும்புப் படங்களுக்குத் தேவைப்படும் மேலதிக ஆலோசனை களைப் பெற்றுக்கொள்ளும் காணொளிக் கலந்துரையாடல்கள் 2020 பெப்ரவரி 24 இல் ஆரம்பிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா மருத்துவமனையில் தொலைமருத்துவ (Telemedicine) வசதிகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரியக்கவியல் வைத்திய நிபுணர் நிருசினி சத்தியகுமார் (Radiologist - Musculoskeletal Imaging, New Zealand), மருத்துவப் பேராசிரியை ரூபி மகேஸ்வரன் (Senior Consultant, Head of Neurosurgery, Department at Haukeland, Hospital in Bergen, Norway), நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் பேராசிரியர் கதிர் நடனச் சந்திரன் (Neurosurgeon in Canberra for over 31 years and as a Clinical Associate Professor in the Australian National University) கதிரியக்கவியல் வைத்திய நிபுணர் சிவகுமார் ராஜரட்ணம், (An Australian based health professional, trained as a Radiologist (General) and practice located in Newcastle West), கதிரியக்கவியல் வைத்திய நிபுணர் பொன் கேதீஸ்வரன் (Consultant Radiologist, Quantum Radiology, Special interest in MRI and Musculoskeletal Imaging including Sports Medicine and Pain Management) முதலானோர் இத்தொடர் காணொளிக் கருத்தமர்வுகளில் நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

2019 - 2020 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் யாழ். போதனாவில் செய்யப்பட்ட ஊடுகதிர், காந்த அதிர்வுப் பரிசோதனைகளில் தெரிவு செய்யப்பட்ட 300 இற்கும் அதிமான படங்களுக்குத் (CT and MRI images) தேவையான மேலதிக நிபுணத்துவ ஆலோசனைகள் (International Experts' Opinion) காணொளிக் கருத்தமர்வின் மூலம் பெறப்பட்டுள்ளமையானது எமது வைத்தியசாலைக்கும் வட பகுதி மக்களுக்கும் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

## 2. கொரோனா சிகிச்சைப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கான கருத்தமர்வு (Experts, Experience Sharing Discussion with TH Jaffna COVID 19 Frontliners)

பல்வேறு நாடுகளிலும் கொரோனா மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் விசேட வைத்திய நிபுணர்கள் யாழ். போதனா வைத்தியசாலை கொரோனா சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுடன் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் காணொலிக் கலந்துரையாடல்கள் 2020.03.28 இல் ஆரம்பிக்கப்பட்டன.

விசேட வைத்திய நிபுணர் வானதி சூரியகுமார் (Specialist in Infectious Diseases, Liverpool Hospital, Australia), உணர்வழியியல் விசேட வைத்திய நிபுணர் கௌரிபாலன் (Consultant Anaesthetist Kingston Hospital, UK) அவசர சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் இரட்ணம் சதானந்தன் (Specialist In Emergency Medicine, University Hospital Coventry and Warwickshire, UK) தொற்றுநோயியல் விசேட வைத்திய நிபுணர் இந்துமதி வெங்கடாசலம் (Specialist In Infectious Diseases, Singapore General Hospital) அவசர சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் பொன்னுத்துரை ஜெயரூபன் (Specialist in Emergency Medicine, Directors of ED Training (DEMT) Blacktown Hospital, NSW), குடும்பநல வைத்திய நிபுணர் பேராசிரியர் வரகுணன் மகாதேவன் (Family Physician, Palliative Care Physician, Asst. Professor of Clinical Family Medicine at McMaster University, Examiner College of Family Physicians of Canada, President - IMHO Canada), மருத்துவப் பேராசிரியை சி.வி.சிவானந்தம், கதிரியக்கவியல் விசேட வைத்திய நிபுணர் பொன் கேதீஸ்வரன் ஆகியோர் தமது அனுபவங்களையும் கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும்போது உத்தியோகத்தர்கள் பின்பற்றவேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் முதலான விடயங்களையும் காணொளிக் கலந்துரையாடல் மூலமாக எமது வைத்தியசாலை உத்தியோகத்தர்களுடன் பகிர்ந்து கொண்டமை மிகவும் பயனுடையதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மருத்துவப் பேராசிரியர்கள், வைத்திய நிபுணர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் தன்னார்வமாக, நிபுணத்தவ ஆலோசனைகளை எமக்கு வழங்கிவருவது மகிழ்ச்சிக்குரியது. இவர்கள் அனைவருக்கும் யாழ். போதனா வைத்தியசாலை சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.துவாரகன் வைத்திய நிபுணர்களுடனான தொலை மருத்துவக் கற்றல் கருத்தமர்வுகளைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தி வருகின்றார். அவருடன் வைத்திய நிபுணர் பொன். கேதீஸ்வரன் (அவுஸ்திரேலியா) உலகின் பல நாடுகிளில் வாழும் வைத்திய நிபுணர்களை இணைத்து பலதுறைசார் நிபுணர்கள் கலந்துகொள்ளும் இணையவழி மருத்துவக் கருத்தமர்வுகளை மிகவும் அர்ப்பணிப்புடன் ஒழுங்குபடுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2020 ஆகஸ்ட் 17 வரை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் முதலான வைத்தியசாலை உத்தியோகத்தர்களுடன் பன்னாட்டு விசேட வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்ட 78 தொலைமருத்துவக் கருத்தரங்குகள் (Experts' Opinion Forum) யாழ். போதனா வைத்தியசாலையால் ஒழுங்குபடுத்தப்பட்டு நிறைவேறியுள்ளன. எதிர்காலத்தில் இவை மேலும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படும்.

தொலை மருத்துவ காணொலிக் கருத்தமர்வுகள் ஸ்கைப் (Skype), சூம் (Zoom) ஆகிய பயன்பாட்டு செயலிகளைப் பயன்படுத்தி நடைபெறுகின்றன. தொலை மருத்துவக் கருத்தரங்குகளுக்காக NESL NEURO MSK MRI FORUM, NESL COVID19 GROUP ஆகிய 2 'உவட்சப்' (புலனம்) குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கருத்தரங்குகளின் பின்னர் புலனத்தில் ஆவணங்கள், கருத்துக்கள் பகிரப்பட்டு வருவதால் மேலதிக விளக்கங்கள் எமது வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

## 3. யாழ். போதனா வைத்தியசாலையின் பொதுமக்களுக்கான தொலை மருத்துவ சேவை (TH Jaffna Telemedicine Services for Patients)

யாழ். போதனா வைத்திய சாலையினால் பொதுமக்களுக்கான தொலை மருத்துவ சேவை வழங்குவது அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸினது தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் பொதுமக்கள் மருத்துவ சேவைகளைப் பெற்றுக கொள்ள வைத்தியசாலைக்கு வரமுடியாத நிலை காணப்படும் சந்தர்ப்பத்தில் காணொலிக் கலந்துரையாடல் மூலம் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் பொறிமுறை யாழ். போதனாவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2020.04.15 அன்று தாவடியைச் சேர்ந்த சிறுமி ஒருவர் வைத்தியசாலைக்கு வருகை தராமலே காணொலி மூலமாக (விடியோ கலந்துரையாடல்) யாழ். போதனா வைத்திய சாலை நரம்பியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ஜீவகன் அவர்களிடமிருந்து மருத்துவ ஆலோசனையைப் பெற்றுள்ளார். இவர் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக யாழ். போதனா வைத்தியசாலை நரம்பியல் கிளினிக்கில் சிகிச்சை பெற்று வருகிறார். நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரமுடியாத நிலையில் தொலை மருத்துவப் பொறிமுறையூடாக இவருக்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது. 2020.04.17 அன்று முல்லைத்தீவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் காணொலி மூலமாக யாழ். போதனா வைத்தியசாலை நரம்பியல் வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி ஜீவகன் அவர்களிடம் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவமனைப் பணி தொடர்வோம்...

நிழலின் அருமை வெயிலில் தெரியும்
உடலின் பெருமை நோயில் புரியும்
உறவின் அருமை தனிமையில் விளங்கும்
வைத்தியசாலைப் பணியின் அருமை - அப்
பணிபுரிவோரில் தெரியும்.
ஞாயிறு, வெள்ளி திருப்பலியும்
நற்கருணை எழுந்தேற்றமும்
நலம் சேர்க்கும் மனங்களிற்கு
உரமூட்டும் ஆன்மாவுக்கு
உறவுகளின் கைவிடலும்
நோயின் அரவணைப்பும்
துயரப்படும் மனங்களுக்கு
ஆறுதலளிக்கும் அரும்பணி
விபத்தொன்றில் சிக்கி மருத்துவமனையில்
தான் பட்ட துயரம் அடுத்தவன் பட வேண்டாம்
என்ற எண்ணத்தில் உதித்து
அமல மரித்தியாகி ஒருவரின் இப்பணி
காலத்தின் தேவைகள் அறிந்து செயற்பட்ட
அரும்பணியாம் இப்பணியில்
கடந்தது ஆண்டுகள் நாற்பது
கைகோர்த்தோர் பலருண்டு
தியாகிகளின் 20வது பெயரில்
தொடர்கிறது இப்பணி
குருக்களுடன் சேர்ந்தியங்கும்
குருமட அருட்சகோதரரின்
குறைவில்லாப் பங்களிப்பும்
அருட்சகோதரிகளின்
இடைவிடா சேவையும்
தன்னார்வப் பணியாளரின்
தணியாத பணியார்வமும்
இடைவிடா இச்சேவை
இறைவன் அளித்த வரம்
விடுதித் தரிசிப்புகளும்
வருந்திய மனநிலையில் உள்ளோர்க்கு
அரிய மருந்தாகிறது
இனம், மதம் கடந்து ஆற்றும் இப்பணி
தொடர்ந்து நடைபெற வேண்டுவோம்
நன்று நன்று நல்ல ஊழியனே
நோயுற்றிருந்தேன் எனைப் பார்க்க வந்தாய்
இறைமகன் அருளிய இவ்வார்த்தையை
நினைவிருத்திப் பணி தொடர்வோம்.

**ஜஸ்மின் ஜோசேப்**
**ஆன்ம நலன்பேணும் தன்னார்வப் பணியாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் போதனா வைத்தியசாலையின்

# ஆரம்ப கால வரலாறு

தற்போது யாழ் போதனா வைத்தியசாலை (Teaching Hospital Jaffna) என்ற பெயருடன் யாழ் நகரில் அமைந்துள்ள வைத்தியசாலையானது யாழ்ப்பாணம் வைத்தியசாலை (Jaffna Hospital), யாழ். வைத்தியசாலை என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. Yarl Hospital – யாழ். வைத்தியசாலை என்பது யாழ்ப்பாணம் வைத்தியசாலை என்பதன் சுருக்கிய வடிவமே. இப்பெயரில் தனியார் வைத்தியசாலை ஒன்றும் திருநெல்வேலியில் இயங்கி வருகின்றது. யாழ்ப்பாணம் வைத்தியசாலையானது பெரிய ஆசுப்பத்திரி என்றும் யாழ்ப்பாண மக்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. முன்பு இதனை தரும ஆசுப்பத்திரி என்றும் அழைத்தனர்.

யாழ் போதனா வைத்தியசாலை ஆரம்பத்தில் ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலை (Friend-in-Need Society's Hospital- F.N.S. Hospital) என்றே அழைக்கப்பட்டது. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வசித்த ஐரோப்பியர்கள் சிலர் ஒன்றிணைந்து யாழ்ப்பாண மக்களுக்கு சேவை செய்யும் நோக்குடன் ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகம் (Friend-in-Need Society) என்ற பெயரில் ஒரு கழகத்தை உருவாக்கினர்.

இந்த ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் 09/03/1841 செவ்வாய்கிழமை மாலை நீதிமன்ற வளாகத்தில் கப்டன் கோச்ரேன் (Captain Coachrane) தலைமையில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் யாழ் மத்திய கல்லூரி தாபகர் பீற்றர் பேர்சிவல் (Peter Percival), நீதிமன்ற காரியதரிசி எப்.சி.கிறீனியர் (F.C. Greenier) ஆகியோர் கலந்துகொண்டனர். மாதாந்த சந்தாப் பணமாக 8 பவுண்ஸ் அறவிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

## யாழ் போதனா வைத்தியசாலையின் தாபகர் பேர்சிவல் அக்லண்ட் டைக் (Percival Acland Dyke)

பேர்சிவல் அக்லண்ட் டைக் - இவரே யாழ் மாவட்டத்தின் முதலாவது அரசாங்க அதிபராகக் கடமையாற்றியவர் (01.10.1829 - 09.10.1867). அக்காலத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு அளப்பரிய சேவை செய்துள்ள அதிகாரிகளில் அக்லண்ட் டைக் முதன்மையானவர். தற்போது பழைய பூங்கா என அழைக்கப்படும் அரச அதிபர், ஆளுநர் இல்லம் மற்றும் அயலில் உள்ள அலுவலகங்களில் உள்ள மரங்கள் யாவும் இவரால் நாட்டப்பட்டவையே. டைக் இங்குள்ள மரங்களில் உள்ள பூக்களின் நறுமணத்தை சுவாசித்தும் பழமரங்களின் கனிகளை சுவைத்தும் வந்தார். பொதுக்களும் அனுமதி பெற்று இப் பூங்காவைப் பார்வையிட்டும் பூங்காவிலுள்ள கனிகளைப் புசித்தும் வந்தனர்.

தற்போது போதனா வைத்தியசாலையாக உருவாகியுள்ள யாழ்ப்பாணம் வைத்தியசாலையை தாபித்தவர் இவரே. 1850 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலை (Friend-in-Need Society's Hospital) என்ற பெயரில் யாழ்ப்பாணம் வைத்தியசாலை உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாண அரசாங்க அதிபராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த பேர்சிவல் அக்லண்ட் டைக் (Percival Acland Dyke) உதவி அரசாங்க அதிபராக இருந்த வில்லியம் துவைனம் (William Tywnam) ஆகியோரிடம் வைத்திய சாலை கட்டுமானப் பணிகள் ஒப்படைக்கப்பட்டன. அரசாங்க அதிபர் டைக் ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தின் மூலமும் தனது நண்பர்களிடமும் நிதி சேகரித்து ரூபா பத்தாயிரம் வழங்கினார். அரசாங்க அதிபர் அக்லண்ட் டைக் தனது வருமானத்தின் பெரும் பகுதியை யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் (F.N.S. Hospital) கட்டடப் பணிகளுக்காகச் செலவிட்டார்.

கோப்பாயில் வசித்து வந்த அரசாங்க அதிபர் அக்லண்ட் டைக்கின் பூதவுடல் அவர் காலமான 1867 ஒக்டோபர் 9 ஆம் திகதியன்றே யாழ் பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. டைக்கிற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ்ப்பாணத்திலிருந்த அரச அலுவலகங்கள் 4 - 5 தினங்கள் மூடப்பட்டன.

## ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலை
## (Friend-in-Need Society's Hospital- F.N.S. Hospital)

1850 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி வைத்தியசாலையின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன. வயல்வெளிகள் தோட்டங்கள் என்பனவற்றின் நடுவிலேயே ஆரம்பத்தில் வைத்தியசாலை அமைந்திருந்தது. இரண்டு விடுதிகளுடன் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது. விடுதிகளுக்கு விக்ரோரியா மகாராணியின் பெயர் சூட்டப்பட்டது. (Victoria Jubilee Ward, Victoria Lying In Ward) பொது சிகிச்சை விடுதி, தோல் சிகிச்சை விடுதி என்பவற்றில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரவர்களின் மதம், சாதி என்பவற்றுக்கு உரிய மதிப்பு அளித்து சிகிச்சை வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறுவோருக்கு உணவு வழங்குவதற்காக சமையற்காரர்களும் நியமிக்கப்பட்டனர். இங்கு இருபத்திநான்கு மணிநேரமும் சேவை வழங்கப்பட்டது. விடுதியில் தங்கிநின்று சிகிச்சை பெற்றவர்களுக்கு உடைகளும் வழங்கப்பட்டன.

வைத்தியசாலையை நிர்வகிக்கும் பொறுப்பு அரசாங்க அதிபர் டைக்கிடமும் உதவி அரசாங்க அதிபர் துவைனத்திடமும் ஒப்படைக்கப்பட்டது. இந்த வைத்தியசாலை ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலை (Friend-in-Need Society's Hospital) என அழைக்கப்பட்டது. 1890 ஆம் ஆண்டு மே மாதம் வைத்தியசாலைக்கு ஆறாயிரம் ரூபாநிதி உதவி வழங்கப்பட்டது.

14.12.1899 அன்று யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்திய சாலையை அரசாங்கத்திடம் கையளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. 12.10.1905 வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்தியசாலையை அரசாங்கத் திடம் கையளிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசாங்கத்திடம் கையளிப்பதில்லை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும் இத்தீர்மானம் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

1907 இல் வைத்தியசாலை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. அன்று முதல் ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலை என அழைக்கப்பட்டு வந்த வைத்திய சாலை யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை (Jaffna Civil Hospital) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டபோது வைத்தியசாலைக் கட்டடத்தின் பெறுமதி ரூபா 20,000.00 என மதிப்பீடு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1907 இல் சபாபதியும் சட்டத்தரணி சங்கரப்பிள்ளையும் visitors ஆக (வைத்தியசாலை மேற்பார்வை-நிர்வாகம்) நியமிக்கப்பட்டனர் (வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது). 12.04.1909 இல் சட்டத்தரணி திருநாவுக்கரசு ஞாபகார்த்தமாக வெளிநோயாளர் மருந்தகம் நிறுவுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. சேர் அலன்பெரி (Sir. Alen Pery) அடிக்கல்லை நாட்டினார். 01.03.1919 இல் பணம் கொடுத்து பராமரிக்கும் விடுதி (paying ward) திறந்து வைக்கப்பட்டது.

## ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலையில் (F.N.S. Hospital) கடமையாற்றிய வைத்தியர்கள்

**Dr.J.Evarts (இவாட்ஸ்)** : சத்திர சிகிச்சை நிபுணராக (Residential Surgeon) அரசாங்க அதிபர் டைக்கினால் நியமனம் செய்யப்பட்டார். இவரது கடைசி மகன் அல்பிரட் இவாட்சும் பின்னாளில் மருத்துவராக கடைமையாற்றினார்.

**Dr.S.Green (சாமுவேல் கிறீன்)** : ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலையின் முதலாவது வருகை சத்திர சிகிச்சை நிபுணராகவும் கடமையாற்றினார்.

**Dr. William Paul (வில்லியம் போல்)**: மானிப்பாய் கிறீன் மெமோறியல் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ பட்டப்படிப்பை பூர்த்தி செய்த னுச.வில்லியம் போல் 1874 ஆம் ஆண்டு சத்திர சிகிச்சை நிபுணராக (Residential Surgeon) நியமனம் செய்யப்பட்டார்.

**Dr.C.T. Mills (மில்ஸ்)** : முதலாவது மருந்தாளராகக் கடமையாற்றிய அதேவேளை சத்திரசிகிச்சை நிபுணராகவும் கடமையாற்றினார். (First Dispenser and Residential Surgeon)

**Dr.Danforth இடன்போர்த்** : மானிப்பாய் கிறீன் மெமோறியல் மருத்துவக்கல்லூரியில் மருத்துவ பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பின் அமெரிக்காவில் ஆனு பட்டம் பெற்ற Dr.இடன்போர்த் சத்திர சிகிச்சை நிபுணராக நியமனம் செய்யப்பட்டார்.

**Dr.Dutton (இடற்றன்)**: பொதுவைத்திய நிபுணராகவும், சத்திரசிகிச்சை நிபுணராகவும் கடமையாற்றினார்.

ந.பரமேசுவரன்

பா.துவாரகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியாளர்களின் மகிழ்வின் தருணங்கள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் ஆரம்பத்தில் கடமையாற்றிய மருத்துவர்கள்

Dr. F.G.Spital ,

Dr. C.Kandaiah,

Dr. Gnanam Cooke (House Surgeon)

**References:**


1. Hindu Organ
2. History of Jaffna by John
3. Ceylon Observer
4. Morning Star
5. Catholic Guardian
6. Biographical Sketches of Puvirajasinga Mudaliyar
7. யாழ் மாவட்டச் செயலக பொன்விழா மலர் 2015




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் அமலமரித் தியாகியின் பணிபற்றி ஒரு தாதியின் உள்ளத்திலிருந்து....




அருட்பணி ஏற்று ஐம்பது ஆண்டாகியும் - உம்
பணி ஓயவில்லை ஆண்டவரின் ஆசியினால்
ஆண்டவனின் கொடைகளில் ஆயுளும் ஒன்றல்லோ - பல
ஆண்டுகள் கண்டு தாங்கள் பல்லாண்டு வாழ வேண்டும்.

தாயின் கருவறையில் தந்தையை இழந்த தாங்கள்
தாய்க்கொரு தனிமகனாய் தரணியில் அவதரித்தீர்
தாயின் அரவணைப்பில் தரணியில் துளிர்விட்டீர்
தப்பில்லா பாதையில் தாயன்பில் தலை நிமிர்ந்தீர்

பன்னிரண்டு வயதிலே தடம்பதித்தீர் குருமடத்திலே - தாங்கள்
சிலுவை தாங்கிய குருவாக வேண்டும் என்று
தாயின் கனவுகளை நனவாக்க உழைத்த - நீரும்
அமலமரித்தியாகி என்னும் அருட்பொழிவு பெற்றுச் சென்றீர்

குருமட அதிபராகி பல பண்பான குருக்களை உருவாக்கி விட்டீர் - உம்
அர்த்தமுள்ள பயிற்சியினால் பலர் பண்பான குருக்காளானார்
இறைபணி உம் வாழ்வில் எல்லையற்ற இறை இரக்கமல்லோ - உம்
பயிற்சி பணி தொடர பாராட்டி வாழ்த்துகிறோம்.

அருட்பணி என்றால் ஆலயத்தில் மட்டுமல்ல
மருத்துவமனையிலே வருந்துகின்ற நோயாளிகளுக்கு
ஆறுதலும் இறையாசீரும் தேவை என நீர் உணர்ந்தீர்
ஆண்டவனின் ஆசியினால் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்து
ஒன்பதில் ஆன்மீகக் குருவாகத் தடம் பதித்தீர் - யாழ்
போதனா மருத்துவமனையில்

நோயாளர் குணம் பெறவும் பணியாளர் பணி சிறக்கவும் - உம்
ஆன்மீகப் பணியினிலே பல துன்பங்கள் வந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உடலாலும், உள்ளத்தாலும் பாதித்தோர் பயன்பெற்றார் - உம்
அழகான ஆர்வமான ஆன்மீகப் பணியினிலே

யாழ் போதனா மருத்துவமனையிலே நோயாளர் மட்டுமல்ல
மாணவத் தாதியர் நாம் பயன்பெற்றோம் உம் பணியில்
உறவுகளைப் பிரிந்து தொலைதூரம் வந்த எம்மை - உம்
உளவியல் உத்திகளால் உரமூட்டி எமக்குறுதி தந்தீர்

ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து ஒன்பதிலே பண்டத்தரிப்பில் - உம்
ஆன்மீகக் கருத்தரங்கில் ஐந்து நாள் பயிற்சி பெற்றோம்.
முப்பது ஆண்டாகியும் மறக்க முடியவில்லை - உம்
ஆழமான அழகான ஆன்மீகக் கருத்துக்களை
ஆண்டவன் ஆசியினால் உம்பணி தொடர வேண்டும்

இலங்கையில் மட்டுமன்றி கனடா தேசம் சென்று - உம்
உயர்படிப்பை முடித்து உம் பணியில் மெருகு பெற்றீர்
பிலிப்பைன்ஸ், சீனா, லண்டன் என்று - பல
தேசத்திற்கும் பறந்து சென்று பக்குவமாய் பணி செய்து வந்தீர்

என்ன அதிசயம் குருக்களின் உருவாக்கத்தில் - உம்
பணி ஓயவில்லை
உடல் உள நலத்துடன் பல்லாண்டு வாழ வேண்டி
வாழ்த்துகின்றேன் என் மனம் நிறைந்து
வாழ்க வாழ்க என இறையாசீர் வேண்டுகின்றேன்
உம் பாதம் பணிகின்றேன்




செல்வி அ.ஆனாள்
தாதிய பரிபாலகி
மாவட்ட பொது மருத்துவமனை
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மருத்துவமனைப் பாதுகாவலியின் அற்புதத்திற்கான சாட்சியம்

எனது அம்மா ஒரு ஆசிரியை. எவ்வித மருத்துவங்களையும் விரும்பாத அவர் 8 வருடங்களுக்கு முன்னர் காதுக் குத்தினால் தொடர்ந்து சில நாட்களாக மிகுந்த வேதனையை அனுபவித்தார். வலியின் உச்சத்தினால் மருத்துவமனையை நாடினார். இரு முறை சிகிச்சை பெற்றும் குணமடையாததினால் மருத்துவமனை ஆரோக்கிய அன்னையிடம் வந்து கண்ணீருடன் சுகம் பெற வேண்டினார். வீடு சென்ற என் அம்மா காதுக் குத்திலிருந்து முற்றாகக் குணமடைந்தார். இன்றுவரை அவர் காது தொடர்பான எவ்வித சுகவீனத்தையும் எதிர்கொள்ளவில்லை.

எனது சித்தி மன்னாரில் அதிபராகக் கடமையாற்றுகிறார். 04 வருடங்களுக்கு முன்னர் வயிற்று வலியால் நோய்வாய்ப்பட்டு யாழ் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டார். மருத்துவர்கள் அவரைப் பரிசோதித்த பின்னர் அவரது சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவருக்கு உடனடியாக கூழ்மப்பிரிப்பு (Dialysis) மேற்கொள்ள வேண்டுமெனவும் கூறினர். என் அம்மாவின் கைத்தாங்கலுடன் ஆரோக்கிய அன்னையின் சந்நிதிக்கு வந்த என் சித்தி அங்கே கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் அளிக்கும் பாப்பரசரின் படத்தைக் கண்டு அக்கா பாப்பரசர் என்னைக் கூப்பிடுகிறார் எனக் கூறிக் கதறி அழுது மயங்கி விழுந்தார். சிறிது நேரத்தில் எழுந்து அன்னையை மன்றாடிய பின் அவரது வாட்டிற்கு சென்றார். மறுநாள் அவரை மீண்டும் பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு எவ்வித நோயும் இல்லையெனவும் அவர் சுகதேகியாக உள்ளார் எனவும் உறுதியாகக் கூறினர். இன்றுவரை எனது சித்தி எவ்வித நோயுமின்றி ஆரோக்கியமாக உள்ளார். இவை ஆரோக்கிய அன்னையின் அற்புதங்களுக்கான உண்மைச் சான்றுகள் ஆகும்.

ஆக்கம்
செல்வி ப.வினுஷியா
தாதிய கல்லூரி மாணவி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணித்தலை மகிழ்வின் தருணங்கள்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nursing as a Christian ministry

Of all the professions, nursing has one of the strongest claims to being rooted almost uniquely in the gospel of Jesus Christ. Yet, modern nursing today is very much distanced in its language, theory and philosophy from Christianity. Likewise, most churches do not seem to have space for nursing as a ministry or as an expression of the mission of the church to proclaim the Good News to the whole of creation (Mark 16:15). This was not always the case. But how can nursing, as a profession, be a ministry of the church? And how can we carry out Christian ministry in our hospital, clinic or community practice?

Jesus made it clear that to be his disciples we need to be engaged with the pain and suffering of a fallen, sinful creation. It is not enough to sit back and watch, we are called to get involved, to get our hands dirty helping the suffering and the lost. In Matthew 25:31-46, Jesus judges those who call on his name based on the care they show to people in need - the poor, the stranger, the sick and the imprisoned. More than that, to care for people in need was to care for Jesus himself - it was an act of Christian worship (see also Galatians 6:10). We are all made in the image of God (Genesis 1:27). Therefore - regardless of any other factors, such as age, race, gender, sexuality or social class - we are all worthy of the same respect and care. God has given us all value and dignity, but we are also all sinners in need of God's grace and forgiveness. No one is ultimately any better or worse than any other. So then, we are also called not to judge others, but to first recognise our own sinfulness and need of forgiveness (Luke 6:37).

Each person we encounter has been made for a relationship with God - a relationship that has been broken by human sin, but that can be made right and reconciled through Jesus' death on the cross. In other words, despite the fallen nature and sin of our patients and colleagues (and our own), each one of us has a longing for God (because that is what we were designed for), but which we can't satisfy apart from Jesus. So part of our role is to present Christ to others, in action and words. We care not just for our patients' bodies (although this isn't unimportant, 1 Corinthians 15); not for just their minds or social situations (though both are of great importance as well); but we also care about their spiritual needs, their need for meaning and significance, purpose, reconciliation and forgiveness - which is found only in Jesus Christ.

Care and compassion is a direct outworking of God's character. This was lived out by Jesus. Through sending Jesus, God himself became human. He experienced the same things we do - Jesus wept, experienced thirst, hunger, tiredness and can sympathise with our weakness. Ultimately he became a servant, taking the punishment we deserve through his death on the cross (Philippians 2:5-11). When confronted with people in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

need (spiritual or physical), Jesus was moved to compassion (Mark 8:1-8; Luke 7:11-15). In each case his compassion led to action that transformed the situation. On the cross, Jesus showed compassion in its most selfless form: he chose to lay down his life for our salvation.

Furthermore, we need to remember that God made us and has given us everything we have. Therefore, all aspects of our lives, including our gifts, skills and work belong to him. So whether we work for a church or a secular employer, Paul reminds us that 'whatever you do, work at it with all your heart, as working for the Lord, not for human masters' (Colossians 3:23). We should be seeking to serve God by working to the best of our ability in whatever we're doing.

In living out the Good News of Jesus in our work, it is not just what we do and how we do it that matters. It also the sort of person that we are as a result of our relationship with Jesus. It is about our character, which as Christians should be one marked by the fruit of the Spirit - love, joy, peace, patience, kindness, goodness, faithfulness, gentleness and self-control (Galatians 5:22).

Finally, we work not in isolation, but as part of a body (1 Corinthians 12:27). Jesus does not just save us as individuals, but the Father has adopted us into his family (Romans 8:14-17). We are there to encourage one another, equip one another, point one another to Jesus in our lives, correct one another, and together reflect Jesus to the whole world (John 13:35; 1 Thessalonians 5:11).

**How does this work out in practice?**

**1. Caring as worship** - caring for our patients as if physically caring for Jesus himself. Our nursing practice grows out of, and in direct response to, our relationship with God. Keeping our spiritual lives healthy is a vital part of our nursing practise.

**2. Caring as service** - laying down power and privilege to serve sinful humanity as Jesus did (Philippians 2:5-11). We seek to serve others, out of the same sense of service-as-worship, going beyond the basic requirements of our job description and professional codes to give Christ-like service to those in our care.

**3. Unconditional, patient-centred care** - because as Christians we believe that every human being is made in the image of God, we can know that each individual has value and dignity. This applies to how we relate to and work with our colleagues as well as how we care for our patients and their families.

**4. Caring for the whole person** - caring for bodily, psychosocial and spiritual needs of each patient as needed, in recognition that Christ values our physical, mental and spiritual wellbeing.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. Caring in community (or for one another)** - both the relationships with our secular colleagues and with fellow Christians. With our non-Christian colleagues we need to show care, support and professional accountability of highest order. So that we are 'doing what is right in the eyes of everyone. If is possible, as far as it depends on you, live and peace with everyone' (Romas 23-17-18). With our Christian colleagues, we need to recognise our dependence on God in prayer, reading Scripture and reflecting on God's Word with others. We need a godly community around us to help us live out our faith in the workplace every day, whatever that community might look like.

**Compiled by A. Alan - Nursing Student**

**2017ᴬ Batch**

**NTS - Jaffna**

The woman is at the heart of the home. Let us pray that we women realize the reason for our existence: to love and be loved and through this love become instruments of peace in the world.

".

**- St. Mother Teresa of Calcutta**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் போதனா வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சை வசதிகளும் அதன் அபிவிருத்தியும்

யாழ் போதனா வைத்தியசாலையில் 2017ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20, 21ஆம் திகதிகளில் இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் **சிதம்பரநாதன் முகுந்தன்** அவர்களின் தலைமையில் முதற்தடவையாக இதய நுரையீரல் மாற்றுவழி இயந்திரத்தினுடனான அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி (Cardio Pulmonary bypass machine with latest technology) இருவருக்கு திறந்த இருதய சத்திர சிகிச்சை (Open Heart Surgery) வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இது யாழ் போதனா வைத்தியசாலையின் வளர்ச்சியில் ஏற்பட்ட ஒரு முக்கிய மைல் கல்லாகும் (Milestone). தற்போது இலங்கையில் திறந்த இருதய சத்திர சிகிச்சை நடைபெறும் 4 அரச மருத்துவமனைகளில் ஒன்றாக யாழ் போதனா வைத்தியசாலை உயர்ந்திருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

இற்றைக்கு 30 வருடங்களுக்கு முன்னர் யாழ் போதனா வைத்தியசாலையில் நெஞ்சறை சத்திரசிகிச்சைப் பிரிவு ஒன்று இயங்கியுள்ளது. 1969 - 1970 காலப்பகுதிகளில் Dr.A.T.S.Paul தலைமையிலான குழு கொழும்பிலிருந்து வந்து போதனா வைத்தியசாலையில் நெஞ்சறை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளது. இதனைத்தொடர்ந்து Dr.Stephan, Dr.R.Natkunam, Mr.Rudra Rajaretnam போன்ற திறமைமிக்க நெஞ்சறை சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் 1984 வரை கடமையாற்றியுள்ளார்கள். இக் காலப்பகுதியில் நெஞ்சறை சத்திரசிகிச்சை உட்பட சில எளிமையான இருதய சத்திர சிகிச்சைகள் (CMV - Closed Mitral Valvotomy, PDA Ligation, ASD Closure) மேற்கொள்ளப்பட்டுள்ளன. அன்றைய காலப்பகுதியில் இருதயத்தின் செயற்பாட்டை நிறுத்தி மேற்கொள்ளும் சத்திரசிகிச்சைக்குரிய நவீன வசதிகள் காணப்படவில்லை. இருதயத்தின் செயற்பாட்டை நிறுத்தாது உடல் வெப்பநிலையைக் குறைப்பதன் மூலம் இருதயத்தை மந்த கதியில் இயங்கச் செய்து குறைந்த நேரத்தில் சிறிய அளவான சத்திர சிகிச்சைகளை மட்டுமே மேற்கொள்ளக்கூடியதாகயிருந்தது.

ஆனால், தற்போது அதிநவீன Pulmonary Bypass Machine (Heart Lung Machine) உதவியுடன் இருதய நுரையீரல் செயற்பாட்டை பூரணமாக நிறுத்தி நீண்டநேர சத்திரசிகிச்சை மேற்கோள்ளும் வசதி ஏற்பட்டுள்ளது. இப்போது செய்யப்படுகின்ற கடினமான சத்திரசிகிச்சைகள் 3 - 6 மணித்தியாலங்களுக்குமேல் நீடிக்கின்றன. சத்திரசிகிச்சையின் போது Cardiopulmonary Bypass Machine ஆனது தற்காலிகமாக இருதயத்தினதும் நுரையீரலதும் செயற்பாட்டை மேற்கொள்ளுகிறது. (Cardiopulmonary bypass (CPB) is a technique that temporarily takes over the function of the heart and lungs during surgery, maintaining the circulation of blood and the oxygen content of the patient's body. The CPB pump itself is often referred to as a heart–lung machine)

இருதய சத்திரசிகிச்சைக் குழுவில் இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா மருத்துவமனை
# இருதய சத்திரசிகிச்சை வசதிகளும் அபிவிருத்தியும்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபுணர் (Consultant Cardiothoracic Surgeon), மற்றும் மயக்க மருந்தியல் நிபுணர் (Consultant Anaesthesiologist), இதய வைத்திய நிபுணர் (Consultant Cardiologist), உதவி வைத்தியர்கள், பெபியூசனிஸ்ட் (CPB Machine ஐ இயக்குபவர்கள் - Perfusionists), தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள் அடங்குகின்றனர்.

யாழ் போதனா வைத்தியசாலையின் முதலாவது இருதய நெஞ்சறை சத்திரசிக்சை நிபுணர், வைத்தியகலாநிதி சிதம்பரநாதன் முகுந்தன் (Consultant in Cardiothoracic Surgery) ஒரு வருடத்திற்கு முன்பே நியமனம் பெற்றபோதும் உடனடி யாக சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடிய எந்த வசதிகளும் காணப்படவில்லை. இக்காலப் பகுதியில் இவர் கொழும்பு சீமாட்டி ரிச்வே சிறுவர் போதனா வைத்திய சாலையில் (LRH / Colombo) பகுதி நேரமாக சேவையாற்றிக் கொண்டு, சத்திர சிகிச்சைக் கூடம், அதிதீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை அமைப்பதிலும் சத்திர சிகிச்சைக்குத் தேவையான இயந்திரங்கள் (CPB Machine), மற்றும் உபகரணங்கள் போன்றவற்றை பெற்றுக் கொள்வதிலும், பெபியூசனிஸ்ட் (Perfusionists), தாதிய உத்தியோகத்தர்கள் முதலானோரை பயிற்றுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள் வதிலும் ஈடுபட்டிருந்தார்.

இக்காலப்பகுதியில் இங்கு கடமையாற்றிய 4 தாதிய உத்தியோகத்தர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை (NHSL), சீமாட்டி ரிச்வே சிறுவர் வைத்தியசாலை (LRH) ஆகியவற்றின் இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சைப் பிரிவுகளுக்குச் சென்று 3 மாத காலம் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டனர். மேலும் சுகாதார உதவியாளர்களும் இவ்வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டு உரிய பயிற்சிகளைப் பெற்றனர்.

யாழ் போதனா வைத்தியசாலையானது கொழும்பு மத்திய சுகாதார அமைச்சின் நேரடியான நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் வைத்தியசாலையாகும். இந்த ஆண்டு எமது வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சையை ஆரம்பிக்க கௌரவ சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி இராஜித சேனாரத்ன அவர்களும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களும் மற்றும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளும் போதியளவு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கியிருந்தனர். எதிர்வரும் ஆண்டில் முழுமையான ஆளணியினரை சுகாதார அமைச்சு நியமனம் செய்வதோடு புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

அதேவேளை கொழும்பு தேசிய வைத்தியசாலை, சீமாட்டி ரிச்வே வைத்தியசாலை, கண்டி போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகள் எமது தாதியர்கள் மற்றும் பெபியூஷனிஸ்ட் முதலா னோருக்கு பயிற்சிகளை வழங்கியதுடன் இதய நுரையீரல் மாற்றுவழி இயந்திரத்தினை இயக்குகின்ற பெபியூசனிஸ்ட் இருவரை எமக்குத் தற்காலிகமாகத் தந்து யாழ்ப்பாணத்தில் இருதய சத்திர சிகிச்சையை ஆரம்பிக்க உதவியமைக்காக இவ் வைத்தியசாலைகள் பணிப்பாளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ் போதனா வைத்தியசாலையில் இருதய நெஞ்சறை சத்திர சிகிச் சைக்கான தனியான கட்டடத்தொகுதி, முழுமையான ஆளணி மற்றும் முழுமையான உபகரணத் தொகுதி என்பவற்றைப் பெற்றுக்கொள்ள கடந்த ஒரு வருடமாக திட்டமிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றோம். இக்காலப் பகுதியில் பல கலந்துரையாடல்கள் மூலமாக எமக்கு கிடைத்த வசதிகளுடன் 2018 ஆரம்ப பகுதியில் இதய சத்திர சிகிச்சையை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தோம்.

சுகாதார அமைச்சு 2017ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணரை நியமித்த போதிலும் இருதய சத்திர சிகிச்சைக்கான பிரத்தியேக உணர்வழியியல் சிகிச்சை நிபுணரையும் ஏனைய வைத்தியர்களையும் நியமிக்கவில்லை. இருப்பினும் 2 வைத்தியர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டனர். இந்நிலையில் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் மயக்கமருந்தியல் துறையினர் (Department of Anaesthesiology) ஆளணிப் பற்றாக்குறை இருந்த போதிலும் இவ்வருடம் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள உதவினர்.

அதேவேளை சுமார் 30 மில்லியன் ரூபா பெறுமதியான இருதய சத்திர சிகிச்சைக்கான Cardiopulmonary Bypass Machine I கொள்வனவு செய்ய மத்திய சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. வெகுவிரைவில் அவ்வியந்திரம் எமக்கு கிடைக்கப்பெற்றுவிடும். இருப்பினும் புதிய இயந்திரம் வந்துசேரும் வரை குறிப்பிட்ட இயந்திரத்தை விற்பனை செய்யும் TERUMO- Hemas Surgicals & Diagnostics (PVT) LTD நிறுவனம் தன்னிடம் இருந்த இயந்திரத்தை எமக்கு வழங்கி 2017 இல் முன்கூட்டியே சத்திர சிகிச்சையை ஆரம்பிக்க உதவியிருந்தது.

சத்திரசிகிச்சையின் பின்னரான நோயாளரைப் பராமரிக்கும் 2 படுக்கைகளைக் கொண்ட அதிதீவிர சிகிச்சைப் பிரிவே (CT/ICU) தற்போது வைத்தியசாலையில் காணப்படுகின்றது. எனவே நிலையான கட்டடத் தொகுதியும் மற்றும் போதியளவு மயக்கமருந்தியல் நிபுணர்களும் ஏனைய வைத்தியர்களும் போதிய தாதியர்களும் நியமிக்கப்படுமிடத்து இருதய சத்திர சிகிச்சையை மேலும் சிறப்பாகச் செய்ய முடியும். தற்போது இருக்கின்ற வளங்களைக் கொண்டு போதனா வைத்தியசாலையில் வாரத்திற்கு 2 சத்திர சிகிச்சைகளை மாத்திரமே செய்து கொள்ளகூடியதாயுள்ளது.

இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக தற்போது 360 இற்கும் மேற்பட்டவர்கள் பதிவுகளை மேற்கொண்டிருக்கின்றனர். எதிர்வரும் ஆண்டில் இருந்து இருதய முடியுரு நாடிகளில் ஏற்படும் அடைப்புக்களுக்கான சத்திர சிகிச்சை (Coronary Artery Bypass Graft Surgery (CABG)), இதய வால்வு மாற்று சத்திர சிகிச்சை (Valve Replacement Surgery), பிறப்பிலிருந்து இதயத்தில் ஏற்படுகின்ற அமைப்பு ரீதியான அசாதாரண மாற்றங்களுக்கான சீரமைப்பு சத்திர சிகிச்சை (Corrective Surgery for Congenital Cardiac Defect) முதலான சேவைகள் விரிவாக்கப்பட்டு சில ஆண்டுகளில் மிகச் சிறப்பான இருதய சத்திரசிகிச்சைகளை யாழ் போதனா வைத்தியசாலையில் வழங்க முடியுமென எதிர்பார்க்கின்றோம்.

யாழ் போதனா வைத்தியசாலையில் திறந்த இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கு பலர் தனிப்பட்ட முறையிலும் உதவியுள்ளனர். குறிப்பாக இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் (Consultant Cardiothoracic Surgeon) வைத்திய கலாநிதி சிதம்பரநாதன் முகுந்தன் பல தடவைகள் சுகாதார அமைச்சிற்குச் சென்று சத்திர சிகிச்சைக்குத் தேவையான சத்திரசிகிச்சைக்கூடம், அதிதீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றின் உள்ளக வசதிகளை ஏற்படுத்துவதிலும் உபகரணங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதிலும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அதேவேளை இருதய சத்திரசிகிச்சை பொறுப்புத் தாதிய உத்தியோகத்தர் திருமதி. கிறிஸ்தோபர் ரமேஸ்குமார், தேசிய வைத்தியசாலைக்குச் சென்று உரிய பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டதோடு உள்ளக ஒழுங்கமைப்பு வேலைகளையும் செய்துள்ளார். மேலும் இவர் சுகாதார அமைச்சின் மருந்துகள் சேவைகள் வழங்கல் பிரிவிற்கு பலதடவைகள் சென்று சத்திர சிகிச்சைக்குரிய உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உதவியுள்ளார். அத்துடன், சிரேஷ்ட உணர்வழியியல் சிகிச்சை நிபுணர் சுந்தரலிங்கம் பிறேமகிருஸ்ணா (Consultant Anaesthesiologist) அவர்களும் ஏனைய உணர்வழியியல் சிகிச்சை நிபுணர்களும் மற்றும் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் இருதய சிகிச்சை நிபுணர்களும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி இந்த சத்திரசிகிச்சையை இந்த ஆண்டு ஆரம்பிக்க உதவியுள்ளனர்.

அண்மையில் பிரதான நாளிதழ் ஒன்றில் இதைப் பற்றித் தவறான செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எனவே யாழ் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப் பட்ட திறந்த இருதய சத்திரசிகிச்சை, இதன் உருவாக்கம் பற்றி பொதுமக்கள் தெளிவாக அறிந்துகொள்வது நன்று.

யாழ் போதனா வைத்தியசாலையில் முதற்தடவையாக மேற்கொள்ளப்பட்ட திறந்த இருதய சத்திர சிகிச்சையானது (Open Heart Surgery) முழுமையாக மத்திய சுகாதார அமைச்சின் நிதியுதவி மற்றும் ஆலோசனை வழிகாட்டலுடன் ஆரம்பிக் கப்பட்டது. இதற்காக எந்த ஒரு தனிநபர்களதும் தனியார் நிறுவனங்களதும் நிதி உதவிகளோ இயந்திர, உபகரணங்களோ பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பணிப்பாளர்**
**வைத்திய கலாநிதி. த. சத்தியமூர்த்தி**
**யாழ் போதனா மருத்துவமனை.**

"We are to love God for Himself, because of a twofold reason; nothing is more reasonable, nothing more profitable."
**- St. Bernard of Clairvaux**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பேதுருப்பிள்ளை எட்வேட்

**பிறப்பு:** 28/10/1928

**இறப்பு:** 16/05/2015

**இடம்:** வடமராட்சி கிழக்கு, தாளையடி, யாழ்ப்பாணம், இலங்கை.

இவர் பல இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் ஆண் தாதியாகப் பணிபுரிந்தவர். 1967ம் ஆண்டு யாழ் போதனா மருத்துவமனைக்கு மாற்றலாகி வந்த இவர் பின்னர் அலுவலகராக (Officer) பணிமாற்றம் செய்யப்பட்டு ஓய்வுநிலை வரை அயராத அர்ப்பணிப்புடன் கூடிய பணியாளராகப் பணிபுரிந்து வந்தவர். கத்தோலிக்க விசுவாசியாகப் பணிபுரிந்த இவர் மருத்துவமனையில் இந்து மத சகோதரருக்கு ஆறுதலடைய ஒரு பிள்ளையார் கோவில் இருப்பதையும், கத்தோலிக் கர்களுக்கென ஓர் கிறிஸ்தவ ஆலயம் இல்லாமையையும் உணர்ந்தார்.

கிறிஸ்தவ நோயாளிகள் கொண்டிருந்த தங்கள் வழிபாட்டுக்கென ஒரு ஆலயம் இல்லை என்ற எண்ணத்தையும் நோயாளர்களின் ஆதங்கத்தையும் கவலையையும் அறிந்தார். அக்காலகட்டத்தில் யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாக இருந்த மாம்பழம் சுவாமி என அழைக்கப்பட்ட ரி.தேவதாசன் அவர்கள் மருத்துவமனை நோயாளர்களுக்கு அடிக்கடி நற்கருணை கொண்டு வந்து கொடுப்பது வழமை. அவரிடம் திரு. எட்வேட் அவர்களால் இந்தக் குறை எடுத்துக்கூறப்பட்டது. மருத்துவமனையில் ஆலயத்தின் தேவையினையும் முக்கியத்துவத்தினையும் குருவானவரும் உணர்ந்தார். எனவே திரு எட்வேட்டும் குருவானவரும் ஒரு சில கத்தோலிக்க வேலையாட்களும் இணைந்து 1972ம் ஆண்டளவில் ஆலயம் ஒன்று கட்ட முடிவெடுத்தனர். அந்நிலையில் யாழ் திருக்குடும்ப கன்னியர் சபையின் கன்னியரின் உதவியும் கிடைத்தது. இவர்களில் அருட்சகோதரி கிறிஸ்ரபெல் அவர்களும் இம் முயற்சிக்கு முழு மூச்சாக இருந்தார். இம் முயற்சிக்கு நிதி பெரியதோர் விடயமாகக் காணப்பட்டது. இதற்காகப் பல கிறிஸ்தவ பெரியவர்களும் பிற மத நன்கொடையாளர்களும் நலன்விரும்பிகளும் நிதி அன்பளிப்புச் செய்தனர். இதை விட விசேடமாக யாழ்ப்பாணம் றீகல் தியேட்டரில் **"நெஞ்சிருக்கும் வரை"** என்ற திரைப்படம் இந்த நிதி சேகரிப்பிற்காகத் திரையிடப்பட்டு நிதி சேகரிக்கப்பட்டது. கட்டட வேலைகளின் பொறுப்புக்கள் அதிகமாக திரு எட்வேட் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தனது குடும்பமும், மருத்துவமனைப் பணியுமாக இருந்துகொண்ட அவர் தனது அயராத அரப்பணிப்புடன் கட்டடப் பணியை நிறைவேற்றினார். தச்சு வேலைகள் முழுவதுமாக ஈச்சமோட்டையைச் சேர்ந்த திரு. ராசதுரை அவர்களால் வடிவமைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த சிற்றாலயத்தில் 1976ம் ஆண்டு வரை மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வந்தது. திரு. எட்வேட் அவர்களது அயராத உழைப்பால் ஆலய செயற்பாடுகளும் வழிபாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டு வந்தன. அவர் மட்டுமல்லாது அவரது குடும்பமே வழிபாடுகளில் உதவுவதாகவும், சிறப்பாக மகன் (தற்போது மருத்துவராக நோர்வே நாட்டில் வாழ்பவர்) 5 வயதில் இருந்தே திருப்பலியின்போது பீடப்பணியாளராகவும், பெண்பிள்ளைகள் பாடர் குழாமாகவும் குடும்பமாக செயற்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தமை குறிப்பிடத்தக்கது. ஆலயம் திறக்கப்படுவது, ஆலய சுற்றுப்புற துப்புரவு, வழிபாட்டு ஆயத்தம், ஆலயக் கண்காணிப்பு, தளபாடப் பராமரிப்பு, திருப்பீடத் திருப்பண்டப் பொருள் தேடல், பராமரிப்பு, திருவிழா நிகழ்வு அனைத்துமே இக் குடும்ப உதவியிலேயே தங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்காலங்களில் நோயாளர்கள் அதுவும் விசேடமாக இந்து மத விசுவாசிகள் முன்வைத்த இந்த ஆலயம் எங்களுக்கு ஒரு அன்னையின் ஆலயமாக இருந்தால் நல்லது ஏனெனில் எத்தனையோ நபர்களுக்கு அன்னை ஆரோக்கியம் தந்துள்ளார். என்ற வேண்டுகோளுக்கு அமைய இவ்வாலயம் ஆரோக்கியம் கொடுக்கும் புனித வேளாங்கண்ணி ஆலயம் என 1976ம் ஆண்டளவில் அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டது. பின்பு 1979ம் ஆண்டிலிருந்து இவ்வாலய பராமரிப்பு மற்றும் மருத்துவமனை ஆன்மீகப் பணிகள் அனைத்தும் அமலமரித் தியாகிகள் (OMI) குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அருட்பணி பிரான்சிஸ் டானியல் அ.ம.தி முதல் ஆன்ம குருவாக புனித வளனார் சிறிய குருமடத்தில் இருந்து பணி செய்து வந்தார். காலப்போக்கில் தொடர்பகம் அமைக்கப்பட்டதன் பின்னர் அந்த இடத்தில் இருந்து மருத்துவ ஆன்மீகப் பணியைச் செய்து வந்தார்.

திரு எட்வேட்டுக்கும் அமலமரித் தியாகிகள் குருக்களுக்கும் இடையில் ஆரோக்கியமான உறவுநிலை காணப்பட்டது. இதனால் எட்வேட்டின் பணி இன்னும் சிறப்பானதாகக் காணப்பட்டது. குருவுக்கும் நோயாளருக்குமிடையிலான உறவுகளும் உதவிகளும் திரு. எட்வேட் மூலமாகச் செயற்படுத்தப்பட்டு வந்தன. வருடாவருடம் அன்னையின் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. அமல மரித்தியாகிகள் மருத்துவமனை ஆன்மகுருவின் தலைமையில் திரு எட்வேட் அவர்களின் குடும்பமும், நோயாளர்களும், நோயாளர் குடும்பங்களும், நலன்விரும்பிகளும், அருட்சகோதரிகள் அனைவரும் இணைந்து ஆலயத் திருவிழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவர். இதில் மருத்துவமனைப் பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களின் பங்கும் அதிகமாக இருக்கும். விசேடமாக இந்துமதப் பணியாளர்களின் பங்கு மிகச் சிறப்பானதாகும். 1975ம் ஆண்டின் பின்னர் ஒவ்வொரு வருடமும் தொழிலாளருடன் இணைந்து மருதமடு அன்னையிடம் திரு யாத்திரை செல்வது, நோயாளர்களைச் சந்தித்து ஆறுதல் கூறுவது, அவர்களுக்காகச் செபிப்பது போன்ற பல பணிகளுடன் இவ்வாலயம் சிறப்புற்றிருந்தது.

கடுமையான யுத்த காலத்திலும், கடுமையான மழை, பனி காலத்திலும் ஆலயம் திறக்கப்படாமல் இருந்ததில்லை. உரிய வேளையில் திறப்பதும், ஆராதனை நடைபெறுவதும், மூவேளைகளிலும் திருந்தாதி மணியடிப்பதும், மக்களின் செபவாழ்விற்குத் துணையாக இருப்பதும், ஆலயப் பராமரிப்பு மேற்கொள்வதும், உரியநேரத்தில் ஆலயம் பூட்டப்படுவதுமாக செயற்படுவதில் திரு. எட்வேட் அவர்கள் தன் வீட்டினைவிடக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார். முன் கூடை பூட்டிய துவிச்சக்கர வண்டி அவரது வீட்டில் தரித்து நிற்பதைவிட ஆலயத்தின் அருகில் நிறுத்தி வைக்கும் நேரமே அதிகம். இவ்வாறு தனது குடும்பப் பற்றைவிட மேலாக ஆலயத்தை அதுவும் மருத்துவமனை ஆலயத்தை நேசித்தார். தனது வேலைப்பழுவிலும் கூட இதனை ஒரு உன்னத சேவையாகச் செய்து வந்தார். இதற்குக் காரணம் திரு. எட்வேட்டின் குடும்பம் ஒரு உன்னத கிறிஸ்தவ குடும்பமாகவும் அவரது தந்தை அமரர் பேதுறுப்பிள்ளை ஒரு உபதேசியாராக இருந்ததுவுமோ என்னவோ இச்சேவை ஓய்வின் பின்னரும் தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996ன் பின்னர் நாட்டு நிலைமை காரணமாக திரு. எட்வேட் அவர்கள் கொழும்பிற்குக் குடும்பத்துடன் சென்றார். அங்கு பல காலம் வாழ்ந்து வந்தார். தனது பணிவாழ்வைத் தொடர முடியவில்லையே எனக் கவலை கொண்டபோதிலும் கொட்டாஞ்சேனை புனித லூசியா ஆலயத்தில் இணைந்து சேவையாற்றியது மட்டுமல்லாது தன் வாழ்நாளில் அவ்வாலய சுற்றாடலையே எவ்வேளையிலும் வலம் வந்து கொண்டிருப்பார்.

அவரது பல வருடகால மருத்துவமனை ஆலய சேவையில் எந்தவித ஊதியமும் பெறாமல் இருந்தமையால் அவரது குடும்பம் நல்லதோர் குடும்பமாக அவரது மகன் கலாநிதி எல்மர் நோர்வே நாட்டில் ஒர் உன்னத மருத்துவ நிபுணராகவும், இரு புதல்விகள் ஐரோப்பிய நாட்டிலும், ஒரு புதல்வி இந்தியா நாட்டிலும் சிறப்பாக வாழ்ந்து வருவது இறைவனின் ஆசியாலேயே. இறுதிக்காலத்தில் இந்திய நாட்டில் வாழ்ந்து வந்த இவர் இறக்கும் தறுவாயிலும்கூட தான் யாழ் மருத்துவமனைக் கோயிலுக்கு போகவேண்டும், கோயிலைக் கூட்ட வேண்டும், கழுவ வேண்டும், அங்கேயே நான் படுத்திருந்து எனது உயிரை விடவேண்டும் எனக் கூறியதில் இருந்து அவர் மருத்துவமனை ஆலயத்தில் கொண்ட அன்பின் ஆழத்தைக் காணக்கூடியதாய் உள்ளது.

"Father, I am seeking: I am hesitant and uncertain, but will you, O God, watch over each step of mine and guide me."

- **St. Augustine of Hippo**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். போதனா மருத்துவமனை நூதனசாலை திறப்புவிழா






## தன்னார்வப் பணியாளர்களின் சுற்றுலாவின்போது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் மன்றாட்டைக் கேட்கும் அன்புத் தாய்

யாழ் போதனா மருத்துவமனையில் அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலய அன்னையின் பாதம், தேடும் அனைவர்க்கும் அருள்பொழியும் இடமாகும்.

1974ம் ஆண்டு புனித யூதாததேயு ஆலயமாக முன்னாள் ஆயர் பேரருள் திரு.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் அபிஷேகம் செய்து திறந்து வைக்கப்பட்டது. பின்னர் 1976ம் ஆண்டு அன்னை வேளாங்கண்ணியின் ஆலயமாக மாற்றப்பட்டது. 1979ம் ஆண்டு அமலமரித் தியாகிகள் பொறுப்பேற்றார்கள். அமலமரித் தியாகிகள் சபை பொறுப்பேற்று முதலாவது குருவாக அருட்தந்தை பிரான்சிஸ் டானியல் அடிகளார் கடமையாற்றினார். முழு நேரப்பணியாக ஆரம்பித்து நோயாளர்களின் தேவையறிந்து, அவர்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறி, விடுதிகளையும் தரிசித்து, அவர்களின் குறை நிறைகள் என்ன என்று கேட்டறிந்து, நோயாளர்களுக்கு ஆன்மீக உதவிகள் செய்து, ஆன்மீகத்தில் உறுதியாய் வாழ உதவி புரிந்தனர். அமலமரித் தியாகிகளுக்கு உதவியாக இன்னும் பல ஆன்மீக சபைகள் உறுதுணையாக நின்று ஆன்மீகப் பணிகளைச் செய்கின்றனர்.

இன மத பேதமின்றி அன்னை வேளாங்கண்ணியின் அடைக்கலம் தேடிவரும் ஒவ்வொரு நோயாளர்களுக்கும் ஆறுதலான ஆலயம், அமைதியான ஆலயம், அற்புதத்தை தந்த ஆலயம், உயிருக்கு ஊசலாடிய உயிரை உயிர்ப்பித்த ஆலயம். தஞ்சம் என்று கண்ணீர் சிந்தி வந்தவர்களுக்கு தப்பாது வரம் தரும் ஆலயம். மருந்தில்லாமல் நோய் மாறும் ஆலயம். வந்து பாருங்கள் மாதாவின் புதுமைகள்.

நானும் மாதாவின் கருணையால் நலங்கள் பல பெற்ற ஒரு தாய். காட்சி தந்த தாய்க்கு சாட்சி சொல்ல வந்த அடியாள்.

எனது மூத்த பிள்ளைக்கு வலிப்பு நோய் வந்தது. மருத்துவர் மகளுக்கு இந்த நோய் என்றதும், பதறித் துடித்துப் போனேன். ஓடினேன் மாதாவின் பாதம் தேடி குழறி அழுதேன். ஏன் எனக்கு இப்படித் துன்பத்தைத் தருகிறாய் என்று அழுதேன். என் கண்ணீரைத் துடைத்த தாய் நான்கு முறையின் பின்பு அவளுக்கு வலிப்பு நோய் வராமல் காத்தாள். மாதாவுக்கு நன்றி. இன்று வரை காக்கின்றாள்.

நான் மருத்துவமனையில் கடமை புரிந்த காலங்களில் Duty Sign பண்ணிவிட்டு மாதாவின் ஆலயம் தேடி ஓடி அவளைப் பார்த்து வணங்கிய பின்புதான் பணித்தளம் செல்வேன். அன்னையிடம் வேண்டினால் மலை போல் வரும் துன்பம் பனிபோல் நீங்கிவிடும்.

பின்பு 1990 இல் எனது இரண்டாவது மகளும் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்தாள். அவளுக்கு செப்ரிசீமியா நோய் என்றனர். அந்நேரம் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடான காலம். அந்நேரமும் அன்னையிடம் ஓடி அழுதேன். அற்புத சுகம் தரும் அன்னை என் குழந்தையைச் சுகமாக்கி என் கையில் தந்தாள். தாயே உனக்கு நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 ஆம் ஆண்டு காரத்திகை 10ம் நாள் மீண்டும் என் வாழ்வில் சோதனை நாளாக இருந்தது. எனக்கு ஒரு பேரன் சத்திர சிகிச்சையின் பின்பு கிடைத்தான். அவன் மூச்சுப் பேச்சில்லாமல் 7 நிமிடங்கள் இருந்தான்.

சத்திர சிகிச்சை இடத்திலிருந்தே செயற்கைச் சுவாசக் குழாய் கருவி போடப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டான். மருத்துவர் அன்றிரவு என்னைக் கூப்பிட்டுச் சொன்னார் குழந்தையின் நிலை கவலைக்கிடம் என்று. அந்நேரம் இரவு 9.30 . ஓடினேன் அன்னையின் ஆலயம் தேடி. அழுதேன், குளறினேன். என் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை தரும்படி நாளாந்தம் அன்னையின் பாதத்தில் கண்ணீருடன் வேண்டினேன். நான்கு நாட்களின் பின்பு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து வெளிவந்து சாதாரண ஒட்சிசனுடன் இருந்தான். மறுபடியும் மருத்துவர் கூறினார், கடவுளிடம் கேளுங்கள் சுகம் தரும்படி. நான் சொன்னேன் என் பேரனைக் கொண்டுதான் நான் வீடு செல்வேன் என்று. மருத்துவர் கேட்டார் என்ன இப்படித் திடமாகச் சொல்கிறீர்? அதற்கு நான் இந்த மருத்துவமனையில் இருக்கும் மாதா என்னைக் கைவிடமாட்டார் என்றேன். அதன் படி 19 நாட்களின் பின்பு என் பேரனை உயிருடன் வீட்டுக்குக் கொண்டு சென்றேன். இன்று அவனுக்கு நான்கு வயது. நல்ல சுகதேகியாக உள்ளான். கார்மேல் முன்பள்ளியில் கல்வி கற்கின்றான். இது என் தாயின் அற்புதம் தான். இன்று வரை பேரனை மாதத்தில் ஒரு நாளாவது அன்னையின் பாதம் கொண்டு செல்வேன்.

எனக்கு நேர்ந்த எல்லா ஆபத்து வேளையிலும் அன்னை எனக்குக் கை கொடுத்துப் பக்கபலமாக நின்று என்னைத் தாங்கினாள். அன்னையை நம்பியவர்களை அவள் என்றும் கைவிட மாட்டாள். மன்றாடுங்கள், அவள் தனது மகனிடம் பரிந்து பேசி உங்கள் குறைகளைத் தீர்த்து வைப்பாள். தாயின் அன்பிற்கு ஈடேதுமில்லை.

*அன்னை மரியே வாழ்க.*

*ஓய்வு நிலைத் தாதி*

"A humble soul does not trust itself, but places all its confidence in God."
**- St. Faustina**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவமனை கத்தோலிக்க ஆன்ம பணியகத்திற்கு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க பங்குகளின் பங்களிப்பு

**“உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக.” (லூக்கா 10:27)** என்ற இறை வார்த்தைக்கு ஏற்ப திருஅவையின் தொடக்கத்தில் இருந்தே ஏழைகள், எளியவர் மற்றும் கைவிடப்பட்டோர், அநாதைகளுக்கு உதவி செய்கின்ற மனப்பான்மை உள்ளது. பங்குகளில் இருக்கின்ற இறை இரக்க பக்தி சபைகள் மற்றும் அமைப்புக்கள் ஊடாக பிறரன்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. **“பசித்திருப்பவனுக்குப் போதிக்க முடியாது.”** என்ற சமூகநீதிக் கோட்பாட்டிற்கு ஏற்ப ஒரு மனிதனுடைய அடிப்படைத் தேவைகள் முதலில் நிறைவேற்றப்படவேண்டும். நலிந்தோருக்கு உதவி செய்கின்ற மனப்பான்மை பெரும் ஆசீர்வாதங்களை எமக்கும் எம் குடும்பத்திற்கும் எம் சமூகத்திற்கும் யாழ் திருஅவைக்கும் பெற்றுத் தருகின்றது. இறை இரக்கத்தின் ஆண்டை திருஅவை கொண்டாடுகின்ற வேளையில் மத்தேயு நற்செய்தியின் ஒளியில் இறை இரக்கச் செயற்பாடுகளாக அடையாளப்படுத்தி ஆறு செயற்பாடுகளை முன்வைத்தது. அதில் இந்த ஆறு செயற்பாடுகளையும் உள்ளடக்கிய ஒரேயொரு பணியாக இருப்பது மருத்துவமனை மற்றும் சிறைச்சாலையின் ஆன்மீகப் பணியாகும். இப்பணிக்கு எமது கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்பு காலத்தினால் மறக்கப்பட முடியாததது. **“நீ பத்திரப்படுத்தி வைத்திருக்கும் உணவு பசியாய் இருப்பவனுடைய உணவு. நீ அடுக்கி வைத்திருக்கும் துணிமணிகள் ஆடையற்ற மனிதனுடையது. நீ குவித்து வைத்திருக்கும் காலணிகள் வெற்றுக் காலுடன் அலைபவனுடையவை. நீ பூமிக்கடியில் ஒளித்து வைத்திருக்கும் தங்கம் ஏழைகளுக்குரியது. நீ எப்போதெல்லாம் மற்றவர்களுக்கு உதவி செய்ய வாய்ப்பிருந்தும் மறுக்கின் றாயோ அப்போதெல்லாம் நீ அநியாயமாய் வஞ்சிக்கின்றாய். ”** என்ற புனித பசிலினுடைய வார்த்தைகள் எமது மனங்களில் இரக்கச் செயற்பாடுகளை செய்வதற்கு எமக்கு உறுதுணையாக இருக்கின்றது. யாழ் போதனா மருத்துவமனையின் கத்தோலிக்க ஆன்ம பணி மையத்தினால் நடாத்தப்படும் கிறிஸ்து பிறப்பு கரோல் நிகழ்வுகளின்போது விடுதிகளில் தங்கிநின்று சிகிச்சை பெறுபவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்குவதில் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க பங்குகளின் பங்களிப்பு வார்த்தைகளினால் சொல்லமுடியாதது.

**அருட்பணி எட்மன் றெஜினோல்ட்** தனது பணிக்காலத்தில் அயற் பங்குகளில் உள்ள மரியாயின் சேனை மற்றும் வின்சன்டி போல் பக்தி சபைகளைச் சார்ந்த ஆன்ம நலன் பேணும் பணியாளர்களை ஒன்று திரட்டி நோயாளர் விடுதிகளைச் தரிசித்து அவர்களுக்குத் தேவையான ஆன்மீகப் பணிகளை முன்னெடுத்து வந்தார். 1994 ஆம் ஆண்டு **அருட்பணி யேக்கப் யோகராஜா** மருத்துவமனைப் பணியாளர்களுக்கான கத்தோலிக்க ஆன்மகுழுமத்தையும் ஆன்ம நலன்பேணும் தன்னார்வப் பணியாளர்களை ஊக்குவித்ததோடு, அவர்களது ஆன்மீக நலன்களையும் செயற்ப்படுத்தினார். 2010ம் ஆண்டு **அருட்பணி யோண் பற்றிக்** அவர்களின் காலத்தில் கிறிஸ்து பிறப்புக் காலங்களில் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க பங்குத் தளங்களில் உள்ள இறைமக்களிடம் இருந்தும் பாடசாலை மாணவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பொருட்கள் மற்றும் பணத்தில் இருந்து நோயாளர் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறுவோர் அனைவருக்கும் கிறிஸ்மஸ் கரோல் கீதங்கள் பாடி அன்பளிப்பு பொருட்களை வழங்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. அதை இன்றுவரை தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றோம். இவை அனைத்தும் எம் மறை மாவட்ட அருட்பணியாளர்களின் ஊக்குவிப்பும் மக்களினுடைய பங்களிப்புமே ஆகும்.

இறுதியாக, யாழ் போதனா மருத்துவமனையின் கத்தோலிக்க ஆன்ம பணி மையத்தினால் நடாத்தப்படும் கிறிஸ்து பிறப்பு கரோல் நிகழ்வுகளில் விடுதிகளில் தங்கிநின்று சிகிச்சை பெறுபவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்குவதற்கு யாழ் மறைமாவட்ட பங்குகளின் பங்களிப்புக்கள் மிகவும் உன்னதமானது. இது தொடர்ந்து பல முனைப்புக்களோடு முன்னேற வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாக இருக்கின்றது. கார்த்திகை மாதத்தின் இறுதி வாரமே பொருட்கள் சேகரிக்கப்படுகின்றது. சிறப்பாக எமது யாழ் போதனா மருத்துவமனையில் நோயாளர் ஆன்ம நலன் பேணும் தன்னார்வப் பணியாளர்கள் குழுமத்தினர் உள்ளனர். இவர்கள் உங்கள் பங்குத்தளங்களிலே உங்களோடு வாழ்பவர்கள். யாராவது யாழ் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக விடுதிகளில் அனுமதிக்கப்படுகின்றபோது மருத்துவமனையின் சிற்றாலயத்தில் உள்ள ஆன்மகுருவிற்கு தெரியப்படுத்துவது சாலச்சிறந்ததாகும். இது எமக்கும் உங்களுக்குமான இறைபிரசன்னத்தின் உறவையும் ஆன்ம உறவையும் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்துகின்றது. இந்தவேளையில் எமது பணிகளில் எம்மோடு ஒத்தாசையாக இருக்கும் அனைத்து எம் மறை மாவட்ட அருட்பணியாளர்களுக்கும் பங்கு மக்களுக்கும் எமது யாழ் போதனா மருத்துவமனையின் கத்தோலிக்க ஆன்ம பணி மையத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். கடவுள் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் பங்குச் செயற்பாடுகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

"Faith is like a bright ray of sunlight. It enables us to see God in all things as well as all things in God."
**- St. Francis de Sales**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மறைமாவட்ட பங்குகளின் பங்களிப்பு

1. யாழ் மரியன்னை பேராலயப் பங்கு
2. யாழ்ப்பாணம் புனித அடைக்கல அன்னை ஆலயப் பங்கு
3. யாழ்ப்பாணம் புனித யுவானியார் ஆலயப் பங்கு
4. நாவாந்துறை ஆலயப் பங்கு
5. குருநகர் ஆலயப் பங்கு
6. பாசையூர் ஆலயப் பங்கு
7. பாண்டியந்தாழ்வு ஆலயப் பங்கு
8. கொய்யாத்தோட்டம் ஆலயப் பங்கு
9. கொழும்புத்துறை ஆலயப் பங்கு
10. புனித திரேசம்மாள் ஆலயப் பங்கு
11. மணியந்தோட்டம் ஆலயப் பங்கு
12. தியான இல்லம் யாழ்ப்பாணம்
13. அருள் ஆச்சிரமம் யாழ்ப்பாணம்
14. நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலயப் பங்கு
15. திருநெல்வேலி ஆலயப் பங்கு
16. கோப்பாய் ஆலயப் பங்கு
17. சாவகச்சேரி ஆலயப் பங்கு
18. மிருசுவில் ஆலயப் பங்கு
19. பளை ஆலயப் பங்கு
20. சக்கோட்டை ஆலயப் பங்கு
21. பருத்தித்துறை ஆலயப் பங்கு
22. அச்சுவேலி ஆலயப் பங்கு
23. கரவெட்டி ஆலயப் பங்கு
24. மணற்க்காடு ஆலயப் பங்கு
25. செம்பியன்பற்று ஆலயப் பங்கு
26. கட்டைக்காடு ஆலயப் பங்கு
27. மண்டைதீவு அல்லைப்பிட்டி ஆலயப் பங்கு
28. ஊர்காவல்துறை ஆலயப் பங்கு
29. நாரந்தனை ஆலயப் பங்கு
30. கரம்பன் ஆலயப் பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. புங்குடுதீவு ஆலயப் பங்கு
32. நெடுந்தீவு ஆலயப் பங்கு
33. சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயப் பங்கு
34. இளவாலை ஆலயப் பங்கு
35. மாதகல் ஆலயப் பங்கு
36. சில்லாலை ஆலயப் பங்கு
37. பண்டத்தரிப்பு ஆலயப் பங்கு
38. மாரீசன்கூடல் ஆலயப் பங்கு
39. பெரியவிளான் ஆலயப் பங்கு
40. ஆனைக்கோட்டை ஆலயப் பங்கு
41. மானிப்பாய் ஆலயப் பங்கு
42. சுன்னாகம் ஆலயப் பங்கு
43. உரும்பிராய் ஆலயப் பங்கு
44. குளமங்கால், மல்லாகம் ஆலயப் பங்கு
45. உடுவில் ஆலயப் பங்கு
46. பலாலி, மயிலிட்டி, ஊறணி ஆலயப் பங்கு

We are to love God for Himself, because of a twofold reason; nothing is more reasonable, nothing more profitable."

- **St. Bernard of Clairvaux**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவமனை கத்தோலிக்க ஆன்ம பணியகத்திற்கு யாழ் மாவட்ட பாடசாலைகளின் பங்களிப்பு.

**"Charity begins at home"** என்ற ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. ஒரு சமூகத்தினுடைய தேவையினை உணர்ந்து, சமூகத்திடமிருந்தே பெற்றுக்கொள்ளும் பொருட்களைக் கொண்டு எம்மையே நாம் இரக்கச் செயல்களில் ஈடுபடுத்தி எம் சமூகத்தை வளப்படுத்த ஓர் உன்னதமான அழைப்பாக இச்செயற்பாட்டினைப் பார்க்கின்றேன். அதற்கேற்ப மாணவர்களுக்கு இவ்விரக்கச் செயற்பாட்டின் ஊடாக சமுதாயத்திற்கும் பாடசாலைக்கும் இடையில் உள்ள தொடர்பாடல்களையும், கடமை, பொறுப்புக்களை உணர்த்தவும், பிறருடைய அல்லது ஒரு சமுதாயத்தின் தேவைகளை கருத்திற்கொண்டு யாரை அணுகலாம்? எப்படி அதனை நிவர்த்தி செய்யலாம்? எவ்வாறான பங்களிப்புக்களைச் செலுத்தலாம்? என்ற கேள்விகளை சுயமாகவே ஆய்வு செய்து அதனை எவ்வாறு நிறைவேற்றலாம் என்ற மனநிலையில் அவர்கள் வளரவும் உதவி செய்கின்றது.

மேலைத்தேய நாடுகளில் பாடசாலைகளில், விளையாட்டு அமைப்புக்களில், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் இப்படிப்பட்ட நிதி சேகரிப்புக்கள் இடம்பெறுகின்றன. மாணவர்களும் மற்றும் பணியாளர்களும் தங்களால் இயன்ற பங்களிப்புக்களை பொருட்களாகவோ, பணமாகவோ, சிரமதானப் பணியினாலோ அல்லது சரீர உதவியினாலோ தாமாக முன்வந்து இரக்கச் செயல்கள் செய்வதைப் பார்த்திருக்கின்றேன். பாடசாலைகளில் St. John's Ambulance, Scouts, Guides, Rotary Club etc. என்ற பல அமைப்புக்கள் உண்டு. அதனூடாகப் பல சமூக சேவைகள் செய்யும் மாணவர்களையும் பார்த்திருக்கின்றேன். விசேடமாக போர்க்கால சூழ்நிலைகளிலும் இயற்கை அனர்த்தங்களின்போதும் இவ்வமைப்புக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரத்ததானம், நோயாளர் பராமரிப்பு, உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் திடகாத்திரமான வகிபங்கை ஆற்றியுள்ளனர். தற்காலத்தில் மனித வர்க்கத்தினர் பொதுநலனில் அக்கறையின்றி சுயநலப்போக்கை யும் சுயலாபங்களையும் அடிப்படையாக வைத்தே வாழ்ந்து வருகின்றனர். இதனால் முற்றாக எம் சமுதாயத்தின் வாக்கும் போக்கும் மாறி வருகின்றது என்பது நிச்சயம். இச்சமுதாயத்தில் உள்ள இந்த அசமந்தப் போக்கு மாற்றமடைய வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு. ஆனால் இம் மாற்றத்தை பேச்சளவில் விவாதித்துவிட்டுப் போவதில் அல்லது கருத்துக்களை வழங்குவதில் பயனில்லை. அது செயலுருப் பெறவேண்டும். **பூனைக்கு மணி கட்டுவது யார்?** என்ற நிலையில் தேர்ந்து கொண்ட ஊடகம்தான் இந்த யூபிலி மலர் வெளியீட்டின்போது இவற்றை வெளிக்கொணர வரவேண்டும் என்ற ஆதங்கம். அதற்காக பெரும் முயற்சிகளை மேற்கொண்டேன். அதனால் மனிதநேய மனநிலையில் எம் பாடசாலை மாணவ சமுதாயத்தை வளர்ப்பதும் அவர்களுடைய பங்களிப்பை ஊக்குவிப்பதும் ஒத்துழைப்பு வழங்குவதும் எம் பாடசாலைக் கல்விச் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்புமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொருட்களைப் பாடசாலைகளில் சேமிக்கின்ற பணி அருட்பணி ஜோண் பற்றிக் அ.ம.தி அவர்களால் 2010ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் அதற்கு முன்னரே அருட்பணி யோகராஜா அ.ம.தி அவர்களால் பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் கிறிஸ்மஸ் கரோல் காலத்தில் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பொருட்கள் சிறுவர் மற்றும் பிரசவ விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் உள்ளங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டது. இக் காலகட்டத்தில் இம் முயற்சி பலனளிக்காத காரணம் போராட்ட சூழ்நிலையில் ஏற்பட்ட தொடர் இடப்பெயர்வும், உயிர் இழப்புக்களும், வறுமையும், பொருளாதார தடையுமே ஆகும். ஆனாலும் மக்கள் தங்களுடைய சரீர உதவிகளினால் பல பங்களிப்புக்களைச் செய்து வந்தார்கள். 2009ம் ஆண்டு ஈழப் போர் மௌனிக்கப்பட்டதின் பின்னர் இப்பணி முழுமூச்சாக இடம்பெற்றது.

பாடசாலையின் மூன்றாம் தவணை ஆரம்பித்து ஐப்பசி மாதத்தின் ஆரம்பத்திலேயே சேமிப்பு தொடர்பான கடிதங்கள் அனைத்துப் பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்படும். சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கு இணங்க பல பாடசாலைகளில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து உதவி செய்து வருகின்றார்கள். பாடசாலை மூன்றாம் தவணை முடிவதற்கு முன் பொருட்கள் சேகரிக்கப்படும். 2010, 2011, 2012ம் ஆண்டுகளில் யாழ் நகரப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைகளும், கரையோர கத்தோலிக்க பாடசாலைகளுமே எம்முடைய இலக்காக இருந்தன. ஏறக்குறைய 30 பாடசாலைகளிலே பொருட்கள் சேகரிக்கப்பட்டன. பிற்பட்ட காலப்பகுதியில் அதாவது 2013, 2014, 2015, 2016, 2017ம் ஆண்டுகளில் 45 பாடசாலைகளில் பொருட்கள் சேகரிக்கப்பட்டன.

2018ம் ஆண்டளவில் யாழ் போதனா மருத்துவமனையில் நான் பணியினை பொறுப்பெடுக்கின்ற வேளையில் எல்லா தமிழ் மாவட்டங்களில் இருந்தும் இங்கு சிகிச்சை பெறுவதற்காக வந்திருந்தவர்கள் ஏராளம். விசேடமாக தற்போதைய வைத்திய பணிப்பாளர் சத்தியமூர்த்தியின் ஒழுங்கான திட்டமிடலும் அபிவிருத்தியும் இன்னும் பல புதிய நவீன தொழில்நுட்ப மருத்துவ துறைகளையும் விடுதிகளையும் அமைத்து யாழ் போதனா மருத்துவமனையின் தரத்தினை உயர்த்தியது. இதனால் இன்னும் பலபேர் சிகிச்சையினைப் பெறுவதற்கு வருகின்றார்கள். ஆகவே இவ்வளவு மக்களுக்கும் எவ்வாறு கொடுப்பது என்று கலங்கிய தருணங்களும் உண்டு. இயேசு பாலைவனத்தில் பசித்திருந்த மக்களைப் பார்த்து அவர்களின் பசியை அறிந்தவராக தன் சீடர்களை நோக்கி நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள் என்று கரிசனையோடு கூறியதை அடிக்கடி நினைவு கூர்ந்து கொள்ளுவேன். ஏறக்குறைய 2000க்கு மேற்பட்ட உள்ளங்கள் சிகிச்சை பெறுகின்றார்கள். எனவே இதனை திறம்பட செய்யவேண்டும். பொது நலனுக்காக இப்பொழுதே எம் கல்விச் சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னில் எழுந்தது. கடவுள் எல்லாவற்றையும் அறிந்தவர். அவர் நிச்சயமாக உதவி செய்வார் என்ற அதீத நம்பிக்கை என்னைப் புடமிட்டது.

மருத்துவமனைப் பணியின் நிமித்தம் விடுதிகளைத் தரிசிக்கும்போது சிகிச்சைக்காக வந்திருந்த அதிபர்கள், ஆசிரியர், மாணவர்கள் எம் பணிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துவிட்டு, பாதர் எங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள், நாங்களும் உங்களுக்கு உதவி செய்கின்றோம் என்று கூறினார்கள். அனுபவத்தின் ஊடாக அனுபவித்தவர் களுக்குத்தான் இதனுடைய அருமை தெரியும். அத்துடன் மனிதநேயம் என்ற உயரிய கொள்கை எல்லா மனிதரிடையேயும் உள்ளது. இதனை விரிவாக்கி பாடசாலைகளுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவோம் என்று முயற்சி செய்தோம். நல்ல உள்ளங்களை நெறிப்படுத்தி வழிப்படுத்துவது இறைவன் ஒருவர் தான். அதற்காக எம் பணியை ஒரு ஊடகமாக இறைவன் பயன்படுத்துகின்றார் என்பதை உணர்ந்தேன். எனவே அவர்களுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப 2018ம் ஆண்டு 80 பாடசாலைகளிலும் 2019ம் ஆண்டு 104 பாடசாலைகளிலும் பொருட்கள் சேகரிப்புக் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டன.

நாம் பாடசாலையினை அணுகும்போது சிலர் எம்மை அன்புடன் வரவேற்றனர். சிலர் உங்களுக்குத் தானே பாதர் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் என்று கூறினார்கள். இன்னும் சிலர் மருத்துவமனையினை விமர்சித்துப் பேசினர். ஆனால் பெயர் குறிப்பிட முடியாத பின்தங்கிய சிறிய தொகையினைக் கொண்ட மாணவர்களின் இதயங்கள் மனிதநேயத்தைப் போதித்தது. ஆரம்பத்தில் ஏமாற்றமாக இருந்தது. காலப்போக்கில் குறைந்தபட்சம் பாடசாலைகளில் உள்ள ஒரு சில மாணவர்களை யாவது இரக்கச் செயல்களில் ஈடுபட வைக்க வேண்டும் என்ற அங்கலாய்ப்பும் ஆர்வமும் இருந்தது. எத்தனை ஆண்டுகள் தான் போரினால் பாதிக்கப்பட்டோர் என்று பிறரிடம் கையேந்தி நிற்பது? நிகழ்காலத்தில் உள்ள தாயகத்தில் இருந்து சென்ற புலம்பெயர் உறவுகள் இருக்கும் மட்டும் எமக்கு உதவி செய்வார்கள். அதன் பிற்பாடு எம்முடைய நிலை என்ன? தொடர்ந்து அவர்களை எதிர்பார்த்து கையேந்தி வாழப்போகின்றோமா? **நாம் தமிழர்கள், வாங்கித் தான் பழக்கம். ஆனால் கொடுத்துப் பழக்கமில்லை.** வலியில்லாமல் மாற்றமில்லை. எனவே நாம்தான் எம்முடைய எதிர்காலச் சந்ததியினரையும் சமுதாயத்தையும் கட்டியெழுப்ப வேண்டும்; பாதுகாக்க வேண்டும். மற்றவர்களில் முழுமையாகத் தங்கியிருப்பது எப்போதும் நம் வாழ்வாகாது.

பாடசாலைகளில் பொருட்களை சேகரிக்கச் செல்லும்போது மனித நேயத்தையும், பிறரன்புக் கரிசனையையும் அக்கறையையும் கண்கூடாகக் கண்ட அனுபவங்களை என் வாழ்வில் மறக்க முடியாது. ஒரு பிரபல பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர் ஒருவர் என்னைக் கண்டவுடன் ஓடோடி வந்தார். பாதர் என்னைத் தெரியுமா? என்றார். நான் தெரியாது என்றேன். "என்னுடைய அம்மா கோமாவில் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் இரண்டு வாரங்களாக இருந்தார். நீங்கள் வந்து ஆசீர்வதித்தீர்கள்" என்றார். "அவர் தற்போது சுகமாக இருக்கின்றார்" என்று கண்ணீர்மல்கக் கூறி நின்றார். "அப்படியா ரீச்சர், நல்லது" என்றேன். "உங்களுடைய மருத்துவமனைக் கடிதத்தைப் பற்றி அதிபர் கூறினார். நான் என்னுடைய வகுப்பு மாணவர்களுக்கு மருத்துவமனையில் உள்ள சிகிச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் நோயாளர்களைப் பற்றிக் கூறி என் அனுபவத்தினையும் பகிர்ந்து கொண்டேன். பிறரன்புச் செயற்பாடுகளை மற்றவர்களுக்கு நல்லுள்ளத்துடன் செய்யும்போது அங்கே இறைவனைக் காணலாம் என்று சொல்லி அதை ஊக்குவித்தேன். அவர்கள் தாமாக முன்வந்து தங்களால் இயன்ற பொருட்களை தந்துதவினார்கள். இது உண்மையாகவே எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது" என்றார். நான் அவருக்கும் அந்த வகுப்பு மாணவர்களுக்கும் ஆசீர் வழங்கிவிட்டு, அவர்களுடைய நல்ல இரக்கம் நிறைந்த தூய உள்ளங்களை வாழ்த்திச் சென்றேன்.

இன்னும் மிகவும் பின்தங்கிய இடத்தில் உள்ள வறிய மாணவர்களைக் கொண்ட ஒரு பாடசாலை. அதனுடைய அதிபர் மிகவும் சமூக, பொதுநல நோக்குடையவர். தன்னுடைய இயலாமையிலும் ஆசிரிய மாணவர்களை ஒன்றுதிரட்டி பொருட்களை சேகரித்து சந்தோசத்துடன் தந்தார். அங்கே இயலாமையிலும் கொடுக்கின்ற மனம் படைத்த மாணவர்களையும் பெற்றோர்களையும் ஆசிரிய குழாமையும் கண்டேன். யாழ்ப்பாணம் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தில் 2ம் ஆண்டு கல்வி பயிலும் பாஸ்கரன் சுவீற்றிகா என்ற மாணவி தான் விரும்பிய தன்னுடைய அழகான புதிய ஆடையை நோயினாலே சிகிச்சை பெற்றுவந்த தன்னைப் போன்ற ஒரு சிறுமிக்கு அன்பளிப்பாகக் கொடுத்து உதவினார். இவ்வாறான இரக்கம் நிறைந்த செயற்பாடுகளை மாணவர்களிலும் இதனை ஊக்குவிக்கின்ற ஆசிரியர்களிலும் பார்க்கின்றபோது மனிதம் இன்றும் வாழுகின்றது எனலாம். இப்படிப் பல அனுபவங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

இறுதியாக, யாழ் போதனா மருத்துவமனையின் கத்தோலிக்க ஆன்ம பணி மையத்தினால் நடாத்தப்படும் கிறிஸ்து பிறப்பு கரோல் நிகழ்வுகளில் விடுதிகளில் தங்கிநின்று சிகிச்சை பெறுபவர்களுக்குப் பரிசுப் பொருட்கள் வழங்குவதற்கு யாழ் மாவட்ட பாடசாலைகளின் பங்களிப்புக்கள் மிகவும் உன்னதமானது. இவ்வாறான பாடசாலைச் சந்திப்பின்போது சில அடையாளப்படுத்தப்பட்ட மிகவும் வறிய பாடசாலைகளுக்குரிய தேவையினை அறிந்து அவர்களுக்கு உதவி செய்கின்ற மனநிலையும் எம்மிடம் உள்ளது. இது எமக்கும் பாடசாலைகளுக்கும் இடையிலான உறவையும் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்துகின்றது. இதற்காக பல உபகாரிகள் உதவிசெய்கின்றார்கள். இந்தவேளையில் எமது பணிகளில் எம்மோடு ஒத்தாசையாக இருக்கும் பாடசாலை சமூகத்தினருக்கு எமது யாழ் போதனா மருத்துவமனையின் கத்தோலிக்க ஆன்ம பணி மையத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். உங்களையும் உங்கள் குடும்பங்களையும் பாடசாலையையும் உங்கள் கல்விச் செயற்பாடுகளையும் கடவுள் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை கத்தோலிக்க ஆன்ம பணியகத்திற்கு யாழ். மாவட்ட பாடசாலைகளின் பங்களிப்பு















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மாவட்ட பாடசாலைகளின் பங்களிப்பு

1) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
2) வேம்படி பெண்கள் உயர் பாடசாலை
3) யாழ்ப்பாணம் இந்து கல்லூரி
4) சாவகச்சேரி இந்து கல்லூரி
5) சுண்டுக்குளி மகளீர் கல்லூரி
6) பரியோவான் கல்லூரி
7) புனித பத்திரிசியார் கல்லூரி
8) வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
9) உடுவில் மகளீர் கல்லூரி
10) மானிப்பாய் இந்து கல்லூரி
11) கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
12) யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை
13) வட்டுக்கோட்டை இந்து கல்லூரி
14) மானிப்பாய் மெமொறியல் ஆங்கில பாடசாலை
15) ஊர்காவல்துறை சிறிய புஷ்பம் மகா வித்தியாலயம்
16) நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
17) ஊர்காவல்துறை புனித அந்தோனியார் கல்லூரி
18) ஊர்காவல்துறை புனித மரியாள் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்
19) மண்டைதீவு மகா வித்தியாலயம்
20) மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
21) கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
22) கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
23) நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
24) சன்மார்க்க மகா வித்தியாலயம்
25) பாஷையூர் புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலை
26) சென் சாள்ஸ் மகா வித்தியாலயம்
27) சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை
28) சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்
29) புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
30) புனித ஜோண் பொஸ்கோ முன்பள்ளி
31) கொழும்புத்துறை புனித சூசையப்பர் வித்தியாலயம்
32) புனித மரியாள் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
33) சென் றோக் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34) கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்
35) வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம்
36) நீர்வேலி அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்
37) கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
38) கோப்பாய் மகா வித்தியாலயம்
39) வட கோப்பாய் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
40) தென் கோப்பாய் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
41) கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
42) நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
43) அச்சுவேலி மத்திய கல்லூரி
44) புத்தூர் சிறி சோமஸ்கந்தா கல்லூரி
45) அச்சுவேலி புனித திரேசாள் பெண்கள் பாடசாலை
46) உரும்பிராய் சந்ரோதய வித்தியாலயம்
47) உரும்பிராய் இந்து கல்லூரி
48) உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
49) உரும்பிராய் சைவ தமிழ் வித்தியாலயம்
50) அரியாலை சிறி பார்வதி வித்தியாலயம்
51) யாழ்ப்பாணம் இந்து மகளீர் கல்லூரி
52) யாழ்ப்பாணம் இந்து மகளீர் ஆரம்ப பாடசாலை
53) யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை
54) கொக்குவில் இந்து கல்லூரி
55) கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
56) கோண்டாவில் இந்து கல்லூரி
57) யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயம்
58) செங்குந்தா இந்து கல்லூரி
59) புனித ஆசீர்வாதப்பர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
60) திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
61) சாவகச்சேரி மகளீர் கல்லூரி
62) சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
63) சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
64) கைதடி எருதிடல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
65) கொடிகாமம் கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
66) கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
67) கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்
68) மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
69) கைதடி முத்துகுமாரசாமி மகா வித்தியாலயம்
70) நாவற்குழி மகா வித்தியாலயம்
71) பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72) புனித தோமையார் றோமன் கத்தோலிக்க அரசினர் பாடசாலை
73) தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலயம்
74) பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம்
75) வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி
76) சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி
77) ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
78) இளவாலை கன்னியர் மகா வித்தியாலயம்
79) மானிப்பாய் மகளீர் கல்லூரி
80) நவாலி மகா வித்தியாலயம்
81) பண்டத்தரிப்பு பெண்கள் உயர் பாடசாலை
82) பண்டத்தரிப்பு இந்து கல்லூரி
83) பண்டத்தரிப்பு ஐசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
84) பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
85) சண்டிலிப்பாய் இந்து கல்லூரி
86) சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
87) மானிப்பாய் புனித ஆனாள் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
88) இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி
89) மாதகல் புனித சூசையப்பர் மகா வித்தியாலயம்
90) நவாலி புனித பேதுருவானவர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
91) மாதகல் புனித தோமையார் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை
92) அளவெட்டி அருணோதயா கல்லூரி
93) மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
94) தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
95) மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
96) மல்லாகம் மகா வித்தியாலயம்
97) தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
98) வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
99) தெல்லிப்பழை வீமன்காமம் மகா வித்தியாலயம்
100) இணுவில் மத்திய கல்லூரி
101) இணுவில் இந்து கல்லூரி
102) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
103) சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
104) கச்சாய் புனித அன்னை திரேசா முன்பள்ளி
105) யாழ்ப்பாணம் டி மசனெற் உயர்கல்வி நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர் மக்களின் பங்களிப்பு

## DIASPORA TAMILS WHO HELP FOR OUR HOSPITAL CHAPLAINCY

யாழ். போதனா மருத்துவமனை கத்தோலிக்க ஆன்மீக குழுமத்தின் ஊடாக புலம் பெயர்ந்த எமது தொப்புழ் கொடி உறவுகளின் உதவியுடன் வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் போரினால் பாதிக்கப்பட்டு, அவயவங்களை இழந்த உள்ளங்களுக்கும் மற்றும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களுக்கும் வாழ்வாதார உதவிகளையும், காப்பகங்களில் உள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர், கைவிடப்பட்ட சிறார்கள், முதியோர்கள், கஸ்ரப்பட்ட வறிய நிலையில் உள்ள மாணவர்களுக்கு சிறிய கல்வி ஊக்குவிப்புத் தொகையையும், கிறிஸ்மஸ் காலங்களில் மருத்துவமனையின் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் உள்ளங்களுக்கான அன்பளிப்பு பொருட்களையும் வழங்கி வருகின்றார்கள்.

புலம் பெயர்ந்த நாட்டில் எமது உறவுகள் எவ்வளவு கஸ்ரப்பட்டு உழைக்கின்றார்கள் என்பதை கண்கூடாகக் கண்டு அனுபவித்தவன் நான். எனவே நான் அவர்களை அணுகுகின்ற வேளையில் எல்லாம் தாராள மனப்பான்மையோடு எம் நிலைப்பாட்டை செவிமடுத்து உதவிக்கரம் நீட்டுகின்ற நல்லுள்ளங்கள் அவர்கள். எமது தாயக மக்களின் நல் வாழ்விலும் சமுதாய வளர்ச்சியிலும் அக்கறை உடையவர்கள். இந்தவேளையில், யாழ். போதனா மருத்துவமனை கத்தோலிக்க ஆன்மீகக் குழுமத்தின் மீது நம்பிக்கை வைத்து, எமது பணியோடு இணைந்து ஒத்துழைப்பு வழங்கி உதவி செய்யும் உபகாரிகளுக்கும் அமைப்புக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளுடன் கூடிய செபங்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக. இதனை ஒழுங்குபடுத்தி வழிப்படுத்தும் எங்கள் நண்பர்களுக்கும் உறவுகளுக்கும் எமது யாழ். போதனா மருத்துவமனை கத்தோலிக்க ஆன்மீகக்குழுமத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

இந்த வருடத்தில் இருந்து கிழக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனை யினையும் அமலமரித் தியாகிகள் சபை பொறுப்பேற்றுள்ளது. எனவே கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களிலும் உள்ள மருத்துவமனையில் பணிசெய்யும் அருட்பணியாளர்களோடு சேர்ந்து எமது பணியினை முன்னெடுக்கவுள்ளோம். இதற்கு உங்களது பூரண ஒத்துழைப்பினையும் தாராள உதவியினையும் எதிர்பார்க்கின்றோம். எமது சமுதாயத்தினை முன்னேற்றுகின்ற பாரிய பணி எம்மிடமே உள்ளது. இதனை கருத்திற்கொண்டு ஒற்றுமையுடனும் நேர்மையுடனும் பணிசெய்வோம்.

**"வாழ்க உங்கள் உள்ளம் வளர்க உங்கள் இரக்கம் நிறைந்த நற்பணிகள்".**

**கடவுள் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை கத்தோலிக்க ஆன்ம பணியகத்திற்கு புலம்பெயர்ந்த மக்களினுடைய பங்களிப்பு





Velicham

வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி அமைப்பு

වෙළිච්චම් සුභසාධනය සඳහා එක්සත් සමාජය





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம் பெயர்ந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் உதவியுடன் எமக்கு உதவி செய்யும் உபகாரிகளும் அமைப்புக்களும்.

1. கனடா வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி அமைப்பு
2. மூப்பர் ராஜேந்திரம் பிளேவியன் காப்பகம் ஐக்கிய இராச்சியம்
3. கிறிஸ் அமைப்பு ஐக்கிய இராச்சியம்
4. பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள்
5. ஐக்கிய இராச்சியம் வாழ் தமிழ் மக்கள்
6. சுவிஸ்சலாந்து வாழ் தமிழ் மக்கள்
7. ஜேர்மன் வாழ் தமிழ் மக்கள்
8. கனடா வாழ் தமிழ் மக்கள்

## மருத்துவமனை ஆன்மீக பணிக்கு உதவி புரியும் யாழ் மாவட்ட தனியார் நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள்

1. HUDEC - CARITAS நிறுவனம்
2. அருட்பணி சரத்ஜீவன் உதவித்திட்ட அமைப்பு
3. சிவராதா புடைவையகம்

" Hate what the world seeks, and seek what it avoids"

**St.Ignatius of Loyola**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் வருட இறையியல் மாணவர்களின் மனப்பதிவுகள்

8.10.2018 திங்கட்கிழமை

**திரு. அருள் ஞானரட்ணம் தாதியக் கல்லூரி பயிற்சி ஆசிரியர்**

**காலை 9.00 - 10.00**

***நாங்கள் பெற்றுக்கொண்டவை***

- ஆரம்பத்தில் சற்று விருப்பின்றி இருந்தபோதும் பின்பு பணி செய்ய ஆர்வம் வந்தது (போர், இடப்பெயர்வுகள்)
- ஆசிரியராக இருப்பதை விட நோயாளர்களுடனான பணியே கூடுதல் நிறைவைத் தருகிறது.
- இப்போதைய தாதியர் பயிற்சிக்காலங்களில் சிறப்பாகச் செயற்பட்டு விட்டு பின்பு தவறி விடுகின்றனர். ஏன்?
- தமிழ் இளையோர் தாதியர் பயிற்சிக்கு வருவது குறைவாக இருக்கின்றது.

**அருட்தந்தை அருள் சுதர்சன் (அ.ம.தி) ஆன்ம குரு காலை 10.30 - 11.30**

***நாங்கள் பெற்றுக்கொண்டவை***

- நாளேடு
- பணியை அன்பு செய்தல்
- சவால்கள்
- சான்று வாழ்வு

**திரு. றொபின்சன் தாதியர் கல்லூரி பணியாளர்**

**மாலை 3.00 - 4.00**

***நாங்கள் பெற்றுக்கொண்டவை***

- மருத்துவமனைப் பணியாளர்கள் ஆன்மீகப் பணியையும் சேர்த்துச் செய்வது கடினமாக உள்ளது. ஏனையோர் அதைச் செய்ய முன்வரவேண்டும்
- மனிதநேயம் குறைந்து போகின்றது
- சமூக விழிப்புணர்வு தேவை

**விடுதித் தரிசிப்பு மாலை 5.00 - 6.00**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.10.2018 செவ்வாய்க்கிழமை

திரு. பீற்றர் தலைவர், மருத்துவமனை ஆன்ம நலன்பேணும் தன்னார்வப் பணியாளர்

காலை 9.00 - 10.00

*நாங்கள் பெற்றுக்கொண்டவை*

- பொறுப்புக் குருவுடன் பின்னணியில் இருந்து செயற்படுவது
- இளையோரை இப்பணியில் இணைப்பது சவாலாக உள்ளது

மருத்துவர் திரு. றொபின்சன் காலை 10.30 - 11.30

*நாங்கள் பெற்றுக்கொண்டவை*

- ஆன்மீகப் பணியாளர்களாகிய நாம் நடுநிலையாக செயற்படாவிட்டால் எங்களின் பணியும், புனிதத்தன்மையும் இல்லாமல் போய்விடும்
- ஊடகங்கள் மிகவேகமாக இருக்கின்றன. உண்மைகள் சிலவேளைகளில் திரித்துக் கூறப்படுகின்றன
- வெளிநாட்டிலிருந்து வரும் பணம் இளையோரைத் திசை திருப்புகிறது
- போதைப் பொருள் பாவனை அதிகரிக்கின்றது
- வைத்தியர்கள் பலர் பணத்தை நாடுகின்றனர்
- குருவானவருக்குரிய மரியாதை குறைந்துகொண்டு செல்கிறது
- தேவையில்லாத காரியங்களில் ஈடுபட்டு காயப்பட்டு வருவோரைப் பராமரிக்க சிரமமாக உள்ளது. (உதாரணம் வாள்வெட்டு)
- சிறுவயதில் உருவாக்கம் தருவது கூடுதல் பயன் தரும்

திருமதி ஜஸ்மின் ஜோசப் மருத்துவமனை ஆன்ம நலன்பேணும் தன்னார்வப் பணியாளர் - மாலை 3.00 - 4.00

*நாங்கள் பெற்றுக்கொண்டவை*

- ஆண்டவர் இயேசு நோயாளர்களைத் தேடிச் சென்றதுபோல நாமும் செல்கிறோம்
- விடுதி இலக்கம் மற்றும் கட்டில் இலக்கம் என்பவற்றைப் பெறுவதோடு நின்று விடாது அவர்களுக்காகச் செபிக்கவும் வேண்டும்

விடுதித் தரிசிப்பு மாலை 5.00 - 6.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.10.2018 புதன்கிழமை

**திருமதி றமேஸ்குமார் (தாதி) இதய சத்திர சிகிச்சைப் பிரிவு**

**காலை 9.00 - 10.30**

***நாங்கள் பெற்றுக்கொண்டவை***

- தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்கள்
- இதய நோய்கள், குடல்புண், ஆஸ்மா, உயர் அழுத்தம்
- மாரடைப்பு ஏற்படுகின்ற காரணங்கள், விளக்கம் சிகிச்சை மற்றும் தடுக்கும் வழிகள்
- அங்கவீனமாகக் கருவிலே அடையாளம் காணப்படுகின்ற சிசுவைப் பலர் அழிக்கின்றனர். இது பிரச்சினை இல்லை. ஆனால் கத்தோலிக்க விசுவாசத்திற்குப் புறம்பானது.

**திரு. ஜோண் போல் (தாதி) காலை 10.45 - 12.45**

***நாங்கள் பெற்றுக்கொண்டவை***

- மயக்க மருந்து பற்றிய விளக்கம், பக்கவிளைவுகள் மற்றும் பல குறிப்புக்கள்
- அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் மூளைச் சாவடைந்து இருக்கின்ற ஒருவருக்கான செயற்கை உதவியை நீக்கி விடக்கூடாது. அது கருணைக் கொலை. பாவம்.

***திரு. ஜோண் மேரி (தாதி) மாலை 3.00 - 4.00***

***நாங்கள் பெற்றுக்கொண்டவை***

- நமது பிரச்சினை தான் நமக்குப் பெரிதாகத் தெரியும்.
- எல்லா நோயாளர்களையும் நமது குடும்ப உறுப்பினர்கள் போல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

11.10.2018 வியாழக்கிழமை

***செல்வி கிருபாளினி, (தாதி) காலை 9.00 - 10.00***

***நாங்கள் பெற்றுக்கொண்டவை***

- மருந்து மாத்திரைகள் தொடர்பாக
- அதே Chemical Formula அடங்கி இருந்தாலும் பலர் Brand Name காக (உ+ம் பனடோல்) அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர்.
- மரணத்தருவாயில் உள்ள நோயாளிக்கும் முழுப் பராமரிப்புக் கொடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பத்திநாதர் (பேட்டி) தாதி காலை 10.30 - 11.30

*நாங்கள் பெற்றுக்கொண்டவை*

- தோல் நோய்கள் தொடர்பாக
- தொழுநோய், அக்கி, சிரங்கு
- முழுமையாகக் கவனமாகத் தொடர் சிகிச்சை அவசியம். ஆனால் அவ்வாறு வருகின்றவர்கள் குறைவு.

*திரு. பீற்றர், தாதிய உத்தியோகத்தர் மாலை 3.00 - 4.30*

*நாங்கள் பெற்றுக்கொண்டவை*

- விடுதியில் உள்ள எல்லோரையும் சந்திக்க வேண்டும்.
- நோயாளர்களைச் சந்திக்கும் முறை
- முதலில் பெயர் கேட்கவேண்டும். பின்பு மொழி, சமயம் போன்றன.
- நோய்கள் வராமல் தடுக்கும் முறைகள்
- ஓய்வின் அவசியம்.
- விபத்துக்களின் போதான முதலுதவி
- நோயாளிகள் பெரும்பாலும் மன உளைச்சலில் தான் இருப்பார்கள். அவர்களையும் நாம் தேற்ற வேண்டும்.
- புகைத்தல் மற்றும் மதுப்பாவனை நோய்களைக் கொண்டு வரும்

12.10.2018 வெள்ளிக்கிழமை

திரு. D.B. எல்றோய், தாதியர் கல்லூரிப் பணியாளர்

காலை 9.00 - 10.00

*நாங்கள் பெற்றுக்கொண்டவை*

- திருநிலையினரிடம் பொதுநிலையினர் எதிர்பார்ப்பது என்ன?
- குருமடத்தில் சேர்கின்றபோதே குரு என்கிற எண்ணம் வந்து விட வேண்டும்
- ஆன்மீக இருள் அதிகம் இருக்கிறது. இதனைப் போதிப்பதால் மாத்திரம் நிவர்த்தி செய்து விட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நாம் ஆண்டவரைக் கொடுக்கின்ற குருக்களாக இருக்கின்றோமா?
- ஆன்ம வாழ்வில் உறுதியுடன் இருக்கின்ற குருக்களாக இருக்கின்றோமா?
- ஒவ்வொரு குருவும் இன்னொரு இயேசுவைப் போல உருவாகினால் என்ன?
- ஆண்டவருக்கு முன்னால் நாம் போகும் போது எதைக் கொண்டுபோகப் போகிறோம்?
- மாதா பத்திமா பதியில் சொன்னது போலக் குடும்பங்களிலும் குடும்ப உறவுகளிலும் தான் பிரச்சினை வருவதால் இது தான் இறுதிக் காலமா?
- பலர் பாவ அறிக்கை ஒழுங்காகச் செய்வதில்லை நாம் இன்னும் ஆழமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.
- குருத்துவ உருவாக்கத்திற்கு முற்போக்கான குருக்களை நியமிக்க வேண்டும்
- யுத்தத்தின் போது பல காட்சிகள், மாதா கண்ணீர் வடித்த சம்பவங்கள் நிகழ்ந்தபோது வரலாற்றில் இடம்பெற்றதுபோன்ற மாதா பவனிகள், செபமாலை இயக்கம் போன்றவற்றை ஏற்படுத்தி இறை இரக்கத்திற்காக மன்றாடி இருக்கலாம்.
- சாதியம் அற்ற சமூக உருவாக்கம்.
- "பரிசுத்தமான குருக்களே இன்றைய உலகத்திற்குத் தேவை" - பரிசுத்த பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பர்

மாலை 4.00-4.45

- நற்கருணை வழிபாடு

மாலை 5.00-6.00 சத்திரசிகிச்சைக் கூடம் பார்வையிட்டது

13.10.2018 சனிக்கிழமை

காலை 10.00

- குறை நிறைகளை ஆராய்தல், Presentaion
- முடிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

வளவாளர்களாக வந்து உதவிய அனைவருக்கும்: எங்களுக்கு வளவாளர்களாக வந்து தங்கள் பொன்னான நேரத்தை எம்மோடு செலவிட்ட அனைவருக்கும் நன்றிகள். நோயாளர்களைப் பராமரிக்கின்ற இப்பணியில் அவர்கள் காட்டும் அர்ப்பணிப்பு மிகப் பெரிது. எல்லோருக்கும் ஒரு Salute. இது எங்களுக்கு ஒரு சவால். நிறையக் கற்றுக் கொண்டோம். எங்கள் மனநிலைகளில் மாற்றம் வந்துள்ளது. பணிமேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.

**அருட்தந்தைக்கு சிறப்பு நன்றிகள்**

பணிப்பொறுப்பேற்று சிறிது காலம் என்றாலும் அனைத்தையும் சிறப்புற குறையின்றித் தயார் செய்திருந்தார். எங்களுக்கு இந்த வருடத்தின் முதலாவது நிகழ்வு இது. சிறப்பாக இருந்தது. மிகவும் அன்போடும் அக்கறையோடும் பார்த்துப் பார்த்து எங்களைக் கவனித்துக் கொண்டார். அதற்கு அவர் தந்த Refreshments தான் சாட்சி. எல்லாமே நிறைவாக இருந்தது. குறைசொல்ல ஏதுமில்லை. அவர் பணி மென்மேலும் சிறக்க இறை ஆசீர் வேண்டுகின்றோம்.

**என்றும் அன்புடன்:**

**சகோதரர்கள்**

அலிஸ்ரன் நியூமன், அன்ரனி மரியதாஸ் IVD, அருண்தாஸ், குரூஸ், எட்வின் நரேஸ், ஜோர்ஜ் கரன் , கிருஷாந், ஜோ சஞ்சுதன் IVD, ஜோண் குரூஸ், ஜொல்மன், நிதர்சன், பிரசாந்தன்.

***நான்காம் வருட இறையியல் மாணவர்கள் (2018)***

***புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி***

***கொழும்புத்துறை***

***யாழ்ப்பாணம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி தேவமலர் அருளானந்தத்தின் அனுபவப் பகிர்வு...........

அன்னை வேளாங்கண்ணி மாதாவின் அடியாள்:- திருமதி தேவமலர் அருளானந்தம்

பிறந்த திகதி:- 10-08-1950

ஓய்வு பெற்ற திகதி:- 10-08-2010

முன்னாள் பெயர்:- செல்வி. நல்லதம்பி தேவமலர்

தாதியக் கல்லூரி பயிற்சி:- 3 வருடங்கள் (01-11-1972-15-11-1975)

யாழ் போதனா மருத்துவமனை:- 10 வருட அனுபவம் சத்திர சிகிச்சை விடுதி

(15-11-1975-02-11-1985)

உயர்கல்விப் படிப்பு கொழும்பு:- 1 வருடம் ஒன்றரை மாதம்

(04-11-1985- 13-01-1987)

மட்டக்களப்பு தாதியக் கல்லூரியில் தாதிய போதனாசிரியராக முதல் நியமனம் :- 15-01-1987

மட்டக்களப்பு தாதியக் கல்லூரியில் தாதிய அதிபர் நியமனம் :-

( 24-02-2004-27-01-2005)

யாழ்ப்பாண தாதியக் கல்லூரியில் தாதிய அதிபர் நியமனம் :-

(28-01-2005-10-08-2010)

அன்னை வேளாங்கண்ணி அம்மாவின் அனுசரணைகள் அளப்பரியது. அவற்றைப் பகிர்ந்து கொள்வதில் ஆனந்தம் அடைகின்றேன். அம்மாவிற்கும் அருட்கொடைகள் அனைத்திற்கும் ஆண்டவர் பெயரால் கோடான கோடி நன்றிகள் செலுத்துகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் 1960ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தாதியக் கல்லூரியில் முதலாம் வருட மாணவியாக 1972ம் ஆண்டு கார்த்திகை முதலாம் திகதி ஆரம்பித்தேன். இரண்டாம் வருட மாணவியாக பயின்ற காலத்தில் புனித யூதாததேயு என்ற பெயருடன் கட்டப்பட்ட தேவாலயம் திறக்கப்பட இருந்த நேரம், மாணவிகளாக திறப்பு விழா கலந்துகொள்ள வாய்ப்பு எட்டியது. உதவி அதிபர் கட்டளைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணங்க தூய வெண் சாறி உடுத்தி பங்குபற்றியதுடன் காணிக்கைப் பொருட்களை ஒப்புக்கொடுக்கவும் அன்னை அருள் பாலித்தார். அன்றிலிருந்து பாதுகாவலரின் பரிந்துரை எல்லோருக்கும் கிடைத்தது. 1976 ம் ஆண்டின் பின்னர் ஆலயமானது அன்னை புனித வேளாங்கண்ணி ஆலயமாக மாற்றமடைந்தது. அன்னையின் ஆசீரும் அரவணைப்பும் பரிந்துரையும் பாதுகாப்பும் தொடர்ந்து தன்னை நாடி தேடி வரும் பக்தர்களுக்கு கிடைத்தது.

எனக்கு யாழ் போதனா மருத்துவமனையிலேயே முதல் நியமனம் கிடைத்தது. அது மிகுந்த மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. 10 வருடங்களாக சத்திரச்சிகிச்சை கூடத்தில் பணிபுரிந்தேன். ஆரம்பத்தில் சத்திரசிகிச்சை விடுதி பழைய இலக்கம் 18ம் வாட் என்றும் பின்பு விடுதி இலக்கம் 6ம் வாட்டு ஆகவும் கருதப்பட்டது. தினமும் வேலை தொடங்க முன்பும், பின்பும் அன்னையின் ஆலயத்தில் அவளை தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். சிங்களப் பரீட்சை எடுத்த பின் முடிவு மேற்றன் அலுவலகத்தில் கிடைக்கப் பெற்றும் இதே ஆலயத்திற்கு வந்து அங்கே உள்ளே இருந்து பிரித்துப் படித்தேன். சிறந்த பெறுபேறு என பரீட்சை முடிவு வந்திருந்தது. எனது திருமண பந்தத்தில் இணைவதற்கு நல்லதோர் உற்ற துணையினையும் தீர்க்கமான முடிவையும் என் வாழ்வில் எடுப்பதற்கு பாக்கியம் பெற்றதும் இவ்வாலயமே. இதிலிருந்து எனது மனதில் சந்தோஷமும் பாதுகாப்பும் ஆசீர்வாதமும் என் வாழ்வில் நிறைவாக கிடைத்தது.

சுமார் 20 வருடங்களுக்குப் பின் யாழ் தாதியக் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்று 28-01-2005ல் புதிய பதவியை பொறுப்பு எடுத்தேன். 04-11-1985- 27-01-2005 வரை வெளி மாவட்டத்தில் வேலை செய்த எனக்கு தாதியக் கல்வி ஊட்டிய கல்லூரியில் அதிபர் பதவி என்பது மிகவும் ஆச்சரியமானதும் அத்துடன் ஆசீர்வாதமான அழைப்பு என்று தான் கூறவேண்டும். அனுதினமும் உயிருள்ள இறைவன் உறையும் உன்னத சந்நிதியில் சென்று செபிக்கவும் வேலையைத் தொடங்கவும், வேலையை முடித்த பின் மீண்டும் அதே சந்நிதியில் சென்று நன்றி கூறி ஒப்புக் கொடுக்கவும் இறைவன் அருள் பாலித்தார். எனது முதலாவது வருட அதிபர் நியமன ஆண்டு நிறைவு 24-02-2005 அன்று யாழ்ப்பாணத் தாதியக் கல்லூரியில் கொண்டாட இறைவன் சித்தம் கொண்டிருந்தார் போலும். அதிசயம் என்னவென்றால் அப்போதைய மருத்துவமனையின் ஆன்ம குருவாக இருந்த அருட்பணி அந்தோனிமுத்து அ.ம.தி அவர்கள் யாழ் குடாநாட்டில் தவக்கால மனந்திரும்புதல் தியானத்தை நடாத்த மட்டக்களப்பு தேற்றாத்தீவில் இருந்து வருகை தந்திருந்த அருட்பணி போல் றொபின்சனை அழைத்து வந்து தாதிய கல்லூரி மாணவர்கள் மத்தியில் சிறிய உரையும் ஆசீர்வாதமும் வழங்கியதை மறக்கவே முடியாது. புதிய கட்டிடம் அமைக்க அவரது ஆசீர்வாதம் எமக்கு உறுதுணையாக இருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம். அது மட்டுமன்றி போதானாசிரியர் ஒருவரை கட்டிலில் வைத்து ஆசீர்வதித்து இன்றும் அவர் சீவிக்கின்றார் என்றால் அது அதிசயம் என்று தான் சொல்ல வேண்டும்.

பல வருடங்களின் பின்னர் மீண்டும் நான் யாழ்ப்பாணம் வந்து எனது தாயாரை இறுதிக் காலத்தில் பார்க்கவும் அவரை பராமரிக்கவும் முடிந்தது. எனது தாயார் சுகவீனமுற்று 03-12-2006 அன்று இறைவனடி சேர்ந்தார். அப்போதைய மருத்துவமனை ஆன்மகுருவான அருட்பணி ஜெயபாலன் அ.ம.தி அவர்கள் இறுதி அஞ்சலி திருப்பலியும் 8ம் நாள் மற்றும் 31ம் நாள் நினைவு திருப்பலிகளையும் ஒப்புக்கொடுத்து ஆதரவு அளித்ததும் அன்னை மரியின் ஆறுதல் எனலாம். அதன் பின்பு பணியேற்ற ஆன்மகுருவான அருட்பணி செபமாலை பெரேரா அ.ம.தி அவர்களும் நான் இருந்த காலத்தில் ஆதரவாக இருந்து ஒத்தாசையாக பணியாற்றினார்.

யாழ்ப்பாண தாதியக் கல்லூரியில் இருந்து 2011 தை மாதம் ஒய்வு பெற்ற பின் அன்று தொடங்கி இன்று வரை கொழும்பு தனியார் மருத்துவமனைத் தாதியக் கல்லூரியில் கடமையாற்றுகின்றேன். தாதிய அனுபவக் கல்வியும் மருத்துவமனை அனுபவங்களும் தனியார் கல்லூரியிலும் கடைப்பிடிக்க உதவுவதும் அன்னையின் பெரும் ஆசீர்வாதமாகும். கொழும்பிலிருந்து யாழ் நகர் வரும்போதெல்லாம் மருத்துவமனையில் உள்ள அன்னை வேளாங்கண்ணி மாதாவைத் தரிசிக்காமல் போவதில்லை. எனது அனுபவத்தையும் இறை மகிமையையும் வெளிக்கொணரவும் பகிரவும் சந்தர்ப்பத்தை தந்த தற்போதைய ஆன்மகுருவான அருட்பணி அருள் சுதர்சன் அ.ம.தி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றேன். இறைவனுக்கு நன்றி. மாமரியே வாழ்க.

**திருமதி தேவமலர் அருளானந்தம்**

**ஓய்வு நிலை தாதிய கல்லூரி அதிபர்**

**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை ஊழியர்களின் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்











கத்தோலிக்க தாதிய முகாமைத்துவப் பயிற்சி மாணவர்கள்



தாதியர்களுடன் தாதிய மாணவர்கள்



திரிதின ஆரம்ப வழிபாட்டு ஒன்றுகூடலில் பணிப்பாளர் கலந்து கொள்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை யேசுவிடமும்
# அன்னை வேளாங்கண்ணியிடமும்
# நான் பெற்ற அனுபவத் துளிகள்........

சைவம் தழைத்தோங்கும் யாழ்ப்பாணம் ஆனையூர் பகுதியில் பிறந்து வளர்ந்து சைவ அனுஷ்டானங்களை முறையாகக் கற்று சைவ தீட்சை இரண்டும் பெற்று ஓம் நமச்சிவாய என்னும் நாமத்தில் என்னுடைய பேரன் பேர்த்தியின் வளர்ப்பில் மற்றவர்களுக்கு உதவும் பக்குவத்தையும் இல்லாதவர்களுடன் பகிர்ந்து உண்டு வாழவும் இன்னும் பல அறிவுரைகளோடும் வளர்ந்த நான் பாடசாலையிலும் வெளியிடங்களிலும் போட்டிக்காகச் செல்லும் போது பல வெற்றிப்படிகளை ஈட்டி எனது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளேன். போட்டிகள் இருந்தாலும் எவரிடமும் பொறாமை கொண்டதில்லை. எல்லோரிடமும் கள்ளம் கபடமற்ற அன்புறவோடு பழகுவேன். சிலர் என்னிடம் நீர் கிறிஸ்தவளா அல்லது வேதக்காரியா. உம்மைப் பார்த்தால் கிறிஸ்தவளைப் போல இருக்கிறது என்று கேட்ட போதெல்லாம் நான் என்னுடைய மார்பில் தட்டி நான் சுத்த சைவக்காரி என்று சொல்லி அவர்களை மதிக்காது கேவலமாகப் பேசியதுண்டு. அவர்களுடன் பழகினாலும் எனக்கு கிட்ட அவர்களை அணுக விடுவதில்லை. புனித பவுல் அடிகள் ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களை கொன்று துன்புறுத்தினார். ஆனால் நான் வார்த்தையால் அவர்களை கொன்று துன்புறுத்தினேன்.

என்னுடைய திருமணம் திடீர் என்று ஏற்பட்டது. எனது கணவர் பரம்பரை றோமன் கத்தோலிக்க மதத்தை சார்ந்தவர். என்னுடைய கணவர் என்னை முதலில் அழைத்துச் சென்ற இடம் அந்திரான் வேளாங்கண்ணி ஆலயம் தான். 24 வருடத்தில் முதன் முதலாக அன்னை வேளாங்கண்ணியின் ஆலயத்திலும் கிறிஸ்தவ தேவாலயத்திலும் கால்பதித்த பொன்னான நாள். அன்னையின் பாதத்தில் முழங்கால்படியிட்டு கண்ணீரோடு இரந்து வேண்டினேன். உம்மை எப்படி அழைப்பது, எவ்வாறு என்ன சொல்லிக் கும்பிடுவது, நான் இனி எப்படி வாழுவது என்று என் கணவருடைய அம்மாவுடன் சேர்ந்து செபமாலை சொல்லுவேன். எனக்கு அவர்கள் செபப் புத்தகங்கள், பைபிலும் தந்தனர். அதை நான் தினமும் வாசிப்பேன். அன்னை எனக்கு கற்றுத் தந்தார். என்னை ஆசீர்வதித்துமுள்ளார். இவ்வாசீர்வாதத்துடன் எமது புது வாழ்க்கையை வாழ ஆரம்பித்தேன்.

ஒரு இரவு கனவில் எனக்கு குழந்தைச் செல்வம் இல்லை என்று கண்டேன். அன்றே நான் கதறி அன்னை வேளாங்கண்ணி மாதா நோக்கி மன்றாடினேன். அடுத்த மாதமே முதலாவது ஆண் குழந்தையினை என் வயிற்றில் கருத்தரித்தேன். அவனை வேளாங்கண்ணி ஆலயத்தில் விற்று வாங்கினேன். எனது கணவர் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதுணையாக இருந்து வருகின்றார். இறைவன் எமக்கு இன்று இரு பிள்ளைச் செல்வங்களைத் தந்துள்ளார். இறைபக்தியிலும், விசுவாசத்திலும் ஆழ்ந்த நம்பிக்கையுடனும் இறை வார்த்தையின்படி இரு பிள்ளைகளையும் வளர்த்து வருகின்றோம். நாம் அன்னை வேளாங்கண்ணியில் ஆழமான நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டு அன்னை மரியாளை தினமும் துதித்து புகழ் கீதம் இசைப்பதுண்டு. தினமும் குடும்ப செபமாலையும் தனிச் செபமாலையும் நவநாள் செபமும் செய்து வருவேன்.

நான் திடீரென நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தேன். அப்போது அன்னையவள் எனக்காகத் தனது திருமகனிடம் பரிந்து பேசி என்னை நோயிலிருந்து குணப்படுத்தியுள்ளார். இதை விட என்னை ஆண்டவர் தொட்டு குணப்படுத்தியுள்ளார். என்னை பெயர் சொல்லி அழைத்து தனது சீடத்துவ வாழ்விற்கு திருமணத்தின் ஊடாக தேர்ந்து கொண்ட இறைவனுக்கு நான் என்னால் முடியுமானவரை பணி செய்துகொண்டு இருப்பேன். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதெல்லாம் தாதியரின் உதவியுடன் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திற்கு செல்வதுண்டு. பெற்ற தாயிடம் கிடைக்காத அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை நான் என் அன்னையிடம் இருந்து பெற்றுள்ளேன். அதை அனுபவித்தும் இருக்கின்றேன். அன்னை வேளாங்கண்ணி மாதா தான் எனது குடும்ப குல தெய்வம். எப்போதும் நாம் அன்னை வேளாங்கண்ணி மாதாவை நாடி தேடி விரைகின்றோம்.

இடப்பெயர்வின் போது எனக்கு அன்னை வேளாங்கண்ணி மாதாவின் படம் கிடைத்தது. அதை இன்றும் பேணிப் பாதுகாத்து என்னுடைய பூசையறையில் வைத்து வழிபடுகின்றேன். எனக்கு கஸ்ரம், துன்பம் வரும் போதெல்லாம் அன்னையின் உதவி கேட்டு அவளின் மடியில் தலை வைத்து அழுது கூறுவேன். அவள் எனது குறைகளை தீர்த்து வைப்பாள். எனது மனச்சுமை நீங்கி மனத்திடனையும் சக்தியையும் தந்துள்ளாள். பல இன்னல்கள் நோய்கள் துன்பங்கள் வந்த போதெல்லாம் எம்மை காத்துக் கொண்டவள் அன்னை வேளாங்கண்ணி தான்.

**"இறையாட்சியின் பொருட்டு வீட்டையோ, மனைவியையோ, சகோதர சகோதரிகளையோ, பெற்றோரையோ, பிள்ளைகளையோ விட்டுவிட்டவர் எவரும் இம்மையில் பன்மடங்கும் மறுமையில் நிலைவாழ்வும் பெறாமல் போகார்"** (லூக். 18:29-30) என்ற இறைவார்த்தைக்கு அமைய நான் இயேசுவின் சீடத்துவ வாழ்வில் என்னை முழுமையாக அர்ப்பணித்து பணி செய்கின்றேன். தன்னலம் துறந்து பிறர்நலம் நாடி செயற்பட்டு வாழ்வதன் மூலம் பல நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் அடைய முடியும். எனது மகன் சிவில் இஞ்சினியறிங் முடித்து ஸ்பெசலாக யாழ் பல்கலைக் கழகத்தில் கம்பியூட்டர் சயன்ஸ் செய்து வருகின்றார். எனது இரண்டாவது மகள் யாழ் பல்கலைக் கழகத்தில் முதலாம் வருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவத்துறை மாணவியாக பயிலுகின்றாள். அன்னையானவள் எனது பிள்ளைகளுக்கு பல திறமைகளை அள்ளி வழங்கி வருகின்றாள். இது எனக்கு அன்னை வேளாங்கண்ணி மாதாவின் புதுமை. நான் என்னை முழுமையாகக் கையளித்த போது கிடைத்த அற்புதக் கொடை. அவளுக்கு எனது கோடான கோடி நன்றிகள். நன்றிகளை நாவினால் சொன்னாலும் தீராது. என்னுடைய வாழ்வை முழுவதும் கையளித்து என் இதயத்திலிருந்து அன்னைக்கு நன்றி கூறுகின்றேன்.

என்னிடம் தமது குறைகளை கூறுபவர்களுக்கு நான் சொல்வது அன்னை வேளாங்கண்ணியிடம் மன்றாடுங்கள் அவள் உங்களுக்கு தருவாள் என்று. பிள்ளைச் செல்வம் இல்லாதவர்களுக்கு கூட பிள்ளைச் செல்வம் கிடைத்துள்ளது. குணப்படுத்த முடியாத நோயாளிகள் கூட அன்னையிடம் மன்றாடி குணமடைந்து நன்றி கூறினார்கள். எனது செபத்தில் தினமும் அவர்களுடைய வேண்டுதலுக்காக செபிப்பேன். நீங்கள் உங்களுடைய வேண்டுதலுக்கான நன்றியினை அன்னை வேளாங்கண்ணி தாயாரிடம் சென்று கூறுங்கள் என்று சொல்லுவேன்.

அற்புதம் புரியும் அன்னையவள் கோயில் கொண்டிருக்கும் எமது மருத்துவமனை சிற்றாலயத்தில் எத்தனையோ மக்கள் ஆரோக்கியத்தை அள்ளி வழங்கி வரும் அவளுடைய தயவில் குணம் பெற்று இன்றும் வாழ்கின்றார்கள். அன்னையின் அருட்கரம் எல்லோர் மீதிலும் அருள் மழையைப் பொழிந்த வண்ணமுள்ளது. நம்பிக்கையுடனும் ஆழமான விசுவாசத்துடனும் நாம் பெற்ற அருள் வரங்களுக்கு கோடான கோடி நன்றியும், துதியும், புகழும். அன்னையவள் எனக்காக மட்டுமல்ல உலகில் வாழும் எல்லா இன, மத, மொழி மக்களுக்கும் எல்லா உயிரினங்களுக்கும் தாயாக இருந்து பாதுகாத்து அரவணைக்கின்றாள். என் கரம் பிடித்து வழி நடாத்துகின்றாள். நம்பிக்கையோடு கேளுங்கள் அவள் தனது திருமகனிடம் பரிந்து பேசி பெற்றுத் தருவாள். அன்னைக்கு துதி பாடுங்கள் அவள் கைவிட மாட்டாள். அன்னையே வாழ்க. நன்றி

உமது அன்பு அடியாள்

நோயாளர் ஆன்ம நலன் பேணும் தன்னார்வ பணியாளர்

கலா யேசுதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் போதனா மருத்துவமனை கத்தோலிக்க ஆன்மீக குழுமத்தின் ஆண்டுத் திட்டம் - 2019

| திகதி | நிகழ்ச்சிகள் | | குறிப்பு | கருத்துக்கள் |
|---|---|---|---|---|
| 19-01-2019 | புதிய நிர்வாக குழு ஒன்றுகூடல் மற்றும் இவ்வாண்டிற்கான திட்ட வரைவும் @12.00 ந.ப – 13.00 பி.ப | | | |
| 16-02-2019 | ஆலய சுத்தம் ( பொது ) 11.30 மு.ப - 12.30 பி.ப | | | |
| 06-03-2019 | விபூதிப் புதன் @12.00 ந.ப திருப்பலி | | | |
| 16-03-2019 | ஆலய சுத்தம் ( பொது ) @ 11.30 மு.ப - 12.30 பி.ப | | | |
| 20-03-2019 | கருத்தமர்வு @ 9.00 மு.ப – 12.00 ந.ப (அருட்பணி அன்புராசா, அ.ம.தி) | | | |
| 23-03-2019 | பொது ஒன்றுகூடல் ( தவக்கால தியானம்) @9.00 மு.ப – 13.00 பி.ப<br>நிர்வாக குழு ஒன்றுகூடல் @13.30 பி.ப- 14.30 பி.ப | | | |
| 28,29,30-03-2019 | கல்வாரி பாதயாத்திரை (ஹினிதும) @15.30 பி.ப- | | | |
| 18-04-2019 | புனித வியாழன் | | | |
| 19-04-2019 | புனித வெள்ளி | | | |
| 21-04-2019 | உயிர்ப்பின் ஞாயிறு | | | |
| 27-04-2019 | ஆலய சுத்தம் ( பொது ) @ 11.30 மு.ப - 12.30 பி.ப | | | |
| 11-05-2019 | ஆலய சுத்தம் ( பொது ) @11.30 மு.ப - 12.30 பி.ப | | | |
| 25-05-2019 | நிர்வாக குழு ஒன்றுகூடல் @12.00 ந.ப- 13.00 பி.ப | | | |
| 15-06-2019 | ஆலய சுத்தம் ( பொது ) @11.30 மு.ப - 12.30 பி.ப | | | |
| 20-07-2019 | ஆலய சுத்தம் ( பொது ) @11.30 மு.ப - 12.30 பி.ப | | | |
| 27-07-2019 | நிர்வாக குழு ஒன்றுகூடல் @12.00 ந.ப- 13.00 பி.ப | | | |
| 15-08-2019 | மரியாளின் விண்ணேற்பு பெருவிழா | | | |
| 17-08-2019 | ஆலய சுத்தம் ( பொது ) @11.30 மு.ப - 12.30 பி.ப | | | |
| 14-09-2019 | பொது ஒன்றுகூடல் (ஆலய திருவிழா) @9.00மு.ப-13.00பி.ப<br>நிர்வாக குழு ஒன்றுகூடல் @13.30 பி.ப- 14.30 பி.ப | | | |
| 19,20,21-09-2019 | திருதின வழிபாடுகள் மற்றும் நற்கருணை பெருவிழா | | | |
| 22-09-2019 | ஆலய திருவிழா மற்றும் யூபிலி கொண்டாட்டம் | | | |
| 19-10-2019 | ஆலய சுத்தம் ( பொது ) @11.30 மு.ப - 12.30 பி.ப | | | |
| 12-11-2019 | கருத்தமர்வு @9.00 மு.ப – 12.00 ந.ப (அருட்பணி செல்வரட்ணம்,அ.ம.தி) | | | |
| 16-11-2019 | ஆலய சுத்தம் ( பொது ) @11.30 மு.ப - 12.30 பி.ப | | | |
| 23-11-2019 | நிர்வாக குழு ஒன்றுகூடல் @12.00 ந.ப- 13.00 பி.ப | | | |
| 07-12-2019 | ஆலய சுத்தம் ( பொது ) @11.30 மு.ப - 12.30 பி.ப | | | |
| 11,12,13,14-12-2019 | கிறிஸ்மஸ் நோயாளர் விடுதி தரிசிப்பும் நன்கொடையும் | | | |
| 21-12-2019 | பொது ஒன்றுகூடல் ( கிறிஸ்மஸ் விழா) @9.00 மு.ப – 13.00 பி.ப<br>நிர்வாக குழு ஒன்றுகூடல் @13.30 பி.ப- 14.30 பி.ப | | | |
| 25-12-2019 | கிறிஸ்மஸ் திருப்பலி | | | |
| 31-12-2019 | நற்கருணை நன்றி வழிபாடு@16.00 பி.ப- 17.00 பி.ப | | | |
| 01-01-2020 | புதுவருட திருப்பலி | | | |

❖ தொடர்புகளுக்கு- அருட்பணி. சி. அருள் சுதர்சன் அ.ம.தி 0776286506



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் போதனா மருத்துவமனை நோயாளர் ஆன்ம நலன் பேணும் தன்னார்வப் பணியாளர்களின் ஆண்டு திட்டம் - 2019

| திகதி | நிகழ்ச்சிகள் | | குறிப்பு | கருத்துக்கள் |
|---|---|---|---|---|
| 26-01-2019 | பணியாளர்களின் தொடக்க ஆண்டின் முதல் திருப்பலி ஒன்றுகூடலும் மற்றும் இவ்வாண்டிற்கான திட்ட வரைவும் @15.00 பி.ப – 17.00 பி.ப | | | |
| 23-02-2019 | சுற்றுலா மற்றும் பணியாளர்களின் மாதாந்த ஒன்றுகூடல் @06.30 மு.ப - 19.00 பி.ப | | | |
| 06-03-2019 | விபூதிப் புதன் @12.00 ந.ப திருப்பலி | | | |
| 17-03-2019 | பணியாளர்களின் மாதாந்த ஒன்றுகூடல் @15.00 பி.ப - 17.00 பி.ப | | | |
| 28,29,30-03-2019 | கல்வாரி பாதயாத்திரை (ஹினிதும) @15.30 பி.ப- | | | |
| 06-04-2019 | பொது ஒன்றுகூடல் ( தவக்கால தியானம்) @ 15.00 பி.ப – 17.00 பி.ப | | | |
| 18-04-2019 | புனித வியாழன் | | | |
| 19-04-2019 | புனித வெள்ளி | | | |
| 21-04-2019 | உயிர்ப்பின் ஞாயிறு | | | |
| 28-04-2019 | பணியாளர்களின் மாதாந்த ஒன்றுகூடல் @15.00 பி.ப - 17.00 பி.ப | | | |
| 19-05-2019 | பணியாளர்களின் மாதாந்த ஒன்றுகூடல் @15.00 பி.ப - 17.00 பி.ப | | | |
| 16-06-2019 | பணியாளர்களின் மாதாந்த ஒன்றுகூடல் @15.00 பி.ப - 17.00 பி.ப | | | |
| 21-07-2019 | பணியாளர்களின் மாதாந்த ஒன்றுகூடல் @15.00 பி.ப - 17.00 பி.ப ( திருவிழா நன்கொடை திரட்டல்) | | | |
| 15-08-2019 | மரியாளின் விண்ணேற்பு பெருவிழா | | | |
| 15-09-2019 | பணியாளர்களின் மாதாந்த ஒன்றுகூடல் @15.00 பி.ப - 17.00 பி.ப | | | |
| 19,20,21-09-2019 | திருதின வழிபாடுகள் மற்றும் நற்கருணை பெருவிழா | | | |
| 22-09-2019 | ஆலய திருவிழா மற்றும் யூபிலி கொண்டாட்டம் ( அன்னதானம் வழங்கல்) | | | |
| 20-10-2019 | பணியாளர்களின் மாதாந்த ஒன்றுகூடல் @15.00 பி.ப - 17.00 பி.ப ( கிறிஸ்மஸ் பொருட்கள் சேகரிப்பு கடிதம்) | | | |
| 17-11-2019 | பணியாளர்களின் மாதாந்த ஒன்றுகூடல் @15.00 பி.ப - 17.00 பி.ப | | | |
| 11,12,13,14-12-2019 | கிறிஸ்மஸ் நோயாளர் விடுதி தரிசிப்பும் நன்கொடையும் | | | |
| 20-12-2019 | பொது ஒன்றுகூடல் ( கிறிஸ்மஸ் விழா) @14.00 பி.ப – 18.00 பி.ப | | | |
| 25-12-2019 | கிறிஸ்மஸ் திருப்பலி | | | |
| 31-12-2019 | நற்கருணை நன்றி வழிபாடு @16.00 பி.ப- 17.00 பி.ப | | | |
| 01-01-2020 | புதுவருட திருப்பலி | | | |

❖ தொடர்புகளுக்கு- அருட்பணி. சி. அருள் சுதர்சன் அ.ம.தி 0776286506



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACX Phone Shop

**All Kind of Mobile Phone**
**Accessories, Unlocking,**
**Software upgrades,**
**Software Solution & Repairs**

No.6 New Market (Upstair)
Jaffna.

T.P : 021 222 6151
077 751 9440
E.mail : Acx Suren@Yahoo.com











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்புகளுக்கு : ஆன்மகுரு,
புனித.வேளாங்கண்ணி ஆலயம்,
யாழ்.போதனா மருத்துவமனை,
021 221 5016, 077 628 506

ஆன்மகுரு,
இல.657/1, தொடர்பகம்,
மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2721, 077 628 6506

**போதனா மருத்துவமனை யாழ்ப்பாணம்**

**Teaching Hospital Jaffna**

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna. 021 222 2378

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org